௨

சைதாபேட்டை கண்டி

வெஸ்லேனியன் மிஷன் தியலாஜிகல் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

மாகறல். கார்த்திகேய முதலியார்

இயற்றிய

# மொழிநூல்.

(*PHILOLOGY*)

PRINTED AT THE

R. VIVEKANANDA PRESS, VEPERY,

Madras:

1913.

*Copyright Registered.*

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

[விலை ரூபா 2.|8|-

# INTRODUCTION.

In these evil days for Pandits who have fallen upon evil tongues and who are branded as old-world men and walking cyclopedias devoid of historic sense and comparative knowledge, none but scholars of either extraordinary pluek and unquestioned assiduitv or original force and intrinsic worth can tower above the heights of unmerited obloquy and gratuitous calumny, of narrow prejudices and supercilious contempt encircling them. Of these two classes, some are like cadgers ever bent on collecting the products of ancient literary delvers, putting them ship-shape, and selling them in the best market, while others are like badgers at all times burrowing in the musty rolls of the past, spending their midnight oil, and worrying their brains until they garner in their dark dens little corn-hoards of precious truth. These cadgers and badgers are wanted if intellectual life is to be worthily lived. The patient indefatigable labours of a Swaminatha Ayar are as necessary for the Tamil world as the tireless researches of a Karthikeya Mudaliar. If the former has unearthed and exposed the embalmed treasures of the ancient classics, the latter has traced the history of the forces that had gone to make up these priceless gems and of the soil where those formative forces had their gallant play. The benign rulers of this peninsula, who are ever on the alert to appreciate work and worth wherever found, have crowned the plodding politic pedagogue with the sparkling diadem of Mahamahopadhiyayar, or the Teacher of Teachers, a mark of distinction and honour well becoming the genteel scholar. They will not be slow to recognise the value of this magnificent enterprise and honour him adequately whose whole life has been devoted to this intelligent work of original research Though these typical

pandits are apparently of the old school and agree in their blissful ignorance of the language of the ruling race, the works which are their out-turn show how remarkably they have grasped the western method, how laboriously they have consulted the western authorities, and how eagerly they have imbibed the western spirit Their works are before the world, and it is for the republic of letters to appraise and award them.

This *Mozhi Nool*, or Tamil Philology, is in three parts, entitled Exordium, Grammar, and Derivation respectively. The first part contains the author's arguments for the hoary antiquity of the Tamil language and for its priority to Sanskrit and embodies his relative estimate of the two languages in respect of their general nature, of their grammatical naturalness, and of their mutual influence and characteristic excellence. It may be said that the substance of the whole work lies here in a nutshell. Vide pp 32 et seq. In the second part the author gives the history of sounds and letters, their genesis, formation and combination, their triliteral origin, and the evolution of words, and illustrates these and other points akin to them with a lavish hand The third part is at once the most astonishing and the most admirable of all. As in the second part the author has emphasized the existence of one natural form (the circle of the sun) and three natural sounds (a, k, m) which multiplied and metamorphosed in the process of the suns, so in this third part he has derived all Tamil words from the primal significant sound-letter (*su*) and its derivatives (*sul* etc.,) and has brought home to the reader in his characteristic style that all words, nouns and verbs, are causal and are traceable to the heat of the sun, the life and light giver of the universe.

On the whole, the *Mozhi Nool*, which is but a prelude to the author's magnum opus which he has mapped out, is a

veritable mine of rare and useful information and publishes the fruits of a life study It is a work sure to set a thousand minds a-thinking, ten thousand tongues a-talking, and at least a century of able pens a-writing. Such a wonderful activity of minds, tongues, and pens, if induced by this epoch-making production, as it is anticipated it will, cannot but raise a plentiful crop of literature on the subject and eternize the name and fame of this precedent-breaker, this fearless thinker and original researcher, this assertive and positive character on the bead-roll of dutiful champions, able expositors, acute critics, and sincere adorers of their mother tongue.

M. S. PURNALINGAM PILLAI,*

PURASAIPAKAM,
*12th April*, 1913

* B.A., L.T., Principal, Camisis College, Vepery; Secretary to the *Dravidian Research Institute, Madras;* Secretary to the *Madras Zamindari Ryots' Association;* and author of *A Primer of Tamil Literature* (in English), *Seyyul Kovai* (Tamil Anthology), *Viveka Vilakkam*, etc.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

# மொழிநூற்பொருள் விளக்கம்

II 34

## பாயிரவியல்.


| | | |
|---|---|---|
| (௧) காதமென்பதனளவு | பக்கம் | ௧௦ |
| (௨) கணன விதி | ,, | ௧௫ |
| (௩) தொல்காப்பியர் காலம் | ,, | ௧௯ |
| (௪) ஒலியும் எழுத்துமொன்றுபடல் | ,, | ௨௯ |
| (௫) இயலொலி | ,, | ௩௦ |
| (௬) சொற்றொடரழகு | ,, | ,, |
| (௭) தமிழின்பழமை | ,, | ௩௨ |
| (௮) தமிழாசிரியர்கள் | ,, | ௩௪ |
| (௯) செந்தமிழ் | ,, | ௩௫ |
| (௧௦) தமிழ்வேறு திராவிடம்வேறு | ,, | ௪௦ |
| (௧௧) மலையாளத்தின் தோற்றம் | ,, | ௪௨ |
| (௧௨) பாஷைகளின் வளர்ச்சி | ,, | ௪௪ |
| (௧௩) மணிப்பிரவாளம் | ,, | ௫௧ |
| (௧௪) பாளி | ,, | ௫௪ |
| (௧௫) தமிழ்வேதாகமங்கள் | ,, | ௬௨ |
| (௧௬) இசைக்கல்வி | ,, | ௬௪ |
| (௧௭) குறிஞ்சியின் பெருமை | ,, | ௬௬ |
| (௧௮) முதற்படைப்பு | ,, | ௬௭ |
| (௧௯) கைக்குறி முதலியன | ,, | ௭௨ |
| (௨௦) சூரியன்கோள்களுக்கு நடுவின | ,, | ௭௩ |
| (௨௧) மக்கட்கூட்டம் ஒன்று | ,, | ௭௫ |
| (௨௨) பழந்தமிழ்க்காலம் | ,, | ௭௯ |
| (௨௩) தமிழ்க்காரணம் | ,, | ௮௧ |
| (௨௪) கவனிப்பு | ,, | ௮௬ |

## இலக்கணவியல்.


| | | | |
|---|---|---|---|
| (உரு) | இயற்கைவடிவம் | பக்கம் | உ |
| (உசு) | இயற்கையெழுத்தோசை | ,, | சு |
| (உஎ) | உயிர்ச்சந்தியெழுத்து | ,, | கூ |
| (உஅ) | மெய்ச்சந்தியெழுத்து | ,, | கஉ |
| (உகூ) | முறையின்வைப்பு | ,, | க௩ |
| (௩0) | ஆய்தவெழுத்து | ,, | கரு |
| (௩க) | குற்றியலுகரம் | ,, | கஎ |
| (௩உ) | குற்றியலிகரம் | ,, | ககூ |
| (௩௩) | மகரக் குறுக்கம் | ,, | உஉ |
| (௩௪) | மொழிமுதலெழுத்து | ,, | ,, |
| (௩ரு) | மொழியிறுதி, ஒலிவடிவு | ,, | உஎ |
| (௩சு) | வரிவடிவு | ,, | உஅ |
| (௩எ) | வரிவடிவின் விளக்கம் | ,, | ௩உ |
| (௩அ) | மயக்கம் | ,, | ௩௪ |
| (௩கூ) | விளங்கவைத்தல் | ,, | ௩சு |
| (௪0) | எழுத்தியைபு விளக்கம் | ,, | ௩எ |
| (௪க) | ககரம் சகரமாதல் | ,, | ௪உ |
| (௪உ) | ககரம் பகரமாதல் | ,, | ௪அ |
| (௪௩) | ளகரம் டகரமாதல் | ,, | ருஉ |
| (௪௪) | றகரம் டகரமாதல் | ,, | ரு௩ |
| (௪ரு) | டகரம் றகரமாதல், னகரம் ணகரமாதல் | ,, | ரு௪ |
| (௪சு) | பலதிரிபு | ,, | ருசு |
| (௪எ) | ஆற்றொழுக்கு, தவளைப்பாய்த்து | ,, | ருஎ |
| (௪அ) | ஈற்றில் யகரமெய்வரல் | ,, | ருகூ |
| (௪கூ) | ஈற்றில் லகரமெய்வரல் | ,, | ,, |
| (ரு0) | இயற்கைப்பொருளோசை | ,, | சுக |
| (ருக) | சூரியன்சொல்லினின்றுண்டாயசொற்கள் | ,, | சுஅ |
| (ருஉ) | மூங்கிற்சொல்லினின்றுண்டாய சொற்கள் | ,, | சுகூ |

| | | |
|---|---|---|
| (௫௩) மூக்கினிசையுடைச்சொற்கள் | பக்கம் | ௭௧ |
| (௫௪) பகுதி, முதனிலை | ,, | ௭௩ |
| (௫௫) தன்மை விகுதி | ,, | ௭௪ |
| (௫௬) முன்னிலை விகுதி | ,, | ௭௫ |
| (௫௭) பெயர் விகுதி | ,, | ௭௬ |
| (௫௮) இடைநிலை | ,, | ௮௧ |
| (௫௯) உபசர்க்கம் | ,, | ௮௨ |
| (௬0) புணர்ச்சி | ,, | ௮௫ |
| (௬௧) அ ஆவாய்பாடு | ,, | ௮௬ |
| (௬௨) இ ஈவாய்பாடு, உ ஊவாய்பாடு | ,, | ௮௭ |
| (௬௩) அ+இ=ஏவாய்பாடு | ,, | ,, |
| (௬௪) அ+உ=ஓவாய்பாடு | ,, | ௮௮ |
| (௬௫) அய் இவாய்பாடு | ,, | ,, |
| (௬௬) ,, | ,, | ௯0 |
| (௬௭) அவ் உவாய்பாடு | ,, | ௯௧ |
| (௬௮) அ+இ=ஏவாய்பாடு | ,, | ,, |
| (௬௯) அய் இவாய்பாடு | ,, | ௯௨ |
| (௭0) அய் இவாய்பாடு | ,, | ௯௩ |
| (௭௧) அவ் உவாய்பாடு | ,, | ௯௫ |
| (௭௨) அய் இ, அவ் உ | ,, | ௯௬ |
| (௭௩) குற்றியலுகரம் | ,, | ௯௭ |
| (௭௪) மெய்யீற்றுப்புணர்ச்சி | ,, | ,, |
| (௭௫) சொல் | ,, | ௧0௨ |
| (௭௬) பெயரினின்று வினைபிறப்பது | ,, | ,, |
| (௭௭) பால் | ,, | ௧0௭ |
| (௭௮) இடையிற் பிற எழுத்துவரல் | ,, | ௧௧௧ |
| (௭௯) முதனிலைப்பேறு | ,, | ௧௧௬ |
| (௮0) இறுதிநிலைப்பேறு | ,, | ௧௧௭ |
| (௮௧) இருதலைச்சுருக்கம் | ,, | ௧௧௮ |
| (௮௨) ஒற்றினீக்கம் | ,, | ௧௨0 |
| (௮௩) நிலைமாற்றம் | ,, | ௧௨௨ |

| | | |
|---|---|---|
| (௮௪) பரிவர்த்தலை மாற்றம் | பக்கம் | ௧௨௩ |
| (௮௫) இனந்தழுவல் | ,, | ௧௨௫ |
| (௮௬) முறைமையிற்பொருள்கோள் | ,, | ௧௨௬ |
| (௮௭) இருசொற்கூட்டம் | ,, | ௧௨௭ |
| (௮௮) உபசர்க்கப்பேறு | ,, | ௧௨௮ |
| (௮௯) மறைந்த சொற்கள் | ,, | ௧௩௧ |
| (௯0) தோற்றரவு | ,, | ௧௪௪ |
| (௯௧) சூரியன் சொல்லினின்றுண்டாய சொற்கள் | ,, | ௧௪௭ |
| (௯௨) மூங்கிற்சொல்லினின்றுண்டாய சொற்கள் | ,, | ,, |
| (௯௩) மூங்கிலியையுடைச் சொற்கள் | ,, | ௧௫௩. |
| (௯௪) சூரியன் சொல்லிற்பிறப்பன | ,, | ௧௫௭ |
| (௯௫) கடலின்சொல்லிற்பிறப்பன | ,, | ,, |
| (௯௬) நீரின்சொல்லிற்பிறப்பன | ,, | ௧௫௮ |
| (௯௭) பூமியின் சொல்லிற்பிறப்பன | ,, | ௧௫௯ |
| (௯௮) மூங்கிலின்சொல்லிற்பிறப்பன | ,, | ௧௬௫ |
| (௯௯) தமாலச்சொல்லிற்பிறப்பன | ,, | ௧௭௧ |


முதனிலையியல்


| | | |
|---|---|---|
| (௧00) சு—சுல் | பக்கம் | ௧௭௩ |
| (௧0௧) சுள் | ,, | ௧௭௭ |
| (௧0௨) சூடு—சுவடு | ,, | ௧௭௯ |
| (௧0௩) சுண்டு | ,, | ௧௮௧ |
| (௧0௪) சோளம் | ,, | ௧௮௭ |
| (௧0௫) சுலா—குலா | ,, | ௧௮௮ |
| (௧0௬) குளம்—குடம் | ,, | ௧௯௩ |


தனிமுதனிலை.


| | | |
|---|---|---|
| (௧0௭) குவம் | ,, | ௧௯௪ |
| (௧0௮) கோடு | ,, | ௧௯௫ |
| (௧0௯) ஓதம் | ,, | ௧௯௭ |
| (௧௧0) கலி—கலம் | ,, | ௧௯௯ |

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

# மொழி நூல்.

## பிழை திருத்தம்.

### பாயிரவியல்

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| அ | அ | ழுகத்துள் | முகத்துள் |
| கூ | கரு | பெறப்படடமை | பெறப்பட்டமை |
| கக | ச | பிறநாடுழுண்மையின் | பிறநாடு முண்மையின் |
| கரு | கச | குறிப்பில் | குறிப்பில் |
| கச | உங | கடலாடுவிடும் | கடலாகிவிடும் |
| கசு | சு | நாகப்பட்டினம் | நாகபட்டினம் |
| ககூ | உ.உ | மொழியுப் | மொழியும் |
| ங.ச | கஉ | முன்னை | முன்னை |
| ஙரு | கஅ | தமிழப்படி. | தமிழ்ப்படி. |
| சஉ | உஎ | கிழ்கடல் | கீழ்கடல் |
| சஉ | ங0 | சார்புள்ள | சார்புள்ளது |
| ருக | ச | உருவும் | உருபும் |

# மொழி நூல்.

## இலக்கணவியல்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|
| ௪ | ௬ | திரும்பியதெனபது | திரும்பியதென்பது. |
| ௮ | ௫ | இகரமும் | அகரமும். |
| ௧௨ | ௧௫ | மெய்போதலின் | மெய்போறலின் |
| ௨௪ | ௧௭ | రలాః | రసః |
| ௨௯ | ௪ | மேலிரட்டைப் புள்ளி பெற்றன. | |
| | | / ப் ம் | ப் / ம் |
| ௨௯ | ௭ | புன்ளி | புள்ளி |
| ௬௮ | ௨௭ | நடுமுதல் | நடுமுதல |
| ௭௪ | ௨ | அண்ணன் / அச்சன் | அண்ணன் அச்சன் |
| ௮௭ | ௨௪ | வாப்பாட்டின் | வாய்பாட்டின் |
| ௮௯ | ௧0 | அ ஆ, இ ஈ, உ ஊ, என்னும் வாய்பாடுகளில் | அ ஆ என்னும் வாய்பாட்டில் |
| ௧0௫ | ௨௨ | கவடதல் | கடைதல் |
| ௧௧௮ | ௯ | காடி | கரடி |
| ௧௨௭ | ௨௨ | காரம்பு | கராம்பு |
| ௧௫௫ | ௧௮ | பன் | பல் |
| ௧௫௬ | ௧௫ | நிற்றலுன் | நிற்றலின் |
| ௧௫௯ | ௨௮ | நண்ணூதல் | நண்ணுதல் |
| ௧௬௨ | ௧0 | நால்—மூங்கில் = நாக்கு | நால் = மூங்கில், நாக்கு. |
| ௧௬௫ | ௨ | முவலியவற்றின் | முதலியவற்றின் |

## முதனிலையியல்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|
| ௧௯௧ | ௮ | உப்பனம் | உப்பளம் |
| ௧௯௫ | ௫0 | மலையாளுலாவது | மலையாளுலாவது. |
| ௨0௭ | ௨௨ | கதவிடுதாள் தடுப்பது | கதவிடுதாள். தடுப்பது |
| ௨௧௧ | ௧௪ | தெள்ளல். மாப்புடைத்தல் | தெள்ளல், மாப்புடைத்தல் |
| ௨௨0 | ௧0 | ஜகார | ஐகார |
| ௨௨௯ | ௨௮ | மயிர், | மயிர். |
| ௨௪0 | ௧௫ | முரல்ல | முரலல் |

# மொழிநூல்.

## பாயிரவியல்.

### கடவுள்வாழ்த்து.

கடற்காட்சி வான்காட்சி கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி யவ்வுட லொண்சூற்—படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓரிறைவ னுண்டென்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்.

### நூலின்தோற்றம்.

வயின்வயின் வண்டமிழ் வளாகத் திசையுண
வெயினுழை யுங்காற் றுயினுழை சோலைசூழ்
*கச்சியுட் செல்லுபு கனிந்தென வருகையில்
மெச்சுறு புனற்கான் மிளிர்பாலாற்றுண்
மட்டைவா யொருவன் மடுத்தனன் கூறினை
மட்டைச்சொற் காரணம் வந்தது மனக்கண்
மடைமுத லாய வழக்கும் விளங்கின
இடைவிடா திங்ஙன மெல்லாச் சொல்லையும்
அறிவுறல் வேண்டுமென் றகத்துக் கொளீஇப்
பொறிமிகு நாமகட் போற்றெடுத் தனமே

# மொழிநூல்

## பாயிரவியல்

---

க. கடல் புடைசூழ்ந்த இப்பரவை யுலகின்கண்ணே யிற்றை ஞான்றுள்ள ஆராய்ச்சி பலவற்றுள்ளும் மொழியாராய்ச்சி செய்தல் லே சிறந்த தொன்றாக நிற்றலின், பலவாண்டுகளாகத் தமிழ் முத ய மொழியாராய்ச்சி செய்தலையே மேற்கொண்டு முயன்றதிறத்தி னே சொல்லெல்லாம் காரணச்சொல் என்பது திண்ணமாயிற்று.

ஒவ்வோர் பொருளின் தன்மையறிந்த மருத்துவன் நல்லதோர் மருந்து கூட்டுமாறுபோல, ஒவ்வோர் சொல்லின் காரண முணர்ந்த புலவன், நல்லதோர் பாநடையும், உரைநடையும், அமைத்தல் கூடுமாதலின்; அனைத்துச் சொற்களுக்குங் காரணமுதலியன கூறத் துணிந்தனன்.

இனி, இடுகுறிப்பெயர் ஒன்றேனும் இன்றாம்; உண்டெனில் பூகோளம், ககோளம், சாமுத்திரிகம், ஆயுள்வேத முதலிய அனைத்து நூல்களையும் நுணுகியுணர்ந்த பெரியார், ஒருபொருட்குப் பெயரிட வேண்டின், பலகுணமமைந்த அப்பொருட்கு ஏதேனும் ஓர் குணத்தாற் பெயரிடாது வாளா இடுகுறியாகப் பெயரிட்டனரெனில்; அது பொருட்டன்மை யுணராதார் கூற்றாதலுமன்றி அவர் தம் நுண்ணறிவுடைமைக்கும் பெரிதும் இழுக்காகற்பாலது.

“மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்றா” என்ற சூத்திரத்தையுணரின், தொல்காப்பியர்க்கும் இடுகுறிப்பெயரில்லை யென்பதே துணிபு.

பவணந்தி முனிவர்மாத்திரம் வடமொழியார் மதம்பற்றி யிடு குறிப்பெயர் உடன்படுவாராயினர்.

பழைய நூல்களிறந்து பட்டமையின், காரணம் அறியும் வழி மறைந்தமையாலோ வேறு எக்காரணத்தாலோ வடமொழியார் இடு

குறிப்பெயர் ஒன்றுண்டென வுடன்பட்டனர். வடமொழியார் காரணம் விளங்காது மறைந்த சொற்களை ரூடமென்பர்; நன்னூலார் இடுகுறியென மொழிபெயர்த்துக் கொண்டனர். ரூடம்=மறைவு.

"பகுப்பாற் பயனற்றிடுகுறியாகி"

என்ற சூத்திரத்தால் பவணந்தி முனிவர் இடுகுறியைப் பெலப்படுத்துவர்.

யாமையென்பது ஆமையாயிற்றோ! ஆமையென்பது யாமையாயிற்றோ?

போதும் போதாது, ஆறு முதலிய சொற்களுக்கு மற்றைய வினைவிகற்பங்களென்ன?

போதல், நனைதல் முதலியவற்றுக்கு முதற்சொற்களென்னை?

சில் முதலிய சொற்களுக்கு வட்டமுதலிய பொருள் வந்த காரண மென்னை?

எனப் பலமுறை ஞாபகம் வந்தமையின், ஒவ்வோர் சொல்லுக்கும் எங்ஙனமேனும் உண்மைக்காரணம் அறிதல் வேண்டுமென்றெண்ணுற்று, அல்லும் பகலும் இடைவீடின்றி வருந்தி வருந்தியாராய்ந்த பின்னரே யிவ்வழி புலனாயிற்று. அங்ஙனம் வருந்தியும் சில சொற்களுக்குக் காரணம் புலப்படாமையின் அப்பொருளை நேரிற் கண்ணுற்றாராய்ந்துழி அக்காரணமும் இனிது விளங்கிற்று. இன்னும் காரணம் புலப்படாத சொற்களுமுள. ஓர்சொல்லாராயுங்கால், மற்றோர் சொற்காரணம் புலனாயின; சில, வாளா இருக்குங்கால் புலனாயின; பிறரோடு பேசுங்காற் சில புலனாயின; சில கனவிற் புலனாயின; கற்குங்காற் சில புலனாயின; கற்பிக்குங்காற் சில புலனாயின; அவற்றையெல்லாம் அப்போதப்போது குறித்து வைத்தனன்; கனவிற் புலனாவனவற்றைப் பலகையிலேனும், சுவரிலேனும் குறித்து வைப்பல்; அங்ஙனங் குறிப்பதற்குள் மறந்தனவுமுள; அம்மறந்தவற்றுக்குச் சாலவும் வருந்தினன்; வருந்துங்கால் அவற்றுள் சில புலனாயின; வாளா இருக்குங்காற் சில புலனாயின; புலனாகாது போயினவுமுள.

இக்காரண வாராய்ச்சி, முதலாவது இரண்டாவது மூன்றாவதி னும், நான்காவது ஐந்தாவது முறைமையில் எனதுள்ளத்தைக் கவர்ந்து, எளிதாக இனிதாக இழுத்துச் செல்லுந் தன்மைத் தாயிற்று.

பிற்பட்ட ஆராய்ச்சியாலுளதாய மகிழ்ச்சி, கடலினும் பெரிய வானினும் பெரிதாய் நிலைபெறலின்; முற்பட்ட ஆராய்ச்சியாலுள தாய துன்பங்களனைத்தும் மறந்தேபோயின.

முற்பட்ட ஆராய்ச்சியிற் சில மூலதாதுக்கள் தோன்றின; அவற்றுள், வட்டத்தையுணர்த்தும் பெயர்களும், திரட்சியையுண ர்த்தும் பெயர்களும், சித்திரத்தையுணர்த்தும் பெயர்களும், பிற வும் அடங்காமையின், பிற்பட்ட ஆராய்ச்சியில் அவற்றினுஞ் சிறந்த சுல்லெனுமோர் மூலதாது தோன்றிற்று. இதன் தோற்ற முதலி யன, இலக்கண வியலில் பதங்கூறுமிடத்துக் கூறப்பட்டுள்ளன.

இதனானே தமிழ்மொழி, உலகத்தியற்கையறிந்து செய்யப்பட் டதோர் மொழியெனக் கொள்ளல்வேண்டும்.

௨. இந்நூலுட் கூறப்படுவன வெல்லாம், உண்மை கூறல், பொருந்தக்கூறலென்னுமிருவகை யுத்திகளுட் பெரும்பான்மையும் உண்மை கூறலென்னும் உத்தியேயாம். இலக்கண முதலிய நூன் முகத்தான் ஒப்பக்கூறலின், பொருந்தக் கூறலென்னும் உத்தியும் பெரிதும் குற்றமுடைத்தாகாது.

உழந்துழந்துண்மை கூறலும், சிறவாத காரணம் பலவற்றினும் சிறந்த காரணம் சில கூறலுமே சிறந்தன. பின்னர்ச் சிறந்தது பொ ருந்தக்கூறல்.

"ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
யெண்ணிறையளவும் பிறவரிற்பத்தின்
ஈற்றுயிர்மெய்கெடுத் தின்னுமிற்றும்
ஏற்பதேற்கு மொன்பது மினைத்தே"

என்பது முதலியன உண்மை கூறலென்னும் உத்தியாம்.

ஓன்பா னெடுபத்து நூறுமொன்றின்
முன்னதினேனைய முரணியொவ்வொடு
தகரதிரீஇப் பஃதகற்றினவ்வை
நிரலேணளவாத் திரிப்பது நெறியே"

என்பது முதலியன பொருந்தக் கூறலென்னும் உத்தியாம்.

"ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகலினையவும் பண்பிற்கியல்பே"

என்பது இரண்டுத்தியுமுடையது. ஈறுபோதன் முதலியன, உண்மை கூறல்; முன்னின்ற மெய்திரிதல், பொருந்தக்கூறல்.

௩. தமிழ்ச்சொற்களை மாத்திரம் ஒருவன் நன்கு ஆராய்ச்சி செய்தலைத்தலைக்கொள்வனாயின், ஏனையமொழிகளை யெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு இதுவே கருவியாகுமென்பதிற் சிறிதும் ஐயுறவில்லை.

தமிழ்ச் சொற்களெனவே சிறுபான்மை அதன் வழிமொழிக ளாகிய கன்னட முதலியனவு மடங்கும்.

௪. எல்லா வுலகங்களுக்கும் ஒன்றாய் ஒளிர்தலைச் செய்கின்ற சூரியனது காரியமாகிய **சூல்** என்னும் ஓர் வியாபக இயற்கைத்தாதுவினின்றும் பிறந்து, தன்னிடத்தே மாத்திரம் அவ்வியைபு பெற்றிருத்தலின்; தமிழ், ஆரியத்திற்கு முற்பட்டதென்பது துணிபு. கன்னடம், தெலுங்கு முதலியனவும் அதன் வழிப்பட்ட சிதைவேயாம். தமிழ் ஆரியத்திற்கு முற்பட்ட தென்பது தமிழ்விடு தூது முதலிய நூல்களாலும் விளக்கமாகும்.

'செயற்கைப் பொருள்கள் செய்வான் வேண்டின்
இயற்கைப் பொருளினின் றியக்கல் வேண்டும்
இயற்கைப்பொருள்க ளிலவேல்
செயற்கைப்பொருள்களு மிலவேயாகும்
குடம்வேண்டின் மண்வேண்டும்

படம் வேண்டின் பஞ்சுவேண்டும்
மண்ணின்றேற் குடமில்லை
பஞ்சின்றேற் படமில்லை. அதுபோல்
செயற்கையோசை தெரிக்கவேண்டின்
இயற்கை யோசையினின் றியக்கல் வேண்டும்
இயற்கை யோசையிலவேல்
செயற்கையோசையு மிலவேயாகும்'

இதனை இலக்கணவியல் முதற்கண்ணும், முதனிலையியல் முதற்கண்ணும் ஞாபகப்படுத்திக்கொள்க.

இன்னும் இயற்கை வடிவம் செயற்கை வடிவம், இயற்கை மணம் செயற்கை மணம், இயற்கையறிவு செயற்கையறிவு, இயற்கையுடம்பு செயற்கையுடம்பு முதலியனவு முணர்ந்துகொள்க.

"தொன்மைதானே
யுரையொடு புணர்ந்த பழமைமேற்றே"

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்தமொழியானடிநிமிர்ந்தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப்புலவர்"

என்று தொல்காப்பியர், ஆசிரியர் அகத்தியனுர் கூறியபடியே கூறலின், அவ்வகத்தியனுர்க்கு முன்னும் செந்தமிழ் வளர்ந்த காலத்து அத்தொன்மை தோலென்னு மிருவகை யழகுகளும் உண்டாயின என்பது புலனுகின்றது.

"முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்படவெழுதிய முதல்வோனே" (திருப்புகழ்)

"பரிவுடனழகிய பழமொடு கடலைகள்
பயனுறு சிலவகை—பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதியகணபதி—யிளையோனே" (திருப்புகழ் உஉ௬)

"அறத்தை வளர்த்திடு பாசிவைகுலவதி
திறத்தமிழைத்தரு பழையவளருளிய—(சிறியோனே")

"அமரு மிடனனலெனு மொருவடிவுடை
யவனிலுரையவன் முதுதமிழுடையவன்
அரியொடயனுல கரியவனடநவில்—இவன் வாழ்வே"
[(உஎஅ)
"முதியமாதமி ழிசையதாகவே—மொழிசெய்தே
நினைந்-திடுமாறு"          (நகசு)

என்பவற்றுள் முற்பட எழுதிய முதல்வோனென்றமையானும், பழமொழி, பழையவள், முதுதமிழ், முதியமாதமிழ், என்றமையானும் தமிழ், ஆரியத்திற்கு முற்பட்டதெனல் வேண்டும்.

"முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்படவெழுதிய—முதல்வோனே"

என்பது, ஆரியத்துக்கு முன்னமேயே தமிழுண்டென்பதனை வலியுறுத்துகின்றது.

முற்படவெழுதிய முதல்வோனென்பது முதல் முதலுண்டாய ஆதிவிநாயக னெனக் கொளல்வேண்டும்.

"மறவர்நாயக ஆதிவிநாயகர்
இளையநாயக காவிரிநாயக"       (திருப்புகழ் உகசு)

என்பதனால் தெளிந்துகொள்க.

"கொன்றைச் சடையார்க் கொன்றைத் தெரியக்
கொஞ்சித்தமிழாற் பகர்வோனே" (திருப்புகழ் கநஎ)

என்பதனாற் கடவுண்மொழி, தமிழ் என்பது பெறப்பட்டது. அதாவது தெய்வமொழியென்பது.

"தொண்டர் காதனைத்தூதிடை விடுத்தது முதலை
யுண்டபாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்னுந் திருவிளையாடற் புராணச் செய்யுள் தமிழ், தெய்வமொழி யென்பதனை வலியுறுத்துகின்றது.

௫. அயன், மால், சிவன் முதலோரும் தமிழ் பேசுவர்; இந்திரன், குபேரன் முதலோரும்; தாருகன் இரணியன் முதலோரும் அன்னர்; அகத்தியர், மார்க்கண்டேயர், வான்மீகர், கவுதமர், சுகர், வசிட்டர், காசிபர் முதலிய முனிவர்களும்; தமிழ்நூல் செய்தவராவர். சனகர், சனக்குமாரர் முதலோரும் தமிழ் நூலாராய்ந்தவர்.

"வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்யமாமுனி யிடைக்காடர் கீரனும்
வகுத்தபாவினிற் பொருட்கோலமாய்வரு--முருகோனே"
(திருப்புகழ் ௩௬௨)

என்பதனால் அவ்வுண்மை தெளிந்து கொள்க.

"புகலரியதான தமிழ் முனிவரோது புகழிமலைமேவு
பெருமாளே"(திருப்புகழ் ௬௧௧)

என்பது நன்கு தெளிவிக்கின்றது. பிறவும் தொல்காப்பிய முதலியவற்றானுணர்க.

"அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ்வழுத்தியுனை
அன்பொடு த்திக்கமனம்—அருள்வாயே
(திருப்புகழ் ௩௬௪)

என்பதனால் ஓர்காலத்தில் தமிழ்பூ உலகத்திருந்த தென்பது பெறப்படுகின்றது

"சனகற்கும் அகத்ய புலத்யசனற்
குமரர்க்கும் அனுக்ரக மெய்ப்பலகைச்
சதுபத்து நவப்புலவர்க்கும்—விபத்தியில் ஞான
படலத்துறு லக்கண லக்யதமிழ்த்*
த்ரயமத்திலகப்பொருள் விர்த்தியினைப்
பழுதற்றுணர்வித் தருள்வித்தகசற்—குருநாதா"
(திருப்புகழ் ௭௩௩)

என்பதனாற் புலத்தியர் முதலோரும் தமிழ் கற்றவரென்பது பெறப்படுகின்றது.

௬. "ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே"
(திருப்புகழ்)

அறுமுகக்கடவுளுக்கு விசாகனென்னுமோர் பெயருள்ளது. விசாக நட்சத்திரத்திற் பிறந்தமையின் விசாகன். விசாகம், ஆறுமீனுடையதொன்றாகலின், அறுமுகக் கடவுளாகத் தோன்றினன்.

அவ்வறுமீனும், முன்மூன்று பின்மூன்று என இருபிரிவுடையது; முன்மூன்றுள் நடுவிலுள்ளது ஒளி மயமானது; ஏனையிரண்டும் வெண்மையவாம்; பின்மூன்றும் கருமையவாம்.

அவ்விசாகத்திற் பிறந்த அறுமுகக்கடவுள் தனது முன்மூன்று மூகத்துள் நடுவிலுள்ள ஒளிமயமாகிய முகத்தினால் சிவபெருமானுக்குத் தமிழாலுபதேசித்தமையின். "ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே" என்பர்.

இதனால் தமிழது மெய்ஞ்ஞான மேம்பாடு பெறப்படுகின்றது.

"ஞானத்தமிழ் நூல்க"ளென்பர். (திருப்புகழ் ௭௧௮)

நம்மாழ்வாரும், கௌதம புத்தரும், விசாகத்திற் பிறந்தவராவர். அது ஞான நட்சத்திரமாம். மந்திரோபதேசத்திற்கும் அதுவே ஆம்.

௭. பாஞ்சால நாட்டு மன்னவன் பிரவாகன சைவலி யென்போன் தமிழனே. அவனது கல்விக்கழகத்தில் கௌதமர் முதலிய பல ஆரிய முனிவர்கள், தமிழருடைய அரியதத்துவ ஞானங்களைக் கற்றுணர்ந்தனர். இஃது சாந்தோக்கிய உபநிடதம் ௫-வது, பிரபாடகம் ௩-வது, கண்டத்திலுள்ளது. சுந்தரம் பிள்ளை முதலோர், தமிழரும் ஆரியரும் ஒருப்பட்ட பின்னரே உபநிடதங்களுண்டாயின. என்பர்.

அத்தினபுரியை இராசதானியாகக் கொண்ட குருநாடும், திரிதராட்டிரன், ஆரியனான காந்தார தேசத்தரசன் மகளாகிய காந்தாரியை மணம் செய்யுமுன், தமிழ் நாடாகவேயிருந்தது பிறகு அக்காந்தாரியின் குலமொழியே அரண்மனை மொழியாகி நாளடைவில் வளர்ச்சிபெற்றமையின் அது ஓர்சார் ஆரிய நாடுபோல்வதாயிற்று.

மன்னர் மன்னனாகிய சனகன், தன்னையடைந்த சுவேதகேது, ஆருணேயர், சோம சுசும சத்யபஞ்ஞர், யாக்ஞவல்கி என்னும் ஆரிய முனிவர்களை நோக்கி, நீவிர் அக்கினி ஓத்திரத்தை யெவ்வாறு

செய்கின்றீர்கள் என வினவி நிற்ப, அதற்கு யாக்ஞவல்கி சிறிது பொருத்தமாகவும், ஏனைய மூவரும் சிறிதும் பொருந்தாமலும், விடைகூறக்கண்டு இவ்வளவுதானோ என்றிகழ்ந்து சனகன் தேர் மீது சென்ற போழ்து, அம்மூவரும் இராசன்னிய வகுப்பைச் சேர்ந்த இவன் நம்மை அவமதித்தனனே யென்று நின்றுவிட, யாக்ஞவல்கி மாத்திரம் அத்தேரோடு சென்று அதன் உண்மைப் பொருள் செவியுற்றுத் தெளிந்தனரெனவும், அது முதல் சனகன் பிராமணனாக அவரால் மதிக்கப்பட்டன னெனவும் சதபாதப் பிரமணம் கக-ம் புத்தகம் கூறுவதால் அச்சனகபூபதி தமிழ் மன்னவனென்பதும் அன்னோன்நாடும் தமிழ் நாடே யென்பதும் பெறபபட்டமை காண்க. அதனையடுத்த கோசலநாடு முதலியனவும் தமிழ்நாடுகளே.

இவை அறிவு விளக்கம் உ-வது, புத்தகம், ச-வது, சஞ்சிகையில் தமிழ் மொழியும் பிறர் கொள்கையும் என்னும் உரை நடையிலுள்ளன.

இவற்றால் தமிழும் தமிழரும், ஆரியத்தினும் ஆரியரினும் தொன்மையும் தலைமையும் பிறவும் பெறப்பட்டமை காண்க.

ஓர் பரீட்சாபட்டம் அளிக்கும் சமயத்திற் செய்த பிரசங்கத்தில் "தமிழர்களுடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமையானது கணப்பொழுதிற்கு முன் பெற்றருட்டர் தந்திச்செய்தியை ஒக்கும்" எனச் சென்னையிலிருந்த கவர்னர் கிராண்டப் அவர்கள் எடுத்துக் கூறிய கூற்று, தமிழருடைபழமை முதலியவைகளைப் பசுமரத்தாணிபோல் வலியுறுத்துகின்றது.

அ. தமிழிற் பழங்காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற் காடுகாண்காதையில், ஆசிரியர் இளங்கோவடிகள்.

"வடிவேலெறிந்த வான்பகைபொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்!
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்பர்

இனி வேனிற் காதையில்

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்"

என்புழி, உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்

"அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றுக்கும், குமரி யென்னும் ஆற்றுக்கும், இடையே எழுநூற்றுக்காவத ஆறும், இவற்றின் நீர்மலியானென மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலைநாடும், ஏழ்பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்குறும்பனைநாடும் என்னும் இந்நாற்பத்தொன்பது நாடும்; குமரி, கொல்ல முதலிய பன்மலை நாடும் நதியும், பதியும், தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும், கடல் கொண்டொழிதலால் குமரிப் பௌவமென்றார்". என்று கூறுவர், காவதம்=எஉ-நாழிகை வழித்தூரம் "கச்சியிற் றிருத்தணிகை முக்காவதம்" இன்னும் "கோடிக்கும் வேதிக்குங் காதம்; வேதிக்குங் கள்ளிக்குங் காதம்; கள்ளிக்கும் பூண்டிக்கும் காதம்; பூண்டிக்கும் நாகைக்குங் காதம்; நாகைக்குங் காரைக்குங் காதம்; காரைக்குங் கடையூர்க்குங் காதம்; கடையூர்க்குங் காழிக்கும் காதம்; காழிக்குந் தில்லைக்குங் காதம் தில்லைக்குங் கொல்லைக்குங் காதம்; கொல்லைக்குங் கூடற்குங்காதம்; கூடற்குங் கன்னிக்குங்காதம்; கன்னிக்குஞ் சேரிக்குங்காதம்; சேரிக்குங் கூனிக்குங் காதம்; கூனிக்குஞ் சூணைக்குங் காதம்; சூணைக்குந் தேனுக்குங்காதம்"

என்பவற்றால் காதம் என்பது ஏழரைநாழிகைவழித்தூரமெனத் தெளிந்துகொள்க.

கோடி=கோடிக்கரை. வேதி=வேதாரண்ணியம்.
கள்ளி=கள்ளிமேடு. பூண்டி=திருப்பூண்டி.
கொல்லை=மஞ்சக்கொல்லை. சேரி=புதுச்சேரி.
கூனி=கூனிமேடு. சூணை=சூணாம்பேடு.

இங்ஙனங் காசிவரையிற் கூறுவர்.

அப்பஃறுளியாறு, புறநானூற்றில் நெட்டிமையார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடிமிப் பெருவழுதியைப் பாடிய பாட்டில் வடிம்பலம்பன் என்ற பாண்டியனால் உண்டாக்கப் பட்டதென்பர். ஆறுதோண்டாத அரசன் அரசனாகா னென்பது அக்காலத்து முறைமை யென்ப.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் "குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின்" என நச்சினார்க்கினியர் கூறுவர்.

"கடல்கொள் வதன்முன்பு பிறநாடு மூண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டதென்பர்" உரையாசிரியர். பிறரும் ஒப்பக்கூறுவர்.

இன்னும் அவ்வெள்ளப் பெருக்கின் வரலாற்றை அதர்வவேதம், சதபாதப்பிரமணம், மச்சபுராணம் முதலிய வடநூல்களும்; பாரசீக பாஷையிலெழுதப்பட்ட ஜெந்தாவஸ்தமென்னும் நூலும் கூறும், என்பர்.

இந்து மகா சமுத்திரமென மிகப் புகழ்ப்பெற்று விளங்கும் மாகடல், பல்லாயிரவாண்டுகளுக்கு முன் நிலனா யிருந்ததென்பது ஆங்கிலநூல் வல்லார்க்கும் இனிது விளங்கும். அவர் பல்வேறு வகைப்பட்ட தேயங்களிலுள்ள மக்களின் உருவமைப்பும், உறுப்பமைப்பும் ஒத்து நோக்கி அவர்தம்முள் இனங் கண்டுரைப்பதாகிய மக்களினநூலாலும்; இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களைப் பகுத்துக்கொண்டு ஆராயும் நூல்களாலும், அவ்விந்து சமுத்திரத்திலுள்ள சில தீவுகளில் கண்டெடுக்கப்பட்ட தமிழெழுத்துகள் எழுதிய செப்பேடுகளாலும், சிலா சாசனங்களாலும், கிழக்கே சந்தத்தீவுகள் வரையிலும், மேற்கே மடகாசிகர் தீவுவரையிலும், அகன்று கிடந்த இலெமூரியா என்னும் நிலன், ஓர்காலத்தெழுந்த பெருவெள்ளத்தால் ஆழ்ந்து போயிற்றென்றும்; இங்ஙனம் ஆழ்ந்துபோன பெருநிலன் இந்நில வுலகமுழுவதற்கும் நடுவிற் கிடந்த பெரும்பரப்பாகலான் இறைவனாற் படைக்கப்பட்ட மக்கள், முதல் முதல் இந்நிலத்திருந்து பின் நாற்றிசையினும் பிரிந்துபோய் வேறுபட்டனரென்றும், அவ்வாறு இதிலிருந்த தொல்லோர் வழங்கிய மொழி தமிழ் மொழியாமென்றும், பொருளினிது விளங்கச் சொல்லுந்தோறும் காரணங்காட்டி அறிஞர் ஹேக்கலென்பவர் கூறுவர். தமிழெழுத்துக ளெழுதிய செப்பேடுகளும், சிலாசாசனங்களும், கடலாழத்திற் கிடைத்தன. என்பர் சிலர்.

இதனால் எழுநூற்றுக்காவதம் அகன்று கிடந்த நாற்பத்தொன்பது தமிழ் நாடுகள் கடல் கொள்ளப்பட்டன என்பது புலனும். இந்தியா ஆபாபிகா, தென் அமரிக்கா, ஔஸ்த்திராலியா என்பவை ஓர்காலத்தே ஓர் நிலனாகவே யிருந்தன எனக்கூறுவர் புடவிதத்துவ நூல் வல்லார்.

இந்நாளளவைப்படி ஒருகாவதமென்பது பத்துக்கல்லாக எழுநூறு காவதமும் எழாயிரங் கல்லுள்ள எல்லையளவாம். இந்து மகா சமுத்திரம் இப்பொழுது ஆங்கில நூல்வல்லார் அளந்தறிந்த வாற்றான் இருநூற்றைம்பது இலட்சம் சதுரக்கல் உடையதென்பது யாவருமறிவர். இதனால் சிறிதேறக்குறைய ஐயாயிரங்கல் நீளமும், ஐயாயிரங்கல் அகலமும் உடையதென்பது பெறப்படும். பெறவே இவ்வைம்பது இலட்சங் கல்லுள்ள நீளத்தில் ஏழாயிரங்கல் நிலனயிருந்து கடல் கொள்ளப்பட்டதென்பது.

கல்லென்பது ஒருமைல் தூரம்.

இப்பொழுதுள்ள மோரீசு தீவுக்கும் வேம்பா நகரத்திற்கும் இடையிலுள்ள நீர்ப்பரவை இரண்டாயிரத்து ஐந்நூறுகல் நீளமுடையது. இனிமோரீசு தீவுக்கும் தெற்கேயுள்ள கெர்க்கியூலன் என்னும் தீவுக்கும் இடையிலுள்ள நீளமும் அவ்வளவினதேயாம். ஆகவே நீளத்தில் இப்பொழுதுள்ள குமரிமுனையிலிருந்து கெர்க்கியூலனென்னும் தீவுக்குத் தெற்கு வரையும், அகலத்தில் மடகாசிகர்தீவு முதல் சுமத்திரம் சாவகமுதலிய தீவுகளை யுள்ளடக்கிய சந்தத்தீவுகள் வரையும் நீண்டு விரிந்து கிடந்த குமரிநாடு (இலெமூரியா) கடல் கொண்டொழிந்த தென்க.

சோழமென்பது தென்றிசைக்கோர் பெயராதலால் இந்நிலப்பரப்புக்கெல்லாம் முன்னம் சோழநாடென்று பெயரிருந்தது. இப்பொழுதுள்ள சோழநாடு கடல்கொண்ட பின்னர்த் தாபிக்கப்பட்டதென்க

"செங்கோன் தரைச் செலவைச் சேந்தன் தனியூரான்
துங்கன் தமிழ்த்தாப் புலித்தொடரால்--அங்கிசைத்தான்

சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
அக்கரக்கோ நாமஞ்சுவாம்"

என்பது செங்கோன்தரைச்செலவென்னுநூல். இந்நூல் முதலூழித் தனியூர்ச் சேந்தன், அவ்வூழியிலுள்ள தலைச்சங்கத்தார் காலத்தில் குமரியாற்றுக்கும், பஃறுளியாற்றுக்கும், இடையேயுள்ள பெருவள நாட்டரசனாகிய செங்கோனைப் பாடினனென்பது.

மேற்செய்யுளால் பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் விளங்குகின்றது. இன்னும் அந்நூலானும், உரையானும், ஏழ்தெங்க நாடு முதலிய நாடுகளைச் சார்ந்து பெருவள நாடுமுதலிய நாடுகளும், மணிமலைமுதலியவைகளும், பிறவும் விளங்கும்.

"இற்றைக்கு உகூ00 ஆண்டுகளுக்கு முன்னே மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கர், இலங்கைத்தீவைப்பற்றி எழுதிய தம் குறிப்பில் "இத்தீவு இந்தியாவினின்று ஒரு நதியால் பிரிக்கப்படுகின்றது" என்றெழுதி யிருக்கின்றாரெனவும், மெகஸ் தனீஸுக்கு நான்கு நூற்றாண்டுக்குப்பின் இந்தியாவிற்கு வந்துபோன பிளீனிமுதலிய கிரேக்க பண்டிதர் காலத்தில் இந்நதி அழிந்துவிட்டதென அவர்களெழுதியுள்ள குறிப்புகளால் புலப்படுமெனவும், அக்குமரியாற்றினழிவு உக00 ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்ததெனவும் கூறுகின்றனர்.

இது கடைசியாக வுண்டான கடல்கோளாகும். இந்தியாவிற்கும் சிங்களத்திற்கும் இடையிற் கடலிருந்ததென்றும், இராமசந்திரமூர்த்தி அணைகட்டினரென்றும், பெறப்படுகின்றமையால்; அவ்விராமசந்திரமூர்த்திக்கு முன்னேயே பெரிதொரு கடல்கோள் நிகழ்ந்துள்ளது என்க.

சீதாவாகை வில்லூன்றி முதலிய அறிகுறிகளால் இராமசந்திரமூர்த்தி சென்று பொருதது சிங்களத்திலே யெனல் வேண்டும்.

இதற்குத்தென்திசையில்தான் பரந்து கிடந்த இலங்கை யிருந்தது. அது கடல்கோளால் அழிந்து பட்டது. அக்கடல்கோள் ஓர் காலத்தே யுண்டாயதன்று. ஒவ்வோர் காலத்தே சிறிது சிறி

தாக வுண்டாய்ப் பின் பெரிதாக நிகழ்ந்ததென்க. (நன்னூல் நுட்ப விளக்கம்)

அப்பரந்துகிடந்த இலங்கையைத்தான் குமரி நாடென்கின்றனர். இதில் தாருகன் சூரபன்மன் முதலோரும் அரசு புரிந்தனர்.

இரண்டாற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பை இலங்கையென்பர்.

"மலிதிரையூர்ந்து தன் மண்கடல்வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடிடம்பட
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியமுன் வணக்கிய வாடாச்சீர்த்தென்னவன்" (கலித்தொகை—க08)

ஈண்டுக்கூறியது ஓர் காலத்தே யுண்டாய சிறிதொரு கடல் கோளாம்.

புதுச்சேரிக்கு மேற்கே ஓர் காததூரத்திலுள்ள பாகூர்ப்பாறையில், பாகூருக்குக்கிழக்கே கடல் நான்கு காதம்; மேற்கே திருவண்ணுமலை நான்கு காதம்; தெற்கே சிதம்பரம் நான்குகாதம்; வடக்கே மதுராந்தகம் நான்கு காதம்; எனக்கல்வெட்டிருக்கின்றதெனவும், இப்பொழுது அப்பாகூருக்குக்கிழக்கே கடல் ஓர் காததூரத்திலிருக்கின்றதெனவும் கூறுவர். இதனுல்மூன்று காதம் கடல் கோள் நிகழ்ந்துள்ள தென்பது புலனும்.

பாகூரென்பது ஓரூரின் பெயர்.

கடலுக்கும் திருவண்ணுமலைக்கும், சிதம்பரத்துக்கும், மதுராந்தகத்துக்கும், நடுமையத்திலுள்ளது பாகூரென்க.

கடல் நாடாவதும், நாடு கடலாவதும் இயற்கை. கடலொதுக்கத்தால் கடல் நாடாகிவிடும்; கடல் கோளால் நாடு கடலாடுவிடும்.

இக்கடலொதுக்கமும், கடல்கோளும், சிறிது சிறிதாக நிகழினும் நிகழும், பொள்ளெனப்பெரிதாக நிகழினும் நிகழும்.

ஆபாலிகா என்பது, கடலொதுக்கத்தாலாய
கண்டமென்பர். ஐவகைத்திணையுட்

பாலைத்திணை, கடலொதுக்கத்தாலாயதேயாம்.

ஆபாலிகா = ஆப்ரிகா,

மணலிலமெல்லாம், நீரின் காரியத்தாலாய செயற்கை நில மென்க.

இக்கடலொதுக்கம் இப்பொழுது சென்னையிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இமயமலைக்கும் விந்தயமலைக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பும் கடலொதுக்கத்தாலாயதாம்.

பூமி, வெடிப்பு முதலியவற்றால் தளர்ந்திருக்குங்கால், பெரு நிலவதிர்ச்சியும் வானின்கட்பேரிடி முழக்கமும் உடனிகழின், கடல் கோளுண்டாகி விடும். என்பர்.

நிலவதிர்ச்சி = பூகம்பம்

இடிமுழக்கம் சிறிது மிகுமாயின் பூமியும் அதிர்வதைக்காண லாம். இதனால் நில முதலிய ஐவகைப்பூதங்களும் ஒன்றற்கொன்று இயைபுடையதென்பது தெளிந்து கொள்க.

"காற்று மழையுங் கடுகடுத்தோர் நாளுற்றின்
வேற்றுமை கொள்ளும் வெறு நிலத்தின்"

என்பதும் விளக்கற்பாலது

இலங்கையைப்பூமியின் மையமாக வைத்துக்கணன விதியை யெழுதத்தொடங்கிய நமது நாட்டுக்கோளநூல் வல்லார், "இலங் கை மையத்திலும் யவகோடி கீழ்ப்புறத்திலும் உரோமகம் மேற் புறத்திலும் அடியில் சித்தபுரியும் இக்கோளத்திலமைந்திருக்கின் றன" என்று எடுத்து வெளியிட்டனர். இலங்கையின் நேர் கீழ்ப்பா கத்திலிருக்கும் நாடு சித்தபுரியெனின் அஃது இக்காலத்து வழங் கும் அமெரிக்கா என்றே போதரும்.

பழைய பூகோள படத்தில் குணகோளார்த்தத்தின் மையத் தில் இலங்கையும், குடகோளார்த்தத்தின் மையத்திற் சித்தபுரியும் குறித்திருத்தலை நோக்கின், இலங்கையின் நேர் கீழ்ப்பாகத்தில் தான் சித்தபுரி அமைந்துள்ளது.

இலங்கை சித்தபுரி இவ்விரண்டும் முறையே குணகோளார்த்தத்திலும் குடகோளார்த்தத்திலும் க௰ வது பாகையிலேயே இருக்கின்றன.

உத்தரகுரு, சித்தபுரி, அமரிகா, நாகபுரி, நாகருலகம் என்பன ஒருபொருட்கிளவி.

யவகோடியெனினும் சாவகமெனினும் ஒக்கும். நாகப்பட்டினத்துச்சோழன் நாகருலகம் சென்று அக்கன்னிகையை மணந்து ஆதொண்டச்சக்கரவர்த்தியைப்பெற்றனன். அச்சோழன் நாகருலகம்போய் வந்தமையின் நாகபட்டினமெனப் பெயர் பெற்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் பந்தனென்னும் ஓர் வணிகச் செல்வனும் நாகருலகம் சென்று அக்கன்னிகையை மணந்து, ஓர் பொற்படாமும் ஓர் கருநெல்லிக்கனியும் பெற்று நாகனென்னும் பெயர் பூண்டமையைப் பந்தனந்தாதியால் உணர்ந்து கொள்க.

அப்பொற்படாம் போர்த்துக்கொண்டார்க்கு இளமை மாறாமையும், அக்கருநெல்லிக்கனியுண்டார்க்கு நீடூழி வாழும் ஆயுட்பெருக்கும் உண்டாம்.

"இனியவுளவாக இன்னாதகூறல்,
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்னுந்திருக்குறளுரையில் "இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை" என்றனர் பரிமேலழகரும் ஔவையார் பொற்படாமும், நெல்லிக்கனியில் ஓர் பாதியும் பந்தனாற் கொடுக்கப் பெற்றனர்.

இதனாலே அக்காலத்தார் மரக்கலவழியாகவும் நிலவழியாகவும் அமரிக்கா நாட்டிற்குப்போய் வந்தமை புலனாகின்றது. போய்வந்தார் சிலரே என்க. முதல் ஆகாயகமனமாகச்சித்தர்கள் போயிருக்கலாம். கரிகாற்பெருவளவன் காலத்தே சாரமாமுனிவன், நாகருலகம் சென்று செவ்வந்தி கொடுவந்தனன்; சூரவாதித்தன் அந்நாகருலகம் சென்று வெற்றிலைக்கொடி கொண்டுவந்து துளுவநாட்டில் பரவச்செய்தனன். நாகருலகம், உத்தரகுருவில் ஓர் பிரிவென்பர்

சிலர். "காமம் நன்றுமாறுமுண்டு. சுவர்க்கத்தின்கட்சென்று போகம் துய்ப்பலென்றும், உத்தரகுருவின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும், நன்ஞானங்கற்று வீடு பெறுவலென்றும், தெய்வத்தை வழிபடுவலென்றும், எழுந்த காமங்கண்டாயன்றே" என்று இறையனாரகப்பொருளுரையில் கூறுகின்றமையின் அவ்வுத்தரகுருவிற்குப் போகநுகரல் வேண்டி அக்காலத்தார் போய்வந்தனரென்பது துணியாகின்றது.

உத்தர குருவிலுள்ள நாக கன்னியர் போகமகளிராவர். ஆங்குள்ளோர் நாகராசனை வணங்கினமையின் நாகருலகமெனப்பட்டது. அமெரிக்காவில் மெக்சிகோ நகரத்தில் மாண்டிகூமா என்னும் அரசன் காலத்தில் நாகராசனுக்கு இரதோச்சவ முதலியன நடந்தன எனச்சரித்திராசிரியர் கூறுவர். அக்காலத்துத்தமிழர் ஆங்காங்கு சர்ப்பவணக்கம் செய்தனர். இக்காலத்தும் செய்கின்றனர். மற்றும் பிற்கூறுதும்.

1841ல் வட அமெரிக்காவில் சின்சிநாட்டியென்னும் நகரத்தில் ஓர் சிலாசாசனம் கிடைத்தது. அதனை இப்பொழுது ஆராய்ச்சிசெய்ததனால் அங்கு முன்னே இந்துக்கள் இருந்தார்கள் என்பது புலனாகின்றது. 9-10-12. இந்து பத்திரிகை 11-வது பக்கம் பார்க்க.

மேற்கூறிய கணனவிதி வயலைச்சோதிடர்பாலறிந்தது, பிரமவித்தியா பத்திரிகையிலும் எழுதியுள்ளது. "இங்ஙனம ஆழ்ந்துபோன பெருநிலன், இந்நிலவுலக முழுவதற்கும் நடுவிற் கிடந்த பெரும்பரப்பாகலின்" என்ற ஹேக்கலென்பவர்தம் ஆராய்ச்சியும் கணனவிதியெழுதத்தொடங்கிய கோளநூல்வல்லவர்தம் ஆராய்ச்சியும், அக்கோளநூல் வல்லார்தம் ஆராய்ச்சிக்குப் பண்டைப்பூகோளபடம் சான்று பகர்தலும் சாலவும் பெருமையாகவும் அழகாகவும வியப்பாகவு மிருக்கின்றன. அத்துணையோ

சிலப்பதிகாரவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார்தம் மூக்கினையும், முன்னுக்குக்கொண்டு வருகின்றன. இவ்வாசிரியர்கள், ஓர் காலத்தவராய் ஓரிடத்தவராயிராது, வேறுவேறு காலத்தவராய்

வேறுவேறிடத்தவராயிருத்தலின் சரித்திரவுண்மை வலியுறுகின்றது.

இவர்களெல்லாரினும் கணனவிதி யெழுதத்தொடங்கிய கோளநூல்வல்லார்தம் ஆராய்ச்சிக்காலம் மிகப்பழமையானதென்னலாம்.

சிலப்பதிகார அரும்பதவுரைகாரர்தம் ஆராய்ச்சியினும் அடியார்க்குநல்லார்தம் ஆராய்ச்சி, திட்பமுள்ளது.
இறையனார் அகப்பொருளுரையாசிரியர், என்ப என்னும் முற்றுச்சொல்லானே ஆங்கோர் தொடரும் கூறலின், அவர் கூறுவன வெல்லாம் செவிவழக்கென்பர் சிலர், செவிவழக்கு—கர்ணபரம்பரை.

அவ்வுரையாசிரியரே, இடைச்சங்கத்தைப்பற்றிக் கூறுங்கால் "நாற்பத்தொன்பதின்மரென்ப" "பாடினரென்ப" "அவர்க்குநூல் அகத்தியமும் தொல்காப்பியமுமென்ப" எனக்கூறலும் செவிவழக்குத்தானே!

"எழுத்தெனப்படுப—வகரமுதல் னகரவிறுவாய் முப்பஃதென்ப" என்பதும் செவிவழக்குப்போலும். செவிவழக்கு வலியில்லது என்பது அவர்தங்கருத்தாம். அற்றன்று; ஓர் நாட்டிலேனும் ஓரூரிலேனும் ஓர் புதுமையுண்டாயின் செவிவழக்கிலேயே சிலகாலம் நிகழ்ந்துகொண்டிருக்கும். பின்னர் நூல்வழக்காம், அந்நூல்வழக்குப் பல ஆசிரியர்களுக்கும் மேற்கோளாதற்பாலது.

இத்துணையாராய்ச்சியானே குமரிக்குத்தென்பால் பெருநிலப்பரப்பு இருந்ததென்பதூஉம், அது உலகிற்கு நடுமையமென்பதூஉம், ஆண்டிருந்தோர் தமிழரென்பதூஉம் சிறந்த பலகாரணங்களாற்பெறப் பட்டமை காண்க

இலத்தீன் பாஷையில் இலங்கைக்கு டாப்ரோபேன் (Taprobane) என்னும் பெயரிருக்கின்றமையானும் அது தாம்பிரபர்ணியென்பதன் சிதைவென்று மொழிநூல் வல்லார் கூறுகின்றமையானும் இந்தத் தேசமும் கடல்கோட்பட்ட தமிழ்நிலமும் ஓர் காலத்து ஒன்றாயிருந்ததென்பதற்கு இதுவும் ஓர் சான்றாகின்றது. இப்போதுள்ள தாம்பிரபர்ணி யென்னும் நதி கடல்கோட்படா முன்

ன்ம் இலங்கை முழுதும் சென்று பயன் பட்டிருந்தமையின் இலத்தீன் பாஷைக்காரர் அவ்விலங்கைக்கு டாப்ரோபேன் எனப்பெயர் வைத்தனர்.

அங்கிலப்பரப்பு, கடல்கோட்பட்ட கால வெல்லையைக் கூறுவதில் சரித்திரவாசிரியர் முரண்படுகின்றனர். அஃது இன்னும் ஒப்ப வந்திலது. அகத்தியத்தை இலக்கணமாகக் கொண்டாராய்ந்த முதற்சங்க மிருந்தகாலம் ஆதிகற்பத்தில் கிர்தயுகத்துப்பிற்பகுதி யெனவும், அகத்தியம் தொல்காப்பியமென்னு மிரண்டனையும் இலக்கணமாக வுடைய இடைச்சங்க மிருந்த காலம் ஆதி கற்பத்தில் திரேதாயுகத்து முற்பகுதியெனவும் கூறுவர்.

இவ்விரு சங்கமும் கடல்கோட்பட்ட நிலத்திருந்தனவாம். வேதவியாசர் வேதங்கூறு செய்தகாலம் ஆதிகற்பத்துத் துவாபரயுகமென்பது கந்தபுராணத்தார் கருத்து. இவ்வியாசருக்கு முற்பட்டது தொல்காப்பியம்.

கூ இனிச்சாவக முதலிய ஐவகைத்தீவினுள்ள மொழிகளும், இமயமலைச்சார்பில் ஓர் வகைச்சாதியார் பேசுகின்ற மொழியும், விந்தய மலையின் கிழக்கு முனையிலுள்ள சூடிய நாகபுரியில் ஓர் வகைச்சாதியார் பேசுகின்றமொழியும், அம்மலையில் அம்பரமென்னுஞ் சிகரத்தில், (Mt. Abu) வசிப்பவர்தம் மொழியும், திபேத்து நாட்டு மொழியும், பெலுஜிஸ்டான் தேசத்தில் தவுத்புத்திர என்னுஞ் சாதியார் பேசுகின்ற மொழியும், ஐரோப்பாக்கண்டத்துள் ஆஸ்டிரியா நாட்டு மொழியும், பிறவும், தமிழின் சிதைவெனச்சரிதவாராய்ச்சியில் வல்ல பெரியோர் கூறுவார். தவுத்புத்திர என்பது திராவிட புத்திர என்பதன் சிதைவு.

"ஆப்கானஸ்தான் என்னும் மகம்மதிய நாட்டில் ஓர் நகருக்கு, தமிழக் என்னும் பெயர் வழங்கிவருவதோடு அந்நகரில் குடியேறிய மகம்மதியரும் தமது பாஷையோடு தமிழையும் கலந்து பேசுகின்றார்கள்" என்பர்.

தமிழர்க்குப் பிரமபுத்திரரெனவும், காளி புத்திரரெனவும் ஓர் பெயர் கூறுவர். ஜர்மன் தேசத்து ஆசிரியர்கள்,

பிரமபுத்திர நதிக்கரையிலுள்ளோர்; காளிகட்டத்திலுள்ளோர் என்பது அதன் பொருள்.

பாண்டி நாட்டு நாணயங்களும் பிரமபுத்திரநதியிற் கிடைத்த நாணயங்களும் ஒத்துள்ளன.

* பீல், † பார் முதலிய ஜர்மன் தேசத்தாசிரியர், தில்லியில் ஆரியம் வளர்ச்சி பெற்றது; ஆரியத்துக்கு முன்னேயே தமிழுள்ளது; ஆரியத்துக்கு மேலானது தமிழ் எனக்கூறுவர்.

பெரும்பான்மையும் எல்லாப்பாஷைகளிலும் அம்மை அப்பனென்னும் தமிழ்ச்சொல் வழக்குள்ளது. ஆரியர்க்குமுன் நாகரீகமடைந்த எகித்து நாட்டு நூல்களும் தமிழரது நாகரீகத்தை எடுத்துக்கூறுமென்பர். நயில் நதியின் பள்ளத்தாக்கில் அகப்படும் பண்டைக்காலத்து நாகரீகப்பொருள்களினால்,

அந்நதியோடும் எகித்து தேசமானது யூதர் கூறும் உலக சிருட்டி வருடம் ௫அ௬௯ க்கு முன்னமேதானே நாகரீகமடைந்திருந்ததென்பது புலனாம்.

"ஆசியாக்கண்டத்திலும், ஐரோப்பாக்கண்டத்திலும் ஆரியம் வருமுன், தமிழ் போன்றதோர் மூலபாஷை பரவியிருந்ததென்பது மொழியாராய்ச்சியில் வல்ல ஐரோப்பிய பண்டிதர்தங்கருத்து" என்று அறிஞர் சுந்தரம்பிள்ளையவர்கள் கூறுவர்.

> "சதுமறையாரியம் வருமுன் சகமுழுதுநினதாயின்
> முதுமொழிநீயநாதியென மொழிகுவதும் வியப்பாமோ"
>
> என்பது மனோன்மணீயம்

"ஆசியாவில் சைபீரியா நாட்டில் அக்கிரீன் சாதியார் மொழியும், வட ஐரோப்பாவில் பின் சாதியார் மொழியும், மீட்டியா நாட்டுள்ள பிஹிஸ்ட்டன் சாசனங்களில் எழுதியுள்ள மொழியும், திராவிட சம்பந்தம் பெற்றுள்ளன; பால்டிக்கடல்முதல் மலையாளம் வரையில் திராவிட சம்பந்தமாம்; திராவிடம் தொன்றுதொட்டதாள் ஒன்று; ஆரியற்கு முன் நாகரீகமடைந்தவர் திராவிடர்; வடபால், மேல்பாலுள்ள ஒஸ்ட்டிராலியா தேசத்தாரது மொழியுள் நான்

* Boele. † Baur.

நாம், நீ, நீங்கள், அவனென்னும் சொற்களொத்துள்ளன; மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம், குடகு, தோடம், கோட்டம், காண்டி, ஊரான், முதலிய பாஷைகள் தமிழ்ச்சிதைவு” என்று சரித்திரப்புலவர் * ஹண்டரென்பவர் கூறுவர்,

பாலி, பிராகி, திமல், என்னும் பாஷைகளும் தமிழ்ச்சிதைவாம் என்பர். மொழி=பாஷை.

உலகத்திலுள்ள பாஷைகள் ஒவ்வொன்றிற்கு முள்ள இயைபுகளை அறிஞர், † கால்டுவெல் எடுத்துக்கூறியபடி ஆராயின், ஒரு பாஷையிலிருந்தே எல்லாப்பாஷைகளும் தோன்றின என்பது விளங்கும். எனவும், இந்தியாவினிடையிலுள்ள ஓர்வகை மொழி சிறிது திருந்தி வடபால் பாளியெனவும், தென்பால்தமிழெனவும், பெயர் பெற்றது; பழையபாளியிலிருந்து ஆரியந்தோன்றியது; என்னும் அறிஞர் ‡ டெய்லர்தங்கூற்றை யொட்டி, பாளி முற்பட்டது அதன் திருத்தம் ஆரியமெனவும்; வடமொழியெழுத்துள்ள நாணயங்களினும் கல்வெட்டுகளினும், பாளிபாகதங்களினெழுத்துள்ள நாணயங்களும் கல்வெட்டுகளும் நானூறு வருடங்கள் முற்பட்டன என்பது அறிஞர் || சைகேஸ் கூற்றெனவும்; அறிஞர் வின்சிலோ என்பவர் கூறுவர். (Rev.Winslou)

இன்னும் வடமொழிக்குத்தமிழ் முற்பட்டது எனவும், இத்தாலியா தேசத்திற் பலநூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழர்களுக்குச் சம்பந்தமான சாதியார்கள் இருந்தார்களெனவும், அறிஞர் ¶ கால்டுவெல் கூறுவர். $ எட்வொர்ட் களார்டு என்பவர் தாம் எழுதிய யூதருடைய சரித்திரத்தில் மங்கோலியர், பீனிஸ் என்னும் இச்சாதியார்களுக்கு மூல புருடர்களாக இருந்தவர்கள், ஈழநாட்டிலிருந்து பாரசீகவளைகுடாவைச்சூழ்ந்து குடியேறி யிருந்தார்களெனவும்;

---

* Hunter. † ‘Rev. R. Caldwell, LL. D’ ‡ Rev. William Taylor.
|| Colonel. Sykes. ¶ Rev. R. Caldwell, LL. D. $ Edward Claurd,

சுமேரியரென்னும் சாதியாருக்கு முன்னும், எகித்து தேசத்தார் நிலையெடுப்பதற்கு முன்னும் அவர்கள் நகரங்களையும் இராசதானிகளையும் உண்டாக்கினார்களெனவும்; அவ்விராசதானிக்கு ஊரெனவும், அவ்வூர் சோமசுந்தரக்கடவுளுக்கு உறையுளெனவும், வெற்றி வேற்குமரன் அவர்தங் கடவுளெனவும், கூறுவர்.

“பதினாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழெழுத்துள்ள கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன” என்று தமிழ்மொழி வரலாறென்னு நூல் கூறும்.

பல பாஷைகளிலுள்ள மரப்பெயர்களும், எண்ணுப்பெயர்களும், ஒன்றற்கொன்று இயைபுபெற்றிருத்தலின் அறிஞர் கால்டுவெல் என்பவர் கூற்று வலியுறுகின்றது.

குறிஞ்சி முதலிய ஐவகைத்திணைக்கும் கருப்பொருள் கூறுவார், அவ்வந்நிலத்து மொழியையுங்கூறுமையின் அக்காலத்து அவ்வைவகைத்திணைக்கும் தமிழ் பொதுப்பட்ட வழக்காக இருந்ததெனத் தெளிதல் வேண்டும்.

பதினேழு யுகப்பிரளயத்துக்கு முன்னமே தமிழுள்ளது; வேதங்களுக்கு முன்னரே தமிழுள்ளது; என்று சித்தர் நூல் கூறுகின்றன. என்பர் பூதலூர் யோகியார் முத்துசாமி ஐயரவர்கள்.

இருக்குவேதம், குமரிநாடு கடல்கொள்ளப்படுமுன் உண்டாயிற்று; அக்கடல் கொண்ட வரலாற்றினை அதர்வவேதம் எடுத்துக் கூறும். என்றலின் வேதங்களுக்கு முன்னரே தமிழுள்ளதென்ப துண்மைக் கூற்றே.

“ஆரியமும் ஆங்கிலமும் எம்மட்டில் ஒத்திருக்கின்றனவோ அவ்வளவும் தமிழும் சீனமும் ஒத்திருக்கின்றன தமிழில் நீ யென்னும் மொழிக்குச்” சீனத்தில் நீ யென்றே வழங்குவர்; நான் என்பதற்கு ஙான் என்றும், யாம் என்பதற்கு யாம் என்றும், பெண் என்பதற்கு பெண் என்றும் எஃகு என்பதற்கு எஃ என்றும், மை யென்பதற்கு மை யென்றும், கண் (இடம்) என்பதற்குக் கண் என்றும், இரண்டு என்பதற்கு ஈர் என்றும், வழங்குதலால்; தமிழும் சீனமும் பண்டைக்காலத்திலே ஒரே குலத்தனவென்றும்

ஓரே நாட்டிலிருந்தவரென்றும், புலப்படும்." இவ்வாராய்ச்சி முற்றுப்பெற்றதாகாது. "இங்ஙனம் ஊரின் பெயரும், புலமாரினர் பெயரும், வங்காளத்திலும் தமிழ் நாட்டிலும் ஒத்திருப்பதால்; தமிழர் வங்காளத்திலிருந்து வந்து தென்னாட்டிற்குடியேறியதற்கு யாதோர் ஐயமுமில்லை"

"உதயணன் கதையில், மகதநாட்டு இராசதானியாகிய இராசக்கிரகமென்னும் பட்டணத்தின் சிறப்பை உரைக்குமிடத்துப் பின் வருமாறு ஆசிரியர் கூறுகின்றார்.

விண்ணுறநிவந்த பண்ணமை புடைமதில்
வாயிலு மருங்கினுங் காவல் கண்ணி
வேந்து பிழைத்தொழுகினுங் காய்ந்து கலக்குறா
முழுப்பரிசார முதற்கணையாதி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றிதாங்கிய
ஐம்பதினிரட்டி யவனச்சேரியும்
எண்பதினிரட்டி யெறிபடைப்பாடியும்
மன்பெருஞ் சிறப்பினுயிரமாகிய
தலைப்பெருஞ்சேனைத் தமிழச்சேனையும்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச்சேரியும்
மிலேச்சச் சேரியுந் தலைத்தலை சிறந்து"

என்பதனால் ஆயிரஞ்சேரியிலிருந்த தமிழர் மகதத்தரசனுக்குத் தலைப்பெருஞ்சேனையாக இருந்தாரென்பதனால், அக்காலத்திலே மற்றைச்சாதியாரைப்பார்க்கிலும் தமிழரே மிக்க போர்வீரராகவும், அரசனுடைய பரிவாரங்களில் முதன்மையானவராகவும் இருந்தனர் எனத்தோன்றும்."

"வங்காளத்துக்கு வடக்கே, நேபாளத்துக்குக் கிழக்கே திமல் என்னும் ஓர் சாதியார், மிகுதியாக வசிக்கின்றார். இத்திமலருடைய பாஷை தமிழ் மொழிக்குப்பலவாறு ஒத்திருக்கின்றது; கங்கைக் கரையிலே முற்காலத்துள்ள முக்கியதுறைமுகமாய தமிழுக்கு என்னும் பட்டணத்துக்கு அப்பெயர் அமைந்தது" என்பர் அறிஞர்

வி. கனகசபைப்பிள்ளை யவர்கள் (செந்தமிழ் தொகுதி ௩—பகுதி ௮—தமிழ்ப்பெருமை காண்க)

"ஈண்டு வழங்கும் பாஷை கொங்கணமெனவும், கொங்கணி யெனவும் அது தமிழிலையுடையதெனவும், அக்கற்கோட்டைகளி லுள்ள கல்வெட்டுகள் மிகப்பழையனவெனவும் அவையும் தமிழி லையுடையனவெனவும் கூறுவதும்; நிலங்கடந்த நெடுமுடி யண் ணல், வேளிர்; அருவாளர், என்பவை தமிழ்ச்சொற்களாக இருப்ப தும் உணரின், அகத்தியனார்க்குமுன் நெடிது காலமுதல் இந்நாள் வரையில் கொங்கணத்தில் தமிழ் வழங்கென்பது பெறப்படுகின் றது. தமிழ் வழக்கென்பது தமிழிலையினே."

(செந்தமிழ் தொகுதி ௬ பகுதி ௫ வேளிர் வரலாற்று மறுப்பு)

"கொங்கணநாட்டுக்கொங்கணம் அல்லது கொங்கணி யென்ற மொ ழியும் தமிழிலையுடையதாகவே யிருத்தலாலும், அந்நாட்டின் கோட்டை மதிலில் தமிழிலையுடைய கல்வெட்டெழுத்துகள் கா ணப்படுதலாலும், அந்நாடும் பூர்வம் தமிழால் வியாபிக்கப்பெற்றிருந் ததாகவே விளங்குகின்றது."

(வேளாண்மரபுண்மை விளக்கம்)

"வேற்றுச்சார்பின்றியே மிகவும் சீர்செய்யப் பெற்றுயர்ந்த தமி ழொன்றுமே கூடுமானால் தன்னிடங்கொண்ட வடசொற்களனைத் தையும் அகற்றி விட்டுத்தனித்து நின்றியலும் ஆற்றலுடையது மா த்திரமே யன்றி, வடமொழியின்றியே மேம்பாடடையத் தக்கதெனவும், அதன் ஒளியைப மழுக்கி, நீதிநூலில் வடமொழியை வென்றதெ னவும்" அறிஞர் கால்டுவெல் கூறிய கூற்றும்; இவ்வாறு கூறிய இவர், தமிழ் ஆரானியவகுப்பைச் சேர்ந்ததெனக்கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தை மறுத்து, "நடுவு நிலைமையாகப்பார்க்குமிடத் து உலகத்தார் இதுவரை யறிந்தவற்றுள் மிகவும் மேன்மையான கலைஞானங்களில் ஒன்றைத்தமிழர் பெற்றிருக்கின்றனர்" என அறி ஞர் * பெர்சிவல் வேதபுருடனென்னும் தமது சிறந்த நூலில் குறி ப்பிடுவதை மேலே கூறிய ஆரானிய இலக்கணத்தோடு ஒப்பிட்டு

* Rev. C. Percival.

நோக்குக. சுருங்கக்கூறலென்னும் அழகில் விரிந்த பொருட்பொதி வை அடக்கிக்கொண்டிருக்குந்தன்மை, தமிழொழிந்த வேறு எந் தப்பாஷைக்கும் இலது. மனதின் தோற்றங்களை வெளியிடுவதில் தமிழினும் நுணுக்கமாகவும், தத்துவமாகவும், சொல்லத்தக்க பிற மொழிகள் இல்லை யென்று உறுதிபடச்சொல்லலாம்; இப்பாஷை மனோ பாவனைக்கேற்ற வலிமையை மனதிற்குத்தருவதுடன், அதன் செம்பாகமும் தார்க்கிக வழக்கும் அவ்வண்ணமே மனத்தோற்றத் தைத் தெளிவாகக் கூறுவதற்கும் ஏற்ற வலிமையையும் தருகின் றன என அறிஞர் * சார்லெஸ் கோவர் என்பவர் தாமெழுதிய "தென்னிந்தியாவின் சாதாரண சனப்பாடல் என்னும் நூலின் முக வுரையில் கூறிய கூற்றும்" "திராவிடமொழிகளுக்குப் பிரதி நிதியாக நிற்கத்தக்க தமிழ்மொழியைப்பற்றிச் சொல்லுமிடத்து மக்களாற் பேசுதற்கு, மிகப்பொலிவும், திருத்தமும், சீரும், உடையமொழி களுள் இஃது ஒன்றென ஓரிடத்தும்; ஆந்திர திராவிடச்செய்யுள்க ளின் சிறப்பினை ஐரோப்பாவில் நன்கு அறிதல் வேண்டும். அங்ஙன மாயின் கிரீக்கு, இலத்தீன்செய்யுள்களுக்கு ஈடானவை உலகில் இல்லையென்பதுபோல அவைகளுக்குண்டான கீர்த்தி முற்றும் சரி தானா? என்று தகுதியான நடுநிலைமையுள்ள சான்றோர் முன்னிலை யில் அதன் பின்னர்த்தீர்மானிக்கத்தக்கது." என மற்றோரிடத்தும் அறிஞர் ‡ டெயிலர் கூறியகூற்றும் வலியுறுத்தாநிற்கும்.

அறிஞர் வி. கனகசபைப்பிள்ளையவர்களியற்றிய க௲00 வருட த்துக்கு முற்பட்ட தமிழர் என்னும் ஆங்கில நூலும் தமிழரெனப் படுவோர் யாவரும் அறிதற்பாலது.

க0. ஆரியர் இந்து தேசத்துக்கு வருங்கால் பெரும்பான்மை யும் காடாகவே யிருந்தது.

ஆடுமாடுகளின் நன்மை நோக்கி ஆரியர் சிந்து நதிக்கரையில் முதல் முதல் குடியேறினர்.

---

* Charles Gover.

‡ Rev. William Taylor.

இருக்கு வேதத்தில் சிந்து, கங்கை, சரசுவதி யென்னும் நதிகளின் பெயரிருத்தலின், இருக்குவேதம் அந்நதிக்கரைகளில் முற்றுப்பெற்றது.

தமிழருடைய ௯0 கோட்டைகளையும், ௯௯ நகரங்களையும் ஆரியர் அழித்தனர்.

என்று * மாக்ஸ் மூலர் முதலோர் வேதத்தினின்று விளக்குவர். பிறவுங்கூறுவர். அறிந்து கொள்க.

இருக்கு வேதத்தில் வரும்தாசர் என்போர் தமிழராவர். தசாங்கத்திற் சிறந்த அரசரென்பது பொருள்.

தசம்=பத்து. தாசர்.

தசம்—தசார்—தயார். நீவிர் தயாராக இருத்தல் வேண்டும் எனின் தசாங்கத்தோடு இருத்தல்வேண்டுமென்பதே பொருள்.

"தேசாங்க சூரன் தோற்க மயிலேறி" (திருப்புகழ்)
என்பதால் தெளிக.

தசாங்கமாவன:—

மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல் என்பனவாம்.

"களிறு கங்கை நீருண்ண மண்ணையிற்
காய்சினத்தொடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைகடாரமுங்
கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்"
(கலிங்கத்துப்பரணி)

ஓர் சோழன் கங்கையாற்று வரையும் சென்று மண்ணையும், கடாரத்தையும் வென்று நிலமெல்லாம் தன் வயப்படுத்தினன் என்பது பொருள்.

---

* Mox Muller Professor.

மண்ணூர் மண்ணையாயிற்றென்பர்.

பிறவும் கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியத்திற்காண்க.

பர்மா தேசத்தைக் கரிகாலன் ஆண்டனன் என்ப

"திசைக்குமிக் குலவுசீர்த்தித் தில்லைக்கூத் துகந்துதீய
நசிக்கவெண் ணீறதாடு நமர்களை நாணுகா நாய்கள்
அசிக்கவா ரியங்களோது மாதரைப்பேதவாதப்
பிசுக்கரைக்காணு கண்வாய் பேசாதப்பேய்களோடே."

என்பது திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா. இதன்கண் ஆரியங்களென்றது ஆரியமொழியென்பர். ஆரியங்களெனப் பன்மையாற் கூறினமையின் அது பொருந்தாது. மற்றென் எனில்? சித்தாந்த சைவத்துக்கு முரண்பாடாய ஆரியநூல்களெனல் பொருந்தும்.

இச்செய்யுள் ஈண்டைக்குப்பொருந்துமென்பாரை மறுத்தபடி.

தமிழில் சைவசித்தாந்த நூல்கள் பொருட்பொதிவோடு நிறைந்திருப்ப, அப்பொருட்பொதிவில்லா ஆரிய நூல்களை ஓதும் ஆதரை எனலும் பொருந்தும்.

இன்னும் அச்சிற் பதிப்பியாத சைவசித்தாந்த நூல்கள் ௫00 வரையிலுள்ளன என்பர்.

"ஆதியிற்றமிழ்நூலகத்தியற் குணர்த்திய மாதொரு பாகனை வணங்குதும்.
போதமெய்ஞ்ஞான நலன் பெறற்பொருட்டே"

(தொ—சேனாவரையம்)

"சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" (க—ராமாயணம்)

இவை தமிழ் சிவபெருமான் வழியதென்பதுணர்த்தும்.

கக. "பாவில் தமிழ், எதுகை, மோனை, ஓசை, இன்றியமையாதனவும்; தனையிற் சிறந்தனவுமாகிய பாக்களையுடையது. வடமொழி, லத்தின் கிரேக்கு முதலிய பாஷையின்பாக்கள் அங்ஙனம் சிறந்தன அல்ல; ஆதலால் பாவில் இனியது."

"தமிழில் பகுதி விகாரப்படினும் முற்றும் மாறாது நிற்கும். பிறபாஷைகளில் வினைப்பகுதிகள் இயல்பாலும் கால இடங்களாலும் பகுதி வடிவத்துக்குச்சம்பந்தமில்லாத வடிவமடைகின்றன."

"நீதிநூல்—மனிதரனைவருக்கும் ஒருவர் மற்றொருவரின் உடல் பொருள் மனங்களுக்கு ஊறின்றி நடந்துகொள்ளும் வழிகூறும் நூல். இனம்பற்றி நியாயம் பிறழ்ந்து நடக்கும் நடக்கையைக் கூறுவதன்று. அது திருக்குறள், நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலிய தமிழ் நூல்களிற் காணலாம்."

"வடமொழியில் தரும சாத்திரங்களென்ற மிருதிகளில் குற்றங்களுக்குத்தண்டனை இனம்பற்றி ஓரமாய் விதித்துளது. நன்மை தரு மார்க்கங்களைக் கூறலிலும் ஓரம் உளது."

"தமிழ் மொழியில் எல்லாப்பொருள்களும் இரண்டு திணைகளாகப் பகுக்கப்பட்டுள. பகுத்தறிவுடைய உயிர்களை உயர்திணையாகப்பகுத்து, உயர்திணையில் ஆணுக்கு ஆண்பாலும் பெண்ணுக்குப் பெண்பாலும், பலருக்குப்பலர்பாலும், பகுத்தறிவற்ற விலங்கு, பறவை, நீர் வாழ்வன முதலிய உயிர்களையும், மரம், கொடி, செடி, கல், மண் முதலிய சடப்பொருள்களையும் அஃறிணையாகப்பகுத்து, அவற்றுள் ஒன்றுக்கு ஒன்றன்பாலும், பலவற்றுக்குப் பலவின்பாலும் கூறப்படுகின்றன. தமிழில் விலங்கு, பறவை, மீன்களின் ஆண் பெண்களுக்கும் வெவ்வேறு பெயர் கூறப்படினும், அவைகள் பகுத்தறிவற்ற தாழ்ந்த சாதியிற் பட்டனவாதலால், அஃறிணையாகவே கூறப்படுகின்றன. ஆங்கிலமுதலிய பாஷைகளில் சில அஃறிணையுயிர்களுக்கும், பொருள்களுக்கும் ஆண்பால் பெண்பால் கூறினும் அங்ஙனங்கூறப்பட்ட ஒன்றையே பலபால்களில் கூறுவதும், உயர்திணை ஆண்பாலுக்கு பெண்பாற் பெயரும், பெண்பாலுக்கு ஆண்பால் ஒன்றன்பாற் பெயரும் முறைபிறழ்ந்து கூறுவதுமில்லை.

வடமொழியிலோ பால் வரம்பின்றிப்பலவாறு கூறுவதன்றி அவை வருமாறு;—

மனைவி பெயர்

க பார்யா—பெண்பால் (ஒருமை)

உ. தாரா:—ஆண்பால் (என்றும்பன்மை)

ங. களத்ரம்—ஒன்றன்பால்.

கல்லின் பெயர்

க. பாஷாண:—ஆண்பால்

உ. சிலா:—பெண்பால்

ங. உபலம்—ஒன்றன்பால்

ஆதலால் தமிழ் பால்திணையில் இனியது."

ஒலியும் எழுத்தும் ஒன்று படல்

"ஒரு பாஷையிலுள்ள சொற்களினொலிகளை வரிவடிவிற் காண்பித்தற்கு இன்றியமையாத கருவியாயுள்ளது எழுத்து. அங்ஙனமே தமிழ்மொழியின் ஒலியும், அதற்குரிய எழுத்தும், ஒற்றுமை பெற்றுள்ளது. வேறு சில பாஷைகளைப்போல் அவை ஒன்றுக்கொன்று வேற்றுமை யுடையன அல்ல.

வடமொழியில்

ப்ரஹ்ம என்றெழுதி ப்ரம்ஹ என்றொலிக்கின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸிஹ்ம | ,, | ஸிம்ஹ | ,, | ,, |
| வஹ்நி: | ,, | வந்ஹி: | ,, | ,, |
| விஜ்ஞானம் | ,, | விக்ஞானம் | ,, | ,, |

விசர்க்கம்:—ha, ஜிஹ்வா மூலியம் ஹ்க hka,

உபத்மானீயம் f என்ற மூன்றெழுத்துகளுக்கும் விசர்க்கம் ஒன்றையே எழுதி யொலிக்கின்றனர்.

**உதாரணம்.**

து:க்கம் என்றெழுதி, துஹ்க்கம் என்றொலிக்கின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| அத:பரம் | ,, | அத f பரம் | ,, | ,, |
| அந்த:கரணம் | ,, | அந்தஹ்கரணம் | ,, | ,, |

வினைத்தெளிவு

"வினைச்சொல், ஒருவன் ஒருத்தி ஒன்றன்செயல்களைக் குறிக்குஞ்சொல். தமிழ்மொழியில் வினைகள் அவற்றைத் தெளிவு பெறக் குறிக்கின்றன,

பிற பலமொழிகளிலுள்ள வினைச்சொற்கள் ஆண் பெண் ஒன்றன் பால்களின் வேறுபாட்டை விளக்குகின்றில.

உதாரணம்.

| ஆங்கிலம் | | வடமொழி |
|---|---|---|
| செல்கின்றான் | (He) goes | (ஸ) கச்சதி |
| செல்கின்றாள் | (She) goes | (ஸா) கச்சதி |
| செல்கின்றது | (It) goes | (தத்) கச்சதி |

| | ஆங்கிலம் | இலத்தீன் |
|---|---|---|
| நேசிக்கின்றான் | (He) loves | (Ille) amat |
| நேசிக்கின்றாள் | (She) loves | (Illa) amat |
| நேசிக்கிறது | (It) loves | (Illud) amat |

இயலொலி

"(கசடதப) முதலிய எழுத்துகளுக்கு இயல்பிலுண்டாம் ஒலியுளது. வடமொழி முதலிய ஏனையமொழிகளில் இவ்வொவ்வொரு இனத்திலும், மிகுத்து மூன்று ஒலிகளை முயன்றொலிக்கக் கற்பித்ததுண்மை காண்க.

சொற்றொடரழகு

"சொற்றொடர்—வாக்கியம். அது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன கூடி ஒரு கருத்தை விளக்குவது. அவற்றோடு அவற்றின் உரிச்சொற்களும், இடைப்பிறவரலாய் வரும் வாக்கியங்களும் சேர்ந்து குழூஉச்சொற்றொடராயும் வரும். பெயர் வினைகளின் இயலை உரிச்சொற்களானும், பல பெயர்களை இடைச்சொற்களானும், பல வினைகளை எச்சத்தானும்' பெயர்க்கும் வினைக்கும் உள்ள சம்பந்தத்தை வேற்றுமை யுருபானும், புணர்த்தித்தமி

ழில் விளக்கப்படுகின்றது. ஆங்கிலத்திலும் தமிழ் போலவே சொற்றொடருளது.

வடமொழி, இலத்தீன், கிரீக்கு, முதலிய பாஷைகளில் அங்ஙனம் அழகு பெறாது விசேடணங்களுக்கும் அவை தழுவும் பெயர்களின் வேற்றுமை பால்களை யேற்றல், இடைச்சொல் இன்றிக் கூறல், முதலிய அழகின்மை உள்ளன.

## உதாரணம்.

(க) கரிய பெரிய குயிலை வஞ்சகமுடைய காக்கையாக எண்ணினான்.

"க்ருஷ்ணாம் ப்ரஹாந்தம் வஞ்சகி நம் காகம் பேனே"

கரியதை பெரியதை குயிலை வஞ்சகமுடையதை காக்கையை எண்ணினான்.

(உ) மதுரையிலிருக்கும் இராமன்மகன் புலவனாகிய சுமுகனான இலக்குமணனால் இது எழுதப்பட்டது

"மதுராவாசிநா, ராமபுத்ரேண, பண்டிதேந, சுமுகேந, லக்ஷ்மணேந, இயம் லிக்யதே."

மதுரையில் வசிப்பவனால் இராமன் புத்திரனால் சுமுகனால் லட்சுமணனால் இது எழுதப்பட்டது."

(இந்திய மன்னிறை முடிசூட்டு வாழ்த்துப்பா)

இது அறிஞர், விருதை, சிவஞானயோகிகளியற்றியது.

இத்துணையானே ஆரியத்தினும் தமிழ் வியாபகமுடையதென்பதும், ஆரியம் வருவதற்கு முன் சகமுழுதும் தமிழிருந்ததென்பதும், ஆரியத்திற்கு முன்னேயே தமிழ்திருத்தப்பாடுள்ளதென்பதும், தமிழ்ச்சொற்கள் பற்பல பாஷைகளினும் கலந்துள்ளன என்பதும், வேதங்களுக்கு நெடுநாள் முன்னரே தமிழுள்ளதென்பதும், தமிழரிற்போர்வீரர் மிக்கிருந்தனரென்பதும், தமிழில் நீதிநூல்கள் நடுவுநிலைச்சிறப்புற்றுள்ளன என்பதும், தமிழ்ச்சொல்லில் பொருட்பொதிவுள்ளதென்பதும், தமிழரசு நெடுநாளிருந்ததென்பதும், வடமொழி முதலியவற்றினும் தமிழ், பாவிலினிய

தென்பதும், தமிழ் திணை பால் முதலியவற்றால் சிறந்ததென்பதும், தமிழ் ஒலியும் எழுத்தும் ஒன்றுபட்டுள்ளதென்பதும், வடமொழி முதலியவற்றினும் தமிழ்ச்சொற்றொடர் அழகுடையதென்பதும், பிறவும் பெறப்பட்டன.

௧௨. உலகத்து முதல் முதல் ஏற்பட்ட இயற்கைநிலப்பாகுபாடாகிய குறிஞ்சி முதலிய திணைகளுக்கும், இயற்கைக்காலப்பாகுபாடாகிய பெரும்பொழுது சிறுபொழுதென்னும் முதற்பொருளுக்கும், இலக்கண மின்மையானும்; ககோளநூலுக்குப்பின்னரேற்பட்ட அசுவனி முதலிய எல்லா நாள்களுக்கும், மேட முதலிய எல்லா இராசிகளுக்கும், அமர முதலிய வடமொழி நிகண்டுகளில் வேறு பெயர் கூறுமையானும், செயற்கையிற் செயற்கையாய கனைத்தலோசையும் உரப்பலோசையும் மிகுந்திருக்கின்றமையானும், செயற்கையாய ஐகார ஔகாரயகார முதன் மொழிகளால் சிறந்திருக்கின்றமையானும், பிற்காலத்துண்டாய உபசர்க்கச்சொற்களும், தொடர்மொழிகளும், நிரம்பியிருக்கின்றமையானும், ஒன்று முதலிய் எண்களுக்கு வரிவடிவும், நுணுகியுணர்வதற்கு முந்திரை, இம்மி சுவடு முதலிய அளவுப்பெயர்களும், மிளா, பூட்டு, சாவி முதலியவற்றுக்குத் தனிச்சொற்களும், இன்மையானும்; ஆகுபெயரிலக்கண மின்மையானும்; உரை வழக்கின்மையானும்; தமிழ் முதலிய மொழிகளில் பல்வீ முதலிய பெயர்களும், ஆண்குறி பெண்குறி முதலியவற்றை யுணர்த்துஞ் சில பெயர்களும், அவையல் கிளவியாயினமைபோலக்கடிதடம் நிதம்ப முதலிய பெயர்களும் அங்ஙனம் ஆகாமையானும், நாவிற்குக்கடினமாகிய வல்லின மெய்யீற்றுச் சொற்களுண்மையானும், செயற்கையெழுத்துகள் மொழிமுதலில் வருகின்றமையானும், மூவசைச்சொற்கள் மிகுதிப்பட்டிருக்கின்றமையானும், நாவின்செயற்கைநிகழ்ச்சியாகிய மயக்கம் பெரிதுண்மையானும் பிறவாற்றானும் ஆரியம் தமிழ்க்குப் பிறகுண்டாயதென்பதே துணிபு.

அவையல் கிளவி=இடக்கரக்கடல்.
மயக்கம்=சையோகம்.

எடுத்தலும் கனைத்தலும் உரப்பலுமாகிய செயற்கையோசைகள், இயற்கையோசையினின்றுண்டாயினவாம். ஒவ்வோர் வர்க்கத்தின் முதற்கணுள்ளது இயற்கையோசை.

கர்மம், பத்மம், பக்வம், ஆத்மா முதலியன நாவின் செயற்கை நிகழ்ச்சியாகிய மயக்கங்களாம். தமிழெழுத்துகள் ஒவ்வொன்றும் வெவ்வேறிடத்துப் பிறப்பனவாம். நாவிற்கு எளிமையாதல் வேண்டி மெய்கள் சாரியை பெற்றே வரும்.

ஐயான்குச் செய்யுட்கவ்வுமாகும்" என்னுஞ்சூத்திரத்தை யுணரின் நாவினியற்கைநடை விளங்கி நிற்கும். அங்காத்த லெளிதாகலின் அவ்வுமாகுமென்பர். ஐகாரத்தினும் அகரம் எளிது. இதழ்குவிக்கவேண்டியிருத்தலின் குற்றியலுகரம் நாவிற்குக்கடினமாகும்.

"முன்னிகழ்ந்த பாலி மொழியுங்கீர் வாணமும்
துன்னுங் கருப்பையிலே தோய்வதற்கு—முன்னரே
பண்டைக்கா லத்தே பரவைகொண்ட முன்னூழி
மண்டலத்தி லேபேர் வளநாட்டின்—மண்டுநீர்ப்
பேராற் றருகில் பிறங்கு மணிமலையில்
சீராற்றுஞ் செங்கோற்றிறற்செங்கோ—னேராற்றும்
பேரவையி லேநூற்பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாராசு செய்ததமிழ்ப் பைந்தேவி"

என்னும் தமிழ்விடுதூதினால் பாலி, கீர்வாணமென்னு மிரண்டுமொழியும் தமிழ்க்குப் பிறகுண்டாதென்பது, தெள்ளிதாகின்றது. முன்னிகழ்ந்த பாலி யென்பதனால் கீர்வாணத்துக்கும் பாலி முற்பட்டதென்க.

பாலியென்பது பண்டைத்தமிழரசச் சங்கத்தின் பெயர். பிறகு புத்தசங்கத்திற்காய்ப் பாஷையின் பெயர்க்காயிற்று. புத்த சங்கத்தார் பாளிபாஷை வழங்குவராயினர்.

"குறிஞ்சிபாலை முல்லை மருதம்
நெய்தலெந்திணைக் கெய்தியபெயரே"
"காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிளவேனில் வேனிலென்றாங்

இருமூன்று திறத்தது தெரிபெறும் பொழுதே"
"மாலையாமம் வைகறை யெற்பாடு
காலை வெங்கதிர் காயுநண்பகலெனக்
கைவகைச்சிறுபொழு தைவகைத்தாகும்"

என்பன அகப்பொருள் விளக்கம். இந்நூல் தமிழ்மொழி யொன்றற்கே யுரியது.

௧௩. முன்னை முதலாசிரியர், பின்னை முதலாசிரியர், எனத் தமிழாசிரியர் இருவகைப்படுவர்.

அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீகனாரும், கௌதமனாரும், தலைச்சங்கத்துச்சான்றோர்களும் பின்னைமுதலாசிரியர் அகத்தியனாருக்கு முன்னுள்ள சான்றோர் முன்னைமுதலாசிரியர். முன்னை முதலாசிரியர் வழக்கிற்கும் பின்னை முதலாசிரியர் வழக்கிற்கும் உள்ள முரண்பாடு சிறுபான்மையேயாம்.

சிவபெருமான் விநாயகன் முதலோர், முன்னைமுதலாசிரியர்க்கும் ஆசிரியராவர்

௧௪. தமிழினின்று பஞ்சத்திராவிடமும், பாலி காண்டி முதலிய பாஷைகளு முண்டாயின. இவ்வெல்லாவற்றினின்றும் பாகதம் பிரிந்தன. இப்பாகதங்களுக்குப் பின்னரே செந்தமிழுண்டாயது. பஞ்சத்திராவிடமும் முதற்பாகதமேயாகும்.

ஆரியம் வேதமுதலியன நிறைந்துள்ள தெய்வமொழி என்று அடிப்படுகின்றமையின், தெலுங்கு முதலியன அதினின்று பிறந்தன எனின் அவ்வம்மொழியார் கனிவு காட்டுதலும்; தமிழினின்று அவை பிறந்தன வெனின் முனிவுகாட்டுதலும், பற்றுள்ளமேயன்றி முறைமையாகாது. அப்பற்றுள்ளத்தினின்றும் நீங்கி யுண்மை யெது வென ஆராய்ந்து தெளிதல் வேண்டும்.

பற்றுள்ளம்=அபிமானம்.

ஆரியம் வேதமுதலியன நிறைந்துள்ள காரணத்தானே அது முற்பட்டதென்பது பொருந்தாது.

தமிழிலுள்ள நூல்களழிந்து அதன் புராமை முதலாயின வேறு பட்டமையானும், ஆரியநூல்கள் அழிவு படாது அதன்

புதுமை முதலாயின வேறுபடாமையாலும் ஆரியம் தமிழ்க்குப் பிற்பட்ட தென்பது பொருந்தும்."

முதல்முதல் தமிழ்மொழி, தளிர்த்துப் பூத்துப்பழுத்து மணங்கமழப் பெற்றிருந்தது.

பிறகு ஆரிய மொழி, தளிர்த்துப்பூத்துப்பழுத்து மணங்கமழப்பெற்றது.

இப்போழ்து ஆங்கிலமொழி தளிர்த்துப்பூத்துப் பழுத்து மணங்கமழப் பெறுகின்றது. இம்மணமே கண்கூடாக மூக்கிற்கும் இன்பமாகின்றதென்பர். நின்ற மரத்தில் நெடுமரம்போனால், நின்ற மரமே நெடுமரமாயினும் அளவைமுகத்தான் அவ்விடமுதலிய வற்றை ஆராயவல்லார்க்கு இந்நெடுமரத்தின்முன்னே ஓர்மரம் இருந்து கமழ்ந்ததென்பது பெறப்படுமன்றோ ?

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகு முவப்பதன்கட்
குற்றமுந் தோன்றாக் கெடும்."

கரு. செந்தமிழ் செவ்வைபடத்திருத்தப்பட்ட தமிழென்பது. ஈண்டுத்திருத்தமாவது பாகதத்திற் சிதைந்தனவற்றை முதற்றமிழ்ப் படி செய்தலும், நாவின் முதிர்ச்சிக்கேற்பச் சிறிது வேறு படுத்தலும்.

எங்ஙனமெனின் குதிரையை யுணர்த்தும் கோடாமென்பது முதற்றமிழ்; அது பாகதத்திற் கோடா வென்றாயிற்று; செந்தமிழிற் கோடாமென முதற்றமிழ்ப்படியும், அதுவே குதிரையென வேறு பட்டும், வருதல் போல்வன.

மளை—மழை, இளிவு—இழிவு, ஒண்டு—ஒன்று, மூடு—மூன்று, நாலுகு—நான்கு, முதலியனவும்; ஈகார ஏகாரங்கள் ஐகாரமாகவும், ஊகார ஓகாரங்கள் ஔகாரமாகவும், அகர ஆகாரங்கள் ஐகார ஔகாரங்களாகவும் வருதலும், அவ்வேறு படுத்தலுளடங்கும். சில நாவின் முதிர்ச்சிக்கேற்பத்தாமே வேறு பட்டும் வரும்.

செவ்வைபடத் திருத்தப்பட்டது செந்தமிழெனவே அங்ஙனம் திருத்தப்படாததற்கு முன்னுள்ள பாகதங்கள், இன்னொலியுடையனவாக இருத்தலின் அவை கொடுந்தமிழெனப்பட்டன. தென்பாண்டி குட்டமுதலிய நாட்டுமொழிகளும் பாகதத்துளடங்குவன வாகலின் அவையும் கொடுந்தமிழே. ஆயின், எகின், பெற்றம், கிழார், எலுவன் முதலியன கொடுந்தமிழாகா. எகின் பெற்றமுதலியன அக்காலத்தே கன்னடம் துளுவமுதலியனபோல உச்சரிப்பில் வேறு பட்டிருப்பின், கொடுந்தமிழெனலாம். அரவம் அத்துவானம் தெலுகுதேட்ட என்பதும் அக்கொடுந்தமிழையேயாம். அரவமென்பது கொடுந்தமிழ்நாட்டுளொன்றாய அருவா என்பதன் மரூஉ. தெலுங்கு, அருவாநாட்டுமொழியினும் திருத்துப்பாடுடைய தென்பது அதன் பொருள். இனிக்கொடுந்தமிழ்நாடாவது செந்தமிழ்நாட்டைச்சூழ்ந்த தமிழ் நாடெனலும் பொருந்தும்.

கொடுமை=வளைவு—அதாவது சூழ்தல்.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்"

என்பதுள் கொடுந்தானை யென்பதாற்றெளிக.

செந்தமிழ்நாடு கொடுந்தமிழ்நாடுகளுக்கு நடுவிலுள்ள தமிழ் நாடென்பது பொருந்தும். செம்மை, செப்பமென்பன நடுவினை யுணர்த்தும்.

செம்பாகம்=நடுவுநிலைமை.

செங்கதிரோன்=சூரியன். கோள்களுக்கு நடுவிலுள்ளோனென்பது பொருள்.

"செந்தமிழ் நிலமாவன:—வைகை யாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்"

"பன்னிரு நிலமான:—பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை, யெனச்செந்தமிழ் நாட்டுத்தென்கீழ்பான் முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்க." என்பர் சேனாவரையர். இவை கொடுந்தமிழ்நாடு.

சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம் குடகம், கருநடம், கூடம், வடுகு, தெலுங்கு, கலிங்கம் என்பன அப்பன்னிரண்டையுஞ்சூழ்ந்த நாடென்பர் நச்சினார்க்கினியர். குமரிக்கும் சிங்களத்திற்கும் இடையேயுள்ள பழந்தீவு, கடல்கோட்பட்டது.

<table>
<tr><td>சீதநாடு.</td><td>பூழிநாடு.</td><td>மலைநாடு.</td><td>அருவா நாடு.</td></tr>
<tr><td>கற்காநாடு.</td><td rowspan="2" colspan="2">கருவூர்.<br>மருதயாறு.<br>செந்தமிழ்நிலம்.<br>வையையாறு.<br>மருவூர்.</td><td>அருவா வடதலை<br>வடகீழ் பால்.</td></tr>
<tr><td>பன்றிநாடு.</td><td>பொங்கர் நாடு.<br>தென்கீழ் பால்,</td></tr>
<tr><td>குடநாடு.</td><td>குட்டநாடு.</td><td>தென்பாண்டிநாடு.</td><td>ஒளிநாடு.</td></tr>
</table>

சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் என்பனவுமாம்.

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந்துளுக்குடகம்
கொங்கணங்கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம்வங்கம்

வங்கமகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும்புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே"
என்னுங் கட்டளைக்கலித்துறையாற் றெளிக.

செந்தமிழ்நிலம் நடுவிலும், அதனைச் சூழப்பன்னிரண்டு கொடுந் தமிழ்நாடும் அக்கொடுந்தமிழ்நாட்டைச் சூழச்சிங்களம் சோனக முதலிய நாடுகளும் வைத்துக்கூறினதை யுய்த்துணரின் செந்தமிழ்க் குப் பன்னிரண்டு கொடுந்தமிழ்மொழியும் அணுக்கவியையுடையன என்பதும், சிங்களம் சோனக முதலியன சேய்மையியையுடையன என்பதும் பெறப்பட்டமை காண்க.

ஏனைய கோள்களுக்கும் அக்கோள்களினடுவிலுள்ள சூரியனுக் கும் இயைபுண்மைபோல, ஏனையமொழிகளுக்கும் அம்மொழிகளி னடுவிலுள்ள செந்தமிழ்க்கும் இயைபுண்மை பெற்றும்.

சூரியன் கோளரசென்பதுபோலத்தமிழ் மொழியரசென்பது பெறப்படுகின்றது.

கோளரசு=கிரகபதி

நடுவிலுண்மையில் அரசெனப்பட்டது

வலம்புரியும், சலஞ்சலமும், பாஞ்சசன்னியமும், நடுவிலுண் மையின் தலைமையாயின. கல்லூரிலே தலைமையாசிரியர், ஏனைய ஆசி ரியர்தம் நடுவிலே நின்று கற்பிப்பர்.

கல்லூரி முதலியவற்றின்கண் தலைமையாயினர், நடுவிருந் தால்தான் ஏனையோரையும் ஆராய்தல் கூடும். இங்ஙனமாய தலைமை இயற்கை முறைமையாம். சாவகம் சீனமுதலியவைகளும், மொழி யாராய்ச்சியில் வல்ல பெரியார் தமிழ்ச்சிதை வென்பர்.

இச்செந்தமிழ், அகத்தியனார்க்கு முன்னும் உள்ளதாகலின் அக்காலத்தும் ஆண்டும் இம்முறைமைப்பாடிருந்ததெனத் துணிதல் வேண்டும்.

செந்தமிழ்நாடு நடுவிருத்தலின், நடுவிலுள்ள தமிழ் நாடென வும், இனியனவாக இருத்தலின், செவ்வைபடத்திருத்தப்பட்ட தமிழெனவும் அழகிய உரையேயாம். ஆயின் எது உண்மை யெ னின் ஏனைய நாடுகளுக்கு நடுவிருத்தலின் செந்தமிழெனக்கூறியது

ஓர் காலமாம். செவ்வை படத்திருத்தப்பட்டிருத்தலின் செந்தமி ழெனக்கூறியது ஓர் காலமாம். ஆதலின் இரண்டும் உண்மைகூற லென்னும் உத்தியேயாம். பொருள் வேறாயினும் எழுத்தொப்புமை யான் இரண்டும் ஒன்றாகற்பாலன.

"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல்கண்டு முறைப்பட வெண்ணி,"

என்பதுள், முந்துநூலென்பதற்கு உரையாசிரியர் முதனூல்க ளென்பர்; நச்சினார்க்கினியர் முன்னை யிலக்கணங்களென்பர். இத னால் அகத்தியனார்க்கு முன்னும் இலக்கிய இலக்கணங்களுண்மை பெற்றாம். சேனாவரையரும் "அகத்திய முதலான எல்லா இலக்கண மும் கூறலின் பல்வேறு செய்தியினூலென்றார்" என்பர். மற்றும் பிற் கூறப்படும்.

நான்கு வேதங்களினும் முதல் வேதமாகிய இருக்குவேதத்திற் குத் தலைவர்களாகிய முனிவர்தம்முள், அவ்வகத்தியனாரும் ஒருவ ராகலின் செந்தமிழ் இருக்கு வேதத்திற்கு முன்னமேயுள்ளதென்க. இனி வேதங்களுக்கு முன்னமே தமிழுள்ளதென்பதற்கு ஐயுற வென்னை?

இக்காரணங்களால் தலைச்சங்கம், செந்தமிழை யிரண்டாவது முறை திருத்தி வளர்ப்பதற்கு நிறுவப்பட்டதென்னலாம் இக்கா லத்தின்தான் பிறவிடை நிலைகளும் காலங்காட்டும் விகுதிகளும் பிற வும் உண்டாயிருத்தல் வேண்டும்.

தமிழ்ச்சங்கம் இடைவிட்டு வந்தமையின், இரண்டாவது முறை யேற்பட்ட சங்கத்தினால் தலைச்சங்கமெனவும், மூன்றாவது முறை யேற்பட்ட சங்கத்தினால் இரண்டாவதற்கு இடைச்சங்க மெ னவும், மூன்றாவதற்குக் கடைச்சங்கமெனவும் வழிவழிப்பட்ட பிற் காலுதத்வாற் பெயரிடப்பட்டது. தமிழ்ச்சங்கம் இடைவிடாது வந்திருப்பின், தலை இடைகடையென்னும் பாகுபாடுமின்றாம்.

தமிழ்க்கும், செந்தமிழ்க்குமுள்ள வேறுபாட்டையுணரின், காலந்தோறும் பாஷைகள் சிறிது வேறு படுகின்றன. என்பார் கூற் றும் பொருந்தற்பாலதே, பஞ்சத்திராவிடமுதலிய பிறபாஷைகள்

தமிழினின்று வழிவழியாக வேறுபட்டன வன்றிச் செந்தமிழினின்று வேறுபட்டன அல்ல.

முன்னமே தமிழின் திருத்தம் செந்தமிழென்றமையின், இனிச் செந்தமிழ்மொழி ஒலிவடிவில்வேறுபடு மென்பார் கூற்றுப்பொருந்தற்பாலதன்று. சிறுபான்மை சுருக்க முதலியவற்றால் வேறுபடல் கூடும்.

செந்தமிழ்நாடு இடையிலும், கொடுந்தமிழ்நாடு அதனைச் சூழவும், ஏனையமொழிகள் அக்கொடுந்தமிழ் நாட்டைச் சூழவும், அழகுபடப் பாகுபடுத்தி வைத்தமையும், சீத்தலைச்சாத்தனார் முதலோர் தமிழின்கண்வைத்துள்ள பற்றுப்பாடும், உணரின் அற்றைஞான்றுள்ள செந்தமிழின்மேம்பாடும், திருத்தப்பாடும், எத்துணைப்பெருமையவாகின்றன காண்க. இம்முறைமையும் பாஷை திருந்துவதற்குத் தலைகார்த்துக்கொண்டமையும் ஏனைய எப்பாஷைகளினுமில.

பற்றுப்பாடு=அபிமானம்

௧௬. ஐம்பத்தாறு தேயங்களுள், சோழநாடு முதலிய தமிழ்நாடுகூறித் திராவிடமென வேறுகூறலின், தமிழ் வேறு திராவிடம் வேறெனவும்;

"ஆரியமுந் தமிழு முடனே சொலிக்
காரிகையார்க்குங் கருணை செய்தானே"

என்றவர்

"பண்டிதராவார் பதினெட்டுப்பாடையும்
கண்டவர் கூறுங் கருத்தறிவாரென்க"

எனக்கூறலின் தமிழ் பதினெண்மொழியுளடங்கிய தன்றெனவும் தெளிக. பதினெண்மொழியுள் தமிழும் ஒன்றாயின் ஆரியமும் ஒன்றாதல் வேண்டும். ஆகவே பதினெட்டென்பது பொருந்தாது; பத்தொன்பது பாடையுமெனல் வேண்டும். ஆரியம் தமிழென்னும் இரண்டு முதற்பாஷைநூல்களை அறிந்தவர், தேசபாஷை நூல்களையும் அறிதல் வேண்டுமென்பது திருமூலர் கருத்து.

உடனே சொலியென்றது அப்பாஷைகளை யன்று; அப்பாஷை நூல்களை யென்க. எங்ஙனமெனின், ஆகமச்சிறப்பென்ற அதிகாரத்தாலெனக.

திராவிடம், கன்னடம், ஆந்தரம், மராடம், கூர்ச்சரம், என்பன பஞ்சத்திராவிடமாகும்.

மேற்கூறிய காரணங்களால் திராவிடம் தமிழென்பது ஒரு சிறிதும் பொருந்தாது; தமிழ்வேறு; திராவிடம் வேறென்பதே துணிபு.

துளுவம், மலையாளமும் கன்னடமும் கலக்கப்பெற்றதொன்றாகலின், அதுவும் திராவிடமாகாது. மலையாளத்தில், தமிழின் முற்பட்ட நிலைமையுள்ள சொற்களுண்மையாலும், தெலுங்கிற் சில சொற்களுக்கு முதற்சொல் அதன்கண் உண்மையாலும், பதினெண்மொழியுள் மலையாளமென்பதொன்றில்லாமையாலும், திராவிடமென்பது மலையாளமெனல் பொருந்தும். மலையாளமென்பது பிற்காலத்துண்டாயதெனப்படலால், அதில் தமிழர் குடியேறிய பின் திராவிடரும் குடியேறிக் கலக்கப்பெற்றனரெனல் வேண்டும்.

வடவேங்கடம் தென்குமரியென்றவர், மேற்றிசைக்கு மலைய மாநாட்டைக்கூறாது கடலெல்லை கூறினமையின், அக்காலத்து மலையாள மென்பதோர் பாஷையில்லை யெனின், அது திராவிடமென்னும் ஒற்றுமை நயத்தான் கடலெல்லை கூறினரென்க.

மலையாளத்திலுள்ள தல, தர, இல, வல, புள, பலக, முதலிய அகர வீற்றுச்சொற்கள், தமிழின் முற்பட்ட நிலைமையுள்ள சொற்றிரிபுகளாம். பின்னர் நாவின் முதிர்ச்சியால் அவை ஐகாரவீறாய்த் திரிந்தன ஐகாரம் செயற்கை யெழுத்தாகலின், நாவிற்குச்சிறிது கடினமாகும்; அகரம்போலெளிதாகாது.

மலையாள முதலிய பாஷைகளுள், ஒவ்வொன்றும் தொன்மையது; புதுமையது; என இருவகைப்படும். அவை தமிழ்ச்சந்தம் பெற்றுள்ள. காலம் வரையில் தொன்மைய எனவும், ஆரியசந்தம் பெற்றது முதல் புதுமைய வெனவும் கொள்க.

தமிழ்ச்சந்தமாவது எடுத்தல் படுத்தலொலிகளாற் சிறந்து யாழிசை போன்று மெல்லிசை யின்பம் பயப்பது; ஆரிய சந்த

மாவது கனைத்தல் உரப்பலொலிகளாலுஞ் சிறந்து, பல வாத்தியங் களினிசைபோன்று வல்லிசையின்பமும் பயப்பது.

மலையாளபாஷையில் துஞ்சத்து எழுத்தச்சனியற்றிய பாரத பாகவத முதலியன, சிறு பான்மை ஆரியசந்தம் பெற்றுள்ளன என்னலாம்.

எழுத்தச்சன் = ஆசிரியன், எழுத்து + அச்சன்,
அச்சன் = தந்தை, ஆசிரியன் எனல் முறை.

ஓர் சோழன், மரக்கலங்கள் போக்கு வரவு நிமித்தம், கீழ்கட லினுயர்ந்தகன்றிருந்த பெரிதொரு பூசந்தியை வெட்டியெடுத்த காலத்து, மேல் கடலிலிருந்த நீர், கீழ்கடலில் வடிந்தமையின் ஆண் டெழுந்திருந்த நிலம் தோன்றி மலையாள மென்னும் பெயர் பெற் றது. அதில் தமிழர் குடியேறினர். இதனைப்பாரதத்தில் பரசுராமர் காசிபருக்குப் பூமியைத்தத்தம் செய்தபின் அவரா லுண்டாக்கப்பட் டதென்பர். அவர்காலத்தும் மேலகடலொதுங்கி யிருககலாம். இப்பரசுராமர்காலததில்தான் மலையாளத்த ஓர் பாகத்தில் திரா விடரென்போர் குடியேறி யிருத்தல் வேண்டும்

அப்பூசந்தி பரசுராமருக்கு முன்னேயே வெட்டி யெடுக்கப்பட் டது. பூசந்தி உயர்ந்திருநதமையின் கீழ்கடல் மட்டத்துக்கு மேல் கடலுயர்ந்திருநதது

"புணரியொன்றினிடை யொன்றுபுக விட்டவனும்"
(கலிங்கத்துப்பரணி)
"மேல்கடலில் வீங்குநீர் கீழ்கடலில் விட்டோனும்"
(விக்கிரமசோழனுலா)
"மேல்கடல் கீழ்கடற்கு விட்டகோன்"
(குலோத்துங்க சோழனுலா)

என்பவற்றுல் தெளிந்து கொள்க.

"மேல் கடலில் வீங்கு நீர்" என்பதனுல் மேல் கடல், கீழ் கடல் மட்டத்துக்கு உயர்ந்திருந்தமை புலனுகின்றது.

மலையாலம், மலையாளமுகலிற்றுர ஆலம் = கடல்.

மேல்கடற்கரைச் சார்புநாடு

கடலோதுக்கத்தாலாய் மலைநாடெனினும் ஒக்கும்.
கன்னடர் தாமே பழங்கன்னடத்தை ஹளகன்னடமெனவும், புதுக் கன்னடத்தை ஹொசகன்னடமெனவும் கூறுவர். சிறந்தநூல்கள் பழங்கன்னடத்திலேயே யுள்ளன.

தெலுங்கில் அச்சதெலுகென்பது பழைய தெலுங்கெனப் படும். அச்சதெலுகெனினும் சுத்ததெலுங்கெனினும் ஒக்கும். ஈண்டுச்சுத்தம் தமிழ்ச்சந்தமே யென்பது. கலப்பில்லதைச் சுத்த மென்பர். சுத்ததமிழ், சுத்த பொய்யன் என்பவற்றானும் தெளிக. தெலுங்கு திரிலிங்கமென்பதன் சிதைவு. பீமகாலேசமுதலிய மூன்று சிவ தலங்களினிடையில் வளர்ச்சி பெற்றமையின் அப்பெ யர்த்து. இதன் முதற் பெயர் ஆந்தரம்.

நன்னய பட்டரென்பவர், தமிழின் வழிமொழியாகிய தெலுங் கிற்குத்தமிழ்வழக்குப்படி யிலக்கணம் செய்யாது ஆரிய வழக்குப் படியிலக்கணம் செய்தனர். அது பொருந்தாது.

அச்சதெலுங்கில் இராமாயண முள்ளது. இது தமிழ்ச்சந்த வின்பமுடையது.

மலையாளம், தமிழின்வழிமொழி யென்று நன்கறிந்திருந்தும் இலக்கணமாத்திரம் ஆரிய வழக்குப்படியே செய்தனர். அதுவும் பொருந்தாது.

சூரிய சமயிகள், தர்க்கையின்சமயிகள் என்றிருவகைப்பட் டுள்ள குருவிக்காரரென்னும் ஓர் வகைச்சாதியார் பேசுகின்ற மராட மே பழையமராடமெனப்படும். ஆயின் அதன் ஒலி வடிவுகள் முன் னையினும் இப்போழ்து வேறு பட்டுள்ளன எனல் வேண்டும்.

கூர்ச்சரம், மராட முதலியவற்றின் சிதைவாம். இனி மராட முதலிய மொழிகள், வடமொழிக்கலப்பைப் பெற்றன. மலையாளம் கன்னடமுதலியன அக்கலப்பைப்பெறுகின்றன. பஞ்சதிராவிடத் துள் தெலுங்கே வடமொழிக்கலப்பை முதல் முதல் பெற்றது. தெலுங்கர், ஆரியவர்த்தத்தைச்சார்ந்திருந்ததும் அதற்குக் காரண மாகும்.

பிறமொழிகளிற் போந்த தமிழ்ச்சொற்கள் சிறிது வேறுபட்டமையின், அவ்வக்காலத்துள்ளார் அவற்றை ஒதுக்கிக்கொண்டேயிருந்தமையின், வேறு வேறு மொழிகளாய்ப்பரவின. வீகம் வீய முதலிய சொற்கள் பிங்கலநிகண்டிலுண்மையின் அவை அக்காலத்துத்தமிழ்க்கண் வழங்கி யிருத்தல் வேண்டும் இக்காலத்துத் தெலுங்கில் வழங்குகின்றன என்பார் கூற்றும் மறுக்கற்பாலதன்று.

கள. இனிப்பாஷைகளின் வளர்ச்சி, இயற்கைவளர்ச்சி செயற்கை வளர்ச்சி யென்றிருவகைப்படும்.

கழக முதலியன இல்லாமலே நாவினியற்கை நடையின்படி உரை வழக்காய் மாத்திரம் வளர்வது இயற்கை வளர்ச்சியாம். கழக முதலியவற்றால் நாவானது இயற்கையினும் சிறிது திருந்தும்படி உரை வழக்காலும் செய்யுள் வழக்காலும் வளர்ப்பது செயற்கை வளர்ச்சியாம். முதனிலைபோலவும், சொற்கள் போலவும் பாஷையும் வளர்ச்சி பெறாதிற்கும்.

செந்தமிழ் இயற்கைவளர்ச்சியோடு செயற்கைவளர்ச்சி பெரிதுமுடையது. ஆரியம், கிரேக்கு, இலத்தீன் முதலியன பெரிதும் செயற்கை வளர்ச்சி யுடையன. ஆங்கிலம் செயற்கை வளர்ச்சியைப் பெறுகின்றது. தெலுங்கிற்குச் செயற்கை வளர்ச்சி சிறிதேயாம். மலையாள முதலியன இயற்கை வளர்ச்சி யுடையன. பழைய மராட முதலியன இயற்கை வளர்ச்சி யொன்றே யுடையன. பாஷைகள் வேறுபடுதற்குக் காரணம் அறிக.

கழகம் = கல்விச்சங்கம்.

கஅ. தமிழ், ஆரியமென்பன பாஷையின் பெயர். பின்னர் அவை அவ்வந்நாட்டிற்காயின. மலையாளம், கன்னடம், தெலுங்கு, சாவகம், சீன முதலியன இடப்பெயர். பின்னர் அவை அவ்வப்பாஷைக்காயின. பாஷையின் பெயர் கொண்டவை முதன் மொழியாம். இடப்பெயர் கொண்டவை அவற்றின் வழிமொழியாம். அதாவது தமிழ் ஆரியம் என்பவை மொழியின் பெயராகும். இடப்பெயரான் வந்த பெயராகா. மலையாளம் கன்னடமுதலியமொழிகளின்

பெயர், அவ்வவ்விடப்பெயரால் வந்த பெயராகும் எனத்தெளிதல் வேண்டும்.

இதனால் தமிழும் ஆரியமும் முதன்மொழி யென்பதும்
ஏனைய மொழிகள் சினை மொழிகளென்பதும் பெறப்படும்.
சினைமொழி யெல்லாம் அவற்றின் வழிவந்தன வாகும்.
சினைமொழியெனினும் தேசியமெனினும் ஒக்கும்.

தமிழ் ஆரியமென்பன மொழியின் பெயரெனின் பாலி, ஜாவலு என்பனவும் மொழியின் பெயராகாவோ எனின் நன்று?

பாலி யென்பது சங்கத்தின் பெயர். அது புத்த சங்கத்திற்காய் அச்சங்கத்தார் பேசும் பாஷைக்காயிற்று. பாலி—பாளி—பள்ளி ஆசீவகப்பள்ளி. பள்ளிச்சந்தம்=சைனபௌத்தகோயில்கட்கு அளித்தது. சந்தம்—சந்தா.

பல்—பாலி. பல்=இசையாகலின் ஆராய்ச்சிமணியின் ஓசைக் குறிப்பால் குற்றந்தெரிந்தாராய்வதென்பது.

பாலி=அரசச்சங்கம்; அதாவது கச்சேரி

"ஆடுங்கடை மணி நாவசையாம லகிலமெங்கும்
நீடுங்குடையைத் தரித்தபிரான்" என்பதால் தெளிக.

கச்சேரி யென்பதற்கும் அப்பொருளே. கச்சம்=மணியிசை, மணியோசை எல்லோர்க்கும் புலனாகுமாகலின் குற்றம் ஒருவராலும் மறைக்கப்படமாட்டாது. ஜாவலு என்பதுசாதியின் பெயர். சாதியார் பேசும் பாஷைக்காயிற்று.

௧௧. இயற்கையொலி, பழந்தமிழில் ஓர் சிறிது திரிந்தும், தமிழில் அதனிற்றிரிந்தும், மலையாள கன்னடங்களில் அதனிற்றிரிந்தும், பாகதங்களில் அதனின் மிகத்திரிந்தும், உருக்குலைந்துள்ளது. ஆகலின் பிறமொழிக்கணுள்ள எல்லாச்சொற்களுக்கும் காரணம் அறிந்து கூறலரிது.

தமிழ்மொழிக்கணுள்ள புணர்ச்சி முதலியவைகளும், அதிற்பிரிந்த மலையாள முதலியவற்றில சோபான முறைமையி லருகியுள்ளன.

புணர்ச்சி முதலியன மிகுந்துள்ள பாஷையே முற்பட்டதென்பார் கூற்று ஈண்டு ஞாபகங்கொள்ளற்பாலது.

பாரசீகமொழிக்கணுள்ள ஜெந்தாவஸ்தமென்னும் வேதத்திற்கும், இஞ்ஞான்றுள்ள வழக்கிற்கும்; நூறாட்டைக்கு முன்னுள்ள ஆங்கிலமொழிக்கும் இப்பொழுதையுள்ள ஆங்கில மொழிக்கும் பெரிதும் வேறுபாடுண்மை யறிந்தவர், மற்றைய மொழிகள் வேறுபட்டமைக்குங்காரண மறிவர்.

அவ்வேறுபாடு நான்முறைமைக்கு ஒத்தது ஒவ்வாதது என இருவகைப்படும்.

சாகம் சாகளம், கங்கம் கங்கதம், விழல் வீண், தருக்கு தன்கு நால்கு நான்கு, முதலியன நான்முறைமைக்கு ஒத்த வேறுபாடாம்.

தேகம் திரேகம், விமானி பேமானி, வேசறல் பேசாறல், சித்து ஜித்து முதலியன நான்முறைமைக்கு ஒவ்வாத வேறுபாடாம். இங்ஙனம் நான்முறைமைக்கு ஒவ்வாத வேறுபாடுகள், பல்கிப் பெருகுதல் இயற்கையதேனும் அது சிறப்பன்று. ஓரளவினதா யிருத்தல் வேண்டும் என்று பெரியார் எண்ணூற்றுத் தொன்மையுள்ள பனுவல்களையும் ஆராய்ந்து செவ்வை செய்து செந்தமிழும் சமஸ்கிருதமும் என ஒலித்திறத்தானே இருவேறு வகைப்படுத்து இலக்கணவரம்பும் அமைத்திட்டனர். தேகமுதலியன திரேக முதலியனவாகத்திரிந்து வருதல், காலின்முதிர்ச்சியினது இயற்கையதேனும் ஆன்றோர் அவ்வரம்பு கடக்க அஞ்சுகின்றனர்.

"எப்பொருளெச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினரப்படி செப்புதல் மரபே"

என்ற நன்னூற் சூத்திரமும் அவ்வரம்பிற்குக் காவலாகின்றது.

நான்முறைமைக்கொத்த வேறுபாடுகளை பெதிராதுபோற்றலென்னும் உத்தியாற்கொள்க. சாகம்சாகளம் முதலியனவாக வேறுபட்டவை ஒருபொருளே புணர்த்தலின், ஒருபொருட்கு இருசொல் வேண்டாவெனக்கருதி, சாகளம் கங்கத முதலியசொற் களைக் [illegible] சொற்களையே சாகம் கங்கம் முதலிய சொற்

கலையு நீக்கி விடாது இறந்தது காத்தலென்னும் உத்தியாற் காத்துக்கொள்க. இறந்தது விலக்கலென்னும் உத்தியால் விலக்கி விடின் சொற்களினிமையும் போய்விடும். பொருண்முரண்பாடின்றிச் சொற்களை யினிமையோடு ஆராய்ந்து கொண்டு போதலே சந்த நூற் பயனும். ஆகலின் இறந்தது விலக்கலென்னும் உத்தியை இப்படிப் பட்ட அமையத்திற் கொள்ளற்க. அக்காலத்து வழங்கி வந்த காவிக்கொண்டு, போவிப்பம், ஆயிட்டு என்பன இக்காலத்து வழங்காமையின், அவ்வுத்தியை இப்படிப்பட்ட அமையத்தில் கொள்ளல் வேண்டுமெனின் இப்பொழுதுள்ள அக்காலத்து நூல்களுக்கு அச்சொற்களும் ஆவசியகமாகலின் இறந்தது விலக்கலென்னும் உத்தியினும் இறந்தது காத்தலென்னும் உத்தியே சிறந்தது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையி னானே"

என்ற சூத்திரத்தை யுணரின் பவணந்தி முனிவர்க்கு இறந்தது விலக்குவதில் பெரிதும் உடன்பாடென்பதே புலனாகின்றது. நாவினதியற்கையை முற்றுந்தடுப்பதரிதாகலின், எதிரதுபோற்றலில் இருவரு முடன்பட்டனர். சிவஞானமுனிவர், "புதியன புணர்த்தல் பழையவற்றோடு முரணுதவழியே யெனவுணர்க" என்பர். இறந்தது விலக்கலென்னும் உத்தி பண்டைக்காலத்திலேயே தோன்றியிருப்பின், இடுகுறிப்பெயரே யன்றிக்காரணப்பெயருமுள்ளன என்னுங்கருத்தால் "இடுகுறிகாரணப் பெயர்பொதுச் சிறப்பின"

என்று சூத்திரம் செய்வதற்குப் பவணந்தி முனிவர்க்கிடந்தராது. எல்லாப்பெயரு மிடுகுறியாகும் என்றே சூத்திரம் செய்ய வேண்டி வரும்.

பண்டைக்காலத்துள்ள சொற்களின் தன்மையும் அச்சொற்களால் சரித்தோற்றங்களும் விளங்கு மாகலானும் சந்த நூலாராய்ச்சிக்குஞ் சிறந்த துணையாதலானும் இறந்தது காத்தலென்னும் உத்தியே வேண்டற்பாலது. பண்டைக்காலத்துள்ள சொற்களின் தன்மையும் சரித்திரங்களும் மறையுமாகலானும் சந்த நூலாராய்ச்சிக்குப் பெரிது முட்டுப்பாடாகலானும் இறந்தது விலக்கலென்னும் உத்தியை வேண்டற்பாலதன்று. பழையன கழிதலும் அன்னதே

இனித்திரேக முதலியவற்றை உரைநடையிலேனும் பாநடையிலேனும் கொள்ளின், வழூஉச்சொற்புணர்த்தலென்னுங் குற்றந் தங்குமாகலின் அவற்றைக் கொள்ளற்க. இவைபோல்வனவெல்லாம் ஆன்றோரமைத்திட்ட வரம்பு சிதையாவண்ணம் காக்கின்றன. நன்மொழிபுணர்த்தலென்னும் அழகு போல்வனவெல்லாம் அவ்வரம்பினைப்பூசி யழகுசெய்கின்றன. இவை, நாவின் முதிர்ச்சியானும் முதிர்ச்சியின்மையானும் உண்டாகும் அளவிறந்த இயற்கைக்கதியைத்தடைசெய்யுமாறென்க.

மேற்கூறிய சாகம் சாகளமென்பன வெள்ளாட்டினையும், கங்கம் கங்கதமென்பன சீப்பையும், தருக்கு தன்கு என்பன செருக்கையும், விழல் வீண் என்பதையும் உணர்த்திநிற்கும். சாகளமென்பதை யுரிச்சொனிகண்டிலும், கங்கதம், தன்கு என்பனவற்றைச் சூடாமணிநிகண்டிலும், விழலென்பதைப் பிங்கலநிகண்டிலும் காண்க. விழலின்திரிபே வீணென்பது. நால்கின் திரிபே நான்கென்பது.

கடற்கரையை யுணர்த்தும் புலம்பென்பது ஐங்குறுநூற்றிலும் காடியையுணர்த்தும் வெண்பல்லமென்பது உரிச்சொனிகண்டிலும், திரட்சியை யுணர்த்தும் அவையம் என்பது மதுரைக்காஞ்சியிலும், மேலிடத்தை யுணர்த்தும் மேதகமென்பது சம்பந்தர் தேவாரத்திலும், குளிர்ச்சியை யுணர்த்தும் ஓமமென்பது சுந்தரர் தேவாரத்திலும், மயிலிறகை யுணர்த்தும் புத்தகமென்பது மருத்துவநூலிலும், மூங்கிலை யுணர்த்தும் நாலென்பது சுப்பிரமண்ணியவைத்தியவெண்பாவிலும், தென்னையையுணர்த்தும் நாலியென்பது போகர்நிகண்டிலும், மூங்கினெல்லினை யுணர்த்தும் ஞாங்கலென்பது மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டிலும் உள்ளன.

இன்னணம் ஒவ்வோர்சொல் ஒவ்வோர்நூலினால் அறிதல்போல ஒவ்வோர் சொல் ஒவ்வோர் பாஷையாலும், ஒவ்வோர் நாட்டுவழக்காலும், ஊர்வழக்காலும், சாதி வழக்காலும் அறிதல்வேண்டும். அங்ஙனமறிபவக்கால் சத்தநூலாராய்ச்சி செல்லாதென்பது. அவற்றையெல்லாம் நன்குவிரிப்பிற்பெருகும் வேண்டுழிக்கூறுதும்.

பாகதங்களினின்றும் சமஸ்கிருதமாயிற்றென்பர். பாகத வையாகரணிகளும் இங்ஙனமே கூறுவர். ஐரோப்பிய பண்டிதர் * வீபர் என்பவர்தம் கருத்தும் அதுவாம்.

பாளி மொழிச்சொற்களெல்லாம் வடமொழிச்சொற்களுக்குத் தாதுவாகின்றன என்பர் அறிஞர் † டெய்லர் என்பவர்.

௨0. திருஞான சம்பந்தர் தேவாரம்

அச்சிறுபாக்கம். பண், குறிஞ்சி.

"தம்மலரடியென்றடியவர் பரவத் தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழல்சேர"

திருமழபாடி. பண். கொல்லி.

"அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க்கீதமும் சீரினால் வளர்தர"

திருநாவுக்கரசுகள்.

திருமறைக்காடு, திருத்தாண்டகம்

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலையுறை அண்ணல் கண்டாய்"

திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை.

"ஆரியந்தமிழோ டிசையானவன்"

திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

"செந்தமிழோடாரியனைச் சீரியானை"

திருவாசகம்

தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை"

திருமந்திரம்.

"தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டும்
உணர்த்துமவனை யுணரலுமாமே,,
"அங்கிமிகாமை வைத்தான் உடல்வைத்தான்
எங்குமிகாமை வைத்தானு லகேழையும்
தங்கிமிகாமை வைத்தான் தமிழ்சாத்திரம்
பொங்கிமிகாமை வைத்தான் பொருடானுமே"

நம்மாழ்வார்.

"இன்றமிழ்ப்பாடிய வீசனையாதியாய்"
"என்னெஞ்சத்துள்ளிருந்திங்கிருந்
தமிழ்நூலிவை மொழிந்து"

திருமங்கைமன்னன்

"செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசைநான்கு மாய்த்திங்க ஞாயிறாகி"

திருமழிசையாழ்வார்

கணிகண்ணன் போவென்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப்புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்"

திருப்புகழ்

"வண்டமிழ் பயில்வோர்பின் திரிகின்றவன்"

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

"பழமறைகள் முறையிடப்பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப்பசுங்கொண்டலே"

என்பன முதலாக இவ்விரு மொழியையே பெரியார் சிறப்பித்துள்ளார். இவையே முனிவர்களால் திருத்தப்பட்ட மொழிகளாம். ஏகாட்சரமந்திரம் இவ்விருமொழியிலேயே யுள்ளது. சிங்களத்தில் தமிழ்மந்திரங்களே யுள்ளன. மணிப்பிரவாளமும் இவ்விரு மொழிக்கே யுரியது. இவ்விருமொழிக்கும் இலக்கணமொன்றே. வாரம், மாசம், திதி, நட்சத்திரம், ஐம்பூதம், சூரியன் சந்திரன் முதலியவற்றின்பெயர்கள், இவ்விருமொழிக்கண்ணே நிறைந்துள்ளன. மற்றைய மொழிகளிலுள்ள வாரமுதலியவற்றின்பெயர்கள், இவற்றின் சிதைவே யாகும்.

"வடமொழி தமிழ்மொழி யெனுமிருமொழியினும்
இலக்கணமொன்றே யென்றே யெண்ணுக"

(இலக்கணக்கொத்து)

"சாற்றருந் தெய்வப் புலவோர் மொழிக்குந் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறிற் றிணைபா லுணர்த்தும் வினைவிகுதி
மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை பேர்க்கெழு வாயுருவும்
தேற்றிய லிங்க மொருமூன்று மில்லை செழுந்தமிழ்க்கே"

(பிரயோக விவேகம்)

என்பவற்றால் இருமொழிக்கும் இலக்கண மொன்றென்பதும், வேறுபாடு சிறிதென்பதும், பெற்றாம்.

வடமொழி வல்ல அரசாணிப்பாலை வேங்கடாசாரியர் முதலோர் இத்துணைச்சிறந்த தமிழ்க்குக் குற்றங்கூறினரெனின், நன்று வடகலையார்க்கெல்லாம் பரமகுருவாகிய வேதாந்தாசாரியர் இயற்றிய பாதுகாசகசரம் என்னும்நூலுள் ௨௪-வது "விந்தயஸ்தம்பம்" என்னும்சுலோகத்தில் தென்கலைப்பாசுரம் வடகலைவேதம்போல நித்தியமும் உயர்வும் உடையதென்றமையின், அவர்குற்றங் கூறல் தகாதென்க. தென்கலையார்க்கு இனிவர வெய்த அங்ஙனம் கூறினு ரென்பது. நூற்பயனான்கனுள் மூன்றனையே கூறாது சிறந்த வீடொன்றை கிளந்து கூறலின் தென்கலைவேதமே சிறந்ததென்க. அதனாலன்றோ அஃது வடகலைவேதத்துக்கு முற்பட்டு முழங்குகின்றது. மகான் அழகிய மணவாளப்பெருமான் ஆரியம்போலத் தமிழும் அநாதி யென்பர். பிறவும் ஆசாரிய இருதயமென்னு நூலுட் கண்டுகொள்க.

மணிப்பிரவாளம்.

௨௧. தமிழரும் ஆரியரும் ஒருப்பட்டு நெடுநாளாயினமையின் மணிப்பிரவாளநடையுண்டாயிருத்தல்வேண்டும். மணிப்பிரவாள மென்பதில் மணியென்பது தமிழ்நடைக்கும் பிரவாளமென்பது ஆரியநடைக்கும் அமைந்திருத்தலின், அச்சொற்களே அப்பான்மைகளை முறைமைப்படுத்துகின்றன. மணிப்பிரவாளம் செய்யுணடைக் கேயுரியது. நான்கடியுள்ள ஓர் சுலோகத்தில் முன்னிரண்டடி தமிழ்ச் சந்தமும் பின்னிரண்டடி ஆரியசந்தமுமாய் வரலேமணிப்பிரவாள

நடையார். இந்நடை உரைநடைக்குச் சிறிதும் பொருந்ாது. மணிப்பிரவாள மென்பதில் மணியென்பது முத்து. பிரவாளமென்பது பவளம்.

தமிழ்க்கட்பன்னிரண்டுயிரெழுத்துகளும் சூரியனது பன்னிரண்டு கலையும்; ஆரியத்தின்கட்பதினாறுயிர்களும் சந்திரனது பதினாறு கலைகளுமாகலின் தமிழும் ஆரியமும் முறையே சௌரமான மொழியும் சாந்திரமான மொழியுமாய் ஆண் பெண் என்னும் நீக்கமில் இயைபுடைமை பெற்றும். சூரியனும் சந்திரனும் முறையே ஆண் பெண் என்பது சோதிடநூல் வழக்கு சூரியகலைபாகிய வலப்பக்கத்து ஆணும், சந்திர கலையாகிய இடப்பக்கத்துப் பெண்ணும் கருத்தரித்தலானும், சூரியவோரையிலானும், சந்திரவோரையிற் பெண்ணும் பிறக்கின்றமையானும் தெளிந்து கொள்க. இம்முறைமை பற்றியே தமிழர் ஆண்பாலையும், ஆரியர் பெண்பாலையும் முற்கூறுவர். மணிப்பிரவாள மென்பதில் மணி, வெண்மையும் பிரவாளம், சிவப்புமாகலின் ஆண் பெண் என்னும் நீக்கமில் இயைபுடைமை வலியுறுகின்றது.

மணிப்பிரவாளமென்பது முறையே சுக்கில சோணித மெனப்படும். "அவனவளது" என்னும் தமிழ் வழக்கினை "ஸ்த்ரீபும் நபும் சகம்" எனச்சைவாகமம் ஆரிய வழக்குப்படி கூறிற்று.

தமிழர்க்கு நட்சத்திர முக்கியமும், ஆரியர்க்குத்திதி முக்கியமுமாம்.

மணிப்பிரவாள நடை முதலிய வற்றால் தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டதென்பது அங்கைக்கனிபோல் விளங்குகின்றது. தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டது முற்பட்டது, எனக்கூறுவனவெல்லாம் உண்மை கூற வந்ததன்றி ஆரியத்துக்குக்குறை கூறவந்ததன்று.

இன்னும் மணிப்பிரவாளமென்னும் தொடரில் மணியென்பதில் செயற்கை யெழுத்தொன்று; பிரவாளமென்பதில் செயற்கை யெழுத்து மிகுதி; மணியென்பது ஈரசை; பிரவாளமென்பது மூவசை. மணியென்பதன் முதலில் இயற்கை யெழுத்துள்ளது; பிரவாள மென்பதன் முதலில் செயற்கை யெழுத்துள்ளது; மணி

பென்பது இயற்கைச்சொல்; பிரவாளமென்பது செயற்கைச்சொல் மணியென்பதில் நாமுயற்சி சிறிது; பிரவாள மென்பதில் நாமுயற்சி பெரிது. இதனானே தமிழில் இயற்கை யெழுத்தும், ஓரசைச்சொற் களும், மொழிமுதலியற்கை யெழுத்தும், இயற்கைச் சொற்களும், எளிய வுச்சரிப்பும், உள்ளன என்பதூஉம்; ஆரியத்தில் செயற்கையெ ழுத்தும், பலவசைச்சொற்களும், மொழிமுதற்செயற்கை யெழுத் தும், செயற்கைச் சொற்களும், கடினவுச்சரிப்பும் உள்ளன என்ப தூஉம் இவை தமிழில் இல்லன என்பதூஉம் பெறப்பட்டமை காண்க.

தமிழ் இயற்கை மொழி யென்பதையும், ஆரியம் செயற்கை மொழியென்பதையும் இவ்வாராய்ச்சி வற்புறுத்துகின்றது. ஆகலின் தமிழ், ஆரியத்துக்கு முற்பட்ட தென்பதற்கு ஐயுறவென்னை? இவ்விருமொழியும் சுக்கிலசோணிதத்தாலாய ஆண் பெண் என்னும் நீக்கமில் இயைபுடைமையானும் ஆன்றோர்தம் வழக்கும் அங்ஙனமே யிருந்தமையானும், அக்காலத்துத் தமிழரும் ஆரியரும் கிழவனும் கிழத்தியும்போல ஒருப்பட்டிருந்தனரென்பது புலனாகின்றது. இனி இக்காலத்தாரையும் ஒருப்படுத்துவதே இந்நூலின் பயனும்.

தமிழ் சிவமும் ஆரியம் சத்தியும் என்பது மணிப்பிரவாளத்தி னுட்கருத்து.

சிவத்துக்கும் சத்திக்கும், வேறுபாடு கூறுவாரிலர். சிவத் துக்குச்சத்தி "மனைவிதாய் தங்கைமகள்"

திருக்கோவையார்.

இயைபெடுத்துரைத்தல்.

"மின்றொத் திடுகழனூபுரம் வெள்ளைசெம் பட்டுமின்ன
வொன்றொத் திடவுடையாளொடொன் றும்புலியூரனென்றே
நன்றொத்தெழிலைத்தொழுவுற்றனமென்னதோர்நன்மைதான்
குன்றத்திடைக்கண் டனமன்னை நீசொன்ன கொள்கையரே"

என்பதால் அவ்வொருப்பாடுகண்டு கொள்க. வெள்ளை செம் பட்டும் என்றமையின், மக்களுள் ஆணினோர் வெண்பட்டும், பெண்ணி னோர் செம்பட்டும் உடுத்தல்வேண்டுமென்பது. மணிப்பிரவாள

மென் ருஞ் சொற்றொடரின் கருத்துக்கும் இத்திருக்கோவையார் செய்யுட்கருத்துக்கும் இயைபுண்மைகாண்க.

இன்னும்விரிப்பிற் பெருகும்.

உ.உ பாளி.

பாளியிலுள்ள எழுத்துகளில் நாவின் முதிர்ச்சியாற் பிறகேற்பட்ட ஐகார ஔகாரங்களும், ழகர றகர னகாரங்களும் இல்லாமையின் அது பழந்தமிழினின்று பிரிந்தவோர் சிறுபிரிவென்னலாம். மிகுதியும் சொற்குறைவுடைமையின் பிற்காலத்தேற்பட்ட பாகதங்களும் சிறுபான்மை ஆரியமும் கலக்கப்பெற்றதோர் பாஷையாயிற்று. இதன் சந்தம் தமிழ்ச்சந்தமும் ஆரிய சந்தமும் கலந்த கலவைச் சந்தமாம். ஆரியச் சொற்களுக்கு முற்பட்ட நிலைமையவாய சொற்களுள்ள காரணத்தான் பாளி, ஆரியத்துக்கு முற்பட்டதென்பர்.

இக்காலத்துப் பாளியிலுள்ள பேடம், பியம், தினம், தானம், திதி, தலமுதலியன ப்ரேதம், ப்ரியம், த்ருணம், ஸ்தானம், ஸ்திதி, ஸ்தல முதலிய ஆரியச் சொற்களுக்கு முறையே முதற்சொற்களென்பர்

பேடம்=பிணம். தினம்=புல். பியம்=விருப்பம், மகிழ்ச்சி.

உங. தமிழிலும், ஆரியத்திலும், பின்பு ஓர் தாதுவழியாகப் பிறந்த சொற்பாகுபாடுகள், பஞ்சத்திராவிட முதலியவற்றிலில. கிரேக்கு முதலியவற்றில் அச்சொற்பாகுபாடுகள் உள்ளன பின்பு ஓர் தாதுவழியாகப் பிறந்த சொற்பாகுபாடாவது காலவமைதிக்கேற்றபடி புதிய சொற்கள் பிரிந்தாளுவது. இதற்குக் காரணம், தமிழ்முதலியவற்றுக்கு அரசரிமை நெடிதுகாலம் வளர்ந்தமையேயாம்.

ஓர் வியாபக இயற்கைத் தாதுவினின்று வருத்தமின்றி வெளிப்படல் கைபெறுவதாய், மகிழ்வுபெருக்குவதாய், நூன்முறைமை முதலியவற்றுக்கு ஒத்ததாய், இருத்தலின்; இச்சொற் காரணம்

அறியும்வழி பண்டையசான்றோர் பாகுபடுத்துச்சென்றதோர் வழியேயன்றிப் புதுவதோர் வழியன்று.

ஒரு வழியுங்கூறுது விடைமாத்திரம் கூறப்பட்டுள்ள ஓர்கணி தநூற்கு, முயன்றறிந்த நல்வழியானே அவ்விடைகளெல்லாம் ஒத்துவருமாயின் அவ்வழியும் ஒப்பக்கூடியதுபோலத் தமிழ்மொழிக்கணுள்ள அகரமுதலிய எழுத்துகட்கும், ஆய்தவெழுத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், இகரத்துக்கும், மொழிமுதல் வருமெழுத்துக்கும், வாராவெழுத்துக்கும், மயக்கத்துக்கும், புணர்ச்சி முதலியவற்றுக்கும் காரணம் யாம் கூறும் வழியானே ஒத்துவருகின்றமையின்; அவ்வழியை எங்ஙனம் ஒப்பா தொழிதல் கூடும்.

பழந்தமிழின் இயற்கை அமைதியே பஞ்சத்திராவிடமுதலியன எளிதிற் பிரிவதற்குக் காரணமாயிற்று.

ஓர் பொருட்கு ஓர்குணமேயன்றி அதன்கணுள்ள பலகுணமும் அவ்வோர்சொற்கொண்டேகூறுவதற்கும் இத்தாது இடந்தருகிற்கும். வடமொழித்தாதுக்கள்போல வருந்தி வலிந்து பொருள்கொள்ளுமாறு போன்றிராது எளிதே இனிதே பொருள்கொள்ளக் கிடத்தலின் வருத்தமின்றி எளிதாக நடைபெறுவதா யெனப்பட்டது. இதனானே செந்தமிழ்க்குப்பின்னும் சொற்காரணமறிதற்கேற்ற சத்தநூலொன்று இருத்தல் வேண்டுமெனப் புலனாகின்றது.

தமிழ் முதலிய மொழியாராய்ச்சி செய்தற்கு இக்காலத்தியற்கைபோலஅக்காலத்தியற்கை துணைப்பட்டிலதாகலின், தொல்காப்பியர் முதலோர் இவ்வழி கூறுதுவிட்டமைக்குஅவர்தம்மேற் குற்றஞ் சார்த்தாது, அக்காலத்தின்மேற் சார்த்தல்வேண்டும்.

இஞ்ஞான்று ஆங்கில மொழியின் வியாபகத்தினால் ஆரியமொழி முதலியன ஒடுங்கி நிற்றல்போல, அஞ்ஞான்று ஆரியமொழியின் பெருக்கத்தினால் செந்தமிழ் ஒடுங்கித் தன்னிலை குலைந்த காலமே அகத்தியனார் இலக்கணம் செய்த காலமாம். பெருக்கம்=வியாபக

சொற்களுக்கெல்லாம் அகத்தியனார் காரணங் கூறாமையை "மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்று" என்ற தொல்காப்பிய சூத்திரமே விளக்கற்பாலது. அவர் கூறியிருப்பின் தொல்காப்பியர் இங்ஙனம் சூத்திரம் செய்தற்குஇடந்தராது. அச்சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரை, சிறந்த பொருளுக்குடையது.

உச. அகத்தியனார் கூறிய அமுதகலைஞான முதலிய நூல்களை நோக்கின், அவர் இலக்கணம் கல்லாததற்கு முன்னம் செந்தமிழ் தன்னிலைகுலைந்திருந்த காலத்தில் அவை அவரால் செய்யப்பட்டிருத்தல்வேண்டும். அகத்தியனார் பல மருத்துவநூல் பாடித்திருந்தி இலக்கணங்கற்று அகத்தியம் செய்தனர். அதனால் தொல்காப்பியர் முதலோர் திருந்தி யிலக்கணம் செய்தனர் பின்னர்ச் சங்கத்தில் செந்தமிழ்திருத்தமடைந்தது. இத்திருத்தத்தை நோக்க அமுதகலைஞான முதலிய நூல்களும் ஏனைய சித்தர் நூல்களும்செய்யுட்சிறப்பில்லனவாய்விளங்கின, அதனால் அவைகள்பிரமாண நூல்களாகாவெனத்துணிதல் கூடாது. அக்காலத்தில் கழுதைகள் அரசர்களுக்கு வாகனமாயின. பின்னர்க் குதிரையின் பெருமையால் கழுதையேற்றம் இழிபாயினும் அச்சரிதம் பொய்ப்படமாறில்லை. கழுதை அரசர்க்கு வாகனமாயினமையின் கோவேறு கழுதை யெனப்பட்டது. சித்தர் நூல்கள் இலக்கண வன்மைபெற்றில வேனும், பொருள்வன்மைபெற்றனவாகலின் அவற்றை யிகழற்க.

உரு. முன்னம் ஆரியத்தினின்றே தமிழ்பிறந்ததென்பார்பலர்; நச்சினார்க்கினியர் வீட்டின் தன்மை தமிழாற்கூறுரென்பர். அவரே காலம் உலகமென்பன வடசொல் அன்றென்பர்; ஈசானதேசிகர்

"அன்றியுந்தமிழ்நூற்களவிலையவற்றுள்
ஒன்றேயாயினுந்தனித்தமிழுண்டோ
அன்றியுமைந்தெழுத்தாலொருபாடையென்
றறையவேநாணுவ ரறிவுடையோரே"

என்று முழங்குவர்.

சுப்பிரமண்ணிய தீட்சிதர் தொல்காப்பியமுதலிவற்றுக்கு முதனூல் பாணிநீயமென்பர்.

சிவஞானமுனிவர் அதனைப் பலகாரணங்கூறி மறுத்துத்தமிழ் தனிமொழி யென்பர். இது பலர் கோட்பாடு.

அருணகிரிநாதர், கயிலைமலையும் விநாயகக்கடவுளும் முற்பட்டமைபோல உலகில் தமிழ் முற்பட்டதென்பர். திருத்தக்கதேவர், கம்பர் பவணந்திமுனிவர்முதலோர் தமிழ் பதினெண்மொழியுள் ஒன்றென்பர். தீட்சிதர்க்கும் அவைமேற்கோளாயின. திருமந்திர முதலிவற்றால் தமிழ் தேசியமாகாதென்பது புலனாகின்றது. சேனாவரையர் தமிழ்ச்சொல் வடமொழிக்கட் செல்லாதென்பர். சத்தநூல் வல்ல ஐரோப்பிய பண்டிதர் தமிழ்ச்சொற்களுட்பல வடமொழியினும் சில கிரேக்கு, எபிரேமுதலிய மொழிகளினும் கலந்துள்ளன என்பர். கால்டுவெல்துரை அக்கா, அடவி, ஆணி, குடி, கடுகு, மீனம், வலை முதலிய பல தமிழ்ச்சொற்கள் வடமொழியிற் கலந்துள்ளன என்பர்.

மீனமென்பது பழைய வடமொழி நிகண்டுகளிலில்லை. மீன: என்பது பிற்காலத்திலேற்பட்ட அமரநிகண்டிலுள்ளது.

தாமோதரம்பிள்ளையவர்கள் முகம் தாமரைமுதலிய சொற்கள் தமிழ்ச்சொல்லென நிறுவினர். ஓர் வடமொழிப்புலவர் தமிழில் முகமென்பதற்கு ஏற்றசொல் இல்லை யென்பர். ஆசிரியர் வ. கணபதிபிள்ளையவர்கள், வாயென்பதற்கு முகமென்பதேபொருள் எனக்கூறி ஆலாசிய மென்பதை ஆலவாய் என்றுமொழிபெயர்த்ததனால் தெளிக என்பர். சேஷகிரிசாஸ்திரியாரவர்கள் தெலுங்கு முதலியன தமிழின் வழிமொழியென்பர். இது பலர் கோட்பாடு

சூரிய நாராயண சாஸ்திரியார் அவரினும் பலவுண்மைகளை யெடுத்துக் கூறுவர். வி. கனகசபைப்பிள்ளையவர்கள் தமிழ்ச்சொற்கள் சீன முதலிய மொழிகளினும் கலந்துள்ளனஎன்பர். ஹண்டடரென்பவர் மலையாளமுதலிய பத்துப்பாஷைவரையும் தமிழ்ச்சிதைவென்பர். சுந்தரம்பிள்ளையவர்கள் ஆரியம் வருமுன் தமிழே

யிருந்ததென்பர். சரிதவாராய்ச்சி வல்லார் ஔஸ்டிராலியா தேசத்தாரது மொழியுள் நான் நீ முதலிய தமிழ்ச் சொற்கள் ஒத்துள்ளன என்பர். சலாமென்னும் தமிழ்ச்சொல் எபிரேய முதலிய பாஷையிற் கலந்துள்ளது.

உரிச்சொல்நிகண்டு

"வந்தனைகாணல் வணங்கல் பணிதலே
தந்தலைதாழ்தல் சலாஞ்செய்தல்—முந்தித்
தொழுதலே தண்டன் தொடர்ந்து முயங்கல்
தழுவலை விள்ளுதலும் சாற்று"

அது தமிழ்ச்சொல் அல்லாக்கால் நிகண்டு நூலார் இங்ஙனம் கூறார். திருப்புகழ் முதலிய நூல் வழக்குமுள்ளது. கிரேக்கர்கள் கனுவென்னுந் தமிழ்ச்சொல்லை கநு என்பர் Xνυ கநு=முழந்தாள்.

இனி கால்டுவெல் துரை முதலோர் தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டதென்பர். மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவராகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களும் மொழியாராயச்சியைப்பற்றி உரையாடுங்கால், தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டதே யென்பர்.

ஜர்மன் தேசத்து ஆசிரியர் கருத்தும் அதுவாம். வங்காள நாட்டாருள் சிலருடைய ஆராய்ச்சியில் தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டதென்பது இப்பொழுதுதானுண்டாகின்றது. இக்கருத்தினைச்சிறந்த பலகாரணங்களால் இந்நூல் நிலைநிறுத்தற்பாலது. இங்ஙனம் காலத்துக்குக்காலம் சத்தநூலினது உண்மை, சூரியனது தோற்றத்தால் மறைந்துகிடந்த உலகத்துப் பொருள்களின் வடிவம் சிறிது சிறிதாகவிளங்கு மாறு போல விளங்குதல் காண்க.

திங்கள், மதி, இல், எழில், ஒல்லை, ஞாயிறு, ஊழி நத்தம் முதலிய சொற்களால் தமிழ் மிகப்பழமையதென்பது தெளிந்து கொள்ளலாம். அவை தனிமொழியானமையின்.

திங்கள்=சந்திரன், மாசம். சந்திரனுலாவது.
மதி ,, ,, ,,
இல்=இராசியின் பொதுப்பெயர்.

ஏழில்=சத்த இருடி நட்சத்திரம்.
ஒல்லை=வீசமாத்திரை.
ஞாயிறு=சூரியன். கோள்களுக்கு நடுவிலிருப்பவனென்
ஊழி=யுகமுடிவு [பது.
நத்தம்=கடிகாரா ஊசி.

மாசத்தைத்திங்களென்பது சாந்திரமானிகள் மதமெனலும் ஒக்கும்.

உசு. ஆங்கிலம். சர்மனி, பிராஞ்சு இப்பாஷைகளுக்கு முன் இலத்தின் சிறந்திருந்தது. அதற்கு முன் கிரீக்கு சிறந்திருந்தது. அதற்கு முன் எபிரேயம் சிறந்திருந்தது. அதற்கு முன் எகித்து நாட்டு மொழி சிறந்திருந்தது. அதற்குமுன் பினிசியமொழி சிறந்திருந்தது. அதற்குமுன் பின்ஸ் சிறந்திருந்தது. அதற்குமுன் அக்கேடிய பாஷை சிறந்திருந்தது.

அக்கேடியரிடமிருந்து மங்கோலியம், பின்ஸ் என்னும் இரண்டு வமிசங்கள் பிரிந்தன.

அக்கேடியரெனின் குறிஞ்சிநிலமக்களென்பது பொருள்.

ஈழநாட்டிலிருந்து பாரசீகவளைகுடாவைச்சுற்றிலும் முற்காலத்தில் குடியேறியமக்களுக்கே அக்கேடியரென்று பெயர். பினீசிய மொழியெனினும் சோமேரிய பாஷையெனினும் ஒக்கும்

உஎ. இஞ்ஞான்று திரிசிரபுரம் பண்டிதர். சவரிராயப்பிள்ளையவர்கள் ஆராய்ச்சியும், சென்னை மகா கோட்டத்து வக்கீல் தி. வீரபத்திர முதலியாரவர்கள் ஆராய்ச்சியும், பண்டிதர் சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள் ஆராய்ச்சியும், பண்டிதர். நாகை. வேதாசலம் பிள்ளையவர்கள் ஆராய்ச்சியும், ஒவ்வோர் வகையில் எமது ஆராய்ச்சியை ஒத்துள்ளன. ஜி. யு. போப்பு ஐயர் நாலடியாரிற்கூறிய சொற்காரணவழி எமது ஆராய்ச்சியை ஒக்கும். ஆங்கில சத்தநூலிலுள்ள சொற்பாகுபாடு முதலியனவும் எமது ஆராய்ச்சியைப் போல்வனவே.

உஅ. தொல்காப்பியர்க்கு முன்னுள்ள அகத்தியமுதலிய நூல்களும், அகத்தியனார்க்கு முன்னுள்ள செந்தமிழ்நூல்களும்,

செந்தமிழ்க்கு முன்னுள்ள தமிழ்நூல்களும், தமிழ்க்கு முன்னுள்ள பழந்தமிழ்நூல்களும் இறந்து பட்டமைக்குக் கவற்சியும், தொல்காப்பிய முதலிய நூல்களும் பிறவும் இறந்து படாது நிலை பெற்றமைக்கு மகிழ்ச்சியும் அடைகின்றனம்.

௨௯, இலக்கியமே யில்லாதகாலத்து இலக்கணம் கூறல் கூடாது. கூறினும் பயனில்லை. ஆகலின் அகத்தியனார்க்கு முன்னம் செந்தமிழில் சிறந்தமைந்தார் முதனூலிருத்தல் வேண்டும்.

"இலக்கியம் இருந்தன்றோ இலக்கணம் எழுதலாகும். அகத்தியம் தமிழிலக்கணமாயின், அதற்கு முந்திய தமிழ்நூல்களும் இன்றியமையாதிருத்தல் வேண்டும்" என்பர் கனக சபைப்பிள்ளையவர்கள்.

செந்தமிழ் தொகுதி. ௩ பகுதி. ௮. தமிழ்ப்பெருமை காண்க

"இலக்கிய மின்றி யிலக்கண மின்றே
இலக்கண மின்றி யிலக்கிய மின்றே
எள்ளினின்றெண்ணெ யெடுப்பதுபோல
இலக்கியத்தினின் றெடுபடு மிலக்கணம்"

என்று அகத்திய சூத்திரத்தாலும்,

"வினையினீங்கி விளங்கிய வறிவின்
முனைவன்கண்டது முதனூலாகும்"

என்று தொல்காப்பிய சூத்திரத்தாலும், "முந்து நூல்கண்டு" என்பதற்கு உரையாசிரியர், முதனூல்களிற் சொன்னவற்றினைக்கண்டு எனக்கூறலானும், அம்முதனூலுண்மை பெறப்படுகின்றது.

அகத்தியம் இலக்கண நூலாகலின் முதனூலுண்மை பெறப்படுகின்றது.

"ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுட்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்றிசை வையகஞ் சுத்தமே"

இத்திருமந்திரத்தால் வேதம் பிறந்தநாடு தமிழ்நாடே யென விளங்குகின்றது.

தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர் செய்யும் ஆரிய வேதாத்தியயனம் தமிழ்ச்சந்த முறைமையும், ஆரிய நாட்டிலுள்ள பார்ப்பனர் செய்யும் அவ்வத்தியயனம் ஆரிய சந்த முறைமையும், பெற்றமையின் முன்னதிலும் பின்னது சந்தச்சுவை வேறுபட்டுள்ளது. முன்னதே சிறப்புடையது.

"பதநிலை பாழிசானை யாரணம் பணைத்த வேதம்"

என்னுந் திருவிளையாடற்புராணச் செய்யுளுட் பாழி, முதலிய சொற்களும், ஒத்து, ஒத்துரைப்போர், கிடை முதலிய சொற்களும், அத்தமிழ்வேத முண்மையை விளக்கற்பாலன. பாழி, கிடை, சடையென்பன ஒருபொருட்கிளவி. படனமுறைமையென்பது.

"மெய்த்தமிழ் மறையோர்வாழ்" என்பர்.

(௬அ௪ திருப்புகழ்)

திருமறைக்காட்டில் தமிழ்வேதம் அடைத்த கதவை அத்தமிழ் வேதம் தாமே திறந்த தென்கின்றனர். ஆரியர் ஈண்டு நேற்று வந்தவர், முற்கணத்தில் வந்தவர் என்றலின், இராவணன் கயிலைக் கட்கீதம் செய்தது தமிழ் வேதமென்கின்றனர். தமிழ், பண்முறையிற் சிறந்ததாகலின் அஃதொக்கும்.

"சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்" (திருமந்திரம்)

"ஓங்கலிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்பதுள் ஓங்கலென்பது இமயகூடமுதலிய சத்தகூடங்களை. இமய முதலிய மலைச்சிகரங்களில் நிறுவிய கழகங்களில் அருந்தமிழ் நூல்கள் வளர்ந்தோங்கினமையின் அங்ஙனம் கூறினார் என்பது. அம்மலைச்சிகரங்களிலுள்ள தமிழுலகங்களையே விஞ்சையருலகென்பர். தொல்காப்பியரும் முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்த லென்பவற்றை முறையே காடுறையுலகம், மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகம் என்பர். பெரும்பயன் விளைத்தலின் உல

கென்றனர். உலகம் உயர்ந்தோரென்பதும் அவ்விஞ்ஞையருலகிலுள்ளோரை யென்க.

ஓதி, கழகம், கல்லூரி, சாடு முதலிய தமிழ்ச்சொற்களால் இமய முதலிய சத்த கூடங்களில் வளர்ந்தோங்கியது தமிழ்விஞ்ஞையே யென்பது விளங்குகின்றது.

(க) ஓதி=மலை, கல்வி. மலையில் வளர்ந்ததென்பது.

(உ) கழகம். கல்லகம்—களகம்—கழகம்.

(ங) கல்லூரி—உரி=முனை; மலைச்சிகரத்தில் உண்டாயதென்பது. கல்=மலை.

கல்லூரி=கலாசாலை

(ச) சாடு=புலமை

சாடுவர்=நாவலர்.

"சாரதியெனவும் சாடுவரெனவும்
சூரியரெனவும் சொல்லுவர் புலவர்" ——— (பிங்—நி)

சாடென்பது மலையினிமையபுடைச்சொல்
சாடு—சதுவு=படிப்பு ———(தெலுங்கு)

மூன்று மலைகளினிடையில் வளர்ந்த தென்பது.

சாடு—சட்டம்=தத்துவநூல், நீதிநூல் முதலியன.
"சட்டகலை யெட்டும் மருவெட்டும்" ——(ச—தே)
சட்டக்கல்வி, சட்டம்பிள்ளை.
சட்டநாதன்=சிவன்.

சீர்காழியில் சிவபெருமான் பெயர் சட்டநாதர். அவர் ஆலயத்தின் ஓர் புறத்தில் மேலடுக்கில் இருக்கின்றனர். அவ்விடத்தை அவ்வூரவர் மலையெனச்சொல்வர். சிவபெருமான், விநாயகக்கடவுள், முருகக்கடவுள் குபேரன் முதலோர், விஞ்ஞையருலகிற்கு இறைவராவர். இமயமலையில் உயர்ந்து விளங்கும் கயிலையில் தமிழ்த்தத்துவநூல் வழக்குண்மையின் அக்கயிலைப்பெருமான் சட்டநாதரென்னும் பெயர் பூண்டனன். "முத்தமிழடைவினை முற்படுகிரிதனில் முற்பட்டெழுதிய முதல்வோனே" என்பது கண்டு மேற்கோளாதற்பா

லது சேரமான் பெருமாணாயனார் பொன்வண்ணத்தந்தாதி இவ்விடத்தில்தான் அரங்கேற்றினார்.

திருக்கேதாரத்திற்கும் கயிலைக்கு மிடையில் பெருந்தடையாகக் கங்கையின் கடுங்கதி யுண்மையின், அக்காலத்தார் விமானத்திலேறிக்கயிலைக்குப் போய் வந்தனர் என்க.

"திரள்விமானமது வான்மிசையுயர்த்த வவனும்" (க—பரணி) என்பதால் அக்காலத்தில் ஆகாய எந்திரம் இருந்ததென்பது பெறப்படுகின்றது.

இதனுமை வெற்பேழுட் பிறந்த வேதாகமங்கள் தமிழ்வேதாகமங்களென்பது பெறப்பட்டது.

பழைய திருவிளையாடற்புராணவுரையில் தமிழ் ஆகம சூத்திரங்கள் மேற்கோளாக வந்திருந்தன.

"விஞ்சையர் கேசரர் வித்தியாதரர் பெயர்"

சேணி, சேடி, விஞ்சைப்பதி, யாணர்நகர், என்பன விஞ்சையருலகின் பெயராம்.

சேணி=உயரத்திலுள்ளதென்பது.
யாணர்=அறிஞர்.
கேசரர்=ஆகாயகமனரென்பது.
விஞ்சையர் மலைச்சிகரவாசிகள்

"மன்னுமாமலை மகேந்திர மதனிற்
சொன்னவாகமந் தோற்றுவித்தருளியும்"
"கேவேடராகிக் கெளிறது படுத்து
மாவேட்டாகிய வாகமம் வாங்கியும்
மற்றவைதம்மை மகேந்திரத்திருந்
துற்றவைம்முகங்க ளாற்பணித்தருளியும்"

எனத்திருவாசகத்தில் மாணிக்கவாசகசுவாமிகள் கூறியருள்வர். மகேந்திரமலை, தமிழ் நாடாகிய தென்னாட்டிலிருந்தமையானும் அது சித்தாந்த திசையாகலானும் குமரிநாட்டினைக்கடல் கொள்வதன்முன் அதன்கண் ஆகமம் பிறந்தமையானும் அவை தமிழாக

மங்களென்றே துணிதல் வேண்டும். இதனால் மகேந்திரமலையிலும் ஓர் தமிழ்க்கழக மிருந்ததென்பது பெறப்படுகின்றது.

"சுடர்க்கடவுள் தந்த தமிழ்தந்தான்" (க—ரா)
"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து"
"ஆதியிற்றமிழ்நூலகத்தியற்குணர்த்திய
மாதொருபாகனை வணங்குதும்"

முதலியவற்றால் தமிழ் சிவபெருமான் வழியதென உறுதிப்படுகின்றமையின் வேதாகமங்கள் தமிழிலிருந்தன வென்பதே துணிபு. "தங்கி மிகாமை வைத்தான் தமிழ் சாத்திரம்" என்னுந் திருமந்திரத்தானும் தெளிக.

௩௰. சிறுவர்கள் கீத முறைமையைத் தொடக்கத்திலேயே பயில்வதற்குத் தமிழ்நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளை ஆறு, ஒறு என்னுஞ்சாரியைகளோடு கூட்டிக்கற்பித்தலும்; படனம், படித்தல், மாணவன் முதலிய சொற்காரணமும்; அத்தமிழ்வேதம், இசைப்பிழம்பென்பதற்குச்சான்றாம்.

அச்சொற்களுக்குப் பண்ணொடு கற்றல், பண்ணொடு கற்போன் என்பது பொருள்.

இவற்றால் இசைக்கல்வியே முதல்முதலுண்டாயதென்பது பெறப்படும். அது பின்னால் விளங்கும்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென்னும் ஐவகை நிலங்களில் அவ்வக்காடுகளில் கிளி, மயில், பருந்து, கோழி, அன்னம், காக்கை முதலிய அவ்வந்நிலத்துப் பறவைகளும்; வண்டினங்களும் மகிழ்ந்தினிது பாடுவதும் அப்பாட்டினாலே மகிழ்வுபெருகுவதும் இயற்கையாகலின், அவ்வந்நிலத்துள்ள மக்கள் மகிழ்ந்து செவியுற்று அங்ஙனமே தாமும் மெல்ல மெல்ல இசைத்துப் பழகினமையின், உலகத்து முதல் முதல் தோன்றிப்பெருகியது இசைக்கல்வியேயாகும். அவ்விசைக்கல்வியானே நாவானது மெல்ல மெல்லத்திருத்த முறலால் ஓர்சார், ஒலிவடிவெழுத்துகளும் சில புலனாயின. பிறகு வரைமையின் தோற்றத்திற்கு அவையும் காரணமாயின.

வண்டினையுணர்த்தும் தேனென்னுஞ்சொல்லினின்று இசையையுணர்த்தும் தென் என்னுஞ்சொல்லுண்டாயிற்று. "தென்னதென" முதலியனவும் "தெனந்தெனந் தெந்தெந் தெந்தெனன" முதலியனவும் அதினின்றே யுண்டாயினவாம். சங்கீதப்புலவர்கள் அவையிடத்தே ஆலாபனஞ் செய்வன வெல்லாம், வண்டினது இன்னிசை போல்வன ஆகலின், அவ்வாலாபனச்சொற்களும், அத் தென் என்னுஞ்சொல்லின் சிதைவேயாம். பிறவு முணர்ந்து கொள்க.

அவ்வந்நிலத்துள்ள புட்களினொலி, வேறுபட்டிருத்தலின் குறிஞ்சிப்பண், பாலைப்பண் எனப்பண்களும் வேறு பட்டன. இவையே இடப்பண்ணாம்.

"பண்களாவன பாலையாழ் முதலிய நூற்றுமூன்றென்ப. ஐவகை நிலங்காரணமாக எழுந்த அகப்பொருளும், புறப்பொருளும், அவற்றின் பாகுபாடுகளும் அவ்விரண்டன் இயைபுகளும் தமிழ்க்கே யுரியன.

ச ரி க ம ப த நி என்ற சத்த சுரங்களும் குறிஞ்சி முல்லை நெய்தலென்னு மூன்று பண்களிலே அடங்கும். எங்ஙனமெனின்:— மயிலும் குயிலும் யானையும் குறிஞ்சிக்கருப்பொருளும், எருதும் ஆடும் குதிரையும் முல்லைக்கருப்பொருளும், கிரவுஞ்சம் நெய்தற் கருப்பொருளுமாகலின் என்க.

சத்த சுரங்களினெழுத்துகள் சட்ச முதலியவற்றின் முதலெழுத்தாகலின், அவ்வவற்றினொலி அவ்வவ்வெழுத்துக்குங் கொள்ளப்படும்.

ச, சட்சம்=மயிலொலி
ரி, ரிடபம்=எருத்தொலி
க, காந்தாரம்=யாட்டொலி
ம, மத்திமம்=கிரவுஞ்சவொலி
ப, பஞ்சமம்=குயிலொலி
த, தைவதம்=குதிரையொலி
நி, நிடாதம்=யானையொலி

மூற்கூறப்பட்ட அம்மூன்று பண்களிலே உதாத்தம், அநுதாத்தம், சுரிதம் என்னும் இசை வேறுபாடுள்ளன. எங்ஙனமெனின்:—

நிடாத காந்தாரங்கள் உதாத்தமும், ரிடப தைவதங்கள் அநுதாத்தமும், சட்ச மத்திம பஞ்சமங்கள் சுரிதமும் ஆகலின். இவை முறையே ஆரோகண அவரோகண மத்திம சந்த மாகலின் இவற்றுக்குக்குறிஞ்சி, முல்லை, நெய்த லென்பவையே பிறப்பிடமென்க.

எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் என்னும் ஒலிகளை முறையே உதாத்தம், அநுதாத்தம், சுரிதம், பிரசயம் என்பர். குறிஞ்சிக்கருப்பொருளாகிய மயில்கள், ஆரோகண அவரோகணமாக இசைப்பதியற்கையாகலின் குறிஞ்சியினின்றே அனைத்துப் பண்களும் பிறந்தன என்பது திண்ணம். அது ஏனைய சுரங்களுக்கெல்லாம் உயிர் போன்று முதற்கணிற்பதே சான்றென்க. காளிதாசரும் மயிலினையுணர்த்தும் கேகா என்னுஞ்சொல்லுக்குக் கே+கா என முறையே ஆரோகண அவரோகண கதி கற்பிப்பர்.

சட்சம் என்பது மயில்; சடு+சம்=சட்சம்; ஏனைய ஆறு சுரங்களையும் உண்டாக்குவதென்பது பொருள்.

௩௧. குறிஞ்சி யென்பது மலையும், மலைச்சார்புமாம். குறிஞ்சிக் கருப்பொருள்களுட் சிறந்த மூங்கிற்புதர்கள் அக்குறிஞ்சியிற் செழுமையாக வளர்கின்றன.

யானை முதலியன துரத்தினும் தப்பியுய்வதற்கு மூங்கிற்புதரிடனுகும். கள்ளிருளில் மயங்குங்கால் மூங்கிற் புதர்கள் உரைந்தெரிந்து ஒளிர்தலைச்செய்து வழிகாட்டா நிற்கும். குறிஞ்சியிலேறி நாற்றிசையோடு மேலுங் கீழும் நோக்கின் தெய்வபத்தியுண்டாவதியல்பு. முதன்மக்கள் குறிஞ்சியிலேயே தெய்வ வழிபாடு கொண்டனர். வசிப்பதற்குக்குகையும், பருகுவதற்கு அருவிநீரும், சுனைநீரும்; உண்ணுதற்கு மூங்கிலரிசியும், தினையும் தேனும் பலவகைக் கனிகளும் கிரைகளும் கிழங்குகளும் வித்துகளும்; சமைப்பதற்கும் குளிர் காய்வதற்கும் மூங்கினெருப்பும், சந்தனம் அகில் முதலிய வாசனைப்பொருள்களும்; பொன்னும் மணியும் பிறவும் அக்குறிஞ்சி

யின்கணுள்ளன. எவ்வகை வெள்ளத்திலும் குறிஞ்சியிலுய்தல் கூடும். பிறப்புக்கு நிமித்தமாகிய புணர்ச்சி, குறிஞ்சியுரிப்பொருளாகின்றது. மூங்கிற் சொல்லினின்றே நெருப்பின் பெயர், நெல்லின் பெயர் அரிசியின் பெயர் முதலியவைகளும் பிறக்கின்றன. நோய் கொண்டுழி அதனைத்தீர்த்தற்கும் பற்பல ஔடதங்கள் குறிஞ்சியின்கண் மலிந்துள்ளன.

தண்ணீர், பால், தயிர், மோர், நெய், எண்ணெய், தேன், கடுகு மிளகு முதலியன வைத்தற்கு மூங்கிற் குழாய்களே இயற்கைப்பாத்திரங்களாம்.

மரக்கால், படி, நாழி, உழக்கு, அழக்கு முதலிய அளவைக் கருவிகட்கும் மூங்கிற்குழாய்களே ஏற்றனவாகும். பலவகைக்கூட்டுகளுக்கும் ஊறுகாய்களுக்கும் மூங்கிற்குருத்துகள் பயன்படுகின்றன. மூங்கின்மடல்கள் உண்கலமுமாம்; கல்லையுமாம்; எழுத்துப் படங்களுமாம்.

வீடு வேலி பெட்டி கட்டில் பாய் கூடை முறம் கடிதம் தூரியக்கோல் முதலியன அமைப்பதற்கும் மூங்கிலே தகவுதாகற்பாலது. இன்னும் மக்களுள் வறியவர்க்கும் செல்வர்க்கும் வேண்டிய அளவிறந்த கருவிகள் அழகாகவும் உறுதியாகவும் மூங்கிலால் செய்தல் கூடும். அக்காலத்தும் செய்தனர்; இக்காலத்தும் செய்கின்றனர். அறுபது வகை மூங்கில்களுள்ளன என்பர். இன்னும் மூங்கிலின் விசித்திரம் அளவிறந்தன. அக்காலத்துப் போர்க்கருவிகளெல்லாம் மூங்கில்களாலேயே செய்து வந்தனர். தமிழர் மூங்கில் வேலையிலும் ஆரியர்தோல்வேலையிலும சிறந்தவராவர்.

இங்ஙனமாய முக்கிய காரணங்களால் கடல் கொண்ட எழுநூறு காவத நிலப்பரப்பில் நூறுகாவத வளவினதாய ஏழ்குன்ற நாட்டில் மணிமலையில் வேணு வனத்தில் பழந்தமிழ்மொழி பிறந்ததென்பர். அக்குன்றநாடு வெம்மை மிகுந்துள்ள குறிஞ்சியாகலின் முதல் முதல் எல்லா வுயிர்களும், அவ்விடத்தே பிறந்து பெருகிப் பின் பல விடங்களினும் பிரிந்தன. உடம்பின்கண்ணும் வெம்மை மிகுந்துள்ள நடுவணதாய வயிற்றிடத்தே கருத்தரிக்கின்றது. குருத்

துகளும் நடுவிலேயே யுண்டாகின்றன. ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய கூதிர்ப்பருவம் குறிஞ்சியின் பெரும்பொழுதும், இடையிரவாகிய யாமம் சிறு பொழுதுமாம்; ஐப்பசி மாதத்திற் சோதிநாளில் முத்துகள் பிறக்கின்றன. ஐப்பசி கார்த்திகை மாதங்களில் ஆடு முதலியன ஈனுகின்றன. அம்மாதங்கள் வேறொரு செயலில்லாத குளிர் காலமுமாம். கோள்களுக்கெல்லாம் நடுவிலுள்ள சூரியனுக்கு அண்டயோநி யென்னும் பெயருள்ளது. கூதிர்ப்பருவம் கருக்கொள்கின்ற பருவம் என்பது பொருள். இச்சிறந்த காரணங்களால் "இங்ஙனம் ஆழ்ந்துபோன பெருநிலன், இந்நிலவுலக முழுவதற்கும் நடுவிற் கிடந்த பெரும் பரப்பாகலான், இறைவனாற் படைக்கப்பட்ட மக்கள் முதன் முதல் இந்நிலத்திருந்து பின் நாற்றிசையிலும் பிரிந்துபோய் வேறு பட்டனர்" என்ற ஹேக்கல் சாஸ்திரியார் கூற்று, மிகவும் வலியுறுகின்றது. எல்லா வுயிர்களும் உடம்பின்கண் நடுவிற் கருக்கொண்டு பிறத்தல்போல மன்னுயிர்கள், இந்நிலவுலகத்தில் நடுவிலுண்டாயினவென்க. சொர்க்க மத்திய பாதாள மென்னு மூன்றுலகங்களில் மத்தியமாகிய நிலவுலகத்திலே பிறப்பு முதலியன வுண்டாகின்றன.

இருபத்தேழு நட்சத்திரங்களையும் மூன்று பாகுபாடு செய்ய, ஒவ்வோர் பாகு பாட்டிற்கும் ஒன்பது ஒன்பது நட்சத்திரங்களாம்; அவற்றுள் நடுவிலுள்ள ஒன்பது நட்சத்திரங்களில் குறிஞ்சியின் பெரும்பொழுதாகிய ஐப்பசி கார்த்திகை மாதங்கள் நிகழ்கின்றன.

ஐங்குறுநூற்றிலும் மதுரைக்காஞ்சியிலும் பெருங்கதையிலும் குறிஞ்சித்திணையை நடுவில் வைத்துக்கூறியது இக்கருத்தெனுமொக்கும்.

அக்காலத்து நாற்பத்தெட்டியாண்டிற்குமேல் மகட்கொண்டமையின், அவ்வயது மக்கட்குரிய நூற்றிருபது யாண்டுகளில் நடுவணதாகின்றது.

கர்ப்பமென்பது முதல் கருவையும், பிறகு நடுவையும் உணர்த்திநிற்கும். கர்ப்பக்கிரகம், ஏரிகர்ப்பத்திலுடைந்தது என்பவற்றாலுங்

தெளிக. கர்ப்பகமென்பது மயிர்நடுவிற் சூட்டு மாலையை யுணர்த்தும்.

"கள்ளி வயிறறி லகில் பிறக்கும்"

"ஆழ்திரைக்கட லகடுகிழ் டொழுகிய தன்றே"

என்பவற்றுள் வயிறு, அகடு என்னுஞ்சொற்கள் நடுவினை யுணர்த்தின.

விண்ணின்கட் சூரியனும் மண்ணின்கண் ஏழ்குன்றநாடும் உடம்பின்கட் கருப்பையும் குறிஞ்சியின் பெரும்பொழுதுசிறுபொழுதுகளும் நடுவின்கண் இருத்தலின், அக்குன்றநாட்டில் நாற்பத்தெட்டியாண்டிற்குமேல் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் இடையாமத்தில் சுபவோரையில் கருக்கொள்ளின் அறிவு ஆயுண் முதலியவற்றாற் சிறந்திருக்குமெனக்கருதல் வேண்டும் இக்காலத்தில் அவ்விடமும் அவ்வயதும் அமையாவேனும் குறிஞ்சியின் பொழுதுகளும் சுபவோரையும் அமைதல் கூடும். இதனானே அண்டபிண்டங்கள் தன்மையில் ஒன்றுபடுமாறு காண்க.

மகாசங்காரத்தின்பின் மக்கள் பிறத்தற்கு அத்தென்பெருங்கடல் நிலனுதல் வேண்டும். மகா சங்காரத்தின் பின்என்பது மறுமுறையில்.

"அவற்றுள், கூதிர்யாமம முன்பனி யென்றிவை ஓதிய குறிஞ்சிக்குரியவாகும்"

என்பது அகப்பொருளிலக்கணம்.

கூதிரென்பது பிறப்பினையுணர்த்தும் கூதமென்னுஞ் சொல்லிற் பிறந்தது.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு"

"மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்"

"இடமெனப் படுபவை மலைநாடியாறே"

இச்செய்யுள்கள், குறிஞ்சி நிலத்தைத் தலைமையாக வைத்துச் சிறப்பிக்கின்றன,

"குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தலெந் திணைக் கெய்திய பெயரே"

என அகப்பொருளிலக்கணத்துக் குறிஞ்சியை முதற்கட் கூறுவர். இது பெரும்பான்மையோர் கருத்து. அது எல்லா வுயிர்கட்குந் தலை சிறந்ததோர் இடனாக நிற்றலின், பொருத்தமுமுளது. அகம் புறமென்னும் இருவகைப்பொருட்கும் குறிஞ்சியே தலை சிறந்த இடமெனக. திணையென்பது குறிஞ்சிக்கேபெயர். வலிவுடைய தென்பது பொருள்.

திண் + ஐ = திணை.

"அன்பின் பெருமையும் அருளின் பெருமையும்
அம்பின் பெருமையும் அனைத்துங்குறிஞ்சியாம்"

௯௨. வடமொழிக்கண் எல்லாக்கலைகளும் நிரம்பியிருத்தலின் புலவர்கள், அதுவே முன்னுண்டாய மொழியெனவும், ஏனையவெல்லாம் அதன் வழிமொழியெனவும் இன்னுங்கூறுவர். ஆங்கிலமொழிக்கண் இஞ்ஞான்று எல்லாக்கலைகளும் நிரம்பியிருத்தலின், அதனை முன்மொழி யென்னல் கூடுமோ? ஓர் மொழிக்கு அரசுரிமை வரின் எல்லாக்கலைகளுந் தோன்றலும் அவ்வுரிமை போயின், வருந்திக்கற்பாரின்மையின் அக்கலைகளுள் அரியன அழிதலும் இயற்கை. ஓர் மொழி கலைகள் நிரம்பப்பெற்றிருத்தல், ஓர் காலத்து அது வளர்ச்சி பெற்றமையை யுணர்த்தற்பாலதன்றி முன்மொழி யென்பதை யுணர்த்தற்பாலதன்று.

முன்மொழி யிதுவெனத்துணிவதற்கு நாவினது இயற்கையாராய்ச்சி செய்தல் வேண்டும் அவ்வாராய்ச்சியே அதனை யுணர்த்தற்பாலது.

௯௩. வடமொழியும், கிரேக்கு, இலத்தீன் முதலிய மொழிகளும் ஆங்கிலமொழிக்கு அணுக்கவியைபு கொண்டிருத்தலின் ஆங்கில பண்டிதர்கள் அவற்றைக்கற்பதிலேயே ஆயுளொடு மனத்திட்பமுமிழக்கின்றமையின், தமிழ் முதலிய பாஷைகளைக்கற்பதில் அவர் தங்கருத்து இறங்கிற்றிலது. சிலர் கற்பினும் புராண முதலி

யனவே கற்பர். தொல்காப்பிய முதலிய இலக்கணங்களைக்கற்பா ரல்லர்.

கடல் கொண்டமையின் தருக்கமுதலிய பலகலைகளையிழந்தமையானும் பிறமொழியார் கொள்ளை கொண்டமையின் சொற்குறைவுடைமையானும் தமிழ், ஓர் சிறு மொழியென்பது அவர்தங் கருத்துமாம்.

அவ்வக்காலத்துத் தமிழ்மொழிக்கு நேர்ந்த இடையூறுகளை அறிந்தாரில்லை. உண்மையை ஆராய்ந்தறிந்து மகிழ்வது ஆங்கிலர் தம் இயற்கைப்பண்பாகலின் இந்நூலை யறிந்தபின் அங்ஙனங்கூறு ரெனக்கருதுகின்றனன்.

௩௪. ஆரியர், தம்மொழி யொன்றினுள்ளே தாது ஆராய்ச்சி செய்வர்; தெலுங்கர் முதலோர் ஆரியத்தைச்சார்வர். ஐரோப்பிய பண்டிதர் தம்மொழிக்கு அணுக்கவியையு கொண்டவற்றுள்ளே ஆராய்ச்சி செய்வர் தமிழர் தனித்தனர். இங்ஙனம் பிரிவது ஞாயமாகாது. தெலுங்கர் முதலோர் தாது தமிழிலும் ஆராய்தல் வேண்டும்.

௩௫. சித்திரமாவது ஐவகை வருணங்களாலாதல், எழுவகை வருணங்களாலாதல், எழுதப்படுவதோர் உண்மைக்காட்சிப்பேறுகலின், அச்சித்திரமென்னுஞ் சொற்கு அப்பொருள், அவ்வருணங்களையுடையசூரியன் காரியமாகிய சல்லென்னுந் தாதுவினின்று தான் பெறல் வேண்டும்.

சேர்த்தலென்பது திரட்டலையுணர்த்தும். அதாவது குவித்தல். இப்பொருள் சேர்த்தலென்னுஞ் சொல்லில் எங்ஙனம் அமைந்துள்ளது என ஆராய்வார்க்கே அநுரூத சம்பந்தத்தின் உண்மை வலிவுறு நிற்கும். இங்ஙனமே வளைதல், கோணல், நடு, பொது, துளைத்தல் முதலிய சொற்களையும் ஆராயதல் வேண்டும். வட்டமென்னுஞ்சொல்லுக்கும் O இவ்வடிவமாகிய வட்டப்பொருட்கும் இயைபுஎவ்வாறெனின் வட்டவடிவுடைய சூரியன் காரியமாகிய சல்லென்னுந் தாதுவினின்றுதான் அநுரூத சம்பந்தத்தால் அவ்வியைபுபெறல் வேண்டும். சூடென்னுஞ்சொல்லுக்கும் வெப்பமாகி

தீயினது தன்மைக்கும் இயைபு எவ்வாறெனின் தீயினது தன்மை யுடைய சூரியன் காரியமாகிய சுல்லென்னுந் தாதுவினின்றுதான் அவ்வியைபு பெறல் வேண்டும். பிறவு மன்ன.

அற்றேல் சுல்லென்னுந் தாதுவிற்கும் சூடென்னுஞ்சொல் லுக்கும் இயைபுள்ளது. வட்டமென்னுஞ் சொல்லுக்கு அவ்வியை பில்லையேயெனின், நன்று? சூடென்னுஞ்சொல் அத்தாதுவிற்குச் சமீப சம்பந்தம்; வட்டமென்னுஞ்சொல் தூரசம்பந்தமென்க. ஓர்மரத்தினது வித்தையும், பூவையும் தனித்தனிக்காட்டின் அச் சம்பந்தம் புலப்படாது; வித்தினின்று முளையும் முளையினின்று செடியும், செடியினின்று பாரையும், பாரையினின்று கவடும், கவட்டினின்று கோடும், கோட்டினின்று வளாரும், வளாரினின்று இலையும், இலையினின்று அரும்பும், அரும்பினின்று மலரும் தத் தம் இயைபுவிடாது உண்டாவதைக்கண்ணிற்குக் காட்டிப் பிறகு அவ்வித்தையும் பூவையுங்காட்டின் அச்சம்பந்தம் ஐயமறப் புலப்படும். அதுபோல் சுல்லென்னுந்தாதுவினின்று வழிவழியாகப் பிரிந்து வருஞ்சொற்களையும் ஆராய்ந்து கொண்டே செல்லின் அத் தாதுவிற்கும் வட்டமென்னுஞ்சொல்லிற்கும் உள்ள சம்பந்தம் நன்கு புலப்படும். இவ்வையப்பாடெல்லாம் மேலை முதனிலையியலை ஆராயுங்கால் இல்லாது போய் விடும்.

௩௬. நாடகநூல்களுட் கூறப்பட்டுள்ள அத்தபேத விரிவை யும், நயனபேத விரிவையும், உணரின், அவை பழந்தமிழ்க்குமுன் ஓர் பாழையு மின்மையானும் நாவாலிசைக்க வலியின்மையானும் மக்கள் தத்தங்கருத்துகளைக்கையாலும் கண்ணாலும் புலப்படுத்தி யதை விளக்கற்பாலன. இக்காரணத்தானே நிகண்டுநூலார் தமிழ்க் கூத்தருக்கு வாயிலோர் எனக்கூறுவர் போலும். முன்னர்க்கைக் குறிப்பும், பின்னர்க்கட்குறிப்பும், அதன் பின்னர் ஒலிக்குறிப்பும் உண்டாயின.

௩௭. உலகத்தில் முதன்முதலுண்டாகிய சமயமும் சூரிய சமயமே. இச்சமயத்திலிருந்தே யேனைய சமயங்களெல்லாம் பிறந்து பெருகின. இக்காலத்தில்தான் யோகம், பூகோளம், ககோளம்,

சோதிடம், வைத்தியம், சாமுத்திரிகம், அங்ககணித முதலிய நூல் ளுண்டாயின. ஈண்டுவைத்தியமென்பது நாடிநூல். அங்ககணிதம் உடம்பின் உறுப்பளவை கூறுங்கணிதம்.

௫௮. ஞாயிறென்னுஞ்சொல், கோள்களுக்கு நடுவிலுள்ள தெனப்பொருள் தருகின்றமையானும் சூரியனை யுணர்த்தும் பொழுதென்னுஞ்சொல்லில் நடுவினை யுணர்த்தும் பொதுவென்னுஞ்சொல், பிறக்கின்மையானும் கோள்களுக்கெல்லாம் சூரியன் நடுவினனென்பது பண்டைக்காலத்துக் கோட்பாடேயாம். பழைய சிவாலயங்களிலுள்ள நவக்கிரகபிரதிட்டையில் சூரியனை நடுவிலும் ஏனைய கோள்கள் அவனைச்சூழவும் வைத்துப்பூசிப்பதே அதற்குச்சான்றென்க.

"இருந்தனர் கீழ்த்திசை நோக்கி யிட்டதோர்
கருந்துகி னடுவுமிந் திராதி காவலர்
அருந்திசை யெட்டினு மடைவிற் செம்மணி
பெருந்தண்முத் தாதியெண் மணியும் பெய்தரோ"

(திருவிளையாடல்)

என்பதில் சூரியனுக்குரிய மாணிக்கத்தை நடுவிலும், ஏனைய கோள்களுக்குரிய முத்துமுதலியவைகளை அதனைச்சூழவும் பெய்தெனக் கூறலினானுந் தெளிக.

இன்னுஞ் சூரியமூர்த்தியினது தன்மையைச் சுல்லென்னுந் தாதுவின் தோற்றரவு கூறுமிடத்துச் சிறிது கூறுதும்.

௫௯. பிங்கல நிகண்டு, சூடாமணிநிகண்டு, உரிச்சொன்னிகண்டு, ஆசிரியநிகண்டு, கயாகரநிகண்டு, திவாகரம், மஞ்சிகன் ஐந்திணைச்சிறுநிகண்டு" போகர்நிகண்டு, சட்டமுனிநிகண்டு, தன்வந்தரி நிகண்டு, பஞ்சகாவியநிகண்டு, போகராதி, வைத்திய அகராதி, மலையகராதி, கன்னடநிகண்டு, ஆந்தரநாமசங்கிரகம், ஆந்தரதீபிகை, அமரமுதலிய வடமொழி நிகண்டுகள், சங்கச் செய்யுள், திருக்குறள், திருக்கோவையார், தேவாரம், ஆழ்வார்பிரபந்தம், சிந்தாமணி, சிலப்பதிகார முதலிய பல நூல்களையும்; உலக

வழக்கையும், வேடர், குறவர், முதலோர் பேசுஞ் சொற்களையும் ஆராய்ந்தமையால், ஒவ்வோர் சொற்குள்ள இயைபு முதலியன புலப்பட்டன. அவற்றுள் வைத்தியநூல்களை நன்கு ஆராய்ந்த பின்னரே மருதோன்றி, புலிதொடக்கி, புனுகுசட்டம், பொடுதலை, ஆடாதோடை, பங்கம்பாளை, கக்கரிக்காய், கத்தரிக்காய், சிறியாநங்கை, முதலிய சொற்களின் உண்மைக்காரணமும்; பரணி உரோகணி, விசாக முதலியவற்றின் காரணமும் புலனாயின.

௪0. உலகத்தில் அறியப்படுவனவெல்லாம் அறிந்தபின்னும், எல்லாத்தொழிலும் முற்றிய பின்னும், நாகரீகத்தை யெதிர்நோக்கி நுண்ணறிவுடையோராற் ஆக்கும் வழியறிந்து ஆக்கப்பட்டமொழி பழந்தமிழ்மொழி யென்பது தெள்ளிதாகின்றது. ஆயின் அதற்கு முன் நெடிது காலமாக ஏதோ ஓர் ஒலிக்குறிமொழி யிருத்தல் வேண்டும். அது நீலகிரியில் தொதவரென்னும் ஓர்வகைச் சாதியார் பேசுவதுபோன்று பின் அதனிற் சிறந்த மொழியாக இருக்கலாம். தொதவரென்னுஞ் சொற்குப் பால்கறப்பவரென்பது பொருள்.

அரசாட்சி, வர்த்தக முதலியன நடாத்துவதற்கும் சரித்திர முதலியன எழுதுவதற்கும் அம்மொழி துணைப்படாதிருந்தமை பற்றி அக்காலத்தறிவுடையோர் ஓர்மொழி யுண்டாக்கினரெனல் வேண்டும். மொழி=பாழை.

ஓர்மொழியுமில்லாத காலத்து அறியப்படுவன எல்லாம் அறிதலும், எல்லாத்தொழிலும் முற்றுப்பெறலும் கூடுமோ எனின் எறும்புகள் தொடுகுறியானும், ஒலிக்குறி முதலியவற்றானும் தமக்குள் அரசு, அமைச்சு முதலிய எல்லாப் பாகுபாடுகளும் குறைவற அமைத்து ஒழுங்குபெற நடாத்துகின்றமையின் மக்களாக வந்தவர்க்கு அது பெரிதன்றெனத்தெரிக. பறவை முதலியவற்றுக்கும் ஓர்பாழையுள்ளது. கைக்குறி, கட்குறி, ஒலிக்குறி யென்னும் மூவகைப்பாழையும் எக்காலத்தும் எவ்விடத்தும் உயிர்களிடத்துள்ளனவென்றே தெளிதல் வேண்டும்.

ஆயின் மக்கட்கு மனவறிவு மிக்கிருக்கின்றமையின் அதற்கேற்றவாறு அவர்தம் மூவகைப்பாழையும் திருத்தமுற்றிருக்கின்றன.

சக. சுகோளமும், சோதிடமும் முற்றுப்பெற்ற பின்னர் ஏற்பட்ட ஞாயிறு முதலிய எழுகிழமைகளின் முறைமையும், மாசங்களின் தேதி முறைமையும், ஐரோப்பா முதலிய தூரதேசங்களில் சிறிதும் குலையாமல் நடைபெற்று வருகின்றமையின், எல்லாத் தொழிலும் நாகரீகமும் முற்றுப்பெற்ற பின்னரே ஒன்றுபட்டிருந்த மக்கள், பல்வேறிடங்களிற் பிரிந்து அவ்வவ்விடங்களி னியல்புக்கேற்றபடி வேறுபட்டிருத்தல் வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை முதலியன, சூரியன் முதலிய எழுகோள்களுக்கும் முறையே யுரிமையுடைமையின் அப்பெயரிடலாயிற்று. இது சோதிடநூல்வழக்கு. இக்காரணம் என்னென்று இன்னும் மேனாட்டறிவுடையோர் ஆராய்ந்தாரில்லை.

சஉ. நன்னூற்காண்டிகையுரையேனும் நன்கு கற்றுணர்ந்தவர்க்கு இந்நூல் பயன் தருமேயல்லாது ஏனையோர்க்குப் பயன்தருவதரிது. முதன்முதல் இந்நூற்கண், தமிழ்ப் புலவர்க்கும் காலஞ்செல்லச்செல்ல வடமொழிப் புலவர் முதலோர்க்கும் கருத்திறங்குமென்பது திண்ணம். ஆயின் "தமிழுணர்ந்த ஐரோப்பிய புலவர்கள்" இந்நூலை யுடன் ஆராயாது விடுகிலர். இந்நூன் முற்றும் ஓர் முறையாவது நன்கு ஆராய்ந்தவர்க்கே இப்பாயிரவியலும் விளங்கற்பாலது.

இந்நூலுட் பெரும்பான்மையும் நிலம், நீர், முதலியனபோன்ற ஒரு மொழிக்கும் சிறுபான்மை ஐயானனம், ஆரகூட முதலியன போன்ற தொடர்மொழிக்கும் காரணங்கூறப்படும். இனிக் காலத்துக்கேற்றபடி புதுவதோர் சிறு சொற்களும் படைத்துக்கொள்ளலாம்.

மொழியாராய்ச்சியாற் பயனுண்டோவெனின் ஒவ்வோர் சொற்காரணமுமேயன்றிப் பண்டைக்காலத்துச் சரித்திர முதலியனவும் விளங்கலின் பெரிதும் பயனுண்டெனக.

நல்லாரென்பது பல பொருளுணர்த்தினும், சொற்காரணம் வெவ்வேறாகும்.

"நல்லாரைக் காண்பதுவுநன்றே"

நல்லார்=நற்குணமுடையார்; மகிழ்ச்சியை வளர்ப்போரென்பது.

நால்=வளர்ச்சி. நால்—நல்லார்.

"கொடுங்குழை—நல்லாரை நல்லவர் நாணுவப்பர்"

(நான்மணிக்கடிகை)

நல்லார்=மகளிர்; கருக்கொள்வோரென்பது.

நால்=முளை; முளையெனினும் கருவெனினும் ஒக்கும். கருப்பொருள், கருக்காய்.

"நலலாரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன் புல்லறிவு காட்டிவிடும்" (நாலடியார்)

நல்லார்= நுண்ணறிவுடையோர்.

நால்=நுண்மை. நால்—நல்லார்.

"நற்பொருணன்குணர்ந்து" (திருக்குறள்)

நற்பொருள்=உறுதிப்பொருள்.

நால்=வேர்; உறுதியாவது மரத்திற்கு ஆணிவேர்போலிருப்பது.

"நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வு படும்"

நல்கூர்ந்தார்=வறியர். சிறுமை மிகுந்தவரென்பது.

நால்=சிறுமை. நால்—நல்.

நல்கூர்தல்=சிறுமைமிகுதல்.

"நல்லிந்திரியமெலாநீத்து"

நல்லிந்திரியம்=சிறுமை பயக்கும் இந்திரியம் என்க.

நால்=வேர், முளை, வளர்ச்சி, கூர்மை, நுண்மை, சிறுமை.

முறைமையிற் பொருகோளென்னு மிலக்கணத்தால் நாலென்பது வேர் முதலிய பொருளுணர்த்தின.

நால்=முளை. நால்+து=நாறு=முளை.

நாறு—நாற்று—நாற்றங்கால்.

நாறு—நாறல்=முளைத்தல், தோன்றல்.

நாறு—நாற்றம்=வாசனை. மூக்குப்புலனுக்குத் தோன்றுவதென்பது.

"பொன்மலர் நாற்றமுடைத்து"

நால்=வளர்ச்சி. நாற்சி—ஞாற்சி

மரஞாற்சி=மரத்தது வளர்ச்சி.

நாலென்பது வேர் முதலிய பொருளை எங்ஙனமுணர்த்திற்றோ எனின் இலக்கணவியலில் விளக்கப்படும்.

இங்ஙனமே ஒவ்வோர்சொற்கும் முதனிலை கூர்ந்துணர்ந்து பொருள் கூறல்வேண்டும். இங்ஙனங் கூறுக்காற் பயனென்னை? இங்ஙனம் பொருள்கூற வல்லோனே சொல்லிலக்கணந் தெரிந்தவனாவன்.

"கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லாரகத்து"
"எழுத்தறியத்தீரும் இழிதகைமை தீர்ந்தான் [தின்
மொழித்திறத்தின் முட்டறுப்பானாகும்—மொழித்திறத்
முட்டறுத்த நல்லோன் முதுநூற்பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்"

நல்லோன்=நுண்ணறிஞன்.

சரு. கOசுசு-ல் ஆங்கிலநாட்டில், பிராஞ்சுபாஷையின் வியாபகத்தால் ஆங்கிலபாஷையொடுங்கித் தன்னிலை குலையுங்கால் அக்காலத்துள்ள ஆங்கிலபண்டிதர் தம்பாஷையிற் பற்றுள்ளம்வைத்து கஙஎஉ ம் வருஷமுதல் பண்டைய நிலைமைக்குக் கொடுவரமுயன்றனர். அதனாலன்றோ ஆங்கிலபாஷை யிக்காலத்து வியாபகப்படலாயிற்று. இவ்வியாபகத்தால் தமிழும் ஒடுங்கித் தன்னிலை குலைகின்றமையின் தமிழரும், தமிழ் கற்றோரும் அவர்போல் பற்றுள்ளம் வைத்து இச்சமயத்தில்தான் அதனை முன்னுக்குக் கொடுவரல் வேண்டும். இக்காலத்தில் அரசாட்சியார் மூலமாயும் தமிழை வளர்த்தல் கூடும். ஆங்கில அரசு நடுவுநிலையுள்ளது. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம். அழுதபிள்ளைதான் பால்குடிக்கும். தாயிழந்த குழந்தைகளையும் பெலங்குன்றினவர்களையும் நோயாளிகளையும் காப்பது

வே தலையாய அறமாவதுபோலப் பலவகையிலும் குன்றிய நிலையிலுள்ள தலைசிறந்த தமிழை இத்தருணத்திற் காப்பதுவே தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழையேபேசுந் தமிழ்ப்பெருஞ் செல்வர்களுக்குத் தலையாய அறமாகின்றது. தமிழர்க்குத் தங்கல்வியே கற்புடைப் பெண்டிராகலின், அப்பெண்டிர்க்கு ஓர் குறையும் நேராதபடி காப்பதுவே காதற்கணவனுக்கு உரிமைப்பாடாகின்றது

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப்புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமுமுண்டு சிலர்க்கு"

என்றபடி கல்வியேயொருவற்குக் கற்புடைப்பெண்டிரென்பது உண்மையே. நற்றாயெனினும் கணவனை விட்டுப்பிரிந்து தன்மகனிடத்திருத்தற்குடன்படாள். கற்புடைப் பெண்டிர்க்கு ஒரு சிறிதும் மானக்கேடு முதலியன நேராதபடி காதற்கணவனே காத்தற்குரியோன். அன்னோன் இறந்து பட்டுழி, அக்கற்புடைக்காதலியும் இறந்து பட்டு ஒருங்குசெல்லுந் துணிபுடையள். கற்புடைக்காதன் மகளிர் ஒருங்குசெல்லுதலில் தவறுபடினும் கல்வி ஒருங்குசெல்லுதலில் தவறுபடாது. செல்வத்திற்கு இத்தன்மைகளில்லன. ஆகலின் கல்விகற்புடைப் பெண்டிரென்றது பிரிநிலைப்பொருளும் தேற்றப்பொருளும் ஒருங்கிட்டுக் கல்வியே கற்புடைப் பெண்டிரென்றார்.

இச்செய்யுள் தம் கற்புடைப் பெண்டிரினும் தலைசிறந்த தமக்குரிய கல்விக்கு ஓர் சிறிதும் குறைநேராதபடி காத்தல்வேண்டுமென்பதை விளக்கற்பாலது. கடைச்சங்கத்தில் தமிழையே கற்புடைப் பெண்டிராக மணந்திருந்த சீத்தலைச்சாத்தனாரை யித்தருணத்திலே நான் பலமுறையும் நினைந்து நினைந்து தமிழின்கட் பற்றுள்ளம் குறைவறப் பெற்று மகிழ்ந்திருத்தல் வேண்டும்.

"சீந்தி நீர்க்கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—சாந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத்தற்கு"

எனத் திருவள்ளுவமாலையில் மருத்துவன் தாமோதானுர் கூறிய வெண்பாவால் அச்சரிதம் உண்மையெனக் கொள்ளப்படும்.

அச்சரிதமாவது

கடைச்சங்கத்திருந்த சீத்தலைச்சாத்தனுர், தமிழ்நூல்கள் தம் பார்வைக்கு வரும்போழ்தெல்லாம் அவற்றுள் குன்றக்கூறன் முதலிய குற்றங்கள் பொருந்தியும் சுருங்கச்சொல்லல் முதலிய அழகுகள் பொருந்தாமலும் இருப்பின், இனி யின்னநூல்களைச் செவியுறுவதினும் உயிர்துறப்பதே சாலவுநன்றெனத் துணிபுற்றுத் தம் கையிலுள்ள உபலத்தால் நெற்றியிலறைந்துகொண்டே வருவர்; அதனுல் நெற்றிப்புண் ஆறுமே சீழ்பெருகிக்கொண்டிருந்தமையின் அவர்க்குச் சீத்தலைச்சாத்தனுரெனப் பெயருண்டாயிற்றென்பது

உபலம் = திரண்டகல்.

சச. இத்துணையானே உலகத்தில் முதல்முதல் கைக்குறியும், ஒலிக்குறியும் இருந்தனவென்பதும், அவ்வொலிக்குறியினின்று இயற்கையாக உண்டாயது இசைக்கல்வியென்பதும் அவ்வியற்கையாய இசைக்கல்வியினின்றுண்டாய இயற்கைமொழி தமிழ்மொழியென்பதும் பஞ்சத்திராவிட முதலியனவும் தமிழின் வழிமொழிகளென்பதும் எகித்து பாரசீகம் எபிரேயம் அரபி கிரீக்கு இலத்தீன் முதலிய பாஷைகள் தமிழர் நாகரீகத்தை யெடுத்துக் கூறுகின்றமையானும் பல்வகைச் சிறந்த காரணங்களாலும் அத்தமிழ் ஆரியத்துக்கு முன்னேயே யுள்ளதென்பதும் பெறப்பட்டமை காண்க.

சரு. இயற்கை நிலப்பிரிவும், இயற்கைக்காலப்பிரிவும், நாவிற்கெளிதாய இயற்கையொலிவடிவெழுத்தும், கைக்கு எளிதாய இயற்கைவரிவடிவெழுத்தும், இயற்கைச் சொற்களும், இயற்கைப் புணர்ச்சியும் அன்றி வேறு செயற்கையில்லாத காலம்வரையும் இருந்த தமிழ் பழந்தமிழெனப்படும்.

சசு. மொழிமுதலெழுத்தையும், மயக்கத்தையும், சந்தி யெழுத்துகளையும், அய்இ அவ்உ முதலிய வாய்பாடுகளையும், குற்றிய லுகர குற்றியலிகரங்களையும், சொற்களின் தோற்றத்தையும், நடு

லையில்நின்று நன்கு ஆராய்ந்தவர்க்கே தமிழ் இயற்கைமொழியென்பதும் அது ஆரியத்துக்கு முற்பட்டதென்பதும் விளங்கி நிற்கும்.

௭௧. கடலொலி, காற்றொலி, தீயொலி, வண்டொலி, பறவையொலி, விலங்கொலி யென்பவையே உலகத்துச் செவிப்புலனாகும் இயற்கையொலிகளாம்.

எழுத்தோசை பறவை விலங்குகளினொலிகளாலும், பொருளோசை காற்றொலி தீயொலிகளாலும், வேதம் கடலொலியாலும், ஆலாபனம் வண்டொலியாலும், சரிகமபதநி யென்னுஞ்சத்த சுரங்களும் பறவை விலங்கொலிகளாலும் உண்டாயின. இவ்வொலிகள் பல், இதழ், நா முதலியவற்றால் வேறுபடும். வேறுபட்டனவெல்லாம் இயற்கையொலியேயாம். ஆரியத்துள் ஒவ்வோர் வர்க்கத்தில் முதலிலுள்ள எழுத்து இயற்கையொலியும், மூன்றாவதெழுத்து செயற்கையொலியும், இரண்டாவதும் நான்காவதுமாகிய எழுத்துகள் செயற்கையுட் செயற்கையொலியும் பெற்றுள்ளனவாம்.

இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள், இயற்கைவடிவம் செயற்கைவடிவம், இயற்கையறிவு செயற்கையறிவு, இயற்கையுடம்பு செயற்கையுடம்பு, இயற்கைவலி செயற்கைவலி, இயற்கையுடை செயற்கையுடை, இயற்கைநிறம் செயற்கைநிறம், இயற்கைமணம் செயற்கைமணம், இயற்கைவாசனை செயற்கைவாசனை, இயற்கைப்பொன் செயற்கைப்பொன், இயற்கையூண் செயற்கையூண், முதலியவற்றுள் இயற்கைப்பொருள் இயற்கைவடிவ முதலியவற்றினின்றே செயற்கைப்பொருள் செயற்கைவடிவ முதலியன உண்டாவதுபோல இயற்கையொலியினின்றே செயற்கையொலிகளுண்டாயின என்பது திண்ணம். இது நினைவுகூட்டலென்னுமுத்தி. பழந்தமிழ், இயற்கையொலியொன்றேயுடையது; செந்தமிழ், அவ்வியற்கையொலியோடு செயற்கையொலியுடையது; ஆரியம், அவ்விரண்டனோடு செயற்கையுட் செயற்கையொலியும் உடையது.

௭௨. ஓத்தென்பது வேதம்; ஓதப்படுவதென்பது பொருள். ஓதம் ஓதலாயிற்று; ஓதம்=கடல்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

ஓதமெனா ஓவெனா ஓதுவது ஓத்தெனப்படும் என்க. தோற்றஞ்சால் ஞாயிறு எழுங்கால், அகன்ற கருங்கடற்கரைக்கண் நிற்பின் தெய்வபத்தியுண்டாவதியல்பாகலின் முதன்மக்கள் அக்கடல்போலவே ஓவென்று இரைந்து தெய்வவழிபாடு கொண்டனரென்க. சூரிய மூர்த்தியையும் அங்ஙனம் வழிபட்டனரென்க.

"தரங்கமுரல்வேதக்குரகத புராரி"

(திருப்புகழ் ௧௦௬௫.)

என்பதனால் வேதத்தை ஓதமெனா ஓவெனா ஓதல்வேண்டுமென்பது தெளிந்துகொள்க.

௬௪. F என்னும் உச்சரிப்பு, தமிழிலின்மையானும் ஒரோவழி தமிழிற்கு வேண்டியிருத்தலானும் பகரத்தின்கீழ் இரண்டு புள்ளிவைத்து அவ்வுச்சரிப்புக்கொள்ளப்படும் இஃது கன்னடவழக்குமாம்.

உ-ம். ப. ஆப்ரிகாதேசம்.

கிராண்டப் துரையவர்கள்!

புள்ளடி, முற்றுப்புள்ளி முதலியனவும் கவனித்தல்வேண்டும். புள்ளடி = காகபாதம். தமிழில் ஆரியஎழுத்துகளைக் கலந்து எழுதற்க. அங்ஙனம் எழுதின் தமிழின் இயற்கைச்சந்தம் குன்றும்.

(௫௦)

## தமிழ்

தமிழென்பது இனிமை; அது இனிமைமிக்க பாஷைக்காயிற்று. பண்பாகுபெயர்.

தமில் தமிள் தமிழாயிற்று.

"தமிழ்தழீஇய சாயலவர்" என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் இனிமை தழுவிய சாயலவரென்றலின் தமிழென்னுஞ் சொல்லுக்கு இனிமையென்னும் பொருளுண்மை பெற்றும். கண்டு இனிமையாவது யாழிசைக்கொப்ப இயற்கையோசையுடைமை.

தமிழில் வல்லோசையும், மெல்லோசையும், இடைப்பட்டவோசையும் சிறந்திருத்தலின் அம்மூவினத்தால் தமிழாயிற்றென்க.

11

த—வல்லினம்.

மி—மெல்லினம்.

ழ்—இடையினம்.

முதல் வல்லினமும் பின் மெல்லினமும் அதன்பின் இடையினமும் உண்டானமையின், அம்முறைமையும் அமையத் தமிழாயிற்றென்க

தமிழில் பெரும்பான்மை இயற்கைச்சொற்களும், சிறுபான்மை செயற்கைச்சொற்களும் உண்மையின் அவ்விலக்கணமும் அமையத் தமிழாயிற்றென்க,

த, மி இயற்கையெழுத்து உ.

ழ். செயற்கையெழுத்து க.

தமிழில் ஓரசைச்சொற்கள் மிகுதிப்பட்டிருத்தலின், ஓரசையால் தமிழாயிற்றென்க.

இயற்கையோசை, செயற்கையோசை, செயற்கையிற் செயற்கையோசை யென்பவற்றுள், தமிழ்ச்சொற்கள் இயற்கையோசையுடைமையின், இயற்கையோசையால் தமிழாயிற்றென்க.

பாகதர் செயற்கையோசையால் தமிளோ என்பர்.

வல்லினமும் மெல்லினமும் சேர்தலாலாய செயற்கையோசையும் தமிழின்கண் உண்மையின் வன்மைமென்மையால் தமிழாயிற்றென்க.

பக்கம். ஈண்டுக்ககரம் இயற்கையோசை.

பங்கம். ஈண்டுக்ககரம் செயற்கையோசை.

ஆண்பால் பெண்பாலென்னும் இரண்டனுள் தமிழ் ஆண்பால் மொழியாக நிற்றலின், ஆண்பாலெழுத்தாகிய குற்றெழுத்தால் தமிழாயிற்றென்க.

தமிழ், அமிழ்தம்போல மொழிக்குமொழி தித்திப்பாக அமைந்திருத்தலின் அமுத எழுத்துகளால் தமிழாயிற்றென்க.

தமிழ், தெய்வமொழியாக விளங்கி நிற்றலின் தெய்வகதிக்குரிய எழுத்து முதலில்வரத் தமிழாயிற்றென்க.

தமிழ்கற்கும் மக்கள், தெய்வத்தன்மை அடைதலின் தெய்வ கதிக்குரிய தகரத்தோடு மக்கட்கதிக்குரிய மகரமும் பொருந்தத் தமிழாயிற்றென்க

தமிழில் தகரவித்தை சிறந்திருத்தலின், தகரவித்தையென் பதன் முதலெழுத்தமையத் தமிழாயிற்றென்க.

தமிழ் சூரியனாலுண்டானமையாலும், தமிழெழுத்து வட்ட வடிவாக இருந்தமையாலும், தமிழ் மற்றைய பாஷைகளுக்கெல் லாம் நடுவினின்று இயற்கைத்தலைமை பெற்றமையாலும், வட்ட வடிவாய சூரியனாற் படைக்கப்பட்ட மகரம் நடுவில் நிற்பத்தமிழா யிற்றென்க.

அங்காத்தலெளிதாகலின், அங்காத்தலாலாய அகரம் முதலில் வரத் தமிழாயிற்றென்க. தமிழ், சோதிபோலவும், சோதிமின்னல் போலவும், சொதிமுத்துப்போலவும், விளங்கலின் சோதிநாளுக் குரிய தகரம் முதலில்வரத் தமிழாயிற்றென்க.

சோதி, நீர்நாளாய் வாயுவை அதிதேவதையாகவுடைய நாளா யிருத்தலின், தமிழ் கற்போர் நீர்வளம் காற்றுவள மிகுந்தவளாகத் தேவசித்துக் கற்றுணர்ந்து ஆசனமஞ்செய்தல் வேண்டுமென்பது.

தமிழென்பது மூன்றெழுத்தால் விளங்கலின்

க. உலக மூன்று
உ. சுடர் மூன்று
௩. நிறம் மூன்று
௪. தொழில் மூன்று
௫. தமிழ் மூன்று
௬. நூல் மூன்று
௭. போதப்பிரகாரம் மூன்று
௮ பாக மூன்று
௯. கால மூன்று
௧௦. குண மூன்று
௧௧. சத்தி மூன்று
௧௨. கடிக மூன்று
௧௩. பலை மூன்று

முதலியன எல்லாம் கொள்க.

பிறவும் தமிழ்ச்சொல் விளக்கத்துட்காண்க.

தமிழ்ப்பாஷை சூரியனாலாகிய ஓர் வியாபக இயற்கைத்தாதுவி னின்றே ஒன்றிலிருந்தொன்று அநுகூத சம்பந்தம்பெற்று உண் டானமையின் சூரியனையுணர்த்துந் தாமமென்பது தமில்—தமிழ்

தமிழெனத் திரிந்ததெனலே உண்மைகூறலென்னும் உத்தியாம். தாமம்=ஒளி. இங்குச்சூரியன்மேல் நின்றது.

மூங்கில் ஒன்றோடொன்று உரைந்து எரியுங்கால் மழைபெய்யின் சு என்னும் ஓசை இயல்பாக உண்டாகின்றமையின் இயற்கையோசையாயிற்று. ஆகாயமொழிந்த மற்றைய பூதங்களுக்கு முன்னேயே சூரியன் படைக்கப்பட்டமையானும், அச்சூரியனிடத்தே வட்டமுதலிய பொருட்டன்மை நிறைந்திருக்கின்றமையானும், ஐம்பெரும்பூதங்களுள் ஒன்றாயதேயுவிற்குச் சூரியன் அணுக்க இயைபுடைமையானும், தேயு அப்பூதங்களுள் நடுப்பட்டமைபோலக் கோள்களுள் சூரியன் நடுப்பட்டமையானும், அதுவே பொருளோசையுமாயிற்று. சு என்பது லகரமெய்பெற்றுச் சுல்லென்றாயிற்று. யகரமெய்பெற்றுச் சுய்யென்றாயிற்று. இச்சிறந்த காரணங்களால் **சுல்**லென்னும் இயற்கைப் பொருளோசை சூரியனிடத்தினின்றே உண்டாயதென்பது திண்ணம். இதனை இலக்கண இயலுள் இயற்கைப்பொருளோசை கூறுமிடத்து ஞாபகப்படுத்திக்கொள்க.

பாழையென்பது மொழி. போகர் பரிபாழையென்பர். இது பல் என்னும் தாதுவினுண்டாயது. பல்=இசை. குழலிசைபோலினிதாவது. மணிமலையில் தோன்றியதென்பதுமாம். பல்=முளை, தோற்றம்.

தமிழர்கள் பெரிதும் பற்றுவைத்துத் தமிழ்நூலைக் கற்றல் வேண்டும் ஏனையோரும் அதனையிகழாது கற்றல் நன்றே. புகழ்நிமித்தமாகவும் பொருள்நிமித்தமாகவும் தமிழ்நூல் கற்றல்கூடாது. பதிபசுபாச இலக்கணங்களை அறிதற்பொருட்டே கற்றல்வேண்டும். தமிழ்கற்றோர், கற்கின்றோர், கற்போர் இவர்கள்பால் அன்புடையராகுக. வறியனாயினும் தமிழ்கற்க; கற்பிக்க. செல்வனாயினும் கற்க; கற்பிக்க. தமிழ் முன்னே நீ கற்க; பின் மகனுக்குக் கற்பிக்க; அதன்பின் உரைகொளாளன் முதலோர்க்குங் கற்பிக்க. தமிழ்கற்க விரும்புவோன் பகைவனாயினும் பகை தணித்துக்கொண்டு கற்பித்தல் வேண்டும். எவ்வெவ்விடங்களில் கூடுமோ அவ்வவ்விடங்களிலெல்லாம் கற்பித்தல்வேண்டும், எவ்வளவு கூடுமோ அவ்வளவுகற்க; கற்

பிக்க. கேட்க; கேட்பிக்க. ஆங்கில சங்கமொழிந்த மற்றைய சங்கங்களிலெல்லாம் தமிழே பேசுக; ஆங்கிலம் பேசற்க. இடைஇடையே ஆங்கிலங்கலந்தும் பேசற்க. ஆங்கிலப்பெரியோர்க்கு உண்மையெடுத்தினிது கூறி நாட்டிற்கு நன்மை செய்யும்பொருட்டு ஆங்கிலங் கற்றல்வேண்டும். புகழ்நிமித்தமாகவும் பொருள் நிமித்தமாகவும் ஆங்கிலங்கற்றல் அவ்வளவு சிறப்பாகாது. முன்னே தமிழும், பின் ஆரியமும், அதன்பின் ஆங்கில முதலியனவும் கற்க; கற்பிக்க.

அரசனாகவினும், அமைச்சனாகவினும், மடபதியாகவினும், தக்க இடங்களில் தமிழ்க்கல்லூரி நாட்டி நடாத்துக. இச்சூழ்ச்சியைச் சிறிதுமறவற்க.

மக்களில்லையென்று கவலையின் மூழ்கிக் கண்ணீர்விடற்க. அப்பொருளை ஓர் முதலாகவைத்து, ஓர் தமிழ்க்கழகம் நிலைநாட்டி நடாத்திவரின் அம்மாணவரெல்லாம் நினக்கு வழிவழி நன்மக்களாவர். ஸ்ரீமான் பச்சையப்பமுதலியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலோர் இத்தகையோராவர். இச்சூழ்ச்சியைச் சிறிதுமறவற்க.

தமிழ்ப்புலவர்க்கு இயன்றவரை பொருளுதவிசெய்க; செய்யாதிருக்கற்க. கலியாணமுதலியவற்றில் தமிழ்ப் புலவர்க்கு மரியாதைசெய்க.

எப்பொழுதும் தமிழையே தெய்வம்போலவும், நற்றாய்போலவும் சிந்திக்க; நீ தமிழ்மயமாவை. நின்மக்களும் தமிழ்மயமாவர். நின்குடியும் தமிழ்மயமாகும். ஊரும் தமிழ்மயமாம்.

"உள்ளுவதெல்லா முயர்வுள்ளல்"

இச்சூழ்ச்சியைச் சிறிதுமறவற்க.

நின்கை தமிழ்நூல் எழுதுக. நின்வாய் தமிழையே பேசுக. நின்மனம் தமிழையே சிந்திக்க நோய்கொண்டு மெலியனாயின் மருந்துண்டு வலியனாகித் தமிழ்கற்க.

நீர்க்குமிழிக்குப்பொற்பூண்கட்டமுயல்வதுபோலயாக்கைப் பயனென்றே கருதி அலையற்க.

சிலகணமேனும் தமிழ்நூல் கற்க.

**சிலகணமேனும் கடவுளைப்போற்றுக.**

"தவத்துக்கொருவர் தமிழுக்கிருவர்"
இச்சூழ்ச்சியைச் சிறிதுமறவற்க.

திருமுறைக்கூடம் நாட்டித் தமிழ்நூலையும் பிறநூல்களையும் போற்றுக. மற்றைய பாழைகளையும் இகழற்க.

"நகையீகையின்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக்குடிக்கு" ——— (திருக்குறள்)

## கவனிப்பு.

இம்மொழிநூலில் இலக்கணவியலுள் எழுத்தோசை பொருளோசைகளையும், சந்தியெழுத்தையும், சந்தியெழுத்தின்படியேயுண்டான பதசந்திகளையும், மொழிமுதல் வருமெழுத்து வாராவெழுத்துகளையும், வகரமுதன்மொழி முதலியவற்றையும், பிறப்பிடத்தால் இயல்பாக ஒத்துள்ள உடனிலைமெய்ம்மயக்க முதலியவற்றையும், முதனிலைப்பேறு ஒற்றினீக்கம் நிலைமாற்றம் இனந்தழுவல் முதலியவற்றையும், நெருப்பின் பெயர் முதலியவற்றையும், உலகவியற்கையும் பிறவும் நன்கு ஆழ்ந்து நுணு ஒருகி ஆராய்ந்துணரின் தமிழ், உலகில் முதல்முதலுண்டான இயற்கைமுதன் மொழியென்பது விளங்குதலாகும்.

ஆரியத்துக்குமுன் தமிழ் இருந்ததென்பது கடுக்கனுக்குமுன் பொன் இருந்ததென்பது போலக்கொள்ளல்வேண்டும். இனிப்பாளியும், பஞ்சத்திராவிடமும் தமிழின் வழிமொழிகளாம். கிரந்தம், இவ்வெல்லாவற்றினின்று முண்டான சார்புமொழியாகும். கிரந்தத்துக்குப் பிறகு ஆரியமென்னும்பெயருண்டாயது. ஆரியத்தின் திருத்தம் சமஸ்கிருதம்.

மொழிமுதலில் வாராத லகர ரகரமுதலிய செயற்கையெழுத்துகள், முதல் தெலுங்கில்தான் வரலாயின. அகரவிதியீறுமலையாளத்திலுண்டாயது. ஃ, ஃப என்னும் செயற்கையிற் செயற்கையுச்சரிப்பு, கன்னட முதலியவற்றிலுண்டாயின. ஜ ஷ ஸ என்னும் உச்சரிப்பு, சகரத்தின் செயற்கை யுச்சரிப்பாம். ஹ என்னும் உச்சரிப்பு கன்னடத்திலுண்டாயது.

| | |
|---|---|
| க. பானு—ஹானு. | சு. பேனு—ஹேனு |
| உ. பல்லு—ஹல்லு. | எ. பொட்ட—ஹொட்ட=வயிறு |
| ங. புல்லு—ஹுல்லு. | அ. பந்தி—ஹந்தி. |
| ச. பத்து—ஹத்து. | கூ. பவ—ஹவ=காற்று. |
| ரு. பள்ளி—ஹள்ளி | க0. பொன்னு—ஹொன்னு. |

இங்ஙனம் கன்னடர் பகரத்தை ஹகாரமாக உச்சரிப்பதியற்கையாகலின் அவ்வழக்கினின்று ஹகாரம் உண்டாயது. கிரந்தத்தில் வரிவடிவிலும் ஹகாரம் பகரத்தை ஒத்திருத்தலின் பகரத்தினின்றே ஹகாரமுண்டாயதென்பது துணிபு. உ-ம். ப—ஹ.

தெலுங்கிலும் அது ஒத்திருத்தல் காண்க.

உ-ம். ———— ప—హ.

வேறுபாடுதோன்ற வரிவடிவில் சிறிது திரித்துக்கொண்டனர். பகரத்துக்கும் ககரத்துக்கும் இயைபுண்மையின் ககரமும் ஹகாரமாயது. பிறகு அகரமுதலியவற்றுக்கும் அவ்வுச்சரிப்புண்டாயது. ஹகாரவுச்சரிப்பு முதல் கன்னடத்திலும், பிறகு ஆரியத்திலும், அதன்பிறகு தெலுங்கிலுமுண்டாயிற்று. தெலுங்கில் வரிவடிவுண்டாய பிறகுதான் கன்னடத்தில் வரிவடிவுண்டாயது.

காட்சி மாட்சி முதலிய தமிழ்ச்சொற்களில் ட்ச என்னும் உச்சரிப்பிருத்தலின் தமிழிலிருந்துதான் க்ஷகாரமுண்டாயது. தமிழிலும் அவ்வுச்சரிப்பு, பிற்காலத்துண்டானமையின் ஆரியத்திலும் எல்லாவுச்சரிப்புகளும் உண்டான பிறகே க்ஷகாரவுச்சரிப்புண்டாயிருத்தல் வேண்டும் ஆரியத்தில் எழுத்துமுறைமையில் க்ஷகாரம், ஈற்றிலிருப்பதே அதற்குச் சான்றாகின்றது.

"பச்சமுடைய அடிகள் திருப்பாதம் பணிவாரே"

(திருநின்றியூர்-ச-தே)

"பச்சமும் வலியும் கருதிய அரக்கன்" (திரு அச்சிறுபாக்கம் ச-தே) பக்கம்—பச்சம்—பட்சம், ககரம் சகரமாகும். பகு—பக்கம். வலம் இடமென்னும் இருபிரிவுடையது. பட்சமென்பது பாகதங்களில் பக்ஷமெனவேறு பட்டது. பட்சம்—பக்ஷம்; டக

ரம் ஷகாரமாகவும், சகரம் கக்ரமாகவும் திரிந்து நிலைமாறியது. டகரத்தில் தகரமுண்மையின் ஷகாரமாயிற்று. பக்ஷமென்பதில் க்ஷ என்னும் எழுத்திருத்தலின், அவ்விரண்டெழுத்துகளால் க்ஷ என்னும் எழுத்துண்டாயது. தெலுங்கிலுள்ள క్షகாரத்திலும் కகாரமும் அதன்கீழே ష காரமும் இருத்தல்காண்க, ட்ச என்னும் உச்சரிப்பே நாவிற்கெளிது. த—ச—ஷ. இங்ஙனம் எழுத்துகள் திரிதல் நாவினியற்கையாகும்.

இயற்கைச்சொற்கள் செயற்கைச்சொற்களாக வேறுபட்ட பின்னர் ஜ ஷ ஹ முதலிய எழுத்துகளுண்டாயின.

தமிழ்ப்பாஷைக்குமாத்திரம் நாவினியற்கையின்படியே இலக்கணமுண்டாயது. மற்றைய பாஷைகளுக்கு அவ்வப்பாஷைகளின் அமைதிக்கேற்றபடி இலக்கண முண்டாயது. வரிவடிவில்லாத பாஷைகளில் விடயங்களும் நூல்களும் குறைவே. எல்லாச்சொற்களுக்கும் எளிதாகக்காரணம் கூறுதற்கு அமைதியுடைய பாஷையே முதற்பாஷையாம். ஆரியத்துக்கு முன்னிருந்த கிரந்தம், பெரும்பான்மையும் தமிழை ஒத்திருந்தலின் அதனை வடதமிழ் என்றனர்.

யாழ்ப்பாணத்துப் பேரகராதியில் வடதமிழ்=கிரந்தம். என்றிருத்தலினால் தெளிக.

பாயிரவியல் முற்றுப்பெற்றது.

## மேற்கோள் குறிப்பு விளக்கம்.

அப்பர் தேவாரம். அ—தே.
சம்பந்தர் தேவாரம். ச—தே.
சுந்தரர் தேவாரம். சு—தே.
சிலப்பதிகாரம். சி—அ.
சிந்தாமணி. சி—ம.
மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு. ம—நிகண்டு.
ஆசிரியநிகண்டு. ஆ—நிகண்டு.
கம்பராமாயணம். க—ரா.
மலையகராதி. மலை—அ.தி.
பொருநராற்றுப்படை. பொரு—படை.
வைத்திய வெண்பா. வை—வெ.
திருப்புகழ். தி—ழ்
பிரமபுராணம். பிரம—பு.
நன்னூல். ந—ல்.
தாயுமானவர் பாடல். தாயு—ல்.
ஐங்குறுநூறு. ஐ—று.
புறநானூறு. பு—நா.
தொல்காப்பியம். தொல்—ம்
ஆந்தர தீபிகை. ஆ—தீ.
போகர் நிகண்டு. போ—நி.
சோழவமிச சரித்திரம். சோ—வ-ச.
பெரிய திருமொழி. பெ—ழி
பத்துப்பாட்டு ப—டு.
கலிங்கத்துப்பரணி. க—பரணி.
ஆந்தரநாம சங்கிரகம். ஆ—கம்.
புறப்பொருள் வெண்பாமாலை. பு—வெண்பாமாலை
குறிஞ்சிப்பாட்டு. கு—பாட்டு.

# மொழிநூல்

## இலக்கணவியல்.

### நாமகள்வணக்கம்

க. கண்ணு ளுயிர்த்துணையாள் கண்ணுடையார் நாவன்றி
நண்ணாள் பெருந்தூயாள் நாமகள்வெண் டாமரையாள்
மண்ணு ளரசர் மருங்கிருந்துந் தீமைசெய
வொண்ணுளெம் முள்ளத் துவப்பு.

### ஆசிரியர் வணக்கம்

உ. பேறை புலோலி பெருகு வடகோவை
தேறிய சான்றோரைச் சிந்தித்து—வீறிய
ஞானம் பெறுக நலம்பெறுக கல்வியபி
மானம் பெறுக மகிழ்ந்து.

### காலம்

ங. பொய்யாத சத்தப் புதுநா ளிகழ்கலியாண்
டையா யிரத்தைந்தி லாயிற்றால்—ஐயாமே
கற்றுணர்ந்தா ருள்ளத்துக் காலூன்றியென்ஞான்றும்
வெற்றி பெறுக மிளிர்ந்து

ச. உலகுறு பொருளெலாம் வட்ட மாகவும்
உலங்கொளும் வடிவ மாகவு மொளிர்வன
உட்டுளை களுமுத லுடையன வாகவும்
தொட்டொளிர் கின்றன சூழ்வுறிற் சில்பொருள்
உப்பொருட்கெலாம் பெயரிடல் வேண்டின்
வட்டந் திரட்சி யுட்டுளை கணுமுதல்
உடையன வாய வியற்கைப் பொருளினின்
றுண்டா யினதோ ருரையும் வேண்டும்
அவ்வுரை யானே பெயரிட லொன்றே
எளிதா வினிதா விருக்கு மென்ப
எழுத்தின் தொடர்பா லியைதலி னுவ்வுரை
எழுத்து களெல்லா மியற்கை யோசையினின்
றெழுபாக் காயி னெளிதா கும்மே.

க "மக்கடாமே யாறறிவுயிரே
பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே"

என்னுந் தொல்காப்பிய சூத்திரப்படி ஆறறிவினையுடைய மக்கட் பிறப்புடையார்க்கு இன்றி யமையாததாகிய மொழியை முதன் முதலாக்குங்கால், அவர்தம் நாவிற்கு வருத்தமின்றி யெளிதா இருப்ப மொழிக்கு முதற்காரணமாகிய உலகத்தியற்கை யோசையையும், பொருட்டன்மைக்கு முதற்காரணமாகிய இயற்கைவடிவினையும், ஆய்ந்து, அவ்வியற்கை யோசையின்படியே யெழுத்துகளும் அவ்வெழுத்துகள் செல்லுமியற்கையின் படியே சொற்களும் அமைத்தல் வேண்டும். அங்ஙன மமைக்கப்பட்ட சொற்கள் சிறியனவாய், பெரும்பான்மையும் தன்மைக்காரண முடையனவாய், நடைபெறற் பாலன. அளவைகளுட் காண்டலும், அணிகளுட்டன்மையும் சிறந்தன வாகலின், அவ்வநூற்கண் அவற்றை முதற்கட் கூறுவர். காண்டலெனினும், பிரத்தியட்சமெனினும், தன்மையெனினும் சுபாவமெனினு மொக்கும்.

## உ செவிப்புலனுமியற்கையோசை மூன்று கட்புலனு மியற்கைவடிவம் ஒன்று.

அவ்வியற்கை வடிவமாவது வட்டம். இவ்வட்டமே திரட்சியுமாம். வட்டு திரட்சியென்பதனானும் தெளிக. வட்டமும் திரட்சியும் பேதமோ அபேதமோ எனின் பேதாபேத மென்க.


"பந்தமு மாழையும் வட்டும் பிண்டமும்
வழியுஞ் சேடுஞ் சேர்வுந் திரளே" (பிங்கலந்தை)

ஆகாயமும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், கடலும், நிலமும், மலையும், கற்களும், மரங்களும், யாக்கையும், வட்டமும் திரட்சியு மாகலானும் ஓர் நீர் நிலைக்கண் முக்கோணமுடைய

கல்லையேனும், நாற்கோணமுடைய கல்லையேனும், எறியின் அவ்வடிவமின்றி வட்டவடிவம் தோன்றலானும், உலர்ந்தவெள்ளியதுகிலின்கண் விழுந்த மழைத்துளியும் நீரின்கண் விட்ட எண்ணெய்த்துளியும் வட்டமாகப் பரவுகின்றமையானும், ஓர் சக்கரத்தில் நேர்க்கோடேனும் முக்கோணமேனும் நாற்கோணமேனும் வரைந்து விரைவுபடச் சுற்றின், அவை வட்டமாகவே புலப்படுகின்றமையானும், அதுவே இயற்கைவடிவாம். நேர்க்கோடு முதலியன மறைதலின் அவை செயற்கை வடிவாம். பலநார்வத நீளமுள்ள நூல்முதலியவற்றைத்திரட்டினும் மிகநெடிய பிரம்பு முதலியவற்றை வட்டிக்கினும் சுருங்கிவிடும்.

திரட்டல்=பந்துபோற் சுற்றுதல்
வட்டித்தல்=வளைத்தல்


மலர்களும், கனிகளும், வித்துகளும், கருவமைதியும், வட்டமும் திரட்சியுமாம். காற்றுவட்டித்தே வீசும். நீரின்கட்குமிழியும், நிலத்தின்கட் புற்றும், திரண்டுதோன்றும். பொன்முதலியவற்றை வேறுவடிவமாக வைத்துருக்கினும் வட்டித்தேயுருகும், திகிரியின்கட் குடமுதலியன வட்டித்தே தோன்றும், கடிகாரவூசியும் வட்டித்தே நடைபெறும். பெரியதேர் முதலியவற்றைத் திருப்பவேண்டின் வட்டித்தே திருப்பல்வேண்டும். கருடன்முதலிய பறவைகளும் வட்டமிட்டேயிறங்கும், பாம்பு நாய் பூனை மான்முதலியன வட்டித்தே கண்டுஞ்சும்.



இவ்வடிவம் வட்டமும் திரட்சியுமாதல் காண்க. இதுவேவளைவாம். இவ்வளைவே சாய்வும் கோணமும் மூலையுமாம். திரட்சியினின்று கூட்டமும், சூழ்தலும், குவிதலும், நெருக்கமும், உண்டாம், மணல் முதலியவற்றைத் திரட்டின் குவிந்துதோன்றும். மக்கள் திரண்டாரெனின் கூடினர், குவிந்தார், நெருங்கினர் என்பதுபொருள். அக்குவிதலே ஒடுங்குதலும், சுருங்குதலுமாம்.

குவிதலென்னும்சொல் திரளல், கூடல், சேரல், நெருங்கல், ஒடுங்கல், என்னும்பொருளை யுணர்த்தலின் அவ்வுண்மை தெளிக.

வணங்கல், திரும்பல், குனிதல் முதலியனவும் வளைதலில் அடங்கும். வணங்கினானெனின் தலைகுனிந்தானெனவும், திரும்பினானெனின் வளைந்தானெனவும் பொருள்படும். கவிழ்தல் திரும்பலி லடங்கும். குடம் கவிழ்ந்ததெனின் திரும்பியதென்பதுபொருள், வளைவுமறைத்தலையும் செய்யும்.




இதில் அ என்பவன் இ என்பவனைக் காணாதபடி வளைவு, மறைத்தல் காண்க.

வளைதல் குவிதல் முதலியவற்றுக்கெல்லாம் இயற்கையாகிய வட்டவடிவம் காரணமாக இருக்கின்றமையின், அவ்வளைதல், குவிதல் முதலியவற்றை யுணர்த்தும் சொற்களுக்கும், அவ்வட்டவடிவென்னும் பொருள்தரும் ஓரியற்கைச் சொல் காரணமாக இருத்தல்வேண்டும். அன்றியும் பிரிதல் கூடுதல் முதலியனவும் இயற்கையவாகலின், அவற்றை யுணர்த்தற்கு மூங்கில் ஓர் காட்டாகற்பாலது.

காட்டு = உதாரணம்.

பொன்மை முதலிய ஐவகை நிறமும், தண்மை வெம்மை வாசனை முதலியனவும், இயற்கைப் பண்பாகலின்; நில நீர்முதலியவற்றினுள்ள இயற்கைப்பொருள்களும், செயற்கைப்பொருள்களும் இப்பண்பினும் அவ்வட்டவடிவினும் பெரும்பான்மையு மடங்கும், இவற்றின் விரிவெல்லாம் பின்னர் விளக்கப்படும்.

## ௯ இனி செவிப்புலனு மியற்கையோசை மூன்று என்பதனை விளக்குவாம்.

எழுத்தோசை, இசையோசை, பொருளோசை என அவ்வி யற்கையோசை மூன்றுவகைப்படும். எழுத்தோசையினின்றெழுத் துகளும், அவ்வெழுத்துகளி னியைபாலும் ஞாபகசத்தியாலும் பொருளோசையினின்று சொற்களும், பிறக்கும்.

இசையோசையாவது கடலோசை, யாழோசை, முழவோசை முதலியன. அங்காப்புமுதலிய அகமுயற்சியாற் புலப்படுவது எழுத்தோசையெனவும், அதனைப் புலப்படுப்பதாய் எடுத்தல் படு த்தல் முதலிய புறமுயற்சியாற்பிறப்பது இசையோசையெனவும், தம்முள் வேறுபாடு தெரிந்துகொள்க.

எழுத்தோசைக்கு விந்து, முதற்காரணம். இசையோசைக்கு ஆகாயம், முதற்காரணம். பொருளோசைக்குச் சூரியன் முதற்கார ணம். விந்து = சுத்தமாயை. காரகசத்திமுதலியனவும் சிவஞானபாடி யத்திற்கண்டுகொள்க.

௨ ஞாபக சத்தியாவது.

"கால் என்புழிக் ககரவாகார லகரவெழுத்துகளையன்றி அவற் றின் வேறாய்ப்பதமென்பது ஒன்று இன்மையானும் அவ்வாறே கால் கிடந்தது என்புழி அப்பதங்களின் வேறாய் வாக்கியமொன்றின் மையானும் எழுத்தின்வேறாய்ப் பதவாக்கியங்கள் பொருளுணர்த்து வன அல்லஎன்பது பெறப்படும். படவே நையாயிகர் மதம் பற்றிக்க கரவாகார லகரவெழுத்துகளே அப்பொரு ளுணர்த்துமெனக் கோடல்வேண்டும். அங்ஙனம் கொள்வுழி, அவை ஒருங்குகூடிப் பொருளுணர்த்துமோ ஓரோவொன்றே பொருளுணர்த்துமோ எனக்கடாயினர்க்கு ஓசை யுணர்வு தொழில் மூன்று முற்கணப் பொழுதே நிலைபெறுமென்பது நையாயிகர் முதலோர்க்கு உடம் பாடாகலின், முறையிற்பிறந்து நின்று கெடுமெழுத்துகள் ஒருங்கு கூடிநின்று பொருளுணர்த்துமென்பது கூடாமையின்; ஓரோ

வொன்றே பொருளுணர்த்துமெனல்வேண்டும். க என்ற மாத்திரை யானே கம்பலமென்னும் பொருளுணர்த்தாமையானும் உணர்த்து மெனினும் ககரமொழிந்த எழுத்துகளை யுச்சரித்தல் பயனிலவாய் முடியுமாகலானும் ஒன்றொன்றே பொருளுணர்த்து மென்பது பொருந்தாமையின் எழுத்துப் பதவாக்கியங்களின்வேறாய்ப் பொரு ளறிவுறுப்பதாம்" என்ப. ஞாபகசத்தி சொல், பொருளுணர்த்து வதற்கு உபகாரமாவது என்பது கருத்து.

ரு. இயற்கையெழுத்தோசையாவன.

## அ. க. ம். என்பனவாம்.

மக்கட்குழவியும் ஆவின்கன்று முதலியனவும் வாய் திறக்குங் கால் இயல்பாகப் பிறக்குமோசை அ, என்பதாம். காக்கை முத லியனவும் கூகையும் வாய்திறக்குங்கால் இயல்பாகப்பிறக்குமோசை முறையே க, ம் என்பனவாம். இவை குழந்தைகளிடத்தும் இயல் பாகப்பிறப்பன. இசை வல்லுநரும் மகரவொற்றுமுதலாக ஆலாப னம் செய்வர். ஈண்டுக்கூறப்பட்டகூகை ஊமன் என்னும் கூகை யாம். காக்கையும் கூகையும் இந்நாட்டில், மிக்கனவாகும். இனி அம்மூன்றெழுத்துகளையும் கூட்டுறவுசெய்ய **அகம்** என்றாகும். **அகம்** என்பன இயற்கை யெழுத்தாகலானும், இயற்கையும் செயற்கையின்றி விளங்காமையானும், அவ்வியற்கை யெழுத்தின்க ண்நாவது முயற்சியின்மையானும், நா, பல், இதழ், அண்ணம் என்ப வற்றுள், அந்நாவது முயற்சி கல்விக்கு முதன்மையதாகலானும், **லகர** மென்னும் செயற்கை யெழுத்தொன்று கூட்டுறவுசெய்து **அகலம்** எனப்பட்டது. பின்னர் இவ் **வகல** மென்பதே **அகரமா**யிற்று. புள் விலங்குமுதலிய அஃறிணை யுயிர்களி டத்தும், குழந்தைகளிடத்தும், இயல்பாகப் பிறக்கக் காணாமையின் லகரம் செயற்கை யெழுத்தெனப்பட்டது.

ஓர் மொழியுமில்லாத பண்டைக்காலத்து முதன்மக்களுடைய நாவானது இயற்கையினு மெல்ல மெல்ல வளைந்து திருத்தமெய்

தும் பொருட்டுப் புள்ளிலங்குமுதலிய மற்றையவுயிர்கள் இசைக்கக் கூடாமையாகிய வோர்செயற்கை யெழுத்தினை அஞ்ஞான்றுள்ள சான்றோர் ஆராய்ந்தறிந்து கூட்டுறவுசெய்தன ரெனத்தெளிக.

லகரமே அச்செயற்கையெழுத்தென்பதெங்ஙனமெனின் எளிதுபட நாநுனியாலிசைத்தற்குரியது அதுவேயாகலினென்க. ரகரமும் எளிதாமெனின், சிறார்கள் ராமனென்பதை லாமனென வுச்சரித்தலின் அது பொருந்தாது, பிறவும் சிறார்தங்குழாத்துள் தெளிந்துகொள்க. மயிரை மயிலென்பர்.

அற்றேல் லகரமென்னுஞ் செயற்கையெழுத்தினை யியற்கை யெழுத்துகளுக் கெல்லாம் இறுதிக்கண்வையாது இடைக்கண் வைத்ததென்குறித்ததெனின் அ க என்பனபோலவே மாத்திரை ஒப்புமைகுறித்ததென்க. அலகமெனலுங்கூடும்; அகலமென்பதென்னெனின், அகம் என்பவற்றுள் ககரம் அண்ணத்திற் பிறத்தலின் நாநுனியானது அண்ணத்தைத் தொடலால் பிறப்பதாகிய லகரத்தையும் அக்ககரத்தோடுசேர்த்து **அகல** மெனப்பட்டது. **அகலம்**போலவே சொற்களும் இடையிடைமெய் செயற்கையெழுத்தினைப் பெற்றுவருமெனவும், அச்செயற்கையெழுத்து முதற்கண்வாராமையின், சொற்கண்ணும் முதற்கண்வாராதெனவுங் கொள்க.

### உயிர், மெய், உயிர்மெய்.

**அகம்** என்பவற்றுள் அ என்பது நாதமாத்திரையாய்நிறைந்தெழுந்து முதற்கண் நிற்கின்றமையின் உயிரும், ம் என்பது நலிந்திசைக்கின்றமையின் மெய்யும், க என்பது அவ்விருதன்மையும்பட இசைக்கிறமையின் உயிர் மெய்யும்; அகலமென்பவற்றுள், க ல என்பவை மகரமெய்யின் சார்பால்மெய்யும், அம்மூன்றுமெய்களும் அகரவுயிரின் சார்பால் உயிர்மெய்யுமாம்.

இவற்றிற் பிறந்த எழுத்துகளுக்கு மிங்ஙனமே. மெய்யெழுத்துக்கு o இக்குறியே அடையாளம். இக்குறி, ஒலிநிரம்பாமையை

உணர்த்தற்பாலது. கணிதநூற்கண்ணும் அஃது ஓர் எண்ணுகாது. இன்மையைக் குறித்தற்பாலதாம்.

எ எழுத்து.

அங்காத்தலும் அதன்பின் இதழ்குவித்தலும் மக்களுக்கு இயல்பாக உண்டாதலின் அங்காத்தலால் அகரமும், இதழ்குவித்த லால் உகரமும், பிறக்கும் அங்காந்த பின்னரே இதழ் குவித்தலின், அகரத்தினின்றே உகரம்பிறந்ததாகும்.

| அ | — | உ |
|---|---|---|
| அங்காப்பு | | இதழ்குவிவு |
| இயற்கை | | செயற்கை |
| ஆண் | | பெண் |
| ஓசைநிறைந்தது | | ஓசைகுறைந்தது |
| ஆற்றலுள்ளது | | ஆற்றலில்லது. |

அகரத்தை நோக்க உகரம் செயற்கையாகும். அங்காந்து அங் காந்து பழகியபின்னரே இதழ் குவிக்கும் ஆற்றலுண்டாதற்பாலது.

அ

அகரத்தினின்று இகரம் பிறந்தது. அகர இகரங்களினின்றும் முறையே ஆகார ஈகாரங்கள் பிறந்தன.

உ

உகரத்தினின்று ஊகாரம் பிறந்தது.

க

ககரத்தினின்று சகரமும், சகரத்தினின்று தகரமும் பிறந்தன. சகரத்தினின்று யகரமும், யகரத்தினின்று ஞகரமும், ஞகரத்தி னின்று நகரமும் ஙகரமும் பிறந்தன.

ல

லகரத்தினின்று ரகரமும் ளகரமும், ளகரத்தினின்று ழகர மும் பிறந்தன.

ம

மகரத்தினின்று பகரமும், பகரத்தினின்று வகரமும் பிறந்தன.

## உயிர்ச்சந்தி யெழுத்து.

ஏ ஓ, ஐ ஔ, என்பனவாம்.

அகரமும் இகரமும் தம்முளொத்திசைத்தலால் ஏகாரமும், அகரமும் உகரமும் தம்முளொத்திசைத்தலால் ஓகாரமும் பிறந்தன.

ஏகார ஓகாரங்களின் குறுக்கமே எகர ஒகரங்களாம்.

அகரமும் யகரமெய்யும் இகரமும் தம்முளொத்திசைத்தலால் ஐகாரமும், அகரமும் வகரமெய்யும் உகரமும் தம்முளொத்திசைத்தலால் ஔகாரமும் பிறந்தன அய்இ, அவ்உ என்பன ஐ, ஔ என வோரெழுத்தாயின. இவ்வரிவடிவு பிற்காலத்து வழக்கு.

அ + இ = ஏ. அ + உ = ஓ.

அ + ய் + இ = ஐ. அ + வ் + உ = ஔ.

அய்இ, அவ்உ என்ற உயிரெழுத்துகளினிடையில் மெய்யெழுத்து வரலாமோ எனின் அஃதொக்கும். அகர இகரச் சேர்க்கையால் எகாரமும், அகர உகரச்சேர்க்கையால் ஒகாரமும் பிறத்தலின், இடையில் யகரமெய்யும் வகரமெய்யும் வந்தாலன்றி அய்இ, அவ்உ என்னும் உச்சரிப்புகளுண்டாகாவாம்.

அய்இ, அவ்உ என்னு மூன்றெழுத்தின் சேர்க்கையினாலேயே ஐகார ஔகாரங்களுண்டாயின என்பது திண்ணம். அய்இ = அயி. அவ்உ = அவு.

### அய்இ.

இதன்கண் அகரம் அங்காப்பும் இகரம் அங்காப்பியையபுமாகலின், அங்காப்பியைபாகிய யகரமெய், பிறப்பிட முறைமைபற்றி இடையில் வைக்கப்பட்டது. யகரமெய், இகரவுயிர்போல் ஓர்சார் ஒலிவடிவுடைமையின் அங்காப்பியை பாயிற்று.

### அவ்உ.

இதன்கண் அகரம் அங்காப்பும், உகரம் இதழ்குவிவுமாகலின், இதழ்குவிவினியைபாகிய வகரமெய், பிறப்பிட முறைமைபற்றி இடையில் வைக்கப்பட்டது.

"ஆவியிடைமை யிடமிடனுகும்"

இன்னும் ஐகாரம் மூன்றெழுத்தின் சேர்க்கையென்பது

| | | |
|---|---|---|
| ௧. | குழை | குழாய் |
| ௨. | கழை | கழாய் |
| ௩. | பிள்ளை | பிள்ளாய் |
| ௪. | நாரை | நாராய் |

என்பவற்ருனும் தெளிக.

குழை, குழய்இ—குழாய், இகரங்கெட்டது. இதனுல் இடையில் யகரமெய்யுண்மை பெற்ரும்.

கழாய்=மூங்கில், கழாயர்=கழைக்கூத்தர்.

அகர இகரம் ஐகாரமாகும்
அகர உகரம் ஔகாரமாகும்

எனக்கூறி,

அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்
இகர யகரம் இறுதி விரவும்

எனமாட்டேற்ருன் விளக்குவர் தொல்காப்பியர். சூத்திர விருத்தியுட்காண்க.

"அம்முனிகரம் யகரமென்றிவை
எய்தி னையொத்திசைக்கு மவ்வோ
டுவ்வும்வவ்வும் ஔவோரன்ன"

என்பர் பவணந்தி முனிவர்.

தொல்காப்பிய சூத்திரத்தையுணரின் ஐ ஔ ஆகிய ஒரெழுத்து வடிவு தொல்காப்பியர்க்கு முன்னும், அவர் ஆசிரியர் அகத்தியர்க்குமுன்னும் உள என்பது பெறப்படும். யகரவகரங்கள் உண்டாய பின்னரே ஐகார ஔகாரங்களுண்டாயின.

அ இ உ எ ஒ எனக்குற்றெழுத்துகளைந்தும், ஆ ஈ ஊ ஏ ஓ எனநெட்டெழுத்துகளைந்தும் ஆகிய பத்தெழுத்துகளுமே முதன் முதலுண்டாயின. ஐகார ஔகாரங்கள் பின்னருண்டாயின.

அ { ஆ இ ஈ எ ஏ ஐ அங்காப்பு, (அய்இ).
 உ ஊ ஒ ஓ ஔ இதழ்குவிவு (அவ்உ).

அய்இ = அயி, ஐ; அவ்உ = அவு, ஔ.

"இஈ எஏ ஐயென விசைக்கும்
அப்பாலைந்து மவற்றோரன்ன
அவைதாம், அண்பன்முதனா விளிம்புறலுடைய"
"அண்ணஞ்சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற்றடைய யகாரம்பிறக்கும்"
"உஊ ஒஓ ஔவென விசைக்கும்
அப்பாலைந்து மிதழ்குவிந்தியலும்"
"பல்லிதழியைய வகாரம் பிறக்கும்"

என்ற தொல்காப்பிய சூத்திரங்களால் அவ்வொற்றுமை யுண்மை காண்க.

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்"
"எகர ஒகரத்தியற்கையு மற்றே"

என்ற தொல்காப்பியர் கூற்றையுணரின் ஏகார ஓகாரங்களின் பின்னரே எகர ஒகரங்களுண்டாயின வெனப் புலனாகின்றது.

அகாமுதலிய குற்றெழுத்துகளைந்தும் ஓர்காலத்தே யுண்டாயிருப்பின், எகர ஒகரங்களுக்கு மாத்திரம் புள்ளிகூறல் என்னை? அது அறிகுறியெனின் ஏனைய குற்றெழுத்துகளுக்கும் அவ்வறிகுறிவேண்டும். பாளியிலும் ஆரியத்திலும் அவ்வெகர ஒகரங்களின்மையே சான்றென்க.

## இடச்சார்பு.

இனிப்பன்னிரண்டுயிரெழுத்துகளில் அஆ, இஈ, உஊ, என்பன ஓரிடந்தாக்கியும்; எஏ, ஒஓ, என்பன ஈரிடந்தாக்கியும்; ஐஔ, என்பன மூவிடந்தாக்கியும்வரும். அவை அங்ஙனம் தாக்கிவருதலை நுணுகியுச்சரித்துணர்க. அகரமுதலியன சமனிலையிலெழுமெழுத்துகளும், ஏகார ஓகாரங்கள் மேனிலையிலெழுமெழுத்துகளும், ஐகார ஔகாரங்கள் கீழ்நிலையிலெழுமெழுத்துகளும் ஆம் என்பர்.

## கO. மெய்ச்சந்தி யெழுத்து.

ட ண, ற ன, என்பனவாம்.

ளகரமெய்யும் தகரமும் ஒத்திசைத்தலால் டகரமும், ளகரமெய்யும் நகரமும் ஒத்திசைத்தலால் ணகரமும், லகரமெய்யும் தகரமும் ஒத்திசைத்தலால் றகரமும், லகரமெய்யும் நகரமும் ஒத்திசைத்தலால் னகரமும், பிறந்தன.

ள்+த=ட. ள்+ந=ண. ல்+த=ற. ல்+ந=ன.

ளகர தகர முதலியவற்றின் சந்தியால் டகரமுதலியன தோன்றுமாறெவ்வாறெனின் அகர இகர முதலியவற்றின் சந்தியால் ஏகார முதலியன தோன்றுமாறுபோல, ளகர தகரமுதலிய அவ்வவ்வெழுத்துகளினிடையே அவ்வவற்றின் சந்தியால் தோன்றுவன அவ்வொலிகளே யாகலின் என்க. ஈண்டுச்சந்தியென்பது நின்றவெழுத்து குறித்து வருமெழுத்துகளது தொடர்புடைமை. சந்தியெழுத்தெனினும் செயற்கையெழுத்தெனினு மொக்கும். உண்டாக்கப்பட்ட எழுத்துகளென்பது.

கக உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் மேலுங்கூறாது பன்னிரண்டு, பதினெட்டு என்னு மிவ்வளவிலே நிறுத்தியதென்னெனின், நாவினது இயற்கை முயற்சியும் செயற்கை முயற்சியும் முற்றுப் பெற்றமையின், இவ்வளவின்மேற் கூறலொண்ணாது. இவ்வியற்கை செயற்கையலாய வொலிகளே பண்களுக்கு முரிமையாதற் பாலன. செயற்கையுட் செயற்கை யொலிகள், தமிழ்க்கு வேண்டா.

கஉ **மாத்திரை.**

ஏகார ஒகாரங்கள், இவ்விரண்டு குறில்களால் தனித் தனி யிரண்டு மாத்திரை கொண்டமைபோல ஐகார ஔகாரங்களும் இரண்டு மாத்திரைகோடற்கு அவ்வவ்வெழுத்துகளிலுள்ள குறில்களே போதும். இடையிலுள்ள யகர வகர மெய்கள் மாத்திரை கோடற்குத் தோன்றியன அல்லவாகலின், அவை மாத்திரையிற் கொள்ளப்படா.

உயிர்மெய் யெழுத்துகள் மெய்ம் மாத்திரையொழிய உயிர் மாத்திரையவாதல், இவ்விலக்கணம் பற்றியேயாம் தனித் தனி யிரண்டு மாத்திரைபெற்ற ஏகார ஒகாரங்கள், ஒருமாத்திரையிற் குறைந்து எகர ஒகரங்களாயின.

கங **முறையின் வைப்பு.**

பன்னிரண்டுயிரெழுத்துகளும் உயிர்போலத்தாமே யியங்கவும் இயக்கவும் ஆற்றலுடைமையின், உயிரெழுத் தெனப்பட்டு முதற் கண் வைக்கப்பட்டன. பதினெட்டு மெய்யெழுத்துகளும் அகரத் தோடன்றித் தனித்தியங்கு மாற்றல்பெறாத சிறப்பின்மைபற்றி மெய்போதலின் மெய்யெழுத்தெனப்பட்டு, அவ்வுயிர்களுக்குப்பின் வைக்கப்பட்டன. மெய்=உடம்பு. நாதமாத்திரையாகிய அகரம் முதற் கண்ணும் அதன்பின் இகரமும் அதன்பின் உகரமும் பிறத் தலின் அவை அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட் டன. அகர இகர உகரங்களினின்றுஆகார ஈகார ஊகாரங்கள் முறை யே பிறத்தலின், அவை அவ்வவற்றுக்கு இனமாகச் சாரவைக்கப்பட் டன. ஏகார ஒகாரங்களின் இறுதிக்கண், முறையே இகர உகரங்க ணிற்றலின் அவை அவற்றின் பின்னும், எகர ஒகரங்கள் அவற்றின் குறுக்கமாகலின் அவை ஏகார ஒகாரங்களின் முன்னும் முறையே வைக்கப்பட்டன. யகர வகரங்களின் முறைமைபற்றி ஏகாரத்துக் குப்பின் ஐகாரமும் ஒகாரத்துக்குப்பின் ஔகாரமும் வைக்கப்பட் டன. இகர உகரங்களின் முறைமை பற்றியுமாம். இவை ஒலியள வால் குறில் நெடிலெனப் பிரிதலின் குற்றெழுத்துகள், தத்தம் திரி பாகிய நெட்டெழுத்துகளுக்கு முன் வைக்கப்பட்டன.

க ச த ம ப வ என்னும் இவ்வெழுத்துகள் அண்ண முதலிய வற்றினின்று ஒன்றன்பின் ஒன்று பிறத்தலின், அவை அம்முறை மையே வைக்கப்பட்டன. ய ஞ ந ங என்னும் இவ்வெழுத்துகளுள் அம்முறைமையின் முற்பட்டது ஙகரமும், பிற்பட்டது ஞகரமும், அதன்பிற்பட்டது நகரமும், ஆதலின் ங ஞ ந என அம்முறையில் நிறீஇ; கசத என்னும் வல்லிசைக்கு மெல்லிசையாகிப் பிறப்பிடத் தானு மொத்தலின்; கங, சஞ, தந, என அவ்வவற்றுக்கு இனமாகச் சாரவைக்கப்பட்டன.

இனி அவை ஒழித் தொழிந்த யகரம் இனமா தற்குப் பொருத் தின்றேனும் முறைமையின் முற்பட்டிருத்தலின் அதனினமாகிய வகரத்துக்கு முன் வைக்கப்பட்டது.

ல ர ள ழ என்பன அம்முறைமைபற்றி ர ல ழ ள எனவைக் கப்பட்டன. இவை செயற்கை யெழுத்தாகலானும், இயற்கையின் றிச் செயற்கையின்மையானும் இயற்கையெழுத்தாகிய யகர வகரங் களுள், யகரத்தோடு முன்னிரண் டெழுத்துகளும் வகரத்தோடு பின்னிரண் டெழுத்துகளும் ஒர்ந்து சாரவைக்கப்பட்டன.

டணக்கள் தநக்களின் திரிபாயினும் முறைமையின் முற்பட லின் தநக்களுக்குமுன் டணக்கள் வைக்கப்பட்டன. பிற்காலத் தாக் கப்பட்ட எழுத்துகளாகலானும் தநக்களின் திரிபாகலானும் றனக் கள் இறுதிக்கண் அம்முறைமைப்பட வைக்கப்பட்டன.

மெய்யெழுத்துகளுள் வலிந்திசைப்பன வோரினமாகவும் மெலிந்திசைப்பன வோரினமாகவும் இடை நிகரனவாக இசைப்பன ஓரினமாகவும் பிரிதலின், அவை யானைப்போக்கென்னு மழகுபற்றி அம்முறையில் வைக்கப்பட்டன.

இங்ஙனம் பாகுபடுத்த பின்னர் இனமாதல்பற்றி மகரத்துக்கு முன் பகரம் வைக்கப்பட்டது. நாவானது நன்குவளைந்து பெலம் பெறும்பொருட்டு இங்ஙனம் முறைமைப் படுத்தியதென்க. ங ட ண ர ழ ள ற க்கள் அடிநாவிற்கு வருத்தந்தரலின், பயிற்சிவயத் தான் எளிதாதலே அம்முறைமைக்குப் பயன். நாவிற்குக் கடினமாக

இருத்தலின் சில ளகர ணகர மொழிகள் இஞ்ஞான்றும் லகர னகர மொழிகளாகத் திரிந்துள்ளன.

அக்கடின வெழுத்துகளுள் ஆரியத்தில் ழகர ளகர றகரங் களும், ஆங்கில முதலியவற்றில் ணகர ழகர ளகர றகரங்களும் இல. கடினவெழுத்துகளுண்மையின், தமிழ்ச்சொற்கள் பல, வாயினுள் ளே ஒவ்வோரிடத்தும் நன்கு தாக்குகின்றன.

"ஞணநமன யரல வழள வென்னும்
அப்பதி னொன்றே புள்ளியிறுதி"

எனத் தொல்காப்பியர் தமிழ்ச்சிறப் பெழுத்தாகிய ணகர மிருப்ப, நகரவிறுதி கூறியது குற்றமாமோ எனின்; வெந், வெரிந், பொருந், முதலிய நகரவீற்றுச் சொற்கள் உண்டாயிருந்த காலத்து னகரமில்லை யெனப் புலனுகின்றமையின் குற்றமாகாது. னகரம் ஆரி யத்துக்குப்பின் செந்தமிழுண்டான காலத்து ஆக்கப்பட்டது. செந் தமிழ்க்குமுன் நகாவிறுதியே நடைபெற்றது.

## கசு ஆய்த வெழுத்து.

**அகம்** என்னும் இயற்கை யெழுத்தோசை அக்கமெனமிகுந்து அம்மிக்க வல்லின மெய் ஆய்தவெழுத்தாகத் திரிதலின் அஃக மெனவாயிற்று. இவ்வொலி இயற்கையோ செயற்கையோ எனின் ஒருவன் இருமுங்கால், காறியுமிழுங்கால், ஃக என்னும் ஒலி இயல்பாக வுண்டாதலின் இயற்கையேயாம். ஆடு மாடு முதலியன செருமுங்காலத்தும் இவ்வொலி இயல்பாக உண்டாதலைக் காண லாம், ஆயின் மக்களிடத்துப் புலனுவதுபோலப் புலனுகாது.

அதன்கணுள்ள முப்புள்ளி பல்பொருள் நோக்காய் இயற்கை யெழுத்து மூன்றென்பதைத் தெரிக்கும். இயற்கை யெழுத்துப் போலவே ஒலி வடிவுபெற்று அஃகமெனச் சிறிது வேறுபட்டுவரும். அவ்வொலிவடிவில் இயற்கையெழுத்து மூன்றும் புலப்படுதல் காண்க. அதனுல் இயற்கையாகிய ஆய்தவெழுத்தானது இயற்கையெழுத் துக் கினமாதலின், அஃக + இனம் என விதியீறுபடநின்று அஃகேன

மெனக் குணசந்தியாயிற்று. இக்குணசந்தி முதலியன செந்தமிழ்க்குமுன் தமிழில் நடைபெற்றன. பிற்கூறுதும். அஃகேனமெனினும் ஆய்தவெழுத் தெனினுமொக்கும். மாணிக்கத்துக்கும் மரகதத்துக்கு மிடையேயுள்ள படிகமானது மாணிக்கவொளியால் மாணிக்கம்போலவும் மரகதவொளியால் மரகதம்போலவுங்காட்டி, அவ்விரண்டு மாகாமை நின்றதுபோல, அவ்வாய்தவெழுத்து அகர ககரங்களென்னும் இரண்டெழுத்துகளின் இயைபால் தோன்றிய ககரத்தின் திரிபுபோல் நிற்றலின், உயிரியைபுபற்றிச் சிலவிடத்து உயிர்போலவும் மெய்யியைபுபற்றிச் சிலவிடத்து மெய்போலவும் தோன்றி; அவ்விரண்டற்கு மிடையே வந்த மெய்யெழுத்தின் திரிபு போறலின் உயிருமாகாமே மெய்யுமாகாமே தனிநிலையாய் வருமோ ரெழுத்தென்பர். அது அகரத்துக்கு அந்தத்திலும் ககரத்துக்கு ஆதியிலும் நிற்கின்றமையின், பன்னீருயிருக்கும் அந்தத்திலும் பதினெண்மெய்க்கும் ஆதியிலும் வைக்கப்பட்டது. அவ்வாய்தம் குற்றெழுத்துக்கு முன்னும் உயிர்மெய் வல்லெழுத்துக்கு மேலும் வரலின், இவ்விலக்கண வமைதியே சொல்லிலும் வரற்பாலது.

"குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே"

(நன்னூல்)

## உதாரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க. | அக்கம் | அஃகம் | கங. | அகதி | அஃதை |
| உ. | வெக்கல் | வெஃகல் | கச. | அது | அஃது |
| ந. | எக்கல் | எஃகல் | கரு. | இது | இஃது |
| ச. | ஒக்கல் | ஒஃகல்=ஒதுங்கல் | கசு. | எது | எஃது |
| ரு. | மக்கான் | மஃகான் | கஎ. | அப்போதம் | அஃபோதம் |
| சு. | அக்கரம் | அஃகரம்=வெள்ளெருக்கு | கஅ. | பட்டி | பஃறி=ஓடம் |
| எ. | அக்குள் | அஃகுள் | கக. | சுற்று | சுஃறு=இசைக்குறி |
| அ. | எக்கு | எஃகு | உ0. | அற்றிணை | அஃறிணை |
| கூ. | சக்குல்லி | சஃகுல்லி | உக. | பற்றுழிசை | பஃறுழிசை |
| க0. | கச்சு | கஃசு | உஉ. | சிற்றுழிசை | சிஃறுழிசை |
| கக. | பத்து | பஃது | உந. | பற்றொடை | பஃறொடை |
| கஉ. | அற்கல் | அஃகல் | உச. | பற்றேர் | பஃறேர். |

ககரத்தின் சார்பால் தோன்றும் ஆய்தம் இயற்கை யெனவும், ஏனைய வல்லெழுத்துகளின் சார்பால் தோன்றும் ஆய்தம் செயற்கை யெனவும் கொள்ளல் வேண்டும்.

முதல் முதல் இயல்பாய், ககரத்தின் சார்பாலுண்டாய் நாமுதிர்ச்சி பெற்றபின் ஏனைய வல்லெழுத்துகளின் சார்பால் உண்டானமையின் செயற்கையாயிற்று. இயற்கை யாய்தத்தில் நாமுயற்சியின்மையும், செயற்கை யாய்தத்தில் நாமுயற்சி யுண்மையும் காண்க.

அவ்+கடிய என்பது கடைக்குறையாய் அஃகடிய எனவாயிற்றெனல் வேண்டும். அல்லரக்கால் ஆண்டு ஆய்தம் தோன்றற்குக் காரண மின்றும். ஆரியத்திலும் பாகதங்களிலும் இவ்வாய்தவுச்சரிப்புக் காண்க.

"அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு" இவ்வாய்தம் உயிர் போல வந்தது.

"தேரினு மஃதே துணை" இவ்வாய்தம் மெய்போல வந்தது.

## கரு குற்றியலுகரம்.

மெய் யெழுத்துகளுள் வல்லினமெய் ஆறும் மொழியிறுதியில் வாராமையானும், வரினும் மெல்லின இடையின மெய்யீற்று மொழிகள்போல நா முதலியவற்றுக்கு எளிமையாகாது கடினமாக இருக்கின்றமையானும் அவ்வல்லினமெய்களும் மொழியிறுதியில் வர வேண்டிக் குற்றியலுகர மொன்று கொண்டனர்.

தனிக் குறிலொழியாத மொழிகட்குக் குறுக்கம் தோன்றாமையின் தனிக் குறிலொழிந்தவற்றுக்கேகொள்க. கொக்கு, கச்சு, பட்டு, பத்து முதலியவற்றின் இறுதி மெய்யீறுபோறலின், குறுக்கமாயிற்று. இனிக் குற்றியலுகரமொழியெனின் அவற்றை வல்லின மெய்யீற்று மொழியெனக் கொள்ளல் வேண்டும்.

"அவற்றுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்
குற்றியலுகரமும் அற்றென மொழிப"

எனத்தொல் காப்பியர் கூறியவாற்றானும் தெளிக. அற்றெனக் கூறினமையின் மெய்ம் மாத்திரையின் மிக்கும், குற்றியலுகரமென்ற மையின் உயிர் மாத்திரையிற் குறைந்தும் வரும்.

குற்றியலுகரம் மெய்யீறோ உயிரீறோ எனின் மெய்யீறு மன்று உயிரீறு மன்று; குற்றியலுகரமென்க. மெய்யீறு போல்வது உயிரீறு போல்வதெனவு மொக்கும்.

மடு முதலிய சொற்களைப்போலவே மாடு முதலிய சொற்களையும் உச்சரிக்கின், அது குற்றியலுகர உச்சரிப்பாகாது. சிறிதுவேறுபட வுச்சரித்தல்வேண்டும்.

குழந்தைகள் மாடு என்பதை மாட என்றாவது மாடி யென்றாவது உச்சரிக்குமே யன்றி, மாடு என்று உச்சரிக்கமாட்டா. கொம்பு என்பதையும் கொம்பா என்றே யுச்சரிக்கும். குற்றியலுகரம் இதழ் குவித்து உச்சரிக்க வேண்டியிருத்தலின், கடினமாவதுணர்க. கொக்கு என்னும் குற்றியலுகர வுச்சரிப்பினும் கொக் என்னும் வல்லின மெய்யீற் றுச்சரிப்புக் கடினமாகும்; ஆகலின் தமிழில் வல்லின மெய்யீற்று மொழிகளேயில. குழந்தைகள் குரங்கினைக் கொங்கு என்னும். ஓகரத்தில் அகரமுண்மையின், எளிதாயிற்று. பாக்குப் பாக்குப் பழம்பாக்கு, பூட்டுப் பூட்டுப் புதுப்பூட்டு என்னுந் தொடரை விரைந்து கூறின் குளறுபடையாம். என்? அங்காங்கு இதழ் குவிவதரிதாகலின், என்க. குற்றியலுகரம் சொற்குறுக்கத்தை யுணர்த்துவதன்றிச் சொல்லொடு பொருட்கு இயைபுண்மை பற்றிப் பொருளின் குண வடிவுகளின் குறுக்கத்தையு முணர்த்தும்.

உ—ம்.

| | | |
|---|---|---|
| ௧. | பந்து=சிறுதுருத்தி, | பந்தம்=பெருந்துருத்தி. |
| ௨. | மாடு=அரைவராகன், | மாடை=ஒருவராகன். |
| ௩. | பூட்டு=இற்பூட்டு, | பூட்டை=செக்கு. |
| ௪. | மறுகு=குறுந்தெரு, | மன்றம்=பெருந்தெரு. |
| ௫. | கழுது=வண்டு, | கழுதை=கத்தபம். |
| ௬. | எறும்பு=எறும்பு, | எறும்பி=யானை. |
| ௭. | அளகு=பறவைப்பெண் | அளகம்=பன்றிமுள். |
| ௮. | கச்சு=காற்பலம், | கச்சம்=மரக்கால். |

கச்சு—கஂகூ.

௯. கடுகு=கடுகு, கடுகம்=கார்ப்பு.
௧௦. மார்பு=உரம், மார்பம்=அகலம்.

நாகு, புனிறு, கன்று, அசறு, கொசுகு, முதலியனவு முணர்க.

குணத்திலேனும், வடிவிலேனும் சிறிது பெரிதென்பதைக் குற்றியலுகரமும் குற்றியலுகர மன்மையுமே யுணர்த்தும்.

ஆராய்ச்சியிற்றேன்றினமையின் எழுதினன். அளகு=பறவைப்பெண். குறுகிய மூக்குடையதென்பதுபொருள். ஆண்பறவையினும் பெண்பறவைக்கு மூக்குக் குறுகியிருத்தலின் அதனை அளகென்பர். குறுகிய மூக்குடையதென்னும் பொருளை அளகென்னும் குற்றியலுகரத்தினுல் தான் கொள்ளல் வேண்டும்.

அளகு=குறுகிய கூரிய மூக்குடையதென்க.
அள்=கூர்மை.

இக்குற்றியலுகரப் பாகு பாடு தெலுங்கு முதலியவற்றிலில்லை. அகத்தியனூர்க்கு முன்னரே செந்தமிழிலுண்டாயிருத்தல்வேண்டும்.

இது தமிழ் நடைக்கு இன்றியமையாததே. தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலென ஓரியல் வகுத்துக் கொண்டதே அது இன்றியமையாத தென்பதற்குச் சான்றாகின்றது.

கசு குற்றியலிகரம்.

மண்+யாது=மண்ணியாது
வேள்+யாது=வேளியாது

என இகரம் வரும். இது நாவி னியற்கை. மெய்ம்முன் யகரம் வந்து புணருங்கால் மண்யாதெனின் நாவிற்கு ஓர் சிறிது கடினமாதலும் மண்ணியா தெனின் எளிதாதலு முணர்க. இகரமும் யகரமும் அங்காப்பினது இயைபாகலின் மண்ணியாதென்பது எளிதாயிற்று. சாரியைபெறாத மெய்யெழுத்துகளை உச்சரிப்பது அரிதாகலின் ஓர் சார் அங்காப்பியைபு பற்றி மண்ணியாதென இகரம் தோன்றியது.

இனிக் குற்றியலுகரமும் மெய்யீறுபோல்வதாகலின், யகரம் வரின் அந்த உகரம் இகரமாகத் திரிந்துவிடும். அதுவே குற்றிய லிகரமாம்.

உ—ம்.

நாகு+யாது=நாகியாது.
எறும்பு+யாது=எறும்பியாது.

நாகு யாதெனின் நாவிற்குச் சிறிது கடினமாகின்றது. நாகி யாதெனின் எளிதாகின்றது. உச்சரித்துக் காண்க.

மெய் யெழுத்துக்குச் சிறிதும் இதழ்குவிவு வேண்டாமையின் மண்+யாது=மண்யா தெனினும் நாவிற்குப் பொருந்தும். குற்றிய லுகரத்துக்கு இதழ்குவிவு வேண்டியிருத்தலின்,

நாகு+யாது=நாகுயாது என்றாகாது நாகியாது என்றேயா கும். என்னை? இதழ்குவித்து அங்காத்தல் அரிதாதலின் என்க.

கதவு+யாது=கதவியாது முதலியனவும் அன்ன. அ இ உ என்பவற்றில் உகரம் இதழ்குவிப்பதா லுண்டாவ தாகலானும் அவ் விதழ் குவித்தல் அங்காத்தல் போலெளிதாகாது கடினமாக இருத் தலானும் அகர இகரங்களினும் உகரம் மாத்திரையிற் சிறிது குறை வுடையதென்றே கூறல்வேண்டும். யகரத்தினும் வகரம் கடினமாக லின் ஐகாரத்தினும் ஔகாரம் கடினமாகும். அய்இ எனின் அங் காப்பும் அங்காப்பியையபுமாகும். அ வ் உ எனின் அகரம் அங்காப் பும் ஏனைய இரண்டும் இதழியையபுமாம். இவ்வாராய்ச்சியால் அகர இகரங்களினும் உகரத்துக்குக் குறுக்கம் புலனாகின்றது. உ, மடு, மண்ணு, நெல்லு, என்பவற்றிலுள்ள உகரத்தினும் நாகு, எறும்பு முதலியவற்றிலுள்ள உகரத்துக்குக் குறுக்கம் சிறிது மிகுதியாக லின் குற்றிய லுகரமாயிற்று. இக்குற்றிய லுகரத்தைநோக்கி முற் றியலு லுகரமெனப்பட்டது. எ-வது எழுத்துக் காண்க..

முந்தை யென்பதிலுள்ள உகரத்தினும் நுந்தை யென்பதி லுள்ள உகரத்துக்கு ஒரு சிறிது குறுக்கம் தோன்றலின், அதுவும் குற்றிய லுகரமாம்.

இக்குறுக்கம் நாவினியற்கையை ஒட்டியதாகலின் குற்றிய லுகரம் இயற்கையென்பார் கூற்றுப் பொருந்தற்பாலதே. அது இயற்கையாகலின் குற்றுகரமென்னுது குற்றிய லுகரமென்றனர். குறு + இயல் + உகரம்.

இயல் = இயற்கை. மற்றும் சூத்திரவிருத்தியுட் காண்க.

அழைப்பதுவே, இந்துவை, விண்டுவை முதலியனவும் யகரம் வரின் இகரமாகத்திரிந்து விடும்.

உ—ம்.

அழைப்பது + யாது = அழைப்பதியாது.
இந்து + யாது = இந்தியாது.
விண்டு + யாது = விண்டியாது.

இந்திரவிகூடல் என்பதில் உகரக்கேடும் காண்க. வாயு தேயு முதலிய சொற்களிலுள்ள யகரம் அங்காப்பினது இயைபுடைமை பற்றி நாவிற்குக் கடினமாகாமையின் யகரம்வரினும் இகரமாகத் திரியாது.

உ—ம்

வாயு + யாது = வாயுயாது.
தேயு + யாது = தேயுயாது.

இவையெல்லாம் நாவினியற்கையா லாவனவேயாம். அவ்வியற்கையை நுணுகியுணர்வதும் அரிது.

யகரமெய், ஓர்சார் இகரவுயிர்போல்வதோர் ஒலிவடிவுடையதாகலின் அங்காப்பியைபு எனப்பட்டது. இ, ய் என்று உச்சரித்துக் காண்க. இவ்வியைபு பற்றியே அய்இ என அகர இகரங்களிடையே யகரமெய் வைக்கப்பட்டது. யகரமெய்யும் இகரவுயிரும் அங்காப்பியைபாயின் சமமாமோ எனின் மாத்திரைவகையான் பெரிதும் வேறுபாடுளது. அங்காப்பியைபால் ஓர்சார் சமமாதலுமுளது.

"யகரம் வரக்குறளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய."

மியா என்பது தனிமொழிக் குற்றிய லிகரம்.

## கஅ மகரக்குறுக்கம்.

மகரம், ஒன்று, அரை, கால், அரைக்கால் என்னு மாத்திரை பெற்றுவரும்,

உ—ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| எம்ம்மகளூங்கினிது, அளபெடையில் | | | ... | க. |
| மரம்பெரிது | ... | ... | ... | உ. |
| போன்ம் ... | ... | ... | ... | ங. |
| புலிபோன்ம் வளவன் ... | | ... | ... | ச. |

மகரம், மீகீழிதழுறப் பிறப்பது.
வகரம், மேற்பல் லிதழுறப் பிறப்பது.

ணகர னகர மெய்களுக்குப்பின் மகரமெய் வரினும், வகரத்துக்கு முன் மகரமெய்வரினும், இதழ்பொருந்துவது கடினமாகலின் மகர மெய்யின் ஒலிவடிவு முழுக்கவும் புலப்படா தாயிற்று.

## கசு மொழிமுத லெழுத்து.

மெய்யெழுத்துகளுள் க ச த ந ப ம வ ய ஞ ங என்பவை, இயற்கை யெழுத்துகளும் இயற்கை யெழுத்துகளின் வழிவந்தனவு மாகலின்; அச்சிறப்புடைமையும் நாவிற் கெளிமையுடைமையும் நோக்கி அவை மொழி முதலெழுத்தாகக் கொள்ளப்பட்டன. ல ர ள ழ ட ண ற ன என்பவை, செயற்கையெழுத்தும் செயற்கை யெழுத்தின் வழிவந்தனவும் அவற்றின் சந்தியெழுத்துகளும் ஆகலின் அச்சிறப்பின்மையும் நாவிற்குவருத்த முண்மையும் நோக்கி மொழி முதலெழுத்தாகக் கொள்ளப் படாவாயின.

ல என்பது முதன்முதலுண்டாகிய செயற்கை யெழுத்தாம். ர ள ழ என்பவை லகரத்தின் வழி வந்தனவாம். ட ண ற ன என்பவை ள ல என்பவற்றின் இயைபாலாகிய சந்தி யெழுத்துகளாம்.

லகரமுதலிய அச்செயற்கை யெழுத்துகளெட்டும் நாவானது வளைந்து அண்ணத்தைத் தொடலால் பிறப்பனவாகலின் அச்செ

யற்கை யெழுத்துகளுக்கு நாவினது முயற்சி மிகவும் வேண்டுமென்பது.

பாற்றிரளையுள் மருந்தினை மறைத்துண்பித்துக் குழந்தைகளை வளர்ப்பதுபோல, அச்செயற்கையெழுத்துகளை யியற்கை யெழுத்துகளி னிடையிலேனும் கடையிலேனும் அமைத்து முதன்மக்கள் நாவினது வன்மையை மெல்லவளர்த்தனரென்க.

உலகத்து முதன்மக்கள் தமது கருத்துகளை, கைமுதலியவற்றின் குறிப்பாலும் பின்னர் அவற்றோடு கட்குறிப்பாலும் அதன் பின்னர் ஒலிக் குறிப்பாலும் அறிவித்தும் அறிந்தும் மகிழ்வாராயினர். புள் விலங்கு முதலியவற்றின் ஒலிக் குறிப்பினும் முதன் மக்களது ஒலிக் குறிப்புகள் பன்மடங்கு சிறப்புடையன வெனக் கூறல்வேண்டும். அவ்வொலிக் குறிப்புகளே உலகத்து முதன் மக்களது பாழையாம். அக்காலமே உலகத்துக்குங் குழந்தைப் பருவமாகும். குழந்தைகளினாவிற்கு உயிரெழுத்துகள் எளிமையும், மெய்யெழுத்துகள் கடினமுமாம்.

உயிரெழுத்துகளுள்ளும் அகரமுதலியன எளிமையும் ஐ ஔ என்பன கடினமும் ஆம். ஐ ஔ என்பவற்றுள் ஐகாரம் எளிமையும் ஔகாரம் கடினமுமாம்.

அ ஆ என்பன அங்காப்பும், இ ஈ முதலியன அங்காப்பினையும், உ ஊ முதலியன இதழ்குவிவு முடைமையின்; அவைமுறையே எளிமையும் கடினமும் ஆகின்றன. அ ஆ என்பனபோல இ ஈ முதலியன எளியன ஆகா. இதழ்குவித்தல் கடினமாகலின் குழந்தைகள் கொம்பு, சொம்பு, பாம்பு முதலியவற்றைக் கொம்பா, சொம்பா, பாம்பாஎன வுச்சரிக்கும்.

அய்இ என்பவற்றுள் அகரம் அங்காப்பும் ஏனைய இரண்டும் அங்காப்பினையும்;

அவ்உ என்பவற்றுள் ஏனைய இரண்டும் இதழ்குவிவும் உடைமையின், ஔகாரம் ஐகாரம்போல் எளிதாகாமல் கடினமாகின்றது. ஐகாரம்உண்டாய் நெடிதுகாலம் பின்னரே ஔகாரம் உண்டாயிருத்தல் வேண்டும். அ ஆ முதலியவற்றுள் ஐகாரம் கடினமாகலின்

அடை குடை முதலியவற்றைக் குழந்தைகள் அட குட முதலியன வாக உச்சரித்தலைக் காண்க.

கச தந பம வய ஞங என்பன இயற்கை யெழுத்துகளாகலின் எளிமையும், லர ழள டண றன என்பன செயற்கை யெழுத்து களாகலின் கடினமும் ஆகின்றன.

குழந்தைகள் சட்டியைச் சச்சியென்னும். இவ்வியற்கை யெழுத் துள்ளும் செயற்கை யெழுத்துள்ளும், ஒன்றற்கொன்று எளிமை யும் கடினமும் உடைமையைக் குழந்தைக் குழாத்துளே நுணுகி ஆராய்ந்து கொள்க.

இன்னும் குழந்தைகள் ராமன் என்பவனை ஆமா என்றும், சிறிதுநாவு முதிர்ந்தபின் லாமா என்றும், மற்றும் சிறிதுநாவு முதி ர்ந்தபின் ராமா என்றும் அழைத்தல் கூடும்.

ராம: రామః எனின் குழந்தைகள் நாவன்மைக்குத்தக்கவாறு ஆமா என்றேனும் லாமா வென்றேனும், ராமா வென்றேனு அழைத் தல் கூடும். ராம: என்றுச்சரிக்கவே மாட்டா. கற்றுப்பழகிய நாவிற் கே அவ்வுச்சரிப் பெளிதாகும்.

ర ర్దః రజ్జః రలాః முதலியனவும் அங்ஙனமே.

நாநார்த்த ரத்தினமாலை யென்னும் நிகண்டில் நாய: என்றுள் ளது, விசுவமேதினி நிகண்டில் న్యాయః என்றுள்ளது, உலகவழக்கில் நாயம் என்றுள்ளது.

ஞாயம் நாயத்தின் திரிபு.

இவ்வுச்சரிப்புள் நாயம்என்பது நாவிற்கெளிதாகவும் நாய: என் பது கடினமாகவும், న్యాయః என்பது அதனினும் கடினமாகவும், న్యాయ్యః என்பது அதனினும் கடினமாகவும் இருத்தலின்; எளிதாய நாயமென்பதே இயற்கைச்சொல் என்பதும் ஏனைய செயற்கைச் சொல் என்பதும் பெறப்படும்.

நாமுதிர்ச்சிபெறாத முதன்மக்கட்குக் கடினமாகிய வுச்சரிப்பு களை எடுத்துச் சொல்லின், அவர்கள் அறிதலு மொண்ணாது; இன் புறுதலும் ஒண்ணாது; அது கற்பிக்கு முறைமையு மாகாது.

டண முதலிய செயற்கை யெழுத்துகள் எட்டும் நாவிற்குக் கடினமாகலின் அவை மொழிமுதல் ஆகாவாயின.

௧. டடடம்
௨. ணணணம்
௩. ரரரம்
௪. லலலம்
௫. ளளளம்
௬. ழழழம்
௭. றறறம்
௮. னனனம்
௯. டணரலம்
௧௦. ழறலளம்

இங்ஙனம் சொற்களிருப்பின் நாவன்மை யுடையார்க்குங் கடினமாகும்.

௧. கடடம்
௨. சணணம்
௩. தரரம்
௪. நலலம்
௫. பளளம்
௬. கழழம்

இங்ஙனம் இயற்கை யெழுத்து முதற்கண்வரின் அத்துணைக் கடினமாகா.

கடலோரத்திலூரா லுருள்கின்றது
கிழவனுழுத புழுதியிலே
கிண்டி முளைத்த பனையோலை
கீழேழோலை மேலேழேழோலை,

இவற்றில் செயற்கை யெழுத்துகள் மிகவாகலின் மெல்லச் சொல்லினும் குழறு படையாம்.

௧. மகம் நதம்
௨. கயம் வசம்

இங்ஙனம் முற்றும் இயற்கை யெழுத்தேவரின் எளிதாகும்.

௧. ஆகம் ஏகம்
௨. ஏமம் ஓமம்

இங்ஙனம் உயிர்வரின் பெரிதும் எளிதாகும்.

௧. வாரிசம்
௨. தாமரை
௩. வாகடம்
௪. ஆலயம்

இங்ஙனம் இரண்டும் கலந்துவரின் சமநிலையாகும். அஃதாவது கடினமும் எளிமையும் அன்மை.

இதனானே கனைத்தல் உரப்பல்களும், ஜீ த்ரீ ஜ்ஞ முதலிய சம்யுத்தங்களும் விசர்க்கங்களும், பிறவும் கற்றுப்பழகி முதிர்ந்த நாவிற்கே எளியனவாமென்பது தேற்றம். ஙகரம் பிறப்பிற் கடைப்பட்ட எழுத்தாகலின் அம்முதன் மொழி சிலவாதலும் இறுதிமொழியின் றாதலுங் காண்க.

வடமொழிக்கண்ணும் ஙகர முதன் மொழி சிலவேயாம்.

"பன்னீருயிருங் க ச த ந ப ம வ ய

ஞங வீரைந்துயிர் மெய்யு மொழி முதல்" (நன்னூல்)

இவ்வொரு சூத்திரமே தமிழ், ஆரியத்திற்கு முற்பட்டதென்பதை வலியுறுத்தற்பாலது.

இஃது தமிழ் மொழி யொன்றற்கே சிறப்புச்சூத்திரமாம்.

ஓர் சிறப்புச்சூத்திரம் ஆயிரம் பொதுச்சூத்திரங்களைத் தள்ளும்.

"ல ர ள ழ ட ண ற ன என விவை யெட்டும் மொழி முதலாகா எழுத்தென மொழிப" என்பது உரைச்சூத்திரம்.

| | | |
|---|---|---|
| க. | இலேக்கறி | லேக்கறி |
| உ. | நிரம்பல் | ரம்பல் |
| ௩. | திருப்புரல் | ருப்புரல் |
| ௪. | தோலி | டோலி |
| ௫. | இறக்கை | றெக்கை |
| ௬. | இரட்டு | ரெட்டு |
| எ. | தேவணி | டேவணி=முதற்பணம் |
| அ. | கராசம் | ராகாசம்=ஓர் கற்றுறைழ |
| கூ. | தோள் | டோளி=தோள் (கொங்கணம்) |
| க0. | உராலு | ரோலு (தெலுங்கு) |
| கக. | இலது | லேது |
| கஉ. | ஆலால | லால=சிவப்பு (மாடம்) |
| க௩. | கூடாரம் | டேரா |
| க௪. | குலாரி | ரேகுலா=ஓர் வண்டி |
| க௫. | தவுல் | டவுல் |

இலக்கறி முதலியன நாமுதிர்ச்சியால் லக்கறி முதலியன வாக வந்தன.

வாரணமென்பது லவணம் என நிலைமாறி உப்பினை யுணர்த் திற்று.

வாரணம்=கடல், கடனீராலாவ தென்பது.

பிறவு முணர்ந்து கொள்க.

உ0 மொழியிறுதி.

மலையாள முதலியவற்றில் அகர ஈற்றுச் சொற்கள் பல வாம். தமிழிலும் அவ்வீற்றுச் சொற்கள் சிலவுளவாம்.

ஐகார ஈற்றுச்சொற்கள் தமிழின் மாத்திரமுள்ளன. ஏனைய மொழிகளில் அவ்வீற்றுச் சொற்களில. ஐகாரம் செயற்கையெழுத் தாகலின் அவ்வீற்றுச் சொற்களும் செயற்கைச் சொற்களேயாம்.

உ—ம்

| | |
|---|---|
| புழ=நதி. | மலையாளம். |
| மர=மரம் | கன்னடம். |
| முசல=உலக்கை. | மராடம். |
| விள=விளா. | தமிழ். |

உக ஒலி வடிவு

அச்சம், கச்சு என்பவற்றுள் சகரத்தினொலி இயற்கையொலிவடிவாம். பசி, கசிவு என்பவற்றுள் சகரத்தினொலி செயற்கை யொலி வடிவாம். உகுதல். செய்பவன் என்பவற்றுள் ககர தகர பகரங்களும் ஒலி வேறு படல் காண்க.

தங்கம், பஞ்சு, வண்டு, பந்து, கம்பு, நன்று, என வன்கணம் மென்கணத்தோடு சேரும்பொழுதும் ஒலி வேறு படும்.

"தத்தந்திரிபே சிறிய வென்ப"

என்பர் தொல்காப்பியர்.

"எடுத்தல் படுத்தல் நலிதலுழப்பிற்
றிரிபுந்தத்தமிற் சிறிதுளவாகும்"

என விளக்குவர் பவணந்தியார்.

இவ்வெடுத்தல் படுத்தல் நலிதலாய சந்தங்களே தமிழ்க்குரி மையாவன.

படுத்தல் இயற்கையும், ஏனைய அணுக்க வினையுடைய செயற் கையு மாகிய சந்தங்களாம்.

உஉ. வரிவடிவு.

அகல மென்பவற்றுள் முதற்கணின்ற அ என்னும் எழுத்தி னின்றே, மற்றைய உயிரெழுத்து மெய்யெழுத்து உயிர்மெய்யெழு த்து என்ற எல்லா வெழுத்துகளும்; வரிவடிவு பெற்றன.

புள்ளிபெறுதல், புள்ளியுங்கோடுமுடன் பெறுதல், கால் பெ றுதல், மேலுங்கீழும் விலங்கு பெறுதல், கோடுபெறுதல் முதலியன அவ்வரிவடிவிற்கு அறி குறிகளாம்.

“புள்ளியில்லா வெல்லாமெய்யும்” என்ற தொல்காப்பிய சூத்தி ரத்தின்கீழ் கி கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு கூ முதலி யன கீழ் விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடுபெற்றன. கா ஙா முதலியன புள்ளிபெற்றன. அருகேப்பற்ற புள்ளியை யிக் காலத்தார் காலாக எழுதுவார். மகரத்துக்கு இரண்டு புள்ளியுள் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர். கொ கோ ஙொ ஙோ முத லியன புள்ளியுங் கோடு முடன் பெற்றன; என்பர் நச்சினார்க்கி னியர்.

| | பண்டை வடிவம், | இற்றை வடிவம். |
|---|---|---|
| புள்ளிபெறுதன | அ ஆ க ங | அ ஆ க ங |
| புள்ளிபெற்றன | எ் ஒ் க் ங் | எ ஒ க் ங் |
| மேல் விலங்கு பெற்றன | கி கீ சி நீ, | கி கீ சி நீ |
| கீழ் விலங்கு பெற்றன | கு கூ, | கு கூ |
| கோடு பெற்றன | /க /ங, | கே ஙே |
| புள்ளியுங்கோடும் உடன் பெற்றன | ¡க ¡ங | கெ ஙெ |
| கோடும் பக்கப்புள்ளியுமுடன் பெற்றன | /க. /ங. | கோ ஙோ |
| புள்ளியுங்கோடும்பக்கப்புள்ளியுமுடன் பெற்றன | ¡க. ¡ங. | கொ ஙோ |

| | | |
|---|---|---|
| பக்கப்புள்ளி பெற்றன. | க. ங. | கா ஙா |
| முன் இரட்டைப்புள்ளி பெற்றன. | ..க ..ங | கை ஙை |
| பின் இரட்டைப்புள்ளி பெற்றன. | !க.. !ங.. | கௌ ஙௌ |
| மேலிரட்டைப்புள்ளி பெற்றன. | | ப். ம் |

இங்ஙனம் அறிஞர் யாழ்ப்பாணப் ஆ முத்துத்தம்பிப்புலவர் கூறுவர்.

"உட்பெறு புள்ளியுருவாகும்மே" (தொல்காப்பியம்)
என்னெனின் பகரத்தின் மகரத்தினிடை வரிவடிவு வேற்றுமை செய்தனுதலிற்று.

புறத்துப் பெறும்புள்ளியொடு உள்ளாற் பெறும்புள்ளி மகரத்திற்கு வடிவாம். அஃதின்மை பகரத்திற்கு வடிவாம்.

உ-ம் ப் ப் எனக்கண்டு கொள்க என்பர் உரையாசிரியர். அஃதின்மை=புறப்புள்ளி யின்மை.

ம. இது பத்தென்னும் எண்ணுப்பெயரின் வரிவடிவு. இக்காலத்து ம இங்ஙனம் சிறிது வேறுபட்டுள்ளது. அவ்வரிவடிவு பத்தென்பதன் முதலெழுத்தாகலின் அக்காலத்துப் பகரம், இக்காலத்து மகரம்போன்றிருந்ததென்பது விளங்குகின்றது. விளங்கவே இப்பொழுது கிரந்தத்துள்ள மகரத்தின் வரிவடிவுணர்த்தற்கு அச்சூத்திரம் எழுந்ததென்பது.




இப்பொழுது அச்சூத்திரத்தின்பொருள் விளங்குதல் காண்க அப்புறப்புள்ளியின்மை பகரத்திற்கு வடிவாம். ம இதிலுள்வளைந்திருத்தலின் உட்புள்ளியென்றார். புறப்புள்ளியின்றேல் (ம) பகரத்திற்கும், மகரத்திற்கும் வேறுபாடின்மையின் "உட்பெறு புள்ளியுருவாகும்மே" என்றனர். உரையாசியர் காலத்தும் அவ்வரிவடிவிருந்தமையின், அறிந்துரை கூறினர். உதாரணத்தைப் பிற்காலத்தார் அக்கால வழக்குப்படி வேறு படுத்தினர்.

அ என்னும் எழுத்தைத் திருநீற்றின்கண்ணேனும், மைப்பலகைக்கண்ணேனும், உண்மை வடிவு குலேயாது பெரியதோர் வடிவாக வரைந்திடின், எல்லா வெழுத்துகளுக்கும் அவ்வவற்றுக்குள்ள வரிவடிவு தோன்றுதல் காண்க.

ஆயின் சில எழுத்துகள் தம்முதலெழுத்தினது வடிவே வடிவாகப்பெற்றுள்ளன. நகரம் தன் முதலெழுத்தாகிய ஞகாரத்தினது வடிவு பெற்றுள்ளது! க ச த, ஞ ந ங; என்பவற்றுள் முதலெழுத்தினது வடிவு காண்க.

அகரத்தை யெழுதத்தொடங்குங்கால் வலம்போதலால், தமிழெழுத்துகள் வலம்புரி யெனவும், அவையே சிறந்தன வெனவும் கொள்க.

இடம்புரிச்சங்காயிரத்து நடுவே வலம்புரிச்சங்கிருத்தலானும், வாழைக்குருத்து நந்தியாவட்டப்பூ முதலியன வலமாக முறுக்கவிழ்கின்றமையானும், கோள்கள் அந்நடை பெறுகின்றமையானும், பாம்பு முதலியன வலம்பட வட்டித்துக்கண்டுயில் செய்கின்றமையானும், வலம்புரியே சிறந்ததென்க.

அவ்வலம்புரியாற் பயன் என்னெனின் அது இயற்கை நிகழ்ச்சியாகலின் எழுதுதற்கு எளிதாதலே பயனென்க.

அற்றேல் தமிழெழுத்துகளுட் சிறுபான்மையும், தெலுங்கெழுத்துகளுட் பெரும்பான்மையும், இடம்புரியாயவாறென்னெனின் வலம்புரியாக எழுதி எழுதிப்பயின்றமின், அங்ஙனமாயிற்று.

இவ்வரிவடிவு, ஒலிவடிவுண்டாய நெடுநாகாலத்துக்குப் பிறகுண்டாயிருத்தல் வேண்டும்.

அற்றேல் எல்லா வெழுத்துகளுக்கும் வரிவடிவு அகரத்தாலுளவாகின்றன. அவ்வகரத்துக்கு வரிவடிவு எங்ஙன முண்டாம் பிறவெனின், ஆய்தவெழுத்தினின்றே அகரத்துக்கு வரிவடி வுண்டாகின்றதென்க!

அற்றேல் ০ ০ ০ இங்ஙனம் நேர்படவாவது ०० இங்ஙனம் கீழ்நோக்கவாவது எழுதாமே ஃ இங்ஙனம் முக்கோண வடிவுபட எழுதியதென் குறிப்பெனின்

அம்முப்புள்ளி யியற்கை யெழுத்துகளுக்கு இனமென்று முற்கூறலின், அவ்வியற்கை யெழுத்துகளாகிய **அகம்** என்பவற்றை ஒலிக்குங்கால் அகரம் கண்டத்தினின்றெழுந்தும், ககரம் அண்ணத்து மேனோக்கியும், மகரம் இதழினிடத்தும் வரலின், அந்நடையினைக்குறித்ததென்க. அம்மூன்றெழுத்துகளையும் முறையே உச்சரித்துப்பார்த்து, அந்நடையுண்மை காண்க. 'எனவே அடியினின்றெழுந்து மேனோக்கிக் கீழிறங்குவதென்பது.

இயற்கையெழுத்துகளுள் ககரமானது மேலிருந்துண்டாதலால் அக்ககரத்தின் திரிபாகிய ஆய்தவெழுத்துக்கும் மேலிடம் பிறப்பிடமாயிற்று. மாத்திரையும் ககரமெய்ம்மாத்திரையாம். ஆய்தவெழுத்து அகரத்துக்கு முன்னிற்றலால், அகரம்போல் முயற்சியுள் அங்காப்புடையதாயிற்று, "ஆய்தக்கிடந்தலை யங்காமுயற்சி" (நன்னூல்) ஆய்தவெழுத்தினது வடிவே வடிவாக அகரவெழுத்துப் புலப்படலான், எல்லா வெழுத்துகளும் வட்டெழுத்தாய், பின்னர்க் கோலெழுத்தாய், அதன் பின்னர்ச்சதுரெழுத்தாய் வேறுபட்டன என்பர்! வரியென்பதற்கு வட்டெழுத்தென்பதே முதற்பொருள். வரிதல் வரைதல் என்பனவும் அப்பொருளன. வட்டெழுத்து விரைவு முதலிய காரணத்தால் கோலெழுத்தாயிற்று. வட்டெழுத்திலும் கோலெழுத்திலும் சதுரெழுத்தெழுதுதல் கடினமாகும். முடங்கலில் ஆணிகொண்டெழுதல் அதனினுங் கடினம். இக்கடினப்பாடு நெடிதுகாலமாக எளிதுபட நடை பெறுகின்றமையின், அது தொன்று தொட்ட பயிற்சியை விளக்குகின்றது. இவையெல்லாம் தமிழ் பழமையானதென்பதற்குச் சான்றும்

தெலுங்கெழுத்துகள், வட்டவடிவமாக அமைந்திருத்தலே அக்காலத்துத் தமிழெழுத்துகள் வட்டமாக அமைந்திருந்தன! என்பதற்கு ஓர்! அறிகுறியாம். 'எனவே தமிழெழுத்துகள் வட்டவடிவமாக அமைந்திருந்த காலத்துத்தெலுங்கெழுத்தாக்கப் பட்டதென்க. கன்னடவெழுத்தும் தெலுங்கெழுத்துப்போலாம்; மலையாளவெழுத்து, கன்னடத்தையொக்கும்; தமிழின் மரூஉவாகிய பாளி

யெழுத்தை நோக்கின், எழுத்தெல்லாம் முதலில் ஆய்தவெழுத்துப் போலவே வட்டவடிவாக இருந்தனவென்றே கொளல்வேண்டும்.

முதல் முதல் அ, இ, உ என்பவை முறையே ஃ, ೦ ೦, ೦ இங்ஙன மிருத்தல் கூடுமெனக் கருதுகின்றனம், ஃ, ೦/೦, ೦—முறையே ஆகார ஈகார ஊகாரமாம். பிறகு ஈகாரம் ஈ இங்ஙனம் வேறு பட்டது. பிறவு முணர்ந்து கொள்க,

அற்றேல் ஆய்தவெழுத்து அவ்வடிவு பெறுமாறென்னையெனின்? நன்று. அகரத்தினது பிறப்பிடமாகிய உந்தித்தானத்தினது வடிவும், ககரத்தினது பிறப்பிடமாகிய ஆகாயத்தினது வடிவும், மகரம்போன் மோனமாய் நிற்கும் சூரியனது வடிவும், வட்டவடிவாகலின் அவற்றைக் குறித்தற்கு அவ்வடிவைப்பெற்றதென்க. மகரம் சூரியனை யுணர்த்தல் இக்காரணமாம். அல்லதூஉம் விச்சாதிபதியாகிய சூரியன் தோன்றுகிற திசைகிழக்காகலின், அகம் எனின் இறுதிநின்ற மகரம் நேர்படச் சூரியனைக்குறித்தலும் ஒன்று. கிழக்கே முதற்றிசையாம். எல்லா வுயிர்களும் அத்திசையே நோக்கா நிற்கும். அண்ணம் வட்டவடிவாகலின், ககரத்தினது பிறப்பிடமாகிய அண்ணத்தினது வடிவமெனலு மொக்கும்.

## உகூ. வரிவடிவின் விளக்கம்.

மக்கள் முதல் முதல் எழுத்தாணி கொண்டெழுதுதல் கூடாதாகலின், மூங்கின் மடலைச்செவ்வனஞ் செய்து, அதன்கண் இறகினாலே சித்திரவெழுத்துகள் எழுதியெழுதிப் பயின்றபின்னே யெழுத்தாணியால் பனையோலையிலெழுதத் தலைப்பட்டனரென்க. மடலென்பது மூங்கின் மடலையும், இனமாகிய பனைமடலையு முணர்த்தும்.

நெடுங்கணக்கு, ஓலைக்கணக்கு முதலிய சொற் காரண முணரின், சீனக்கடிதம்போலகன்றுள்ள மூங்கின் மடல் அக்காலத்திருத்தல்வேண்டும். அம்மடலுடைய மூங்கிலை ஓலைமூங்கிலென்பர். ஓலைமூங்கிலெனினும், மடல்சிறந்த மூங்கிலெனினுமொக்கும். இக்காலத்தும் அதுபோன்ற மூங்கிலுளது.

நெடு+கணக்கு=நெடுங்கணக்கென்றாயிற்று, நெடு=மூங்கில்; கணக்கு=நூல்; மூங்கின் மடலின்க ணெழுதப்பட்ட நூலென்பது பொருள். மூங்கிற் கடிதத்தி லெழுதப்பட்ட நூலெனவு மொக்கும்.

எழுத்து, வருண முதலிய சொற்களால் அக்காலத்துச் சித்திரவெழுத்திருந்தமை பெறப்படும்.

சூரியனை யுணர்த்தும் எல் என்னுஞ் சொல்லினின்று எழுத்தென்பது பிறந்தது.

எலுத்து—எளுத்து—எழுத்து.

து-பெயர் விகுதி

சூரியனிடத்துள்ள பஞ்சவருணங்களால் சித்திரிக்கப்பட்டதென்பது பொருள்.

எழுத்து=சித்திரம். எழுத்துப்புடவை=சித்திரப்புடவை.

வருணமென்பது ஐந்து நிறம்; அந்நிறங்கொண்டெழுதப்படும் எழுத்தாக்காயிற்று. ஓலைக்கணக்கரென்பது, மாணவரையும் புலவரையு முணர்த்தி நிற்கும். ஓலை யென்பது மூங்கின் மடலாகலின் அதன்கணுள்ள செய்யுள்களை ஆராய்வாரென்பது பொருள்.

ஓலைக்கணக்கரென்பது மாணவரை யுணர்த்துங்கால், மூங்கின் மடலி லெழுதப்பட்ட எழுத்தினைக்கற்போர் எனவும் ஒக்கும்.

ஓலைக்கணக்கு+அய்யரென்பது ஓலைக்கணக்காயரெனவாய்க் கற்பிக்கும் ஆசிரியரை யுணர்த்தும். அய்யர்=ஆசிரியர்.

"கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்"

என்பதில் கணக்காயர் என்பது ஓலைக்கணக்காயரென்பதன் முதற்குறை.

முடங்கலென்பது மூங்கிலையும், மூங்கின்மடலையும் பனையேட்டினையு முணர்த்தும். சுவடி யென்பது சுவடென்னும் சொல்லிற் பிறந்ததாகலின், பனையேட்டின்கட் சுவடுபட எழுதப்படுவதென்பது பொருள்.

இன்னும் அக்காலத்தில் பூர்சபத்திரத்தில் குங்குமம், பச்சைக் கற்பூரம் முதலியவற்றாற் கூட்டப்பட்ட குழம்பினாலே எழுதி வந்தனர்.

காளிதாசர், ஓர் நாடகத்தில் ஊர்வசி புரூரவச்சக்ரவர்த்திக்குப் பூர்சபத்திரத்திற் சேதி தெரிவித்தனளென்பர். பூர்ச பத்திரமாவது ஓர்மரத்தின்பட்டை. அது மஞ்சணிற நார்மடி போன்றுள்ளது. அபரகம்போலப் பிளவு படத்தக்கது; சீனக்கடிதம்போலே மெல்லிய தன்மையுமுடையது; கங்கை நீர் பெய்தகுப்பிக்கு அதனைக்கவசமாக்குவர். மந்திர முதலியன அதன்கண் எழுதிற் சித்தியாம். போகர் பூசபத்திரமென்பர். மஞ்ச ணிறமுடையதென்பது பொருள். முச்சிலிக்கை யென்பது மூங்கின்மடற்சாசனமெனவும், பட்டா பட்டயம் என்பன தாம்பிரசாசனமெனவும் பொருள் படும்.

௨௪ மயக்கம்.

செயற்கை யெழுத்தாகிய லள னணக்கள், இயற்கை எழுத்தாகிய தநக்களோடு இருவழிக்கண்ணு மயங்கா; லளக்கள் இயற்கை யெழுத்தாகிய மகர ஞகரங்களோடும், யகரம் யகரத்தோடும் இருவழிக்கண்ணு மயங்கா.

ணனக்கள், மகர ஞகரங்களோடும், ல ள ன ணக்கள் வகரத்தோடும், இருவழிக்கண்ணு மயங்கும்; க ச ட த ப றக்கள் தத்தம் இனத்தோடு மயங்கும். ய ர ல ள ண னக்கள், க ச பக்களோடு அல்வழி வேற்றுமைப் பொருளுக்குப்படி போகும். ழ க ர மும் அற்று. ஈண்டு யகரம் தனிக்குறிலைச் சாராத யகர வீறு.

௧. கல்தீது எனின் நாவிற்குக்கடினமாகும்.
கற்றீது எனின் நாவிற்கெளிதாகும்.

௨. கல்மலை எனின் நாவிற்குக்கடினமாகும்.
கன்மலை எனின் நாவிற்கெளிதாகும்.

௩. சேய்யாவன் எனின் நாவிற்குக்கடினமாகும்.
சேயாவன் எனின் நாவிற்கெளிதாகும்.

இதனானே மயங்காதன நாவிற்குக்கடினமும், மயங்குவன நாவிற்கெளிமையுமாதல் காண்க.

தமிழ்ச்சொற்களும் சொற்றொடர்புகளும் இந்நடை பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| க. | சக்தி | ரு. | பத்மம் |
| உ. | புஸ்தகம் | சா. | கல்பம் |
| ந. | சப்தம் | எ. | சுக்லம் |
| ச. | அத்புதம் | அ. | வக்ரம் |

இவை யெல்லாம் மயங்காதனவாகும். இந்நடை நாவு முதிர்ச்சி பெற்றபின் உண்டாயின. அக்கம், அச்சம், அண்ணன், அத்தன், அப்பன், அம்மை, அய்யன் முதலிய உடனிலை மெய்ம்மயக்கச்சொற்கள் நாவிற்கெளிமையாதலும்; கங்கன், கந்தன், வெட்கம், வண்டு, கன்று, கம்பம், வீழ்ச்சி முதலிய வேற்று நிலை மெய்ம்மயக்கச்சொற்கள், அத்துணை யெளிமையாகாமையு முணர்க.

தமிழிலுள்ள அம்மை, அப்பன், அண்ணன், அத்தை முதலிய முறைப்பெயர்கள், உடனிலைமெய்ம்மயக்கச் சொற்களாக அமைந்திருக்கின்றன.

இவை யெல்லாம் தமிழ், உலகம் குழந்தைப்பருவமாக இருந்தகாலத்து உண்டாயதென்பதை வற்புறுத்துகின்றன.

| | | |
|---|---|---|
| ஆத்மா | ——— | ஆன்மா |
| கர்மம் | ——— | கன்மம் |
| ,, | ——— | கருமம் |
| பத்மம் | ——— | பன்மம் |
| ,, | ——— | பதுமம் |
| வாக்யம் | ——— | வாக்கியம் |
| அம்சம் | ——— | அஞ்சம் |
| ,, | ——— | அமிசம் |

மயங்காதன நாவிற்குக் கடினமாகலின், எளியனவாம்படி தமிழில் மயங்குவனவாக எழுதுவர்.

மயங்குவன இயற்கை யுச்சரிப்பெனவும், மயங்காதன செயற்கை யுச்சரிப்பெனவும் அறிந்து கொள்க.

ஆரியத்துள் மயங்காதன அளவிறந்தன. மயக்க மெனினும், கூட்டமெனினு மொக்கும்.

"க ச த ப வொழித்த வீரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ர ழ வொழித்தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவுமுயிர்மெய் மயக்களவின்றே" (நன்னூல்)

௨௫. விளங்கவைத்தல்.

## "அ க ல ம்"

அ இ, அ உ, ஆ ஈ ஊ; க ச த, ச ய ஞ, ஞ ந, ஞ ங; ல ர, ல ள ழ; ம ப வ.

உயிர்ச்சந்தி

அ + இ = ஏ, எ
அ + உ = ஓ, ஒ
அ + ய் + இ = அய்இ
அ + வ் + உ = அவ்உ

மெய்ச்சந்தி

ள் + த = ட
ள் + ந = ண
ல் + த = ற
ல் + ந = ன

இயற்கையெழுத்து

அ ஆ இ ஈ உ ஊ, க ச த ய ஞ ந ங ம ப வ, ௧௬.

செயற்கையெழுத்து

ல ர ள ழ, ௪.

உயிர்ச்சந்தியெழுத்து.

ஏ எ ஓ ஒ ஐ ஔ, ௬.

மெய்ச்சந்தி யெழுத்து

ட ண ற ன. ௪.


ஆய்தவெழுத்து. ௧.

௧௬ + ௪ + ௬ + ௪ + ௧ = ௩௧ எழுத்துகள்.

---

௨.௬ எழுத்தியைபுவிளக்கம்.

## அ க ல ம்.




(அ ஆ, இ ஈ, உ ஊ,) (எ ஏ, ஐ, ஒ ஓ, ஔ) (அஃகேனம்) க ங, ச ஞ, (ட ண) த ந ப ம (யரல) (வ ழ ள) (ற ன)

௨.௭.

அ ஆ ஐ ஔ, இ ஈ எ ஏ, உ ஊ ஒ ஓ. என்னு மிவ்வினப்படியும், க ச த முதலியவற்றின் பிறப்பின்படியும், சொற்கள் திரிந்து வரும்.

ஒத்த இனமாகலின் ககரம் பகர மாகும்.

அகரம் ஏகாரமாகவும், ஓகாரமாகவும் வரும். சிறுவர்கள் அம்மா அம்மே, அம்மோ என்பர்.

"பெயர்வினை யிடத்து ன ள ர ய வீற்றயல்
ஆ ஓ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே" (நன்னூல்)

உ—ம்.

| | |
|---|---|
| சான்றார் | சான்றோர் |
| கிழவன் | கிழவோன் |

பாகதங்களில் இவ்வழக்கு மிகுதி

அ—மந்தரம்=குதிரைப்பந்தி
இ—மந்திரம்= ,,
உ—மந்துரம்= ,,
அ. அம்ப்லி= புளி
இ. இம்ப்லி= ,,
உ. உம்ப்லி= ,, (மராடம்)

பதங்களில் அகரம், இகரமுதலாகத் திரிந்தமைகாண்க

(அப்பக்கம்)——(உப்பக்கம்)

"ஊழையுமுப்பக்கங்காண்பர்"

---

## உ௮ அ+இ—ஏ வாய்பாடு.

அகரமும் இகரமும் சேர்ந்து ஏகாரமாயினமையின், அகர முதன் மொழிகள், ஏகாரமாகவும் எகரமாகவும் வரும்.

### உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| சண்பகம் | செண்பகம் | கல்லல் | கெல்லல் |
| கடகம் | கேடகம் | கந்தகம் | கெந்தகம் |
| பலம் | பெலம் | பந்தம் | பெந்தம் |
| கடுவு | கெடுவு | சகம் | செகம் |
| கதி | கெதி | சருமர் | செம்மார் |
| கலிப்பு | கெலிப்பு | பணை | பெணை |
| வாய்மை | மெய்மை | தத்தல் | தெத்தல் |

"சடசட விடுபெணை" (சு—தே)

"நெருங்கிய நெடும்பெணை" (சு—தே) பணை பனையாயிற்று. பெணை=பெண்ணையாயிற்று.மூங்கிலினமென்பது.பணை=மூங்கில்.

உ௯

அகர ஆகாரங்கள் எகர ஏகாரங்களாயினமையின். எகர ஏகாரங்களும் அகர ஆகாரங்களாகும்.

## உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| நொண்டு | நண்டு | ஏடா | அடா |
| செருக்கு | தருக்கு | பெருகல் | பல்கல் |
| செப்பட்டை | சப்பட்டை | சேளல் | களிறு=பன்றி |
| எவன் | யாவன் | வேளா | வாளா=சும்மா |

௩௦ அ+உ—ஓ வாய்பாடு.

அகரமும் உகரமும் சேர்ந்து ஓகாரமாயினமையின், அகர ஆகாரமொழிகள், ஒகர ஓகாரங்களாகும்.

## உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| சண்டன் | சான்றோன் | கறித்தல் | கொறித்தல் |
| சிறியார் | சிறியோர் | இந்தளம் | இந்தோளம் |
| தம்மன் | தம்மோன் | மனசிலை | மனோசிலை |
| கந்து | கொந்து | சுண்ணம் | சுண்ணோ |

கொந்து=கழுத்து, (தெலுங்கு)

சுண்ணோ=சுண்ணம்பு, (பாளி)

௩௧

## அய்இ=ஐ, வாய்பாடு.

இவ்வாய்பாட்டின்படி அகர ஆகார இகர ஈகார எகர ஏகாரங்கள், ஐகாரமாகும். மொழிமுதல் இடைகடைகளிலுங்கொள்க. அய்இ என்பதைப்பிரித்துக்கூட்ட ஏகாரமாகும்.

## உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| அய்யன் | ஐயன் | பயல் | பையல் |
| கசப்பு | கைப்பு | தடாவல் | தைத்தல் |
| பிணவு | பிணைவு | சேணம் | சேணை=அறிவு |
| மதாலம் | மதலை=கொன்றை | குடா | குடை |
| கடமா | கடமை | தயா | தயை |
| சிவம் | சைவம் | கிலாசம் | கைலாசம் |
| துளிதல் | துளைதல் | முசலி | முதலை |
| சீயெனல் | சையெனல் | சீதம் | சைத்தியம் |
| கேர்வளம் | கைவளம் | வேரியர் | வைரியர் |

துளிதல்—துளேதல்=துளி துளியாக நீரரும்பல்

"துன்பக்கண்ணீரிற்றுளேக்தேற்கு" (தா—பராபரம்)

கிலாசம்=பனிக்கட்டி

அகர இகரக்கூட்டுறவால் ஏகாரமானமையின், எகர ஏகாரமும் கொள்க.

அகர இகரங்களுக்கு ஆகார ஈகாரங்கள் இனம்.

## ௧௨ அய் இ=ஐ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின்படி ஐகார வீற்றுச்சொற்கள், ஆய் ஆகும். ஆகும்போழ்து இறுதி இகரம் நில்லாது.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| கழை | கழாய்=மூங்கில் | செவ்வை | செவ்வாய் |
| குழை | குழாய் | நாரை | நாராய் |
| கழுவை | கழுவாய் | நேரிழை | நேரிழாய் |
| தம்மை | தம்மோய்=தாய் | உரைதல் | உராய்தல் |

கழை—கழாய்இ எனவுச்சரித்தல் நாவிற்குக்கடினமாகலின், இகரம் நில்லாது போயிற்று. தம்மோய் அ. ஓ ஆயிற்று.

## ௧௩ அவ் உ=ஔ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின்படி அகர ஆகார உகர ஊகார ஓகாரங்கள், ஔகாரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| அவ்வை | ஔவை | சுண்டி | சௌண்டி |
| பவ்வம் | பௌவம் | முஞ்சி | மௌஞ்சி |
| வவ்வால் | வௌவால் | சூரம் | சௌரம் |
| கவ்வி | கௌவி | பூழியன் | பௌழியன் |
| சோகு | சௌகு=ஓர் மரம் | ஓவியம் | ஔவியம் |

ஓவியம்—ஔவியம்=பொறாமை. சித்திரக்கல்வியாலுண்டாவதென்பது.

ஓவியம்=சித்திரம்.

"பரனே பஞ்சவன் பௌழியன் சோழன்" ஐகார ஔகார முதன் மொழிகள் செயற்கையாவன அன்றி இயற்கையாகா.

ஆகாரத்துக்குப் பாகதங்களிற் காண்க.

அவ்உ என்பதைப்பிரித்துக்கூட்ட ஓகாரமாகும்.

இளா இளை, மாலா மாலை என இறுதி ஆகாரம் ஐகாரமாதல் போல ஔகாரமாகாத தென்னை யெனின், ஐகாரம்போல் ஔகாரம் நாவிற்கு எளிமையாகாமையின், இளா, மாலா என்பன இளௌ மாலௌ என ஔகாரமாகாமல் இளை மாலை யென ஐகாரமாயின. இவை யெல்லாம் நாவினது இயற்கையின்படியே அமைந்துள்ளன.

தண்ணீர், முட்டுப்பட்டுழிச்சிறிது சாய்விடத்தை நோக்கித் திரும்புவதுபோல, நாவும் எளிமை நோக்கித்திரும்பிவிடும். தண்ணீரின் இயற்கைநிகழ்ச்சியைச் சிறிது தடை செய்து ஆளுவதுபோல, நாவினியற்கை நிகழ்ச்சியைச் சிறிது தடைசெய்து ஆளல்வேண்டும்.

தண்ணீர்க்குச் சிறிது போக்கும் விடல் வேண்டும்; அல்லாக் கால் துன்பம் விளையும்.

௩௪ "அ ஐ முதலிடையொக்குஞ் ச ஞ ய முன்" சகரத்தினின்று யகரமும், யகரத்தினின்று ஞகரமும், பிறந்தமையானும்; ஐகாரத்தில் அகரமும், யகரமும் இருக்கின்றமையானும் அவ்விளையபுபற்றி, ச ஞ ய முன் உள்ள அகரம் ஐகாரத்தை யொத்து நடக்கும்.

அய்இ=ஐ

ச ய ஞ முன் அ ஐ ஒக்கும்.

ச ய ஞ முன் (அய்இ=ஐ) ஒக்கும்.

**உ—ம்.**

**பசல் பைசல், மயல் மையல், மஞ்சு மைஞ்சு.**

அய்இ=ஐ

ஐகாரத்திலுள்ள யகரத்தின்முன், அகரம் ஐகாரமாகவே யகரத்தை யொத்த சகர ஞகாரங்களுக்கு முன்னும் அகரம் ஐகாரமா

யிற்று. ச ய ஞ முன் எனின் நாவிற்குக் கடினமாகின்றமையின், எளிது படச் ச·ஞ ய என்பர்.

இவ்வாராய்ச்சியால் நாவினதியற்கை விளங்குமாறுகாண்க.

அய்இ=ஐ

யம்முன் அ—ஐ ஒக்கும்.
சம்முன் " " "
ஞம்முன் " " "

ச ய ஞ என்பது பிறப்பு முறைமை.

ச ஞ ய என்பது உச்சரிப்பு முறைமை.

௩௫ **ககரம் சகரமாதல்** நாவினியற்கையாகலின், சொற்களிலும் அங்ஙனமே யாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| கவரி | சவரி | கந்தன் | சேந்தன் |
| களங்கு | சழக்கு | கவடி | சவடி=பலகறை |
| கணு | சாணு | தூங்கல் | தூஞ்சல் |
| கவனன் | சவனன்=வேகி | எக்கட | எச்சட (தெலுங்கு) |
| கூலவண்டி | சூலவண்டி | அக்கரம் | அச்சரம்=ஓர்நோய் |
| காவி | சாவி | பளிக்கெனல் | பளிச்செனல் |
| காவல் | சேவல் | அருக்கன் | அருச்சனை=சூரியபூசை |
| கிட்டம் | சிட்டம் | மாகி | மாசி |
| காம்பு | சாம்பல் | வைசாகி | வையாசி |
| கிரி | சிரி (கன்னடம்) | விளக்கம் | வெளிச்சம் |
| காவடி | சாவடி | பங்கம் | பஞ்சம் |

கணு—சாணு=சாணளவு. மூங்கிலில் ஓர் கணுமுதல் மற்றோர் கணுவரையென்பது.

சூலவண்டி=பலசரக்கு வண்டி (பஞ்சதந்திர·காவியம்)

கூலம்=பலசரக்கு

காவி=சாவி. காத்தற் கருவி யென்பது.

காம்பு—சாம்பல்.

காம்பு மூங்கிலாகலின், இயல்பாக மூங்கிலெரிவதாலுண்டாவ தென்பது.

காவடி—சாவடி

வழிக்கா என்பது காவழி யென நிலைமாறிற்று. ழகரம், டகர மாகத்திரிந்தது. வழியிற் காவல் செய்வதென்பது.

"கவனன் சவனன் வேகமுடையோன்" (பிங்கல-நி)

கவடி—சவடி (சித்தியார்-பம்.)

"சேடகங் கடகந்தட்டி சேரும்வே திகையே வட்டம்
கேடகந்தோலினோடு கிடுகெட்டும் பலகையின்பேர்" (சூடாமணி-நி)

கேடகம்—சேடகமாயிற்று.

"காகமுங்கோரமும் வள்ளமுஞ் சகடமும்
சிகரமுஞ் சாகையும் வட்டிற்பெயரே" (பிங்க-நி)

கடகம்—சகடமாயிற்று. கடகம்=வட்டம்.

வட்டவடிவுடையதென்பது.

"சகடும் பண்டியும் சிகரமுஞ் சகடம்" (பிங்லை-நி)

"சகடக்கால் போலவரும்"

சகடம்—சகடு—சாகாடு. சகடு—சகடை.

சகடம்—சகடி=வட்டில்

அங்காரசகடி=கணப்புச்சட்டி.

சகடி—சட்டி

"தண்பனிவடந்தை அச்சிரம்"

"அரும்பனியளைஇய அச்சிரக்காலை"

அச்சிரம்=முன்பனிக்காலம் (ஐங்குறுநூறு)

அக்கிரம்=அச்சிரமாயிற்று.

அக்கிரம்=முன். அக்கிராசனதிபதி.

ஆடகம்—ஆடசம்=கண்ணாடி

ஒளிர்வது.

---

(பாளி)

ஒருவன் முனிந்து பேசுங்கால், நீ மூர்ச்சனே என்றனன். மூர்க்கன்—மூர்ச்சனாயிற்று

இவ்விலக்கணம், எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவேயாம்.

## ௩.சூ ககரம் சகரமாயினமையின், சகரமும் ககரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| சந்தம் | கந்தம் | சிறுக்கன் | கிறுக்கன் |
| சண்டி | கண்டி | சுரவை | கறவை |
| சமுகர் | காமுகர் | சேடு | கேடு |
| செழுமை | கெழுமை | சரி | கரி |
| செடி | கிட (கன்னடம்) | முசலி | முகரி=செந்தாமரை |

சந்தம், கந்தம் இவ்விரண்டும் வாசனையை யுணர்த்தும்,
"சந்தமாரகிலோடு" ——— (ச—தேவாரம்)
சண்டி—கண்டி=ஆணெருமை,
"எருமையாணினைக் கண்டியென்றலும்" (தொல்காப்பியம்)
சமுகர்—காமுகர்=நகரப்பதிவாழ்வோர்.
அரச சமுகத்திலுறைவோரென்பது.

சுரவை—கறவை பாற்சுரப்புடையது. கரவை கறவையாயிற்று.

பிரிவு பிறிவு, முரிவு. முறிவு என்பனபோல.

சேடு—கேடு (தெலுங்கு)

"செதுமதி மிகுசமணர்" (திருச்சிவபுரம் ச—தேவாரம்)

சேடு—செது வாயிற்று,

சரி—கரி=சாட்சி; ஒத்திருப்பது.
"வைய்த்திட்டுத் தெளிக்கரி" (நாலடியார்)

## ௧௭. சகரத்தினின்று யகரம் பிறத்தலின், சகரம் யகரமாகும்.

உ—ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சமன் | யமன் | அசம் | அயம்=ஆடு | |
| சாமம் | யாமம் | கசம் | கயம் | |
| நேசம் | நேயம் | வசம் | வயம் | |
| ஈசல் | ஈயல் | குசி | குயி | (கன்னடம்) |
| ஊசல் | ஊயலு (தெலுங்கு) | தந்து வாசர் | தந்துவாயர், | |
| வாசதண்டம் | வாயதண்டம் | காசா | காயா | |

வாயதண்டம்=படமரம்

தந்துவாயர்=நெய்வோர்,

"பயலைகொள்ளப்பலி" ———(ச—தேவாரம்)

பசலை—பயலையாயிற்று

"ஓய்யவொரு கதியினோடு" ——— (க—ராமா)

ஓய்யல்=செலுத்தல்.

ஓச்சல் ஓய்யலாயிற்று.

## ௧௮. சகரம் யகரமாகலின், யகரமும் சகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| வாயில் | வாசல் | கழியாடை | கழிசாடை |
| வியாழம் | விசாழம் | இயங்கல் | இசங்கல் |
| உயா | உசா | மையணி | மைச்சணி |
| மைதல் | மசிதல் | கொய்யகம் | கொய்சகம். |

"உயாவுத் துணையாக வயாவொடும்போகி" (மணிமேகலை)

உயா=வினு

கழிசாடை=ஓர் முட்டுத்துகில்

"இசங்கும் பிறப்பு" ——— (ச—தேவாரம்)

"மைச்சணி வரி யரி நயனி" ——— "

## ௩௯. யகரத்தினின்று ஞகரம் பிறத்தலின் யகரம் ஞகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| யமன் | ஞமன் | உராய்சல் | உராஞ்சல் |
| செய் + நின்ற | செஞ்ஞின்ற | காயா | காஞா (மலை, அ-தி) |
| மண் + யாத்த | மண்ஞாத்த | இந்திரசாலம் | இந்திரஞாலம் |
| பொன் + யாத்த | பொன்ஞாத்த | ஏழரையாட்டைச்சனி | ஏழரைஞாட்டைச் [சனி. |

இந்திரஞாலம் தவளைப்பாய்த்து.

"இந்திரஞாலங்காட்டிய வியல்பும்" (திருவாசகம்)

ஏழரைஞாட்டைச்சனி ஏழரைநாட்டைச் சனியென்பர்.

மண்ஞாத்த, பொன்ஞாத்த.

"ணனவென் புள்ளிமுன்யாவு ஞாவும்
வினையோரனைய வென்மனார் புலவர்" (தொல்காப்பியம்.)

## ௪0. ஞகரத்தினின்று நகரம் பிறந்தமையின், ஞகரம் நகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| ஞமன் | நமன் | விஞ்ஞானம் | விண்ணணம் |
| ஞானம் | நானம் | விஞ்ஞாபனம் | விண்ணப்பம். |

ஞான—நானம்=அறிவு.

"நனமிகுதொண்டர்" (திருநனிபள்ளி. ச—தேவாரம்)

நனம்=அறிவு,

நானம் நனமாயிற்று.

ணகரத்தில் நகர முண்மையின், அவ்வியைபு பற்றி ஞகரம் ணகரமாயிற்று.

நனம்—நனு—நனவு—நனவல்

## ௪௧. ஞகரம் நகரமாயினமையின் நகரமும் ஞகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| நயம் | ஞயம் | நாற்சி | ஞாற்சி |
| நெண்டு | ஞெண்டு | நாழல் | ஞாழல் |
| நாயில் | ஞாயில் | நன்னை | ஞஞ்ஞை |
| நாளி | ஞாளி | பூனை | பூஞை |
| நாட்பு | ஞாட்பு | பின்னை | பிஞ்ஞை=திரு |
| நாயர் | ஞாயர்=தந்தை | நாலம் | ஞாலம். |

நாயர் நாயன் என்பதன் பன்மை.

நாயன்=தந்தை, நச்சினார்க்கினியர் சிந்தாமணியில் நாயனர் என்பதற்குத் தந்தையென்பர்.

நாழல்=குங்குமமரம்,
"பைந்தஞாழல்கள் சூழ்" ——— (ச—தேவாரம்)
ஞஞ்ஞை=இன்பம்.

## ௪௨. சகரத்தினின்று தகரம் பிறத்தலின் சகரம் தகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| செருக்கு | தருக்கு | முசலி | முதலை |
| சிந்தம் | திந்தம்=புளியமரம் | சிஞ்சம் | திந்தம்=புளியமரம் |
| சித்திரம் | தித்திரம்=அரத்தை | வாசம் | வாதம்=வில்வம் |
| எச்சுதல் | எத்துதல் | கொச்சை | கொத்தை=அறிவின்மை |

"எச்சுமடியார்" ——— (ச—தேவாரம்)
"கொத்தைமேவள்" ——— (அ—தேவாரம்)
சிந்தபண்டு=புளி. ——— (தெலுங்கு)

இவைபுண்மையிற், சகரத்துக்குத் தகரம் மோனையாகும்.

## சஙு. சகரம் தகரமாகலின், தகரமும் சகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| தேறல் | சேறு=கள் | மீது | மீசு |
| கொதுகு | கொசுகு | பித்து | பிச்சு |
| இதழ் | ஈசல் | நிதி | நிசி=பொன் |
| அத்தன் | அச்சன் | இத்தி | இச்சி |

ஈசல்=ஓர் ஒலிக்குறி

இதழ்குவிப்பதாலாவ தென்பது.

"துவராடை, மீசுபிறக்கிய மெய்யனர்" (ச—தேவாரம்)

## சசு. இனமாதல் பற்றிக் ககரம்—பகரமாகும்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| கூவல் | பூவல்=கிணறு | தந்துகம் | தந்துபம்=கடுகு |
| கைமை | பைமை | செருகு | செருப்பு |
| கோங்கம் | போங்கம் | அஃகு | அஃபு |
| கசிதல் | பொசிதல் | இருக்க | இருப்ப |
| கூரையில்லம் | பூரில்லு (தெலுங்கு) | நினைக்க | நினைப்ப |
| காம்பு | பாம்பு=மூங்கில் | செருக்க | செருப்ப |
| வாணிகம் | வாணிபம் | அணைக்க | அணைப்ப |
| பலகம் | பலபம் | சிகுரம் | சிம்புரி=சும்மாடு |
| சக்கரம் | சப்பரம் | கலகம் | கலபா |
| ஒங்கல் | உம்பல்=யானை, | எங்கலித்தல் | எம்பலித்தல் |
| தருக்கு | தருப்பம் | அங்கு | அம்பர் |
| திருகல் | திரும்பல் | இங்கு | இம்பர். |

கைமை—பைமை=தவப்பெண்

அக்காலத்தில் கைம்பெண்டிர் தவம்செய்வது வழக்காகலின், கைமை பைமை யென்றாய், தவப்பெண்ணை யுணர்த்திற்று. கைமை =கைம்பெண்.

காம்பு—பாம்பு=மூங்கில்

இது பெங்காளியிலுள்ளது. பாம்பு நீட்சியுமாம்.

தருக்கு—தருப்பம்=கருவம்.

"தருப்ப மிகுசலந்தரன்றன்" ——— (௪—தேவாரம்)

சிகுரம்—சிம்புரி=சும்மாடு.

சிகுரம் மயிர்ப்பொதுவாகலின், கவரிமயிர், எலிமயிர் முதலியவற்றாற் செய்யப்பட்டதென்பது.

ஏங்கலித்தல்—ஏம்பலித்தல்=இரங்கல்.

"நின்றாள் சரணென்றேம்பலிப்பர்" (அ—தேவாரம்)

"ஏம்பலிப்பார்கட்கிரங்கு கண்டாய்" (அ—தேவாரம்)

நினைக்க இருக்க முதலிய செயவென்னும் வாய்பாட்டுவினையெச்சம் பகரமாகத் திரியும்.

## ௬௫. ககரம் பகரமாகலின், பகரமும் ககரமாகும்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| புளவி | குளவி | அருப்பம் | அருக்கம்=சீர்க்காக்கை. |
| பாப | காக | பசும்புல் | பைங்கூழ் |
| கடிப்பிணை கடுக்கன் | | சிலம்பு | சிலங்கை |

புளவி—குளவி=ஓர் வண்டு

புழுவைத்தன்னிற மாக்குவதென்பது. புளு—புளவி. வி—விகுதி.

கடிப்பிணை=காதணி

பாப—காக=சிற்றப்பன் ——— (கன்னடம்)

பாப=தந்தை, தந்தையொடு பிறந்தானென்பது. பசும்புல்=பயிர். ——————— (பிங்கல—நி)

"அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே" நினைப்பேன்—நினைக்கேன் ஆயிற்று.

சிறுவர்கள் பாக்கை, கக்கா என்பர்.

7

## சசு. பகரம்—மகரமாகும்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| பாணிக்கட்டு | மணிக்கட்டு | பண் | மண்=மார்ச்சனை. |
| பாணிபந்தம் | மாணிபந்தம்=மணிக்கட்டு. | பண்ணல் | மண்ணல் |

## சஎ. பகரம்—வகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| பகுப்பு | வகுப்பு | பன்றி | வன்றி |
| பேதகம் | வேதகம் | பிங்கம் | விங்கு |
| பயம் | வயம்=நீர் | பிம்பம் | விம்பம் |
| பீடம் | வீடம் | இடபம் | இடவம் |
| இறம்புளர் | இறவுளர் | கபோலம் | கவுள் |

"வீடமாக மறையோர் நறையூரில்" (ச—தேவாரம்)

"விங்கு விளை கழனிமிகு" (ச—தேவாரம் திருமாகறல்)

விங்கு=மஞ்சள்.

இறம்பு=மலை, இறவுளர்=குறிஞ்சிநிலமாக்கள்

## சஅ. வகரம்—பகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| வண்டி | பண்டி | விறப்பு | பிறப்பு=அச்சம். |
| வெள்ளி | பெள்ளி(கன்னடம்) | வைரி | பைரி=வல்லூறு. |
| வைராகி | பைராகி | உவரி | உபரி |
| கூவிடல் | கூப்பிடல் | வாவா | பாபா. |

உவரி=கடல். உபரி=மிகுதி.

"தண்ணென்—கதிர்வரவாற் பொங்குங்கடல்"

வகரம் பகரமாதல் கன்னடத்திலும் பெங்காளியிலும் மிகுதி.

## சகூ. மகரம்—வகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| மீசை | வீசை | தமனம் | தவனம் |
| குங்குமம் | குங்குவம், | செம்மை | செவ்வை |
| தமிடம் | தவிடம். | | |

இயைபுண்மையின் மகரத்துக்கு வகரம் மோனையாகும்.

## ரு0. வகரம்—மகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| வாவெனல் | மாவெனல் | விறல் | மிறல் |
| வேலி | மிளை=காவல் | வானம் | மானம் |
| சிறுவி | சிறுமி | பாவி | பாமி=கிணறு |

அத்துவம்—அத்துமம்=சித்தரத்தை. (கன்னடம்)

"செம்மான வொளிகொண்மேனி" (அ—தேவாரம்)

வகரத்துக்கு மகரம் மோனையாதலும் காண்க.

## ருக. லகரம்—ரகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| தாலாட்டல் | தாராட்டல் | குடல் | குடர் |
| அரிதாலம் | அரிதாரம் | சீலை | சீரை |
| வியல் | வியர்=பெருமை. | மாலி | மாரி |
| நாலி | நாரி | | |

நாலி=தென்னை ——— (போகர்—நி)

நாரி=தென்னை. நாரிகேளம். ——— உ—பதம்

மாரி=கள். மயக்குவதென்பது

மால்=மயக்கம்.

## ருஉ. ரகரம்—லகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| இருவேரி | இருவேலி | சக்கிரி | சக்கிலி |

இருவேலி=வெட்டிவேர். மிக்கமணமுடையதென்பது. இருமை=பெருமை. வேரி=மணம்.

சக்கிலி=தோல்வினைஞன்

இரண்டுசொலையும்வட்டித்துவைத்துத்தொழில்செய்வோனென்பது.

## ௫௩. லகரம்—ளகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| மாலிகை | மாளிகை | காலம் | காளம்=கருமை |
| பிங்கலம் | பிங்களம் | நாலி | நாளி |
| காகோலம் | காகோளம் | மஞ்சல் | மஞ்சள். |

=அண்டங்காக்கை. நாலி—நாளி=தென்னை

"நீளவளர்சோலைதொறு நாளிபல துன்றுகனி நின்றதுதிர"

(திருவைகா ச—தேவாரம்)

நாலி—நாளி. நாலி—நாரி.

நாரி நெய்யரியுமாம். தென்னையிலுண்டாவதென்பது.

## ௫௪. ளகரம்—ழகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| இளிவு | இழிவு | குறும்புள் | குறும்பூழ்=காடை |
| மூங்தூள் | மூங்தூழ்=மூங்கில் | புளை | புழை |
| மேளி | மேழி | தமிள் | தமிழ் |

"புளைகயப் போர்வைபோர்த்து" ——— (அ—தேவாரம்)

## ௫௫. ளகரம்—டகரமாகும். ள்+த=ட.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| அளவு | அடவு | வளம் | வடம் |
| சோளதேசம் | சோடதேசம் | குடதாளி | குடதாடி |
| சூற்கெளிறு | சூற்கெடிறு (சிந்தாமணி) | விளை | விடை |
| வெளிறல் | விடிதல் | களி | கடி=இன்பம் |

அளவு—அடவு

தாளத்தினிசையளவுக்குத்தக அடிபோடுவது.

வளம்—வடம்.

"வடமார் தமிழின்வல்லவர் நல்லவரே" (ச—தேவாரம்)

குடதாடி=குடப்போதிகை. குடம்போன்று தாங்குவதென்பது. ——— (சிந்தாமணி)

## ௫௬. ழகரம்—டகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| குழல் | குடல் | புழலை | புடலை |
| உட்டுளையுடையது. | | உட்டுளைக்கனியுடையது. | |
| ஈழம் | இடம்=பொன் | நெகிழி | நெகிடி |
| திகழ்தரு | திகடரு | கழி | கடி=மிகுதி |
| மேழகம் | மேடகம்=வெள்ளாடு | கைப்புழை | கைப்புடை=கைக்கவ |
| காவழி | காவடி | சாழி | சாடி [சம். |

"திகடரு சடைமுடியடிகள்" —— (௪—தேவாரம்)

காவடி வழிப்போக்கிற் கெளிதாய சாத்தணிடென்பது.

## ௫௭. தகரம்—டகரமாகும். ள்+த=ட.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| புகுத்தல் | புகட்டல் | உவர்த்தல் | உவட்டல்=வெறு |
| முகத்தல் | மூட்டல்=மொள்ளல் | அதிர்த்தல் | அதட்டல் [ப்பு |
| சங்காத்தன் | சட்டகன் | கதுப்பு | கடும்பு |

சட்டகன்=சகலபாடி.

தோளின்மேற் கைபோட் டுறவாடு வோனென்பது.

சங்கம்=தோள். தோட்கோப்பினைச்சங்க தாளமென்பர்.

கடும்பு; கதுப்பு மயிராகலின்

கடும்பு மயிர்ச்சும்மாடென்பது.

## ௫௮. றகரம்—டகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| கற்றளை | கட்டளை | ஒற்றைச்சாண் | ஒட்டைச்சாண் |
| குறத்தியர் | கொடிச்சியர் | குடிப்பாற்றல் | குடிப்பாட்டல் |
| தேற்றாமாம் | தேட்டாமசம் (மலையாளம்) | | |
| உறைவான் | உடைவான் | சுற்றம் | சுட்டமு (தெலுங்கு) |
| புற்று | புட்ட (தெலுங்கு) | வெறி | வெடி=மணம் |
| ஆறு | ஆடல் | சற்று | சட்டு |

கட்டளை = கல்லறுக்குங் கருவி.

கல்லுருவமாகத் தளைவதென்பது.

குடிப்பாற்றல் = குடித்தலைச்செய்வித்தல்

ஆடல் = ஆற்றுநீரிற்குளித்தல்

"சட்டோநினைக்க மனத்தமுதாஞ் சங்கரனை" (திருவாசகம்)

## ௫௯. டகரம்—றகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| கடுப்பு | கறுப்பு = கடுச்சாயம். | பிடவு | பிறவு |
| கொடுக்கை | கொறுக்கை | மூடம் | மோறை |
| முட்ட | முற்ற | கோடி | கூறை = ஆடை |
| அடி | அறை = தண்டனை | கவடு | கவறு = சூதாடுகருவி |
| பகண்டை | பகன்றை = சிவதை, | ஒட்டு | ஒற்று |

கொறுக்கை = கொறுக்கைப்புளி.

வளைந்த காயினையுடையது.

முட்ட ———— (பிங்கல—நி)

பிடவு—பிறவு = ஓர்மரம்

"பிறவு கள்ளியினீள்கவடு" (சு—தேவாரம்)

பிடா—பிடவு.

மூடம்—மோறை = அறியாமை.

"மோறை வேடுவர்" (சு—தேவாரம்)

ஒற்று = மெய்யெழுத்து. உயிரையொட்டி நடைபெறுவது.

## ௬௦. ளகரம்—ணகரமாகும். ள் + ந = ண.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| அளில் | அணில் | எள் | எண் |
| நீளம் | நீணம் | பெள் | பெண் |
| நள்ளல் | நண்ணல் | விள் | விண் |
| தாவளம் | தாவணம் | ஈளை | ஈணை = ஈரத்தனை. |
| மிளகாய் | மெணசினகாய், | | |
| | (கன்னடம்) | | |

வெளில்—அளில்—அணில்; வெளியது. அணில் கன்னடம்.

"நீணமார் முருகுண் வண்டினம்" (ச—தேவாரம்)

தவளம்—தாவளம்=வெண்மை.

"தாவணவ் விடையினால்" ———— (ச—தேவாரம்)

பெள்—பெண்; கணவன்பால் நட்புள்ளவள்.

விள்—விண்=வான். சத்தகுணமுடையது. விள்=இசை.

## ௬௧. லகரம்—ணகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| நால்கு | நான்கு | நல்லன் | நன்னன் |
| தருக்கு | தன்கு | வியல் | வியன் |
| அகல் | அகன் | அசல் | அயன் |
| அழல் | அழன் | சாலி | சானி |

"பால்புரைபுரவி நால்குடன் பூட்டி" (பொரு—படை)

அழன்=பிணம்; சுடப்படுவது.

சாலி=அருந்ததி; கற்புநிறைந்தாள்.

நங்கைச்சானி, துரைசானி, பூபிசானி

## ௬௨. டகரம்—ணகரமாகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| மடங்கு | மணங்கு | முடக்கம் | முணங்கு |
| நுடங்கல் | நுணங்கல் | திட்டை | திண்ணை, |
| ஆடு | ஆணு | சாறடை | சாறணை=ஓர்மூலி |
| கவடர் | கவணர். | | |

ஆடு—ஆடூஉ

"கஞ்சியுங் கவளமுண் கவணர்" (ச—தேவாரம்)

கவணர்=கபடமுடையோர்.

## ௬௩. ண்ட—ந்த ஆகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| கண்டளம் | கந்தளம் | இருண்டை | இருந்தை=கரி |
| தண்டு | தந்தி | மாண்டல் | மாந்தல்=சாவு |

| | | | |
|---|---|---|---|
| மண்டோதரி | மந்தோதரி | தண்டு | செந்து |
| பிண்டிபாலம் | பிந்திபாலம் | வைகுண்டம் | வைகுந்தம் |

கந்தளம் = கவசம் கழுத்துவரை தரிப்பது.

தண்டு = யாழ். தந்தி = யாழ்நரம்பு.

தண்டு—செந்து = யாழ்.

"செந்துநேர் மொழியாரவர்
சேருந்திருக்களருள்" ——— (ச—தேவாரம்)

## சுச. ண் ற—ந் த ஆகும்.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| முன்றல் | முந்தல் | முன்றை | முந்தை |
| பின்றல் | பிந்தல் | கன்றல் | காந்தல் |

## சுரு. பலதிரிபுகளுமுள.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| தண்டு | செந்து | கச்சம் | சத்தம் |
| விளக்கம் | வெளிச்சம் | பருவதம் | பருப்பதம் |
| புட்டில் | முற்றில் = முறம் | ஆசுவீசம் | அய்ப்பசி |
| களங்கு | சழக்கு | திரவியம் | திரப்பியம் |
| பிங்கம் | வேங்கை = பொன் | பிரலாபம் | விலாவணை = அழுகை |
| சிச்சிலி | கிக்கிரி | பகந்தரம் | பவித்திரம் |
| உவளித்தல் | உமிழ்தல் | சகஸ்ராரம் | சாசாரம் |
| வெளிறல் | விடிதல் | முசல | வனகே (கன்னடம்) |

க. தண்டு—செந்து = யாழ்.
ண்ட—ந்த ஆனது ஒன்று.
தகரம்—சகரமானது ஒன்று
அகரம்—எகரமானது ஒன்று.
இதுவே ஒருங்கு திரிதலாம்.

உ. வெளிறல்—விடிதல் = கிழக்கு வெளுத்தல்
ளகரம்—டகரமானது ஒன்று
றகரம்—தகரமானது ஒன்று
எகரம்—அகரமானது ஒன்று.

௩. கச்சம்—சத்தம்=கூலி
சகரம்—தகரமானது ஒன்று
ககரம்—சகரமானது ஒன்று

கச்சம் அளவாக்லின் தொழிலளவுக்குத்தகக் கொடுப்பதென்பது.

கச்சம் மரக்காலுமாம்

கச்சம்—கர்ச்சு=கூலி ——— (தெலுங்கு.)

பகந்தரம்=ஓர்நோய். பகத்தில் உண்டாவதென்பது. பகம் குதமுமாம்.

பிறவு முணர்ந்துகொள்க.

௬௬. எழுத்துகள் திரியுமிடத்து, ஆற்றெழுக்காகவேனும், தவளைப் பாய்த்தாகவேனும் திரிந்து வரும்.

உ—ம்.

(௧.) ஆற்றெழுக்குத்திரிபு.

௧. வழி—வட்டை—வாட்டை—பாட்டை=வழி.
௨. அச்சோ—அத்தோ—அந்தோ
௩. பல்—பள்—பண்.
௪. பண்—மண்—மணி.
௫. மால்—மலை—மழை.

எழுத்துகள் பிறந்த முறையே திரிந்தன.

(௨) தவளைப் பாய்த்துத்திரிபு.

௧. படங்கு—பாசாங்கு
௨. தடி—தசை
௩. இந்திரசாலம்—இந்திர ஞாலம்
௪. வீங்கல்—விம்மல்
௫. குருந்து—கொழுந்து
௬. அமிர்தம்—அமிழ்தம்

எ. கார்த்தல்—காழ்த்தல்

அ. இரங்கல்—இளகல்

௯. அரற்றல்—அழைத்தல்

௧0. கருகூலம்—கருவூலம்.

---

௧. படங்கு—பாதாங்கு—பாசாங்கு

௨. தடி—ததை—தசை

௩. குருந்து—கொழுந்து—கொளுந்து

௪. வீங்கல்—விம்பல்—விம்மல்

என இம்முறைமைக்கண்வாராமே இடை விட்டுத்திரிந்து வந்தன.

சிறுமகார், மூப்புற்றார், நோய் கொண்டார், பெலமில்லார், கல்லாதார், விரைந்து பேசுவார், முனிந்து பேசுவார், கவனியாது பேசுவார், முதலோரிடத்தும் ஒரெழுத்து, இயைபுடைய மற்றோரெழுத்தாகத்திரிந்து வருவதைக் காணலாம். கவனித்தல் வேண்டும்.

திருமறைக்காடு முதலிய பக்கங்களில், வலைக்கயிற்றாற் கட்டிய சருகு மூட்டையைச் சிக்கம் என்பர்.

பழனி முதலிய பக்கங்களில் புகையிலைமூட்டை முதலியவற்றைச் சிப்பம் என்பர். மூட்டையென்னும் ஒப்புமைபற்றிச்சிக்கம்—சிப்பமாயிற்று.

ஓர்முறை தேவாரத்தை விரைந்து படனம் செய்யுங்கால், "உடைய தமிழ்பத்து முணர்வாரவர்கள்" என்பதனை உளையதமிழ் என்றோதி விட்டனன். பின்னர் நாவினியல்பைக்கவனித்தனன்.

சில மகளிர் பாசம்—பாஷம் என்பர். விதாஸ்தா, விபாசா என்னும் நதிகளைக் கிரேக்கர், இதாஸ்பீஸ், இபேஸீஸ் என்பர்.

௧. புதுச்சேரி—பாண்டிச்சேரி

௨. வாரணசி—பெனரிஸ்

௩. பாடலீபுரம்—பாட்ன

௪. சிங்களம்—சிலோன்

௫. பழவேற்காட்டேரி—புலிக்காட்

முதலியன ஆங்கிலேயர் வழக்காம்.

புதுச்சேரி முதலியன நாவிற்குக் கடினமும்,

பாண்டிச்சேரி முதலியன எளிமையுமாதல் காண்க.

ஆங்கில மொழியில், ரகர டகர எழுத்துகளுள்ள சில சொற்களை யுச்சரிக்குங்கால், அவைமறைந்து போகின்றன. நாவிற்குக் கடினமாகலின். 2—ம். Often, Birdg, Iron.

சா௭. ஆரியரும்

ర=ల யோர பேதம்

ల—డ யோர பேதம்

వ—బ யோர பேதம்

[illegible]—ద யோர பேதம்

శ—స யோர பேதம்

[illegible]—[illegible] யோர பேதம்

கூறுவர். இவையெல்லாம் நாவினியற்கை யென்க. பிறவும் வாசவதத்தா என்னும் நூலிற் கண்டுகொள்க.

ஏனைய பாஷைகளிலும் இவ்வியற்கையை ஆராய்தல் வேண்டும். இங்ஙனம் ஆராய்ச்சி செய்யாதவர்க்குச் சொற்களின் மூலம் புலனாவதில்லை.

## சா௮. ஈற்றில் யகரமெய் வருவதியல்பு.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| சுகம் | சுகாய் | ரூபா | ரூபாய் |
| தூ | தூய் | நோ | நோய் |
| பஞ்சம் | பஞ்சாய் | ஏ | எய் |
| நா | நாய் | சே | சேய்—சிவப்பு |

## சா௯. ஈற்றில் லகரமெய்யும் வருவதியல்பு

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் | பக்கல் | படிறு | படிசில் |
| வண்டி | வண்டில் | மன்றம் | மன்றல்=வாசனை |
| சுண்டி | சுண்டில்=நீர்ச்சுண்டி | வெள்ளி | வெள்ளில்=விளா |

| | | | |
|---|---|---|---|
| நெருஞ்சி | நெருஞ்சில் | ஓதம் | ஓதல்=அலை |
| பாய் | பாயல் | மருங்கு | மருங்குல் |
| அல்லம் | அல்லல் | மாஞ்சி | மாஞ்சில்=சடாமாஞ்சி |
| கயம் | கயல் | அழிஞ்சி | அழிஞ்சில் |
| குழிசி | குழிசில்=பானை | நித்தம் | நித்தல் |
| சாடி | சந்தில் | தெப்பம் | தெப்பல் |
| உக்கம் | உக்கல் | அவையம் | அவையல்=திரட்சி |
| ஆயம் | ஆயல் | ததம் | ததல்=நிலை |
| பீதம் | பித்தல்=பித்தளை | ஏழ் | ஏழில்=யாழ் |
| கொடிஞ்சி | கொடிஞ்சில் | கூபம் | கூவல் |
| அரி | அரில்=மூங்கில் | உசி | உசில்=சிக்கிரி |
| வெப்பம் | விக்கல் | பரிசம் | பரிசில் |
| ஆழம் | ஆழல்=செல் | அயம் | அயில்=இரும்பு |
| மறம் | மறல் | மா | மால்=ஓரளவுகருவி |
| இடி | இடில்=மாவு | அ | அல்=வியங்கோள்விகுதி |
| மரீசம் | மிரியல் | குடி | குடில் |

அல்ல கண்டம்=துன்பம். உ—பதம்.

அல்லம்+கண்டம்

சந்தில்=சனி, கும்பராசிக்குரியோன்

சாடி=கும்பம்.

ஆயம்=மகளிர் கூட்டம்.

"அகர முதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"

எழுத்தோசை முற்றுப்பெற்றது.

௭൦.

# இனி, இயற்கைப் பொருளோசையாவது:—

**சு.** என்பதாம்.

வாயு, தேயு, அப்பு என்னும் பூதங்கள் மூன்றும், முறையே வீசுதற்கண்ணும், எரிதற்கண்ணும், பெய்தற்கண்ணும்; மக்களும், பாம்பு எருது முதலியனவும்; சீறுதற்கண்ணும், இரும்பினைப் பழுக்கக்காய்ச்சி நீரின்கட்டோய்த்தற்கண்ணும்; பால்கறத்தற்கண்ணும்; இயல்பாக வுண்டாதலின், **சு** என்பது இயற்கையோசை யாயிற்று.

பொருட்டன்மை தன்னிடத்தே நிரம்பப்பெற்ற சோதிப் பரிதியழற் பெருமண்டிலத்தின்கண்ணே ஒளிவிடும் வெங்கதிர்க் கற்றையானது, நுண்ணிய அரியமெல்லிய கருவிகளெல்லாம் நிறையக்கொண்டு, அறிவாற்சிறந்த மகன் தனது மெத்தென்னும் உடம்பின் கண்ணே தாக்குங்கால்; அன்னோன் அதுபொருளாகிச் சூரியன் சுடுகின்றானென்னும்பொருள்பயக்கச்சுரீர் எனக்கூறலின், அதுவே பொருளோசையு மாயிற்று, **சு**-சுல்-சுலீல்-சுரீர். எனத்திரிந்தது.

மொழிக்கிறுதியில் லகரமெய் இயல்பாக வந்தடைதல் இவ்விலக்கணமேயாம்.

இயற்கையெழுத்தோசையாகிய **அகம்** என்பவற்றில் நாவினது முயற்சி இல்லையாதல்போல, இயற்கைப்பொருளோசையாகிய **சு** என்பதிலும் அந்நாவினது முயற்சி ஓர்சார்இல்லை யாதலின், அகம் என்பவற்றோடு லகரம் சேர்த்தமைபோல, **சு** என்பதோடும் லகரமெய் சேர்த்துச் **சுல்** எனப்பட்டது.

அச்சுல் என்பது தவ்விகுதியோடுசேர்ந்து, சுற்று, சுலோறு எனத்திரிந்து இசைக்குறியை யுணர்த்தி நிற்கும் "உருவினுமிசையினும்" (தொல்காப்பியம்.)

**உ—ம்.** காண்க.

தேயு முதலியவற்ருலுண்டாகும் அவ்வியற்கையோசை இதழ்குவிவிற்கு அமைந்திருத்தலின், சு எனப்பட்டது.

அச்சுல் என்னும் சொல்லுக்குச் சூரியன் காரணமாய் அது அவன் காரியமாய் நிற்றலின், காரண காரியவியையபு பற்றிப்பொருட்டன்மை யுணர்த்தற்குக் கருவியாம்.

சூரியன் பத்துத்திசையும் வியாபக முடையனுகலானும், அவன் காரியமாகிய **சுல்** என்பது இயற்கைத் தோற்றமாகலானும், அஃதொன்றே பொருட்டலைமைப்பெருந்தகைச்சிறப்பமுகுடைய வியாபக வியற்கை முதனிலையெனத் தெளிக.

உலகத்து, எல்லாவுயிர்களும் கண்கூடாக விரும்பிமகிழ்ந்து காண்பது சூரியனையேயாம்; அவனைவிளங்கி விளக்குபவனுமாம்; எல்லாவுயிர்களின் கண்களையும் கவர்ந்துகொள்வோனும் அவனேயாம்; பிறவும் அச்சூரியனே. இக்கூற்றைத்தடைசெய்வார் ஒருவருமின்மையின், அவன் காரியமாகிய **சுல்** என்பதனையும் தடைசெய்வார் ஒருவருமிலர்.

சு என்பது, யகரமெய்யோடு புணர்ந்து **சுய்** என்ருகும். நெருப்பு விழுங்கால் சுய் என்னும் ஓசையுண்டாகும்.

௩௦௰ (ஆ—தீ)

சில சொற்களினிறுதியில் யகரமெய் இயல்பாக வந்தடைதல் இவ்விலக்கணமேயாம்.

சுய் என்பதை யிக்காலத்தார் சொய் என்பர்.
ஒலிக்குறிப்பை யுணர்த்தும் சோ என்பது
சு என்பதன் திரிபு; "சோவென மழைபெய்தது"

இன்னும் சூரியன் புறத்திருளை யகற்றல்போல, அவன்காரியமாகிய சுல் என்பது, அகத்திருளை யகற்றும்; எல்லா அண்டங்களுக்கும் சூரியன் நாயகனுதல்போல, எல்லாச்சொற்களுக்கும் சுல் என்பது நாயகமாகின்றது.

உலகத்துக்குச் சூரியனே கண்; எல்லாச்சொற்களுக்கும் சுல் என்பதே கண்; எல்லாப் பொருளும் சூரியனாலே யுண்டாகின்றன; எல்லாச் சொற்களும் **சுல்** என்பதனாலே யுண்டாகின்றன.

வெண்பா.

"ஓங்கலிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்திருளகற்று—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

ஓங்கல்=இமயகூடம்.

ஆந்தர நாமசங்கிரக மென்னும் தெலுங்கு நிகண்டில் சூரியன் பெயருள் ప్రొఁజదువులపెట్టె என்னும் ஓர்பெயர் வந்துளது; உரைகாரர் వేదములకుపెట్టె என்பர். சூரியன் வேதங்களுக்குப் பெட்டகமாகின்றான் எனின், பொருளோசைக்குக் காரண மாகின்றானென்பது உள்ளுறைப்பொருளாம்.

"அகாரோவை சர்வாவாக்" எனவேதமும்,

"அஅ இதி" எனப்பாணினீயமும் கூறலின், அகரத்தினின்று எழுத்துகளெல்லாம் பிறந்தன என்பதொக்கும். சுல் என்பதொவ்வாதெனின், நன்று:

சுல் என்பதன் தோற்றரவு கண்கூடாகலின் வேதங்கூறாதது பற்றிக்குற்றமாகாது. மற்றும் உத்திக்கும் அனுபவத்துக்கும் ஒத்துள்ளது. காண்டலளவையை ஒப்பாதார் எவர்? அல்லதூஉம் எழுத்தோசையைத் தொடர்ந்தல்லது பொருளோசை நிகழ்ச்சி பெறாமையின், அவ்வொற்றுமை நயம்பற்றிக் கூறியதெனினும் ஒக்கும். எழுத்தோசையானது, பொருளோசையைத் தொடர்ந்து செல்லாக்கால், சொற்களே யிலவாம்; அதன்கட்பொருட்டன்மையின்மையின், அஃது கடலொலி, காற்றொலி, போல்வதோர் வெற்றொலியேயாம்.

தருக்கநூல், சோதிடநூல், கணிதநூல் இலக்கணநூல் முதலியன, முன்னோர் கூறிய அளவைகளுள் நில்லாதுஉத்தியானும் அனுபவத்தானும் மேன்மேலும் பெருகிக்கொண்டே போகுமென்பர். இஃது யாவரும் ஒப்பற்பாலதே.

சுய், சொய் என்னும் ஒலிவடிவு நெருப்பின்கண் உண்டாகின்றமையின் பொருளோசைக்குக்காரணம் நெருப்பாகாதோவெனின், பஞ்சபூதக் கோள்களில் தேயுவுக்குக் கோள், சூரியனாகலானும், சூரியனிடத்துக் கண்கூடாகவுள்ள குணங்கள் நெருப்பின்கண் இல்லாமையானும் பிறவாற்றானும் அது பொருந்தாதென்க.

## பஞ்சபூதக்கோள்.

| | | |
|---|---|---|
| பிருதிவிக்கிரகம் | ——— | அங்காரகன். |
| அப்புக்கிரகம் | ——— | சந்திரன், சுக்கிரன். |
| தேயுக்கிரகம் | ——— | சூரியன், குரு |
| வாயுக்கிரகம் | ——— | புதன் |
| ஆகாயக்கிரகம் | ——— | சனி, இராகு, கேது. |

தேயுவுக்கும் சூரியனுக்கும் அனுக்கவியைபாகின்றது. இவ்வுண்மை பஞ்சவர்ணவிசாரணை செய்வார்க்கு நன்குபுலப்படும்.

அற்றேல், சுல் என்பது, காரணகாரிய வியைபுபற்றிப் பொருட்டன்மையுணர்த்தற்குக் கருவியாமென்பதொக்கும். பொருளோரிடத்தும் அதன் தன்மையோரிடத்தும் இருத்தல்கூடுமோ எனின், சூரியன் வியாபகவொளியுடையனாதலின், குணகுணியியைபுபற்றி அன்னோன் ஒளிவழியானே வருந்தன்மையும் பொருளும் வேறுபாடின்றி ஒற்றித்து நிற்குமென்பது.

எங்ஙனமெனின், சாலவும்பெரிதாய அப்பரிதி மண்டிலவடிவம், தன் ஒளிவழியானே சாலவும்சிறிதாய நீர்க்குடத்தின்கட்டோன்றுமாகலின் என்க. சூரியனிடத்துள்ள ஐவகைநிறங்களும், புன்னுனியில்தங்கும் சிறுபனித்துளியிலும் உள்ளன. கருப்பையிற்பாயும் சுக்கிலத்தின் சிறுதுளியிலுமுள்ளன. அதனைச்சூக்கும பஞ்சீகரண மென்பர். "நிறங்களோரைந்துடையாய்". (திருவாசகம்)

சூரியனிடத்துள்ள வட்டமும், திரட்சியும், பொன்மைமுதலிய வண்ணங்களும், வெம்மையும், பிறவுமாய குணங்களெல்லாம்; அவன்காரியமாகிய **சுல்** என்னும் வியாபக இயற்கை முதனிலையிடத்தும் பொதிந்துள்ளன. காரணத்திலுள்ளது காரியத்திலுமுண்டு,

**சூல்**=சூரியன், எழுதல், வட்டம், திரட்சி, வண்ணம், அழகு, வெம்மை முதலியன.

எல்லாச்சொற்களும் அச்சூல்என்னும் ஓர் வியாபக வியற்கை முதனிலையினின்றே பிறந்து விரிந்து அழகுசெய்கின்றமையின், விச்சாதிபதி சூரியனேயாவன்; அதனால் நாமகள் கீழ்த்திசைநோக்கி வீற்றிருக்கின்றனள்; வேதங்கள் அவனைப்போற்றுகின்றன; அநுமான் ஒன்பானிலக்கணங்களையும் அவன்பாற் செவியுற்றனன்; தமிழ் முனிவன் இராமசந்திரமூர்த்திக்கு அவன் மந்திரோபதேசம் இயம்பினன்; கணிதநூல் சிப்பநூல் முதலியன, அவனையே தலைமையாகப் பெற்றன; பல சமயத்தாரும் அவனை முதற்கட்போற்றுகின்றனர்; அவனுக்குப்பூசையும், திருவிழாவும், முற்காலத்துச் சாலவும் நடைபெற்றன; அருச்சனை முதலியசொற்கள், அவனுக்கே யுரியனவாய் நிலவுகின்றன; கற்றல்முதலிய எல்லாத் தொழில்கட்கும் கீழ்த்திசையே நன்றெனநூல்கள்கூறும்; நெருஞ்சிமுதலியன கீழ்த்திசையேநோக்கி மலர்கின்றன; அதுவே யியற்கைத்திசையாம். பிறவுமுணர்ந்துகொள்க.

அருக்கன்—அருச்சனை=சூரியபூசையென்பது.

"அசலே சுரர்புத் திரனேகுணதிக்
கருணோதயமுத் தமிழோனே" (திருப்புகழ், அசகூ.)

"சந்தன மும்புழுகுந் தண்பனி நீருடனே
கொந்தணர் சண்பகமுங் கொண்டுவணங்கிடுவேன்
வந்திடும் வல்வினைநோய் மாற்றுவ துன்பதமே
செந்தமிழாகரனே சிவசிவ சூரியனே"

என்பவற்றுள் அருணோதயமுத்தமிழோனென்பதும், செந்தமிழாகரனென்பதும் சூரியனே விச்சாதிபதியென்பதை விளக்குகிற்கும். இச்செய்யுள் சூரியனார் தோத்திரத்துளொன்று. இத்தோத்திரம் தொன்மையது.

விலங்கு புள்முதலியவற்றின் உடம்பின்கண்ணே, சூரியனது வேனில் வெங்கதிர்க் கற்றைதாக்குழி, அதனைஅறிந்தும், தம்பிறப்



மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பில் உடற்கருவிகள் நிறையப்பெறுமையின், உரைக்கக் கூடாமையா னும், நுண்ணிய கருவிகள் நிறையப்பெற்ற மக்களுரையை யுட் கொண்டறிய ஆற்றல்பெறுமையானும், கல்வி மக்கட்கே உரித்தாகற் பாலது. கருவிகள்நிறைந்து முதிர்ந்தமக்கட்கும் தவத்தான் முதிர்ந்த வுணர்ச்சிவேண்டும். ஆன்மா அவ்வுணர்ச்சியைப் பெருக்கிவளர்க்க, மெய்ப்பொருள் பொய்ப்பொருள், உள்பொருள் இல்பொருள், கருத்துப்பொருள் காட்சிப்பொருள், உயிர்ப்பொருள் உயிரில்பொ ருள், அறிவுப்பொருள் அறிவில்பொருள், நுண்பொருள் பருப்பொ ருள், முதற்பொருள் சினைப்பொருள், காரணப்பொருள் காரியப்பொ ருள், அழிவுப்பொருள் அழிவில்பொருள் முதலிய பல்வகைப்பொ ருள்களையும் உள்ளந்துணையாக ஆராய்வான்வேண்டில், அவ்வுள்ள மானது நாவையும் கண்ணையும் செவியையும் துணைக்கொண்டால ன்றி அவ்வாராய்ச்சி செல்லாமையின், அஃது செல்லுதற்பொ ருட்டு, அந்நாவின்வழித்தாகிய இயற்கையொலியாலும், தடையின் றிக்கண்ணாற் காணப்படும் சூரியன் காரியவொலியாலும், செவியாற் கேட்கப்படும் பூதவொலியாலும், உய்த்துணர்ந்து கூட்டப்பட்ட கூட்டுறவாகிய கல்வியென்னும் கேடில்விழுச்செல்வம் இன்றியமை யாததாம். அவ்வொலிகள் முறையே எழுத்தோசை, பொருளோ சை, இசையோசையெனப் பெயர்பெறும்; அவைமுற்கூறபட்டுள் ளன.

"கேடில் விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றையவை"

"நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉமன்று"

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந்தலை"

என்பவற்றால் நா, கண், செவியென்பன கல்விக்கு இன்றி யமையாமையென்பது விளங்கற்பாலது. இதனால் எழுத்தோசை

பொருளோசை இசையோசைகளின் உண்மையும், பொருளோசை யதின்றியமையாமையும், புலப்படல்காண்க. மக்கட்குக்கண், எங்ஙனம் இன்றியமையாததோ, அங்ஙனமே கல்விக்குப்பொருளோசை யின்றியமையாததாம்.

இன்னும் அக்கல்விஇயல், இசை, கூத்து, எனமூவகைப்படும். அவைமுறையே மனமொழிமெய்கட்குரியனவென்பர். கூத்துக் கல்விதான் உலகத்து முதல்முதலுண்டாயது. பாயிரத்துட்காண்க. இயல்=இலக்கணம். இசை=இலக்கியம். இலக்கணஇலக்கியங் களைத் தனித்தனிப் பிரிக்கக்கருதுவது, மணியினின்று ஒளி பிரிக் கக்கருதுவதுபோலாம். அது கூடாமையின், குண குணியென்னும் நீக்கமில் இயைபுடையதாகும். அதனால், அவை ஒன்றனையொன்று இன்றியமையாவேனும், பொருட்குப் பொருட்குணம் வியாப்பிய மாகலின் இலக்கியமுந்தியதென்க. அதுநிற்க,

> சொல், பொருட்டன்மையுணர்த்துமெனின்
> சொல்லும்பொருளும் பேதமோ அபேதமோ
> பேதாபேதமோ எனின், நன்று:
> சொல்லால் பொருளினதுதோற்றம்,

கண்கூடின்மைமுதலிய காரணங்களால் பேதமாகவும்; தரு மதருமிகளின் இயைபால்பொருளும் நுண்ணுருக் கொண்டிருத்த லின், அபேதமாகவும்கூறுதல் பொருந்தாது மற்றென்துணிபெ னின்? பொருட்குப் பொருட்குணம் வியாப்பியமாதல்போலப் பொருட்டன்மையுணர்த்தும் சொல்லும், பொருட்குவியாப்பிய மாதலால்; பேதமெனவும், அவையொன்றனையொன்று விட்டுப் பிரிந்து நில்லாமையின், அபேதமெனவும், சொல்லொணுமைபற்றிப் பேதாபேதமெனலே பெரியார்தங்கருத்து. காளிதாசரும், "வாகார்த்த" மென்னும் சுலோகத்தானே யிங்ஙனமேகூறுவர்.

இனி வித்தையென்பது காண்டலளவையாலரும்பிப் பழுக் கின்றமையானும், அவ்வளவை சூரியனுலன்றிப் பெருமையானும், சொற்கள், முதல்முதல் உலகத்து அரும்பெரும்பொருளாகிய

சூரியனிடத்திருந்தும், பிறகு குறிஞ்சிக்கருப்பொருள்களுட் சிறந்து, சூரியனுக்குஅணுக்க இயைபுடையதாய், ஏனைய பொருளி லக்கணங்களைத் தன்னிடத்தேவிளங்க அமையப்பெற்ற மூங்கிற் சொற்களிடத்திருந்தும், மூங்கிலியையபுடைச்சொற்களிடத்திருந் தும், அனுரூத சம்பந்தம் பெற்றுண்டாகின்றன.

ஓர்சொல், மூங்கிலென்னும் பொருளை யுணர்த்திலதேனும் மூங்கிலிலக்கணங்களுள், ஏதேனும் ஒன்றனையுணர்த்தினும் அது மூங்கிலியையபுடைச் சொல்லாம்.

கணுவுடைமை, திரிகணுவுடைமை, கணுத்தொறும் வேருடை மை, உட்டுளையுடைமை, பொருத்துடைமை, பிரிவுடைமை, நீட்சி யுடைமை, வட்டமுடைமை, பசுநிறமுடைமை முதலியன மூங்கிலி லக்கணங்களாம்.

"இலமென்று வெஃகுதல் செய்யார்புலம்வென்ற
புன்மையில் காட்சியவர்"

காட்சியென்பதுமுதல் பார்வையையும் பிறகு அறிவையும் உணர்த்தலால், காண்டலளவையிலிருந்து அறிவுண்டாகின்றதென் பதைத்தெளிந்துகொள்க.

குறிஞ்சிநிலத்தில்தமிழர் வசித்தமையானும், அதன்கண்ணே மூங்கில் செழித்திருந்தமையானும், அம்மூங்கிலின்பயனை நுகர்ந்து கண்டமையானும், வீறியமூங்கில்களில் காற்றுநுழையும்போது இசையறிந்தமையானும், விளக்கமுறும் பல்குணமுடைய மூங்கிலைச் சொற்பிறப்புக்குக் காரணமாகக் கொண்டனர்.

மூங்கில் வன்னிகர்ப்பமாகலின், அழலவனுயை சூரியனுக்கு அணுக் கவியையபாயிற்று.

## சூரியன் சொல்லிலிருந்துண்டாய சொற்களாவன:—

(க) **சுல்**=சூரியன், எழுதல், வட்டம், நடுமுதல்.

,, சுலா=திரட்சி; சூரியன்போல்வது

,, சுரி = கொளுத்தல்
,, சுருகு — சுருக்கு = வெப்பம்
சூரி = சூரியன்

(உ) **சுல்**

சுள் = வெப்பம்; சூரியனிடத்துள்ளது.
,, சுள்ளாப்பு = வெயிற்சுருக்கு.
,, சுளுந்து = நெருப்புறுகுற்றி.
,, சுண்ணம் = சுன்னம்; சுட்டது.
,, சுண்ணும்பு = நீறு. ——— பு — விகுதி
சுளிவு = சினம்; சுடுவது.

(ங) **சுளி**

சூள் = ஆணை; வட்டமிட்டுத்தடுப்பது.
சூளை = செங்கற்சூளை; திரண்டிருப்பது.
சுளல் = சுழல்.
சுழல் = வட்டம்
சுழலல்
சூடு = வெப்பம்
சுடல் = சுடுதல்
சுண்டா = நடு; கோள்களுட் சூரியன்போல்வது. முதலி
[யனவாம்.

## மூங்கிற் சொல்லினின்றுண்டாய சொற்களாவன:—

(க) **அரி:—**

க. மூங்கில்
உ. உட்டுளைப்பொருள்
ங. கள். உள்ளிருந்து கசிவது
ச. விசி. மூங்கிலாலாவது

ரு. மலை. மூங்கின்மிக்கது

சா. தீ. மூங்கிலினுண்டாவது

எ. புகை

அ. நெற்கதிர். மூங்கினெற்கதிர்

கூ அரிசி. மூங்கிலரிசி

## (உ) ஆம்பல்:—

க. மூங்கில்

உ. யானை. உட்டுளையுடையை தும்பிக்கையுடையது.

ங. கள். உள்ளிருந்து கசிவது.

ச. இசைக்குழல். மூங்கிலாலாவது.

ரு. பண். இசைக்குழலினுண்டாவது

சா. ஊதிடுகொம்பு. உட்டுளையுடையது

## (ங) கண்:—

க. மூங்கில்

உ. கணு. மூங்கிலினுள்ளது

ங. நுங்குக்கண். உட்டுளையுடையது,

கணம்=கூடு. மூங்கிலினுள்ளது.

,, கணமாந்தம்

கணப்பு=கூடு. ———— பு—விகுதி

கணப்புச்சட்டி.

கணம்

கனல்=தீ. மூங்கிலினுண்டாவது

,, கனலம்—கனலல்

## (ச) நால்:—

க. மூங்கில், "நாலின்குருந்தம்" (வை—வெ)

உ. உட்டுளை. மூங்கிலினுள்ளது

ங. மூளை. கணுக்கள்தோறுமுண்டாவது

ச. சிறுமை. முளைபோல்வது

ரு. வளர்ச்சி. முளையினின்றுண்டாவது

"நாற்சி—ஞாற்சி=வளர்ச்சி

நாறு=முளை. நால்+து.

நல்கூர்தல்=சிறுமை மிகுதல்

நல்குரவு=வறுமை

நாலம்=உட்டுளை, ஊதுகுழல், தண்டு, காம்பு.

## மூங்கிலியையுடைச் சொற்களாவன:—

(க) **கால்:—**

க. உட்டுளை

உ. முலைக்கண். உட்டுளையுடையது

ங. மரக்கால், மூங்கின்மரக்கால்

ச. வேர். கணுவிலுண்டாவது

ரு. முளை. வேரின்பின் உண்டாவது

"அங்கான் முலையினரும்பால் வரப்பாயினரும்" (சி—மணி)

கால்=முலைக்கண்

கான்மரம்=ஆலமரம். விழுதுவிடுவது

கால்=வேர்.

காலை=உதயம். சூரியன்முளைப்பது.

கால்=முளை

கால்வாய்

கால்=உட்டுளை

(உ.) கில்=இசை. உட்டுளையிலிருந்துண்டாவது

கிலுகிலுப்பை

கிலுக்கு=இசை

கிலுக்குத்தடி

(ங.) பல்=இசை. ,,

,, பல்லியம்=வாச்சியம். உ—பதம்.

பள் = இசை

,, பள்ளர் = இசைபாடியுழுவோர்

பண் = இசை

,, பாண் — பாணி = இசை

மண் = மார்ச்சனை. இசைதருவது

மணி = கைம்மணி. இசைப்பது.

மணியம் — மணியகாரன் = மணிப்படி வேலைசெய்வோன்.

பொருளோசை முற்றுப்பெற்றது.

௭௧.

# பகுதி.

ஒரு சொல், எத்துணையெழுத்துகளான் முடிவுபெறினும் அதனது விகுதிமுதலியவற்றைப் பிரித்துவிடின், முதற்கண் நிற்பது எது? அது பகுதியாகும்.

உ—ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ௧. | நடத்தல், | நட + தல்; | நடத்துவித்தல், | நடத்துவி. |
| ௨. | பகை, | பகு + ஐ; | பகைத்தல், | பகை + தல். |
| ௩. | கவலல், | கவல் + அல்; | கவலித்தல், | கவலி + தல். |
| ௪. | நகை, | நகு + ஐ; | நகைத்தல், | நகை + தல். |
| ௫. | முயற்சி, | முயல் + சி; | முயற்சித்தல், | முயற்சி. |
| ௬. | ஏங்கல், | ஏங்கு + அல்; | ஏம்பலித்தல், | ஏம்பலி. |
| ௭. | தத்தல், | தத்து + அல்; | தத்தளித்தல், | தத்தளி. |
| ௮. | மறுத்தல், | மறு + தல்; | மறுதளித்தல், | மறுதளி. |
| ௯. | உள்ளல், | உள் + அல்; | உள்கல், | உள்கு. |
| ௧௦. | ஆதல், | ஆ + தல்; | ஆகுதல், | ஆகு. |

௭௨.

# முதனிலை.

மோனை முதனிலை, எதுகை முதனிலையென இருவகைப்படும்.

உ—ம்.

௧. மேல்—மேளி—மேழி—மேழியர்.
மேல்—மேரை=மதிப்பு, குடிமக்கள் மேரை.
மேல்—மேடு—மேடை.
ஏர்—ஏர்தல்=எழுதல்.
ஏர்—ஏரி=நீர்நிலை. ஊரினையெழச்செய்வது.
ஏர்—எரு=மட்கினசாணம். பயிரையெழச்செய்வது.

௨. அத்தன் —— அத்தை, ஆத்தாள்
|
அச்சன் —— அச்சி
|
அய்யன் —— அய்யை
|
அஞ்ஞன் —— அஞ்ஞை=தாய்
|
அன்னன் —— அன்னை

அண்ணன் —— அண்ணி
|
அச்சன்
|
அக்கன் —— அக்கை, அக்காள்
|
அப்பன் —— அப்பி

அத்தன் = அன்புடையான்

சங்காத்தன் = தோழன்

சங்க + அத்தன் = சங்காத்தன்.

சங்க = தோள், தோண்மேற் கைபோட்டுப்பேசும் அன்புரிமையுடையோன்.

மேரை யென்பதன் முதனிலை அதன் முதலிலிருக்கின்றமையின், மோனை முதனிலை யெனப்பட்டது.

அய்யன் என்பதன் முதனிலை முதலில் அய் என்பதாகாது; அச்சன் என்பதன் திரிபாகின்றமையின், எதுகை முதனிலையெனப் பட்டது.

இங்ஙனமே சொற்கள் திரிந்து நடைபெறும்.

## எங. விகுதி

தளிர், மலர் முதலியன வித்தினது திரிபாதல்போல, ஓர் சொல்லினது இயைபாகியதிரிபே விகுதியாகும். அத்தளிர்மலர் முதலியனபோல விகுதிகள் சொற்களை அலங்கரிக்கின்றன.

சாரியை முதலியனவும் அன்ன.

## எச தன்மை விகுதி

யானென்னும் தன்மையொருமைச் சொல்லினின்றே ஏனென்னும் தன்மை யொருமை விகுதி யுண்டாயிற்று. ஏன் என் ஆயிற்று. என்—அன் ஆயிற்று. அன்—அல் ஆயிற்று.

உ—ம்.

க. யான் வந்தேன்

உ. யான் வந்தெனென்

ந. யான் வந்தனன்

ச. யான் வருவல்

ல்+ந=ன. அன்—அல்.

யாம் என்னும் தன்மைப்பன்மைச்சொல்லினின்று, ஏம் என்னும் தன்மைப்பன்மை விகுதி யுண்டாயிற்று. ஏம் எம் ஆயிற்று; எம் அம் ஆயிற்று; அம் ஆம் ஆயிற்று; ஆம் ஓம் ஆயிற்று.

உ—ம்.

க. யாம் வந்தேம்
உ. யாம் வந்தனெம்
ங. யாம் வந்தனம்
ச. யாம் வந்தாம்
ரு. யாம் வந்தோம்.

யகரத்துக்கும், ஏகார முதலியவற்றுக்கும் இயைபுண்மையை யகரத்துக்கு ஏகாரமுதலியன மோனையாய் வரலால் அறிக.

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதியில் யானைக்கண்டங்கரி யென்னும் செய்யுளே உதாரணமாகும். மற்றும் புணர்ச்சிக்கண் விளக்கப்படும்.

## எரு. முன்னிலை விகுதி.

நீ யென்னும் முன்னிலை யொருமைச்சொல்லினின்றே ஈ என்னும் முன்னிலை யொருமை விகுதி யுண்டாயிற்று.

ஈ-இய்யாயிற்று; இ-ஐயாயிற்று. "இகர ஏகாரமைகார மாகும்" ஐகாரம் அய்இ என மூன்றெழுத்தாலாகிய எழுத்தாகலின், ஐ ஆய் ஆயிற்று.

உ—ம்.

நீ உண்டீ, நீ உண்டி, நீ உண்டை.
நீ உண்டனை, நீ உண்டாய்.
உண்டை —— உண்டய்இ —— உண்டாய்.

உண்டாய்இ எனின் நாவிற்குக்கடினமாகலின் இறுதி இகரம் போயிற்று.

புக்கீ, உண்டீ முதலிய உதாரணங்காட்டுவர் நச்சினார்க்கினியர்.

நீ—ஈ. இஃது ஒற்றினீக்கமென்னு மிலக்கணம்.

நீர் என்னும் முன்னிலைப்பன்மைச்சொல்லினின்று, ஈர் என்னும் முன்னிலைப்பன்மை விகுதி யுண்டாயிற்று.

ஈர்—இர் ஆயிற்று.

உ—ம்.

நீர் உண்டீர், நீர் உண்டிர், நீர் உண்டனிர். யான் வந்தேன், யாம் வந்தேம்; நீ உண்டீ, நீர் உண்டீர், என்பவற்றுள் எழுவாய்போலவே பயனிலை முடிந்தமையும், அவ்வப்பயனிலைகள், அவ்வவ்வெழுவாய்களினியைபாய் வந்தமையுங் காண்க. எனவே ஒப்புமை கூறியபடி.

## எசு· பெயர் விகுதி.

கு, சு, து, பு, உ என்பவை பெயர் விகுதிகளாகும்.

குவ்வில் சுவ்வும், சுவ்வில் துவ்வும்; குவ்வில் புவ்வும், உவ்வும் உண்டாயின.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| புறம் | புறகு | நாலம் | நாலுகு |
| கால் | கருக்கு | மணம் | மணங்கு |
| குரு | குருகு | அரம் | அரக்கு |
| அலம் | அலகு | குடம் | குடகு |

கால்=கூர்மை

குரு=வாசனை. குருகு=குருக்கத்தி

குருவேர்=வாசனையுள்ளவேர்.

அலம்=கூர்மை. அலகு=பறவைமூக்கு

நிலம் நான்காகலின், நாலம் நாலுகு ஆயிற்று.

மணங்கு=இருவாட்சி

அரம்=சிவப்பு. அரக்கு=சிவந்தது

அரம்=அரன்=மஞ்சள்

குடம்=மறைவு. குடகு=மேற்கு

சு

| | | | |
|---|---|---|---|
| அரம் | அரசு | கொல் | கொலுசு |
| முரம் | முரசு | தரம் | தராசு. |

அரம்=சிவப்பு. அரசு=ஓர்மரம்

செந்நிற முடையது. பால் பட்டை
முதலியன சிவந்து விடும்.

அரசு வேந்துமாம். குற்றவாளிகளைச்
சிவந்து தண்டிப்பது.

முரம்=ஒலி. முரசு=ஓர் வாச்சியம்

முரம்=முரல். முரலல்=ஒலித்தல்.

கொல்=இசை. கொலுசு இசைப்பது

கொலுசு=சங்கிலி

கொல்லி=ஓர் பண். கொல்+இ.

தாரசு=முள்ளுடையது.

## று

| | | | |
|---|---|---|---|
| கால் | காற்று | நால் | நாறு |
| தோள் | தோடு=துணை | கால் | காறு |
| சால் | சாறு | வில் | வீறு |
| பாண் | பாட்டு | வள் | வண்டு. |

சால்=நிறைவு. சாறு

நால்=முளை. கால்=கூர்மை

வீறு=மேன்மை. விற்போராலாவது.

வள்=வட்டம். வண்டு=சுழல்வது

வண்டு அம்புமாம். வள்=கூர்மை

## பு

| | | | |
|---|---|---|---|
| வாரம் | வரம்பு | வாசம் | வசம்பு |
| சுண்ணம் | சுண்ணும்பு | வலம் | வலம்பு |
| வேல் | வெற்பு | செம் | செம்பு |

வேல்=மூங்கில். வெற்பு=மலை. மூங்கின் மிக்கது

செக்குவலம்பு வலமாகச் சுற்றுவது.

## உ

| | | | |
|---|---|---|---|
| மக | மகவு | குழ | குழவு |
| இதம் | இதவு | மழ | மழவு |

அக்குவ்விகுதியும் ஓர் சொல்லினின்றே உண்டாகின்றது.

இன்னும் அம், மை, மி, வி, ஔவ, இ, ஐ, பை, கை, என்னும் பெயர் விகுதிகளுமுள்ளன.

உ—ம்.

## அம்

| | | | |
|---|---|---|---|
| கால் | காலம் | நீள் | நீளம் |
| நால் | நாலம் | நல் | நலம் |

நால்=வளர்ச்சி. நாலம்=பூமி; வளர்வது.

## மை

| | | | |
|---|---|---|---|
| வளம் | வளமை | நீர் | நீர்மை |
| தண் | தண்மை | ஐ | ஐமை. |

## மி

கோடு—குடுமி. உச்சியில்வைப்பது

கோடு=உச்சி.

குடுமி=மருத்துவனுமாம். மலையுச்சியிலுள்ள மூலிகைகளை யறிந்தவன்

## வி

| | | | |
|---|---|---|---|
| பதம் | பதவி | குரு | குருவி |
| அரி | அரிவி=அரிகதிர் | புரம் | புரவி |
| கால் | கருவி | ஆர் | அருவி |

கால்=கூர்மை; கருவி=ஆயுதம்.

குரு=சிவப்பு; குருவி=மூலநாள்; சிவந்தது.

புரவி நகரத்திலுள்ளது. புரம்=நகரம்.

ஆர்=நிறைவு. அருவி புனல் நிறைவுடையது.

## வை

| | | | |
|---|---|---|---|
| பதம் | பதவை=வழி | கடம் | கடவை=பூமி |
| அகம் | அகவை=உள் | உரி | உரிவை |
| மரம் | மரவை | அறம் | அறவை |

"அறவைப்பிணஞ் சுடுதல்"

## இ

| | | | |
|---|---|---|---|
| பாண் | பாணி=இசை | மால் | மாலி=கள் |
| ஆழம் | ஆழி | நாளம் | நாளி |
| நால் | நாலி | முக்கால் | முக்காலி |
| பல் | பாலி | கால் | காலி |

நால்=மூங்கில். நாலி=தென்னை. மூங்கிலினமென்பது

பல்=இசை. பாலி=சுலோகம்

நாளம்=உட்டுளை. நாளி=நாழி

கால்=உட்டுளை. காலி=கள். உள்ளிருந்துகசிவது

## ஐ

| | | | |
|---|---|---|---|
| வார் | வாரை | சூர் | சூரை |
| புழல் | புடலை | நுணல் | நுணலை |
| பால் | பாலை | கால் | காலை |

சூர்=முள். சூரை=ஓர் முட்செடி.

கால்=முளை. காலை=உதயம். சூரியன் முளைப்பது.

## பை

| | | | |
|---|---|---|---|
| செம் | செம்பை | கோடு | கொடும்பை |
| கரு | கருப்பை=காரெலி. | கலம் | கலப்பை |
| குரம் | குரம்பை | குதம் | குதம்பை |
| குடம் | குடம்பை | உடு | உடுப்பை=சீக்கிரிமரம். |

செம்பை=ஓர் மரம்; சிவந்தபூவுடையது,
குரம்பை=உடல்; கருவில் முளைப்பது.

குரம்=முளை, வளர்ச்சி.

குடம்பை=நீர்நிலை. குடம்=நீர்.
கொடும்பை=மலையருவி. கோடு=மலை,
குடம்—குதம்=திரட்சி; குதம்பை=காதணி.

### கை

| | | | |
|---|---|---|---|
| கோடு | கொடுங்கை | முரள் | முரட்கை |
| கோடு | கொடுக்கை | இலவந்தி | இலவந்திகை. |
| குண்டி | குண்டிகை | சுரி | சுரிகை |
| முட்டி | முட்டிகை | முசு | முசுமுசுக்கை. |

கோடு=வளைவு. கொடுங்கை=வளைவானது.
,, ,, கொடுக்கை—கொறுக்கை.
முரள்=இசை; முரட்கை=கலிப்பா.
குண்டி=கமண்டலம். முட்டி=சம்மட்டி,
முசுமுசுக்கை. சுனையுடையது. உ—பதம்.
இவ்விகுதிகளுக்கும் முதற்சொல் உள்ளது.

கண் கால் கடைமுதலிய வேழனுருபுகள் முதலிற் பெயராய்ப் பின்னர் உருபுகளாயின.

கண்=இடம். இடத்தையுணர்த்தும் உருபாயிற்று.

எஎ. பெயர் விகுதிகளினின்றே தொழிற்பெயர் முதலிய விகுதிகளுண்டாயின. வினையடி, பெயர் விகுதி பெற்றமையின், வினைப் பெயராயிற்று.

வினைப்பெயர்=தொழிற்பெயர்.

பகுதியளவில் வினையாகவும், விகுதியளவில் பெயராகவும் நிற்பது தொழிற் பெயரென்பது.

உ—ம்.

**தெய்வங்கொள்கை; ஈண்டு இரண்டாவது**
**பகுதியளவாகிய வினையைத் தழுவியது.**

சாத்தனது கொள்கை; ஈண்டு ஆறுவது விகுதியளவாகிய பெயரைத் தழுவியது.

கு, து, பு, உ, கை, அம், வி, வை, ஐ என்னும் இப்பெயர் விகுதிகளே தொழிற்பெயர் விகுதிகளாயினமை காண்க.

உ—உள்; அம்—அல்; ஆயிற்று.

பெயர் விகுதியே பண்புப்பெயர் விகுதியாயின. உண்டான் வந்தான்—உண்டு வந்தானெனவும், உண்டான் மனிதன்—உண்ட மனிதனெனவும், வரலின்; முற்றினின்றே எச்சங்கள் தோன்றின. அவ்வெச்சங்களினின்று எச்சவிகுதிகளுண்டாயின. நன்னூல் விரித்துரை காண்க.

## எஅ. இடை நிலை.

ட் என்பதில் த் இடை நிலையும், ற் இடை நிலையும் உண்டாயின.

உ—ம்.

உண்டான், வந்தான், நின்றான்.

இல்—இன் ஆயிற்று.

பாடினன்; பாடற்றொழிலின்மை ஆனன் என்க.

கண் முதலிய இடப்பெயர் உருபாயினாற்போலஇல் இன் எனத்திரிந்து இடை நிலையாயிற்று.

ப் என்பதில் வ் இடைநிலை யுண்டாயிற்று.

உ—ம். கற்பான், செய்வான்.

முன்னர் நிகழ் காலமும், பின்னர் இறந்த காலமும், அதன் பின்னர் எதிர்காலமும் உண்டாயின. ஈண்கூடாகிய நிகழ்காலந்தான் முதல் முதலுண்டாயது.

"இதனானே நிகழ்காலமின்றென்பாரும், நிகழ்காலமொன்றுமேயுண்டென்பாரும், எனப்பலபகுதியர் ஆசிரியர் என்பது கொள்க" எனநச்சினார்க்கினியர் கூறுவர். (தொ—வினை—ல்)

எதிர்காலம்போல் முற்றும் மறைதலாகாமல், நிகழ்ந்த காரியத்தால் உண்மைபெறப்படலின், இறந்தகாலம் நிகழ் காலத்தின் பின் உண்டாயதென்க.

சிறிதும் மறையாமல் விளங்கி நிற்பது நிகழ் காலமெனவும், மறையாமல் விளங்குவது இறந்த காலமெனவும், முற்றும் மறைந்திருப்பது எதிர் காலமெனவும் கொள்க.

## எகூ. உபசர்க்கங்கள்.

### பி

பிசிதம்—திருநீறு. பீநசம்

பீநசம்—மூக்கில் வரும் ஓர்நோய். நசம்—மூக்கு

### வி

| | |
|---|---|
| வியாளன் | வியாளம் |
| விசாலம். | விமானம் |

வி + ஆளன் = வியாளன்—குரு. பொன்னிற முடையோன்

வியாளன்—வியாழன்

வியாளம்—புலி; மிகச்சிவந்த கண்ணுளுடையது.

ஆலம் (சிவப்பு)—ஆளம்.

ஆலம்—ஆலத்தி—மஞ்சணீர்.

விமானம்—ஆகாயத்திற் செல்வது.

மானம்—ஆகாயம்; செம்மானம்

விசாலம், சால்—நிறைவு.

### மி

| | |
|---|---|
| மிகுண்டம். | மிகுந்தவனம் |
| மைதானம். | மிகுத்தியல்—வில்வம் |

குண்டம்—நீர். மிகுண்டம்—சாறணை.

மி + குண்டம் + வனம். வனம்—நீர்

மிருந்தவனம்=தண்ணீர் விட்டான் கிழங்கு.

மிதானம்—மைதானம்=விசாலமான இடம்.

மி+தானம்

## ஏ

ஏகாலியர்=வண்ணார்
ஏக்கல்=மலை
ஏகாரவல்லி=பாகல்
எக்களித்தல்=மகிழ்தல்
எக்காளம்=ஓர் வாச்சியம்
ஏகுன்றி=குன்றி.

ஏகாலியர்=சாயம் தோய்ப்போர்

## பரி

பரிமாறல்
பரியாசம்
பரிசுத்தம்
பரிகரித்தல்=காத்தல்

ஆசம்=சிரிப்பு

## உ

உதும்பரம்=அத்தி
உய்யானம்
உளமத்தை=ஓர் செடி
உத்துங்கம்
உத்தண்டம்
உயா=வினை

உ+தும்பரம் உ+யா எனப்பிரிக்க.

தும்பரம்=சிவப்பு.

"உயாத்துணையாக வயாவொடும் போகி" (மணிமேகலை)

## ந

நக்கீரன்
நப்பூதனார்
நபுலன்
நச்செள்ளையார்
நபாபு
நப்பசலையார்
நப்பின்னை=திரு.
நப்பாலத்தனார்.
நச்சென்னை

பாபு=தந்தை. நபாபு=நற்றந்தை.

பாப — பாபு

நச்செள்ளையார்—ஓர் புலவர்.

செல்லை செள்ளையாயிற்று.

செல்ல—தங்கை. (தெலுங்கு)

## நி

நிநாதம்—ஒலி

நிகாலம்—கழுத்து

நிபடம்—படித்தல்

நிகீனன்—கீழ்மகன்

இவ்வுபசர்க்கங்கள் மிகுதிப்பொருளன.

## ந

நாத்திகம்.

நகம்—மலை

நங்கூரம்

நாத்தனார்.

கூரம்—அசைவு. முயற்சியுமாம்.

நங்கூரம், மரக்கலத்தை அசையாது நிறுத்துவது. நங்கூரம் பாய்ச்சல், ந+கூரம் எனப்பிரிக்க.

நநந்தனார் நாத்தனார் ஆயிற்று.

## நி - நிர்

நிமலன்

நிர்வாணம்—அம்மணம்.

## அ

அமலம்.

அம்மணம்—ஆடையின்மை

இவை மறைப்பொருளன.

## கு

குத்தொகை

குதட்டல்

குதனையரிசி

குவளை

குத்தொகை—சிறு தொகை

குதனை—சிறிய அளவு

குதட்டல்=சிறிது தட்டல், நாக்குதட்டல்.
குவளை=கண்ணுட்குவளை. சிறிது வளைந்தது.

## தலை

| | |
|---|---|
| தலைப்பெயல் | தலைப்படல் |
| தலைக்கொளல் | தலைதடுமாற்றம்=கலக்கம் |
| தலைநிற்றல் | தலையளித்தல் |

## கை

| | |
|---|---|
| கைவிடல் | கையறியாமை |
| கைப்பற்றல் | கையறல் |
| கைவிலக்கு | கைகூடல் |

அ0. **புணர்ச்சி**

அய்இ=அயி முதலிய உயிர்ச்சந்தியின் படியும், ள்+த=ட முதலிய மெய்ச்சந்தியின்படியும், பதசந்திகளுண்டாயின. சந்தியிடையறவு படாத வாக்கியங்களையும், செய்யுள்களையும், படித்தல் கடினமாகலின் அவை பிற்காலத்தனவாகும். உயிர்ச்சந்தி முன்னும் மெய்ச்சந்தி பின்னும் உண்டாயிருத்தல் வேண்டும். நாவிற் கெளிதாய இயல்புப் புணர்ச்சிதான் முதல்முதலுண்டாயது. திரிபுப் புணர்ச்சியுள் முதல் தோன்றலும், பிறகு திரிதல் கெடுதல்களுமுண்டாயின. திரிபுப்புணர்ச்சி=விகாரப்புணர்ச்சி.

| | |
|---|---|
| நஞ்சு | நச்சு |
| சிக்கல் | சிங்கல் |
| புரி | பூரி=நாணி |
| நேயம் | நெய் |
| பெணை | பெண்ணை=பனை |
| மருமகன் | மருகன் |
| ஓங்கல் | கல்=மலை |
| திகிரி | தேர் |
| நேசம் | நே=அன்பு |

என்பனவும் அத்திரிபுளடங்கும். நச்சு, சிங்கல் முதலியன, நாவினியற்கைப்படி யுண்டாயினமையானும், அவ்வியற்கைச் சொற்களைச்செய்யுளில் வேண்டுழி, வலித்தல் மெலித்தல் முதலியனவாக உண்டாக்கப் பட்டமையானும் அத்திரிபு வேறு; செய்யுள்விகாரம் வேறெனக்கொள்க.

நஞ்சு— நச்சுமுதலியன நாவினியற்கையாலுண்டாயினவாம்.

"போத்தரூர் புல்லறிவினூர்" என்பதுள்

போத்தரூர் என்பது செய்யுட்கண்வேண்டுழித்திரிந்தது. பிறவு முணர்ந்து கொள்க.

மருந்து+பை=மருத்துப்பைமுதலியன செய்யுள் விகாரமாகா. நாவினியற்கையாலுண்டாயின.

அக. இனி அடியில் வரும் வாய்பாடுகளை யுய்த்துணர்தல்வேண்டும்

எழுத்தின்படியும், எழுத்துப்புணர்ச்சியின்படியும், பதப்புணர்ச்சியும் வரும். புணர்ச்சி=சந்தி.

## அ ஆ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் படியே நிலைமொழி யிறுதியிலுள்ள அகரம் ஆகாரமாகும். உ—ம்.

மர+அடி=மராடி
குள+ஆம்பல்=குளாம்பல்
கமுக+அசலம்=கமுகாசலம்.
பிற+ஆண்டும்=பிறாண்டும்.
குட+ஆகாயம்=குடாகாயம்
நில+ஆவிரை=நிலாவிரை.
பெரிய+ஆநங்கை=பெரியா நங்கை.
சிறிய+ஆநங்கை=சிறியா நங்கை
தேவ+ஆசிரிய மண்டபம்=தேவாசிரிய மண்டபம்
சங்க+அத்தன்=சங்காத்தன்

மேக + அத்தை = மேகாத்தை
காள + ஆணம் = காளாணம்.

ஆசிரியமண்டபம் = ஆயிரக்கால் மண்டபம்.

ஆசிரியம் = அகலம்.

ஆசிரியப்பா = அகன்று செல்லும்பா என்பது.
சங்காத்தன் = தோழன். சங்க = தோள்.
மேகாத்தை = பெருந்தலைவி.
காளாணம் = காளான் குழம்பு.

மராடி முதலியவற்றைக்காலவியற்கையால், தொல்காப்பியர் வேறுபடக் கூறுவர். "வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்"—(சு—தே)

## அஉ இ ஈ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் படியே நிலைமொழியீற்றிலுள்ள இகரம், ஈகாரமாகும். உ—ம்.

திருப்புலி + ஈசுரன் = திருப்புலீசுரன்.
கிரி + ஈசன் = கிரீசன்.

## அரு. உ ஊ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின்படியே நிலைமொழியீற்றிலுள்ள உகரம், ஊகாரமாகும் உ—ம்.

குரு + உபதேசம் = குருபதேசம்
தரு + ஊனம் = தரூனம்

அகர இகர உகரங்கள், ஆகார ஈகார ஊகாரமாகுங்கால்; வருமொழி முதல் கெடும்.

## அச. அ + இ = ஏ. வாய்பாடு.

இவ்வாய்பாட்டின்படியே நிலைமொழியீற்று அகரமும், வருமொழி முதல் இகரமும், ஏகாரமாகும். உ—ம்.

அஃக + இனம் = அஃகேனம்
தேவ + இந்திரன் = தேவேந்திரன்
முருக + ஈசன் = முருகேசன்.

## அ௫. அ + உ = ஓ. வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் படியே நிலைமொழியீற்று அகரமும், வருமொழி முதல் உகரமும், ஓகாரமாகும். உ—ம்.

கருப்ப + உதகம் = கருப்போதகம்,
பாத + உதகம் = பாதோதகம்,
கருப்ப + ஒட்டம் = கருப்போட்டம்.

ஒப்புமையால் ஓகாரமுமாம்.

முதல் முதல் அ ஆ முதலிய வாய்பாடுகளின் படியே பதப்புணர்ச்சிகளுண்டாயின.

அவ்வவ்வாய்பாடுகளுக்கு, இனமாகிய பதப்புணர்ச்சிகள், பிறகுண்டாயின.

### அவையாவன:—

| | |
|---|---|
| சதா + ஆநந்தம் = சதாநந்தம் | தரா + ஈசன் = தரேசன் |
| நதீ + ஈசன் = நதீசன் | தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன். |
| சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம் | |

முதலியனவாம்.

அ ஆ முன், அ ஆ வந்தால், இரண்டுங்கெட, ஆகாரம் தோன்றுமென்பர். வேல் + அழகு = வேலழகு என்பதில் லகரமும் அகரமுங் கெட, லகரம் தோன்றுமென்பது போலாம். பிறவு மன்ன.

## அ௬. அய் இ வாய்பாடு.

அய் இ = அயி. ஐ.

இவ்வாய்பாட்டின் இடையிலே யகரமெய்தோன்றி, அகர இகரங்களை உடன் படுத்தினமையின், அது உடன் படுமெய்யெனப் படும். நிலைமொழியீற்றில் ஆகாரமும், வருமொழி முதலில்* இகர

மும் வர, இடையிலே யகரமெய்தோன்றி அவ்விரண்டனையு முடன் படுத்தும்.

உ—ம்.

பா + இரம் = பாயிரம்.

மா + இருஞாலம் = மாயிருஞாலம்.

சும்மா + இருந்தான் = சும்மாயிருந்தான்.

வாளா + இருந்தான் = வாளாயிருந்தான்.

ஆ + இடன் = ஆயிடன்.

ஆ + இடை = ஆயிடை

பா + இருஞ்சிகரம் = பாயிருஞ்சிகரம்.

முன், அ ஆ, இ ஈ, உ ஊ, என்னும் வாய்பாடுகளில் நிலைமொழி யீற்றில் ஆகாரம் வாராமையின், வாய்பாட்டின்படி அகரங்கொள்ளாது ஆகாரங்கொள்ளல்வேண்டும்.

கோ + இல் = கோயில்.

அகரவிலையைபுபற்றி யகரமெய் தோன்றியது.

அ + உ = ஔ.

ஆகாரம், அங்காப்பும்; இகரம் அங்காப்பிலையபுமாகலின், அவ்விரண்டனிடையிலே அங்காப்பிலையாகிய யகரமெய்தோன்றியது. இவ்வங்காப்புப்புணர்ச்சியே நாவிற்கு எளிது.

பாயிரம் = நூலிற்கு முன்னிருப்பது.

; பா = நூல்.

“படைப்பவன் படைத்திலானேல்
பாயிருஞ் சிகரக்குன்றக்
குடைப்பான் புரக்குமாறும்” ——— (பிரம—பு)

அய் இ = அயி என்றாய், ஐயென்றாயிற்று. ஐகுட்டெழுத்து. நன்செய், நனு என்றெழுதல் குட்டெழுத்து. குட்டெழுத்தாவது சுருக்கியெழுதுவது. இக்காலத்தார் கூட்டெழுத்தென்பர். சுருக்காது உள்ளபடியேயெழுதுவது நெட்டெழுத்து. இக்காலத்து முறியெழுதுவோரும் முறியின் ஈற்றில் நெட்டெழுத்துவைப்பர்.

## ௮௭. அய்இ வாய்பாடு.

அய்இ; இம்முன் ய் எனக்கொள்க. கொள்ளவே இகரத்துக் குப்பின் ய் என்றாகும். நிலைமொழியீற்றில் இகரமும், அதனினமாகிய ஈகாரமும், சந்தியெழுத்தாகிய ஐகாரமும்; வருமொழி முதலில் உயிரும்வர, இடையில் யகரமெய்தோன்றி அவ்விரண்டனையுமுடன் படுத்தும்.

இ ய் அ

ஈ ய் அ

ஐ ய் அ

உ—ம்.

மணி + அழகு = மணியழகு.

நீ + அணை = நீயணை.

மனை + அழகு = மனையழகு.

இப்புணர்ச்சி, பிறகுண்டாயது.

## ௮௮. அய்இ.

பாயிர முதலியவற்றுக்கு அய்இ, இம்முன் ய்அ என நிறீஇக் காலமுன்னாகக்கொள்க.

மணியழகு முதலியவற்றுக்கு இடமுன்னாகக்கொள்க, காலமுன், இடமுன் என்னு மிலக்கணமும் முதல் முதல் இங்கிருந்தே யுண்டாயின.

கங, ஙட்முன்க.

இதில் ககரம், ஙகரத்துக்கு முன்னுண்டாயதென்னும் பொருள்தரலின், இதுகாலமுன்னாயிற்று; அக்ககரமே ஙகரத்துக்கு முன்னிடத்தேயிருக்கின்றதென்னும் பொருள்தரலின் இடமுன்னாயிற்று. இடமுன் எல்லாம் பின் என்னும் பொருளில் வரும்.

முன்னிடமாவது எதிர் முகமாகநிற்பது.

"அஐ முதலிடையொக்குஞ் சஞயமுன்"

ஈண்டு முன், காலமுன்னெனக்கொள்க.

"ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே"

ஈண்டுமுன், இடமுன்னெனக்கொள்க.

## ௭௯. அவ்உ வாய்பாடு.

அவ்உ = அவு, ஔ.

இவ்வாய்பாட்டினிடையிலே வகரமெய்தோன்றி, அகர உகரங்களை உடன்படுத்தினமையின் அது உடன்படுமெய்யெனப்படும்.

இ, ஈ, ஐ என்னும் எழுத்துகள் முற்கூறப்பட்டமையின், அவை ஒழிந்தொழிந்த மற்றைய எழுத்துகள் நிலைமொழியீற்றிலும், வருமொழி முதலில் உயிரும், வர, இடையிலே வகரமெய் தோன்றி அவ்விரண்டனையும் உடன் படுத்தும்.

உ—ம்.

மக + அழகு = மகவழகு.
பலா + இலை = பலாவிலை.
திரு + அடி = திருவடி.
பூ + அழகு = பூவழகு.
கோ + இல் = கோவில்.
கௌ + அழகு = கௌவழகு,

ஔகாரமுண்டாயபின் கோ + இல் = கோவில் என்றாயிற்று. கோயில் என்பது பழஞ்சந்தியாகலின், அதுவே சிறந்தது. அவ்உ = அவு, ஔ. ஔகுட்டெழுத்து.

அகரம் அங்காப்பும், உகரம் இதழ்குவிவுமாகலின் இதழ்குவிவினியைபாகிய வகரமெய் இடையிலேதோன்றியது. இவ்விதழ் குவிவுப்புணர்ச்சி நாவிற்குக் கடினமாகலின், பாயிர முதலியனவும், மணியழகு முதலியனவும் ஆகிய இருவகை அங்காப்புப்புணர்ச்சிகளும், நடைபெற்று நாவுபயின்றபின், இப்புணர்ச்சி நடைபெறலாயிற்று.

## ௮௦. அ + இ = ஏ வாய்பாடு.

ஏகாரத்திலுள்ள அகரவியைபுபற்றி வகரமும், இகரவியைபு பற்றி யகரமும், உடன்படு மெய்யாக வரும். உ—ம்.

ஏ + அழகு = எவழகு.

அவனே + அழகன் = அவனேயழகன்.

தனித்து வரும் ஏகாரத்தில் அகரம், முதலில் அண்மைத்தாய் நிற்றலின் வகரமும், தொடர்ந்துவரும் ஏகாரத்தில் அகரம் சேய்மைத்தாயும், ஈற்றில் இகரம் அண்மைத்தாயும் நிற்றலின் யகரமும், தோன்றும்.

எவழகு அகரவியைபால் வகரம் தோன்றியது; அவனேயழகன் இகரவியைபால் யகரம் தோன்றியது.

தனித்துவரும் ஏகாரம் ஓரெழுத்தொருமொழியெனவும், தொடர்ந்துவரும் ஏகாரம் இடைச்சொல்லெனவும்படும். ஈண்டு நாவினியற்கைநிகழ்ச்சி மிகநுணுக்கமாகின்றது.

"இஈ ஐவழியவ்வுமேனை
யுயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரினுடன்படுமெய்யென் றாகும்" ——— (நன்)

## கூக. அய்இ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் ஈற்றிலுள்ள இகரம், ஒலிவடிவில் யகரத்தோடு கூடாது பிரிந்து நிற்கின்றமையின் அந்த இகரமும், அதனினமாகிய ஈகாரமும், சந்தியெழுத்துகளாகிய ஏகார ஐகாரங்களும், யகரத்தோடு மொழிமுதலில் வாரா; தனித்து வருமென்பது.

உ—ம். இடம், ஈடு, ஏடு, ஐயம்.

எகரம் பிறகுண்டாய எழுத்து. எடை.

இவ்வாய்பாட்டில் ஏகாரம் வருதற்குக்காரணம் என் எனின்?

அய்இ என்பவற்றைக்கூட்டி யகரமெய்யைப் பிரிக்கினும் ஏகாரமாகும்; யகரமெய்யைப் பிரித்துக் கூட்டினும் ஏகாரமாகும்.

கூட்டிப்பிரித்தல், பிரித்துக்கூட்டலென்னுமிலக்கணமும் முதல் முதல் இங்கிருந்தே யுண்டாயின.

கூட்டிப்பிரித்தல் = யோகவிபாகம்.

பிரித்துக்கூட்டல் = விபாகயோகம்.

"படைகுடி கூழமைச்சு நட்பரணாறும்
உடையானரசருளேறு"

இது கூட்டிப்பிரித்தற் பொருட்கண் வந்தது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இது பிரித்துக்கூட்டற் பொருட்கண் வந்தது.

## கூஉ. அய்இ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் முதலிலுள்ள அகரம், ஒலிவடிவில் யகரத்தோடு கூடி நிற்கின்றமையின்; அகரமுதலிய உயிரெழுத்துகளுள், இ, ஈ, எ, ஐ என்பன ஒழித்தொழிந்த உயிரெழுத்துகள், யகரத்தோடு மொழி முதலில் வரும்.

உ—ம்.

அட்டி—யட்டி=அதிமதுரம்.
ஆனை—யானை
உகம்—யுகம்=நுகத்தடி
ஊதிகை—யூதிகை=முல்லை.
ஓசனவல்லி—யோசனவல்லி=வல்லாரை
யோகம்—யௌகிகம்.

ஔகாரம், நேரே யகரமெய்யோடு வாராது.

அவ்வாறுவருவது, யகரமெய்யோடுவந்த உகர ஓகாரங்களின் திரிபென்க.

ஒற்றினீக்கமென்னு மிலக்கணத்தால் நுகம் உகமாயிற்று.

ஓகாரம், பிறகுண்டாய எழுத்தாம்.

ஆண்டு—யாண்டு
ஆறு—யாறு
ஆமை—யாமை
ஆடு—யாடு
ஆழல்—யாழல=கறையான்
ஆளி—யாளி
ஆவம்—யாவம்=அம்புப்புட்டில்
ஆங்கு—யாங்கு
ஆதன்—யாதன்
ஆணர்—யாணர்=நன்மை.
ஆக்கை—யாக்கை
ஆய்—யாய்
ஆனம்—யானம்=ஞானம்.

"நாடாவண்ணஞ் செருச்செய்து யாவநாழி நிலையருள்செய்" (சு—தே)

"தூங்கியாங்கு" "இல்லாதி யாங்கு"
"ஆங்கொப்பப்புரையப்போல"
'சேரமான் பெருஞ்சேரலாதன்'
'நெடுவேளாதன்'
'ஓய்மானல்லியாதன்'
'வீரயாதவளவதிரையன்'
"உரைத்தனன் அஃதென்யாய்க்கே" ——— (ஐ—று)
"ஆடல்புரியீசர்தந்தை—களிகூர,
ஆனமொழியேபகர்ந்து சோலைமலை மேவுகந்த
ஆதிமுதலாகவந்த பெருமாளே" (தி—கழ் நகூச)
ஆனமொழி=ஞானமொழி

பல்பொருட்கேற்பின் நல்லது கோடலென்னும் உத்தியால், ஈண்டு ஆனமென்பது ஞானத்தை யுணர்த்திற்று.

ஆனம்—யானம்=ஞானம்
யானம்—யாணர்=விஞ்சையர்
யாணர்நகர்=விஞ்சையருலகு.
யாணர்=தச்சர், சித்திரகாரர்.
யாணர்—யவனர்=தச்சர்.
ஏழ்—யாழ்=வீணை. ஏழ்நரம்புடையது.
எங்கணும்—யாங்கணும்.

ஏகாரத்தில் அகர முண்மையின் அவ்வியைபுபற்றி ஏழ் யாழா யிற்று. அ+இ=ஏ. இவ்வியைபுபற்றியே யகரத்துக்கு ஏகாரமுத லியவற்றை மோனையெழுத்தாகக் கொள்ப.

"யானைக்கண்டங்கரி சென்றேத் தெழிற்செந்திலின்றடைந்தே
யானைக்கண்டங்கரி யற்கங் கயிலையை யேத்ததகை
யானைக்கண்டங்கரி சேரெண்டிக் காக்கினற் கீநலிசை
யானைக்கண்டங்கரிதாகிய சீர்க்கதியெய்தினனே(செந்திலந்தாதி)

"என்றைக்கும் வேண்டுவனேயான்" ——— (தாயு—ல்)

என்பவற்றால் தெரிந்துகொள்க.

இ, ஈ, எ, ஏ என்பன அங்காப்பிலையை பாகலின், அங்காப்பிலையை பாகிய யகரத்துக்கு மோனையாக வந்தன.

"அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்" ——— (நன்னூல்)

## கூரு. அவ்உ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் இறுதியிலுள்ள உகரம், ஒலிவடிவில் வகரத்தோடு கூடாது பிரிந்து நிற்கின்றமையின், அந்த உகரமும், அதனினமாகிய ஊகாரமும், சந்தியெழுத்தாகிய ஒகர ஓகார ஔகாரங்களும், வகரத்தோடு மொழிமுதலில் வாரா. தனித்து வருமென்பது. உ—ம். உடை, ஊர், ஒளி, ஓடு, ஔவை. அவ்உ என்பவற்றைக் கூட்டி வகரமெய்யைப் பிரிக்கினும் ஒகாரமாகும். வகரமெய்யைப் பிரித்துக்கூட்டினும் ஓகாரமாகும்.

## கூசு. அவ்உ வாய்பாடு.

இவ்வாய்பாட்டின் முதலிலுள்ள அகரம், ஒலிவடிவில் வகரத்தோடு கூடிநிற்கின்றமையின் அகரமுதலிய உயிரெழுத்துகளுள் உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன ஒழித்தொழிந்த உயிரெழுத்துகள் வகரத்தோடு மொழி முதலில் வரும்.

உ—ம். வளி, வாளி, விளி, வீடு, வெளி, வேலை, வையம், வௌவால்.

எ, ஒ என்னுங் குற்றெழுத்துகள், ஔகார முண்டாய பிறகு தான் உண்டாயின.

"உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்" ——— (நன்னூல்)

அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்பன யகரத்தோடும்; அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்பன வகரத்தோடும்; மொழிமுதலில் வருமெனவும்;

இ, ஈ, ஏ, ஐ என்பனவும், உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பனவும், வருமொழி முதலில் முறையே யகரவுடன்படுமெய்யோடும், வகரவுடன்படு மெய்யோடும் வருமெனவும் உணர்க.

இ ஈ எ ஐ என்பன யகரத்தோடு மொழிமுதலில் வாரா; வகரத்தோடு வரும்.

உ ஊ ஒ ஔ என்பன வகரத்தோடு மொழிமுதலில் வாரா; யகரத்தோடு வரும்.

அ ஆ என்பன யகர வகரங்களோடு மொழிமுதலில் வரும். ஓகாரம் பிறகுண்டாய எழுத்து.

௧௯௫. 

## அய் இ

அட்டி—யட்டி; ஆனை—யானை.

அகர ஆகாரங்கள் அங்காப்பும், யகரம் ஓர்சார் அங்காப்பியையும், ஆகலின் அவை யகரத்தோடு மொழிமுதலில் வருதலினால் நாவிற்குக் கடினமாகாது; எளிதேயாகும்

உகம்—யுகம்; ஊதிகை—யூதிகை.

ஓசனவல்லி—யோசனவல்லி.

ஈண்டு உகரமுதலியன இதழ்குவிவெழுத்தாகலின், ஓர் சார் அங்காப்பியையுடைய யகரத்தோடு மொழிமுதலில் வருதலினால் நாவிற்குச்சிறி தெளிதாகும்.

இ ஈ எ ஏ ஐ என்பன அங்காப்பியையுடைய எழுத்தாகலின், ஓர்சார் அங்காப்பியையுடைய யகரத்தோடு மொழிமுதல் வரின் அவ்வுயிர்முதல்மொழிபோல நாவிற்கெளிதாகமாட்டாது.

அ ஆ, அங்காப்பு

இ ஈ, முதலியன அங்காப்பியைபு

யகரம், ஓர்சார் அங்காப்பியைபு. தம்முள் வேறுபாடு காண்க.

௧௯௬. 

## அவ் உ

வளி, வாளி—வௌவால்.

அகர முதலியன முறையே அங்காப்பும், அங்காப்பியைபும ஆகலின், இதழ்குவிவெழுத்தாகிய வகரத்தோடு அவை மொழி முதலில் வருதலினால் நாவிற்கு அத்துணைக் கடினமாக மாட்டாது.

உ ஊ ஒ ஓ என்பவையே இதழ்குவிவெழுத்தாகலின், அவை இதழ்குவிவினியையுடைய வகரத்தோடு மொழிமுதலில் வரின், நாவிற்குக் கடினமாகும்.

ஈண்டு நாவினியற்கை நுணுக்கம், மிக விளங்குமாறு காண்க. நாவினியற்கை நிகழ்ச்சி, நீரினியற்கை நிகழ்ச்சிபோல்வது.

அங்காப்பும் இதழ்குவிவும் தம்முள் முரணுதலின் அதற்கேற்ற வாறுதான், நாவு நடைபெறும்.

## கூஏ. குற்றியலுகரம்.

குற்றியலுகரத்துக்குப்பின் உயிர் வர நெடிதுகாலமாக உடன் படுமெய்யே வந்தது. உ—ம்.

"பந்தமும் வீடு மாயினார்க்கு
வாதியுமந்தமுமாயினார்க்கு
வாடப்பொற்சுண்ண மிடித்து நாமே" (திருவாசகம்")

"போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
வோதத்தகுவது நீறு வுண்மையிலுள்ளது நீறு" (தேவாரம்)

நெடிது காலத்துக்கு முன் உடன்படுமெய்யே வந்தது; பிறகு சிறுபான்மை உகரங்கெட்டு வந்தது; இப்பொழுது பெரும்பான் மையும் உகரங்கெட்டு வருகின்றது.

"உயிரவரினுக்குறள் மெய்விட்டோடும்" (நன்னூல்)

ஏரிகரை, குழலினை, மலைகிழபோன். தனபதி, பஞ்சபாத்தி ரம் முதலிய இயல்புப்புணர்ச்சிகளே முதல் முதலுண்டாயின.

## கூஅ மெய்யீற்றுப்புணர்ச்சி.

## அய் இ வாய்பாடு.

அய் இ—அயி

இவ்வாய்பாட்டில் மெய்யின்மேல் உயிரேறினமையின் சொற் களும் இங்ஙனமே வரும்.

உ—ம்.

வேல் + அழகு = வேலழகு

"உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" (நன்னூல்)

கூகூ. ## டகரவாய்பாடு.

ள் + த = ட.

ளகரமும் தகரமும் டகரமாயினமையின், நிலை மொழி யீற்றில் ளகரமெய்யும், வருமொழி முதலில் தகரமும் வரின், அவை யிரண்டும் டகரமாகும். உ—ம்.

கள் + தீது = கட்டீது.

க00. ## ணகரவாய்பாடு.

ள் + ந = ண.

ளகரமும் நகரமும் ணகரமாயினமையின், நிலைமொழியீற்றில் ளகரமெய்யும், வருமொழி முதலில் நகரமும் வரின் அவை யிரண்டும் ணகரமாகும். உ—ம்.

எள் + நெய் = எண்ணெய்.

க0க. ## றகரவாய்பாடு.

ல் + த = ற.

லகரமும் தகரமும் றகரமாயினமையின், நிலைமொழியீற்றில் லகரமெய்யும், வருமொழி முதலில் தகரமும் வரின் அவை யிரண்டும் றகரமாகும். உ—ம்.

கல் + தீது = கற்றீது.

க0உ ## னகரவாய்பாடு

ல் + ந = ன.

லகரமும் நகரமும் னகரமாயினமையின், நிலைமொழியீற்றில் லகரமெய்யும், வருமொழி முதலில் நகரமும் வரின், அவை யிரண்டும் னகரமாகும்.

உ—ம்.

நல் + நெறி = நன்னெறி.

இப்புணர்ச்சிகள், வாய்பாடுகளின்படியே வந்தன.

௧௦௩. **டகரவாய்பாடு.**

ள் + த = ட

உ—ம்.

கள் + தீது = கட்டீது
கள் + குடம் = கட்குடம்
கள் + சாடி = கட்சாடி
கள் + பானை = கட்பானை

இனம் பற்றிக்ககர சகர பகரங்கள் வரினும் நிலைமொழி யீற்று ளகரம், டகரமாகத் திரியா நிற்கும்.

௧௦௪. **ணகரவாய்பாடு.**

ள் + ந = ண.

உ—ம்.

எள் + நெய் = எண்ணெய்
முள் + ஞெரி = முண்ஞெரி
புள் + மாட்சி = புண்மாட்சி

இனம்பற்றி ஞகர மகரங்கள் வரினும் நிலைமொழி யீற்றுளகரம் ணகரமாகத் திரியா நிற்கும்.

௧௦௫. **றகரவாய்பாடு.**

ல் + த = ற.

உ—ம்.

கல் + தூண் = கற்றூண்
கல் + குடம் = கற்குடம்
கல் + சட்டி = கற்சட்டி
கல் + பாறை = கற்பாறை

௧0௬. ## னகரவாய்பாடு.

ல்+ந=ன.

உ—ம்.

நல்+நெறி=நன்னெறி

கல்+ஞெரி=கன்ஞெரி

புல்+மாட்சி=புன்மாட்சி

லகரமும் இனம்பற்றித்திரியா நிற்கும்.

௧0௭. ## ணகரவாய்பாடு.

ள்+ந=ண.

ணகரத்தில் ளகரமுண்மையின், அவ்வினையைபுபற்றி நிலைமொழியீற்றில் ணகரமெய்யும், வருமொழி முதலில் வல்லினமும் வரின் டகரமாகும். உ—ம்,

மண்+தூண்=மட்டூண்

மண்+பானை=மட்பானை

௧0௮. ## னகரவாய்பாடு.

ல்+ந=ன

னகரத்தில் லகரமுண்மையின் அவ்வினையைபுபற்றி நிலைமொழியீற்றில் னகரமெய்யும, வருமொழி முதலில்வல்லினமும் வரின் றகரமாகும். உ—ம்.

பொன்+தூண்=பொற்றூண்

பொன்+பானை=பொற்பானை

---

இனி, வேள்+தீயன்=வேட்டீயன்

எனின் நாவிற்குக் கடினமாகவும், வேடீயன்எனின் நாவிற்கு எளிமையாகவும் இருத்தலின்,

"கூறில்செறியாலள என்னும் சூத்திரம் எழுந்தது.

௧0௯. முதல் முதல் மராடி முதலிய புணர்ச்சியும்,

பின் பாயிர முதலிய புணர்ச்சியும்,

அதன் பின் மணியழகு முதலிய புணர்ச்சியும்,

அதன் பின் மகவழகு முதலிய புணர்ச்சியும்,
அதன் பின் மெய்யீற்றுப் புணர்ச்சியும்,
அதன் பின் இனம் பற்றிய புணர்ச்சியும்,
உண்டாயின.

பிறவு முணர்ந்து கொள்க,

ககo.

## வெண்பா.

நாவி னியல்பால் நடைபெற்ற நல்லோசை
பாவி னியல்புக்குப் பாங்காகும்—நாவின்
இயற்கையே வேண்டி யியலுத லொண்ணு
செயற்கையும் வேண்டல் சிறப்பு.

"விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணியனை
என்மனத்தே வைத்தேனே"

(திருவேகம்பம். அ-தே)
புணர்ச்சி முற்றுப்பெற்றது

கககு. # சொல்.

கண்முதலிய பொறிகளாலும், மனத்தாலும் அறியப்படும் பொருள்களின் பெயரே முதற்சொல்லாம். அப்பெயரினின்றே வினைகள் பிறந்தன. இடைச்சொல்லும், உரிச்சொல்லும், அவ்விரண்டனது சார்பிற்றோன்றும்.

"சொல்லெனப் படுபெயரேவினையென் றாயிரண்டென்ப வறிந்திசினோரே"

"இடைச்சொற்கிளவியு முரிச்சொற்கிளவியும் அவற்றுவழி மருங்கிற்றோன்று மென்ப" (தொல்காப்பியம்)

பெயரே யென்ற தேற்றேகாரம், அதன் தலைமைச்சிறப்பினை விளக்கற்பாலது. வினையே முதலாயின், வினையே பெயரென்றாயிரண்டென்ப எனக்குச்சூத்திரிப்பர். பயனிலையானது தன் வினை முதலுண்மை காட்டல்போல, வினையானது தன் பெயருண்மையைக் காட்டுமெனத்தெளிக. சூரியன் காரியமாகிய **சுல்** என்பது என் சொல்லோ எனின், சொற்களுக்கெல்லாம் தலைமையுடைய பெயர்ச்சொற்களுக்கும் தலைமைப்பெருஞ்சிறப்புடையதோர் வியாபக இயற்கை முதனிலைச்சொல்லென்க.

எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருள்களுக்குச் சொற்களு மிலவாம்.

"உலகினுள்—இல்லதற்கில்லை பெயர்" (பழமொழி)

ககஉ. பெயரினின்றே வினைகள் பிறந்தன என்பதற்கு

**உதாரணம்.**

| | |
|---|---|
| பெயர் | — வினை |
| கண் | — காணல் |
| காய் | — காய்த்தல் |
| ஆறு | — ஆடல்=குளித்தல் |
| தூங்கு | — தூங்கல் |
| கோல் (அம்பு) | — கொலை |
| கோல் (யாழ்நரம்பு) | — கொளுத்தல்=வீணைவாசித்தல் |

ஆழம் — ஆழ்தல்
செல் (மேகம்) — செல்லல்
வழி (திரட்சி) — வழித்தல்=திரட்டல்
நீறு — நீறல்
ஆலம் (கடல்) — ஆலல்=அசைதல்
கோடு (கொம்பு) — கொட்டல்
தோயம் (நீர்) — தோய்தல்=குளித்தல்
தோயம் (பனிக்கட்டி)—தோய்தல்=உறைதல்
தோள் (கை) — தொழல்
கதம் (சொல்) — காதல்=சொல்லல். ஆந்தைக்காதல்
கதம் — கத்தல்
பழம் — பழுத்தல்
பழம் — பழுநல்
அசனம் — அசித்தல்=புசித்தல்
சேதம் (ஞானம்) — செத்தல்=அறிதல்
உரு (முளை) — உருத்தல்=முளைத்தல்
உருமு — உருமித்தல்=வெப்பமாதல்
கால் (முளை) — கலித்தல்=வளர்தல்

"கருவாகிக்குழம்பிருந்து கலித்து மூளை" (அ-தெ)

உரை (பொன்) — உரைதல்=தேய்தல்
உறை (வாளுள்) — உறைதல்=வசித்தல்
கவம் (மத்து) — கவர்தல்=கவடதல்
கலி (கடல்) — கலித்தல்=ஒலித்தல்
கப்பம் (சீலை) — கப்புதல்=போர்த்தல்
பொறை (பூமி) — பொறுத்தல்
வாரம் (கரை) — வாரித்தல்=தடுத்தல்
ஆசனம் — அசைதல்=இருத்தல்
கோ (உட்டொளை) — கோத்தல்
கொஞ்சம் — கொஞ்சல்
கிஞ்சம் — கெஞ்சல்
கசம் (நீர்) — கசிதல்
ஆலி (கள்) — ஆலித்தல்=களித்தல்
கலம் (படை) — கலித்தல்=கெலித்தல்

ஓதம் (வீக்கம்) — ஊதல்=வீங்கல்
அல்லம் (துன்பம்) — அல்லாத்தல்
மூகம் — மூகாத்தல்=மௌனம்
சிக்கம் (சிறை) — சிக்கல்=இளைத்தல்
ஓடம் — ஓடல்
போதம் (கலம்) — போதல்
உரு ,, — ஊரல்=செல்லல்
உரு (அட்டை) — ஊரல்
பாணி (கை) — பண்ணல்
பாணி “ — பணிதல்
பாணி “ — பணித்தல்=ஈதல்
ஏ (அம்பு) — எய்தல்
பார் (பூமி) — பரித்தல்=சுமத்தல்
கொட்டு (களைக்கொட்டு) கொத்தல்
கை — கைத்தல்=புனைதல்
செய் (கை) — செய்தல்
செப்பம் (இசை) — செப்பல்
கால் (முளை) — கல்லல்=தோண்டல்
வடி (கூர்மை) — வடித்தல்=கூர்மையாக்கல்
நால் (முளை) — நாற்சி=வளர்ச்சி
வாள் (கத்தி) — வழித்தல்=சிரைத்தல்
இடம் (பொன்) — இடத்தல்=ஒளிரல்
மருந்து — மாந்தல்
கும்மாளம் — கும்மலித்தல்=மகிழ்தல்
முளை (சிறுமை) — முடைதல்=இளைத்தல்
முளி (தீ) — முளிதல்=வாடல்
உறை (மருந்து) — உறைத்தல்
வரை (குறிஞ்சி) — வரைதல்=மணத்தல்
அசி — அசித்தல்=சிரித்தல்
மை (அஞ்சனம்) — மைதல்
கிடக்கை (பூமி) — கிடத்தல்
புடை (சிறகு) — புடைத்தல்=பறவை சிறகடித்தல்
அழுந்து — அழுந்தல்
தோட்டி (அங்குசம்) — தோண்டல்

பொருளினது புடைபெயர்ச்சி வினையெனின், ஒவ்வோர் பொருளினுடைய பெயர்ச்சொல்லினின்றே வினைச்சொல் பிறக்குமென்பது துணிபு. உ—ம்

நீரிற் செல்லுவதோர் பொருளின் பெயர் ஓடம். அப்பொருளின் புடைபெயர்ச்சி செல்லுவது. ஆகலின் அவ்வோடமென்னும் பெயர்ச்சொல்லில் ஓடலென்னும் வினை பிறந்தது. ஓடலென்பதே ஓடத்தின் புடைபெயர்ச்சியாகின்றது.

இச்சிறப்புப் புடைபெயர்சசி, குதிரையோட்ட முதலியவற்றிற்கும் வழங்கலின் பொதுவாயிற்று. பிறவுமன்ன.

அநுகரண வோசையும், ஈரடுக்கொலியும் பிறவும் தத்தமக்கோர் முதற்சொல்லையுடையன; அவை யியற்கைய வல்ல.

உ—ம்.

கண்டம் (மணி)—கணீரெனல்
சரம் (அம்பு)—சரேலெனல்
புசி (தீ)—புசு எனல்
வெண்கலம்—கல்லெனல்
வெள்—வெள்ளெனல்
கறுப்பு—கறேலெனல்
சிவப்பு—செவேலெனல்
விளி (இசை) விடேலெனல்
கொல் ,, கொல்லெனல்
சலம்—சில்லெனல்

வெண்பா.

"இம்மென்னுமுன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதா—சும்மா
இருந்தாலிருந்தேன் எழுந்தேனேயாயின்
பெருங்காள மேகம் பிளாய்" என்பதுள்
இம்மெனல், அம்மெனல் என்பவற்றுக்கு
முதற்சொல் என்னோ எனின்?

அகமென்பவற்றுள் அம்என்பது இயற்கையெழுத்தோசையாகலின் அதினின்று அம்மெனல் என்பதுவந்தது.

பிறகு அம்மெனல் இம்மெனலாயிற்று. இம்மெனலென்பது சிறிது அங்காததலையுணர்த்தற்பாலது.

ககரு. ஈரடுக்கொலிக்குறிப்பு.

உ—ம்.

| | | | |
|---|---|---|---|
| கண்டம் (மணி) | -- கணகணெனல் | சூரம் | —சுருசுருப்பு |
| சரம் (அம்பு) | —சரசரெனல் | கிளை (இசை) | —கிளுகிளுத்தல் |
| கசம் (ஊற்றுநீர்நிலை) | —கசகசெனல் | நகை (ஒளி) | —நகநகெனல் |
| வெண்கலம் | —கலகலெனல் | வில் | —விலவிலத்தல் |
| சலம் (நீர்) | —சலசலெனல் | பசுமை | --பசபசெனல் |
| குளம் | —குளுகுளெனல் | பசத்தல்(காமுறல்) | —பசபசெனல் |
| பலம் (கனி) | —பலபலெனல் | வாழை | —வழவழெனல் |
| கரம் (கத்தி) | —கரகரெனல் | முரம் (ஒலி) | —முரமுரெனல் |
| கணம் (தீ) | —கணகணெனல் | புசி (தீ) | —புசுபுசெனல் |
| மல் (சண்டை) | —மலமலெனல் | கீர் (ஒலி) | —கீர் கீரெனல் |
| வறம் (வறட்சி) | —வறவறெனல் | கில் ,, | —கிலுகிலுத்தல் |
| இளமை | —இளஇளவெனல் | சோடை | —சொடசொடெனல் |
| மிரியல் (மிளகு) | —விருவிருப்பு | பளிங்கு | —பளபளெனல் |

வியர்வையா லுடம்பு கசகசென்றிருக்கின்றது.

முகங் குளுகுளென் றிருக்கின்றது.

போரில் கரகரெனவெட்டினான்.

பயிர் இளஇள வென்றெழுகின்றது.

கள்ளன் பசபசென விழிக்கின்றான்.

நாற்றுப் பசபசென முளைக்கின்றது.

மோர் முரமுரெனப் புளித்தது.

பஞ்சு புசுபுசென எரிந்துபோய்விட்டது.

பசபசெனலென்பது—மசமசெனல்எனவும்,

வழ வழப்புஎன்பது—மழமழப்பெனவும்

திரியும் பிறவுமுணர்ந்துகொள்க.

ககசு ஒருமை, சின்மை, பன்மை.

ஒருமை, சின்மை, பன்மையென்பன தமிழில் ஒருமொழியாலமைந்துள்ளன. இவற்றைவடநூலார் ஏகவசனம், துவிவசனம், பகுவசனம் எனத்தொடர்மொழியாற் கூறுவர்.

| | | |
|---|---|---|
| ஒருமை | ——— | ஒருவன் |
| சின்மை | ——— | சிலர் |
| பன்மை | ——— | பலர் |

ஒருமை, இன்மை, பன்மை யென்பவற்றைநோக்கி ஏகவசனம், துவிவசனம், பகுவசனம் என்பவை வந்தனவென்பர். நச்சினார்க்கினியர். தொடர் மொழியாக இருத்தலே அதற்குச்சான்று.

கக௫. இடம்.

தன்மை, முன்னிலை, படர்க்கையென்பன ஒரு மொழியாதலும்; உத்தமபுருடன், மத்திமபுருடன், அதமபுருடன் என்பன தொடர்மொழியாதலும் உணர்க. தன்மையும், படர்க்கையும் உண்டாயபிறகுதான் முன்னிலையுண்டாயது. பேசும்பொருள் தன்மை; பேசப்படும்பொருள் படர்க்கை. இவையே முதல்முதலுண்டாயினவாம்.

கக௬. பால்.

தமிழில் ஆண்பால், பெண்பால் முதலியவற்றைச் சொல்லாலே யறிதல் கூடும். வடமொழியில் பொருளுணர்ந்த பின்புதான் பாலறியலாகும்.

வந்தான்; இதில் ஆன்விகுதியே ஆண்பாலையுணர்த்திற்று. பிறவுமுணர்ந்துகொள்க.

| | | |
|---|---|---|
| நாயன் | — | நாய்ச்சி. |
| நம்பி | — | நங்கை. |
| எயினன் | — | எயினி, எயிற்றி. |
| அத்தன் | — | அத்தை, ஆத்தாள். |
| முல்லான் | — | முல்லை |
| கண்ணன் | — | கண்ணை, கண்ணி |
| நாகன் | — | நாகை, நாகி. |
| பூதன் | — | பூதி |
| காலன் | — | காலி |
| அப்பன் | — | அப்பி |
| பாத்தன் | — | பாத்தை |
| பாதன் | — | பாத்தி=நெய்தனிலப்பெண் |
| தவன் | — | தவை |
| புலவன் | — | புலச்சி |

| | | |
|---|---|---|
| பனவன் | — | பனவி |
| குறவன் | — | குறவி, குறத்தி. |
| மடவன் | — | மடவி |
| வேடன் | — | வேடிச்சி, வேட்டிச்சி. |
| வேலன் | — | வேலி |
| ஐயன் | — | ஐயை |

ஐகாரம் செயற்கை யெழுத்தாகலின், அவ்விற்றுப் பெண்பாற் சொற்களெல்லாம் பிற்காலத்தனவாகும். பெண்பாலுணர்த்தும் இகர விகுதியே ஐகாரமாயிற்று.

ஐயதியென்பது சயித்தான், சயித்தாள், சயித்தது என முப்பாலுக்கும் பொதுவாகலின், குறிப்புணர்ச்சியாலன்றி இன்னபாலெனத் துணிதல் கூடாது.

அஃறிணைக்கண்ணும் ஆண்பால், பெண்பால் உள்ளன.

உ—ம்.

| | | |
|---|---|---|
| களிறு=ஆண்யானை | — | பிடி=பெண்யானை |
| கேழல்=ஆண்பன்றி | — | பிணவு=பெண்பன்றி |
| இரலை=ஆண்மான் | — | பிணவு=பெண்மான் |
| தகர்=ஆண்யாடு | — | மூடு=பெண்யாடு |
| கண்டி=ஆணெருமை | — | நாகு=பெண்ணெருமை |
| கடுவன்=ஆண்நாய் | — | முடுவல்=பெண்ணாய் |
| கடுவன்=ஆண்குரங்கு | — | மந்தி=பெண்குரங்கு |
| சேவல்=ஆண்கோழி | — | அளகு=பெண்கோழி |
| போத்து=ஆண்மயில் | — | அளகு=பெண்மயில் |
| கோட்டான்=ஆண்கூகை | — | அளகு=பெண்கூகை |
| சுறா=ஆண்மீன் | — | நாகு=பெண்மீன் |

இக்கூறப்பட்ட ஆண்பாற் பெயருட்பெரும்பான்மையும், கருவுண்டாக்குவதென்னும் பொருளிலும், சிறுபான்மை உயர்புடையதென்னும் பொருளிலும் வரும்.

பெண்பாற் பெயருட்பெரும்பான்மையும் ஈனுவதென்னும் பொருளில் வரும். பிறவும் தொல்காப்பிய மரபியலுட் காண்க. இவ்

வஃறிணை யாண்பெண்பாகுபாடுகளெல்லாம், வரையறைப்படுத்தற்கரிய பண்டைக் காலத்தனவாம்

குஞ்சரம்=ஆண்யானை — குஞ்சரி=பெண்யானை.
சுனகம்=ஆண்நாய் — சுனி=பெண்ணாய்.
பேகம்=ஆண்தவளை — பேகி=பெண்தவளை.
கமடம்=ஆண்யாமை — கமடி=பெண்யாமை.
கரி=ஆண்யானை — கரீணி=பெண்யானை.
பிகம்=ஆண்குயில் — பிகி=பெண்குயில்.
சடகம்=ஆண்ஊர்க்குருவி — சடகை=பெண்ஊர்க்குருவி.
கண்டூபதம்=ஆண்மண்ணுணிப்பாம்பு—கண்டூபதி=பெண்மண்ணுணிப்பாம்பு.
காகம்=ஆண்காக்கை. — காகி=பெண்காக்கை (பாணி)

இவை பிற்காலத்து வழக்கு. கேழல், பிணவுமுதலியன, தமிழில் ஆண்பால், பெண்பால் முதலிய விகுதிகள் உண்டாவதற்கு முன் உண்டாயினவாம்.

கேழல் பிணவு முதலியவற்றுக்கு ஆண்பாற் பொருள்வேறு பெண்பாற் பொருள்வேறு.

குஞ்சரம் குஞ்சரி முதலியவற்றுக்கு ஆண்பாற்பொருளே பெண்பாலுக்குமாம்.

இதனானே தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டது என்பதுணர்ந்து கொள்க.

நம்பி ஆடூஉ முதலியனவும், தோழி செவிலிமுதலியவும் உயர்திணைக்கண் ஆண் பெண் பாகுபாடுகளாம். இவையும் பண்டைக்காலத்தனவாம். நாயன் நாய்ச்சி முதலியன பிற்காலத்து வழக்கு. பறவைகளில் ஆண் பெண்ணென் றறிதற்குரிய அறிகுறிகள் சிறந்துள்ளன.

அவைவருமாறு:—

மயில், கோழி, காட்டுக்கோழி, கவுதாரி இவைஆணுயின் பின் காலில் பெரியமுள் ஒன்றுள்ளது. பெண்ணுயின் சிறியமுள் ஒன்றுள்ளது. அரிக்கவுதாரி, ஆணுயின் பின்காலில் ஐந்துமுள்ளும், பெண்

ணுயின் நான்குமுள்ளுமிருக்கும். மலைக்காடையுள் ஆணிற்குப்பின் காலில் ஓர்முள்ளுண்டு; பெண்ணிற்குமுள்ளில்லை. கூகையுள் ஆணிற்குத் தலைபெரிது; கண்டத்தில் நிறமுண்டு; பெண்ணிற்குத் தலை சிறிது; கண்டத்தில் நிறமில்லை.

ஊர்க்குருவி ஆண்பெரிது; கழுத்தில் கறுப்புண்டு; பெண் சிறிது; சாம்பல் நிறம்.

அண்டங்காக்கையுள் ஆண்பெரிது; பெண்சிறிது. ஆண்கொக்கிற்குப் பிடரியில் கருவரி மூன்றுண்டு; பெண்கொக்கிற்குச் சாம்பலான கருவரிமூன்றுண்டு. கருடன் ஆணுயின் தலைபெரிது; கழுத்தில் வெண்ணிறமுண்டு; பெண்ணினும்பெரிது. பெண்ணுயின், தலை சிறிது; கழுத்தில் மங்கல்வெண்ணிறமுண்டு. ஆண்கிளிக்கு மேன்மூக்கும் கீழ்மூக்கும் சிவப்பு; கண்டத்தில் நிறமுண்டு; பெண்கிளிக்கு மேன்மூக்குச்சிவப்பு; கீழ்மூக்குக்கறுப்பு; கண்டத்தில் நிறமில்லை. ஆண்குயிலுக்குக்கழுத்தில் வெள்ளையுங் கறுப்புமாம்; பெண்குயிலுக்குக்கறுப்புமாத்திரமுண்டு. வாத்து, கிளுவை, பூஞ்சிட்டு இவற்றுள் ஆணிற்கு மூக்குப்பெரிது; பெண்ணிற்குச்சிறிது. காட்டுச்சிட்டு ஆணுயின் மூக்குவெளிது; பெண்ணுயின்கரிது. வல்லூறு ஆணுயின் கழுத்தில்நிறமுண்டு; பெண்ணுயின் நிறமில்லை. நிறம் = வண்ணம். பொதுப்பட ஆண்பறவைகளுக்கு மூக்குப்பெரிது; பெண்பறவைகளுக்குச்சிறிது.

அளகென்பது குற்றியலுகரமாகலின், ஆண்மூக்கிற் சிறிதெனப் பொருள் கொள்க. கொள்ளவே பெண்பறவைகளுக்குப் பொதுப்பட அளகெனலமையும். பிறகு அன்னப்பெடைக்கும், கோழி, கூகை, மயில் இவற்றின் பெடைக்கும் சிறப்புவழக்காயிற்றெனக.

அள் = கூர்மை

அளம் = கூர்மை

அளகம் = பன்றிமுள். கூரியது.

அளகு = பெண்பறவை.

"கோழியுங் கூகையுமாயிரண்டல்லவை
சூழுங்காலை யளவெனலமையா"

"அப்பெயர்க்கிழமை மயிற்குமுரித்தே" (தொல்காப்பியம்)

"கோழியுங் கூகையு மல்லாப் பெண்பெயர் ஆயுங்காலை யளவெனற்குரிய" (பிங்கல—நி)

"அயர்வுறுகோழிகூகையல்லாப்பெண்அளவென்றோதா" (சூடாமணி—நி)

அளவென்றோதும் என்று பாடஞ்சொல்லுவாருமுளரென்பர், நாவலர். இங்ஙனம் முரண்படுவர்.

இனி, கோழி, கூகை, மயில் இவற்றின் பெண்ணினது மூக்கு, தத்தம் ஆணினது மூக்கிற் சிறிதாக இருத்தலின், தொல்காப்பியர் கூற்றுப்பொருந்தற்பாலது.

ககஎ. இடையிற் பிறவெழுத்துவரல்

ஓரசையாகிய வோர்தாது இடையிற் பிறவெழுத்துகளை யேற்றுபெற்றி பெற்று; ஈரசை, மூவசை, நாலசைவரை நீளினும் அவ்வோரசைப் பொருளையே பயக்குகிற்குமென்பதை இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் வரையுள்ள அப்பாகுபாடே யுணர்த்தலின், நாலசையின் மிக்க தனிச்சொற்கள், இலவாமெனக் கொள்ளல் வேண்டும்.

அற்றேல், ஏனைய அசைகள் நின்று பயனின்மையோ வெனின், அவ்வோரசைப்பொருளே யேனைய அசைகளிலும் வியாபித்து நிற்றலின் நின்று பயனின்மை யென்னுங் குற்றமாகாது. எது போலெனின் உலைக்களத்திற்காயும் பற்றிரும்பினும் அனலம் வியாபிப்பது போலென்க.

இடையிற் பிறவெழுத்துகளைப் பெறுங்கால், பெரும்பான்மையும் இயற்கையெழுத்தின்பின் செயற்கையெழுத்தும் செயற்கையெழுத்தின்பின் இயற்கையெழுத்தும் வரும்.

இயற்கை யெழுத்து உச்சரித்தற்கெளிதாய வெழுத்து; செயற்கை எழுத்து உச்சரித்தற்கரிதாய வெழுத்து. இயற்கை யெழுத்தொன்றானே சொற்கள் வளர்ச்சி ப்பெறின், நாவுதிருந்தி வன்மை பெறாதாகலின், அது பெறும்பொருட்டு இடை இடையே யேற்ற பெற்றி சேர்த்தல் வேண்டும், சேர்ந்தும் வரும்.

## உதாரணம்.

சதம் —சதகம்
பாலன் —பாலகன்
கானம் —கானகம்
பாற்குனம் —பார்க்குநிகம்
சீதம் —சீதளம்
வசீகரம் —வசீகரணம்
வஞ்சம் —வஞ்சகம்
நாசம் —நாசனம்
காதம் —காவதம்
கம்பம் —கம்பிதம்=நடுக்கம்
துன்றல் —துவன்றல்-நெருங்கல்
பக்கம் —படிக்கம்=துப்பற்கல [ம்
பாரம்-கவசம்—பாணம்=கவசம்
பயம் —பாயசம்
சிந்தம் —சிந்தகம்=புளி
திந்தினம் —திந்திரணம்= ,,
கிசலம் —கிசலயம்=தளிர்
சமம் —சமானம்
துருணம் —துருனகம்=முள்
துருனகம் —துருமனகம்="
தாடம்=(நீர்முள்ளி)—தாடகம்=நீர் [முள்ளி
கந்தம் —கந்தகம்
காதல் —கவர்தல்=விரும்பல்
இலஞ்சி —இலவந்தி
அத்தம் —அலத்தம்
அலத்தம் —அலத்தகம்
தடவல் —தைவரல்
ஆய்தல் —ஆராய்தல்
சயந்தம் —சயந்தணம்

சத்தி —சருத்தி=தேரிடக்கி [யம்
சீரம் —சீதாரம்
கங்கம் —கங்கதம்=சீப்பு
சாகம் —சாகளம்=வெள்ளாடு
சாகளம் —சகலகம்=வெள்ளா [ட்டுக்கடா
புகம் —யுகளம்=
மால் —மயல் [இரண்டு
காம்பு —கரும்பு. மூங்கிலின [மென்பகு
ஓதல் —ஓர்தல்
ஓதல்(பிரிதல்)—ஒழிதல்
ஈதல் —இடுதல்
கோளம் —கோளகம்
காத்தல்—கரித்தல்—பரிகரித்தல்= [காத்தல்
ஆழ்தல் —அகழ்தல்
சீரம் —சீவரம்=சீலை
பிரகாசம் —பிரகாசனம்
பானம் —பானகம்
வடு —வகடு=குற்றம்
அத்தி=(யானை)—அத்தினகம்=
கோபுரவாயிற்படிச்சுருள்
நட்டம் —நட்டணம்=நடம்
நீளம் —நிகளம்
சகடை —சகண்டை
களம் —கவளம்
உலம் —உபலம்=திரண்டகல்
சிந்தம் —சிந்தனம்
கலம்=(கழுத்து)—காலேயம்=கழு
ஆலம்=(சிவப்பு)—ஆலாலம் [த்தணி
[மஞ்சள்

---

சதம்—சதகம் ஈண்டு தகரத்திலும் ககரம் நாவிற்கெளிது. பாலன்—பாலகன், லகரத்திலும் ககரம்எளிது. சீதம்—சீதளம் தகரத்திலும் ளகரம் நாவிற்குக்கடினம். துன்றல்—துவன்றல், னகரத்திலும் வகரம் எளிது. உலம்—உபலம். லகத்திலும் பகரம் எளிது.

இங்ஙனமே இடையில் தோன்றும் எழுத்து, உள்ள எழுத்தினும் கடினமாகவேனும், எளிதாகவேனு மிருக்கும். முழுக்கவும் நாவிற்குக் கடினமான எழுத்துவரின், வருத்தமுண்டாகும். முழுக்கவும் எளிமையான எழுத்துவரின், நாவுதிருந்தாது. ஆதலின் இரண்டும் கலந்தே வரல்வேண்டும். முதனிலை வளர்ச்சி, சொல்வளர்ச்சி, பாறைவளர்ச்சி என்பவற்றுள், இதுவே சொல் வளர்ச்சியாம்.

ஆலாலம், சலிலம் எனச்சிறுபான்மை அவ்வெழுத்தே வரினும் வரும். இவை பிற்காலத்தன.

கடடடடம், சளளளளம், வரரரம் என இங்ஙனம் செயற்கை நிரம்பிய சொற்களும் இருப்பின் நாவிற்கு எத்துணை வருத்தமாகு மென்பதுணர்ந்து கொள்க. கடடடடம் என்பதன் முதலிலுள்ள இயற்கை யெழுத்தாகிய ககரத்தை யெடுத்துவிடின் உச்சரித்தல் கடினமாதலும், வேறொரு டகரஞ்சேர்ப்பின் மற்றும் கடினமாதலும், காண்க.

கடலோரத்திலூரனுருள்கின்றது. என்பதுள் ஒவ்வோர் சொல்லிலும் செயற்கையெழுத்துண்மையின் விரைந்து சொல்லும் போழ்து தடைபடுகின்றது. ஆதலின் இயற்கை யெழுத்தும், செயற்கையெழுத்தும் ஏற்றபெற்றி வரல்வேண்டும்.

பக்கம்—படிக்கம்=பக்கத்திலுள்ளதென்பது. இலஞ்சி—இலவந்தி=நீராவியைச்சூழ்ந்த வயந்தச்சோலை. இலஞ்சி வாவியாகலின் இலஞ்சி இலவந்தியாயிற்று. நீராவி=நீர்நிரம்பிய வாவி.

வசந்தச்சோலை—வயந்தச்சோலை.

"பன்மலரடுக்கிய நன்மரப்பந்தர்
இலவந்திகையி னெயிற்புறம்போகி" (சிலப்பதிகாரம்)

கை-பெயர்விகுதி.

அத்தி—அத்தினகம் = கோபுரவாயிற்படிச்சுருள். யானைத் துதிக்கைபோன்றிருப்பது.

ககஅ. சொற்கள், ஓர் தாதுவினின்று பிரிந்து திரியுங்கால், அப்பொருளையேனும் இயைபாகிய வேறொரு பொருளையேனும் பயக்கும்.

உ—ம்

| | | |
|---|---|---|
| மேழகம் | — | மேடகம்=வெள்ளாடு |
| கசம் | — | கயம்=ஊற்றுநீர்நிலை. |
| நேசம் | — | நேயம்= அன்பு. |
| வாலம் | — | வாலகம்=வால். |
| நீளம் | — | நிகளம்=நீட்சி. |
| கலம் | — | கலசம்=பாத்திரம். |
| சீதம் | — | சீதளம்=குளிர்ச்சி. |
| வடு | — | வகடு=குற்றும். |
| அரி | — | அலி=யமன். |
| இலங்கு | — | இலஞ்சி=குளம் |

இ. விகுதி

மேழக முதலியன மேடக முதலியன வாகத்திரிந்து, அப்பொருளே பயந்தன. திரியுமெனவேயிடையிற் பிறவெழுத்துவரலும் முதலியனவுங் கொள்க.

| | | |
|---|---|---|
| மேழகம்=யாடு | — | மெழுகு=யாட்டுக்கொழுப்பு |
| கலம்=கழுத்து | — | காலேயம்=கழுத்தணி |
| கரகம்=தாதுமாதளை | — | கரசம்=புலிதொடக்கி |
| காலிதம்=படிகாரம் | — | காடீசம்=வெங்காரம் |
| ஓதல்=வாசித்தல் | — | ஓர்தல்=உணர்தல் |
| கசகம்=வெள்ளரி | — | கசகரீயம்=கக்கரி |
| ஆலம்=கடல் | — | அகலம்=விசாலம் |
| கலி=கடல் | — | கரிப்பு=உப்புச்சுவை |
| வில் | — | விறல்=வெற்றி |
| தமாலம்=(பச்சிலை) | — | மாலம்=குங்குமம். |

மேழக முதலியன மெழுகு முதலியனவாகத் திரிந்து, இவையாகிய வேறொரு பொருளைப் பயந்தன.

கரகம்—கரசம், ∵ முள்ளுள்ளதென்பது.

மாலம்—குங்குமம். வாசனையுள்ளது.

சொற்கள், அப்பொருளை யுணர்த்தலும், இவையாகிய வேறொருபொருளை யுணர்த்தலும் ஆற்றொழுக்காகும். இன்னும் தவளைப்

பாய்த்தாகவும் பருந்தின் வீழ்வாகவும் சொற்கள் தம் பொருளை யுணர்த்தும். முதனிலையிய லுட்காட்டப்படும்! இங்கிருந்தே இவ் விலக்கணங்க ளுண்டாகின்றன.

ககக. சொற்களின் திரிபு, உறுப்புத்திரிபு, முற்றுத்திரிபு என இருவகைப்படும். உ—ம்

நளி — நடி = பெருமை
அத்தம் — அலத்தம் = சிவப்பு
கிளி — கிள்ளை = கிளி
ஈழம் — இடம் = பொன்
மாலி — மாரி = மேகம்

இவையுறுப்புத்திரிபு

சித்திரம்—சித்திரி—சிச்சிலி—கிக்கிரி.
சமம்—சமன்—யமன்—ஞமன்—நமன்.
பல்—பள்—பண்—மண்.
கிக்கிரி, நமன், மண், என்பன முற்றுத்திரிபு.
கிக்கிரி—மீன்குத்திப்பறவை
சித்திரவடிவ முள்ளது.
மண் = முழவின் மண். இசை தருவது.
நமன் = கூற்றன். நடுநிலையுள்ளவன்.
சித்திரம்—கிக்கிரி, சமம்—நமன்
பல்—மண், இவற்றுள் முதற் சொல்லுக்கும்

இறுதிச் சொல்லுக்கும் நேர்பட இயைபின்மையின், முற்றுத் திரிபாயின. சேனாவரையரும் தொல்காப்பியம் எச்சவியிலுள் இவ் விலக்கணம் கூறுவர். நேர்பட இயைபின்மையெனவே வழி வழி யியைபுண்மை பெற்றும்.

நமன் ஓர்சார் முற்றுத்திரிபெனலாம்
கமம்—சமமாயிற்று. கம் = நீர்.
சமமாவது நீர் மட்டம் போல்வதென்பது.

க௨0. அங்ஙனம் ஓர்தாதுவினின்று பிரிந்த சொற்கள், பத்து வகையாகப் பிரிந்து நடைபெறும். அவையாவன:—

முதனிலைப்பேறு, இறுதிநிலைப்பேறு, இருதலைச்சுருக்கம், ஒற்றினீக்கம், நிலைமாற்றம், பரிவர்த்தனைமாற்றம், இனந்தழுவல், முறைமையிற் பொருள்கோள், இருசொற்கூட்டம், உபசர்க்கப்பேறு, என்பனவாம்.

முதனிலைப்பேறாவது சில சொற்களின் முதனிலை பிரிந்தோர் சொல்லாதல்.

இறுதிநிலைப்பேறாவது சில சொற்களினிறுதி நிலை பிரிந்தோர் சொல்லாதல்.

இருதலைச்சுருக்கமாவது இருதலையுஞ்சுருங்கி ஓர் சொல்லாதல்.

ஒற்றினீக்கமாவது ஒற்றினீங்கியோர் சொல்லாதல்.

நிலைமாற்றமாவது நிலை மாறி யோர் சொல்லாதல்.

பரிவர்த்தனைமாற்றமாவது பரிவர்த்தனையாய் நிலை மாறியோர் சொல்லாதல்.

இனந்தழுவலாவது இனந்தழுவியோர் சொல்லாதல்.

முறைமையிற் பொருள்கோளாவது முறைமையிற் பொருள் கொண்டோர்சொல்லாதல்.

உபசர்க்கப்பேறாவது உபசர்க்கம் பெற்றோர் சொல்லாதல்.

## (௧) முதனிலைப்பேற்றுக்கு

### உதாரணம்.

| | |
|---|---|
| பசுமை | —பை |
| படம் | —பை |
| பாட்டு | —பா |
| மாடு | —மா = செல்வம் |
| ஆடகம் | —அடை = கனம் |
| ஞாங்கர் (வேல்) | —நாம் = அச்சம் |
| புங்கம் (அம்பு) | —போம் = அச்சம் |
| வேல் | —வை = கூர்மை |
| இதைப்புனம் | —இதை = புதுக்கொ |
| மீன்கோட்பறை- | -மீன் = நெய்த[ல்லை |
| ஒகை | —ஓ = மகிழ்ச் [ற்பறை |
| சிரகம் | —சிரா [சிக்குறிப்பு |
| போது | —பூ = மலர் |

| | | |
|---|---|---|
| நேசம் | —நே = அன்பு | |
| பொலிவு | —பூ = அழகு | |
| ஈயல் | —ஈ | |
| தெய்வமந்திரி (குரு) | —தெய்வம் = | |
| கயில்(தோள்) | —கை = கரம் [ஆண்டு | |
| முன்னாள்நேற்று | —மொன்ன = நேற் | |
| ரக்த பானம் | —ரக்தபா = அட்டை [று | |
| நகம் | —நக் = நகம் = (இந்து) | |
| திலம் | —தில் | ,, |
| மகரம் | —மகர் | ,, |
| சட்சம் | —ச | |
| ரிடபம் | —ரி | |
| காந்தாரம் | —க | |

மானம் —மா=
காற்றுநாள் —காற்று=சோதி
தீம் —தீ=தித்திப்பு
ஐயன் —ஐ=ஆசான்
அள் —ஐ=நுண்மை
எர் —ஐ=அழகு
ஓதம் —ஓ=நீர்
கோல் —சோ=அம்பு

மத்திமம் —ம
பஞ்சமம் —ப
தைவதம் —த
நிடாதம் —நி
பாவம் —ப
ராகம் —ர
தாளம் —த. பரதநூல்

பாவ ராக தாளங்களை விரித்துக்கூறலின், பரதமெனப்பெயர் வந்தது.

இன்னும் பால்விற்போனைப்பாலெனவும், தயிர்விற்போனைத் தயிரெனவும் விளிப்பர். தண்ணீர் கொண்டுவா மோர் கொண்டுவா என்பதற்குத் தண்ணீர் தண்ணீர், மோர் மோர் என்பர்.

சௌபாக்கியவதி வள்ளியம்மை, சௌ வள்ளியம்மை. சிரஞ்சீவி. தம்பி. சிவபாதன், சி. த. சிவபாதன் எனவும் எழுதுவர்.

இவை யெல்லாம் அம்முதனிலையுளடங்கும்.

## (உ) இறுதிநிலைப்பேற்றுக்கு

### உதாரணம்.

தமாலம் —மாலம்
தக்கோலம் —கோலம்
தூதனம் —தானம்=கல்
நறுவலி —வலி=நறுவலிமரம்
காகோடியர் —கோடியர்=நாடகர்.
ஆம்பல் —பல்=இசை
கடற்கரையார்—கரையார்.
கடற்சேர்ப்பன்—சேர்ப்பன்
கடற்பக்கம் —பாக்கம்=நெய்தனி
மருதப்பக்கம்—பாக்கம்=ம[லத்தூர்
[ருதநிலத்தூர்
கடற்கரைமேலன்—மெல்லன்= நெ
[ய்தனிலத்தலைவன்
மீன்கோட்பறை—கோட்பறை
நூற்பொருந்தர்—பொருந்தர்
பைங்கூழ் —கூழ்=பயிர்
ஓங்கல்(மலை)—கல்=மலை
மசகம் —சகல்=கொசுகு
கருங்கொல்லன்—கொல்வன்
தோற்றுன்னர்—துன்னர்
ஓக்காளம் —காளரம்=வாந்திஇங்
சகடு (ஐயம்)—கடுப்பு=ஐயம்

மறுநாள் —நாளை
தந்தைக்குமுற்பட்டான்—பாட்டன்
பூரட்டாதிநாள் - நாழி=பூரட்டாதி
பூரநாள் —நாடன்=பூரம்
கார்த்திகைநாள்—நாடன்=கார்த்தி
கானகநாடன்—நாணன்=குறி [கை
துவைத்தல் —மத்தல்[ஞ்சித்தலைவன்
மேகலை —கலை
திகில் —கிலி=அச்சம்
சூசுகம் —சுகம்=முலைக்கண்
கஞ்சுகம் —சுகாய்=சொக்காய்
கூவிளம் —விளம்=வில்வம்
சாகாடு —காடி=வண்டி
ஈசானமூலை—சனிமூலை
திரட்டல் —அட்டல்=திரட்டல்
குறும்புள் —பூழ்
பாசாங்கு —சாக்கு
புத்திரகாமேட்டி—காமாட்டி
பிசிதம் (வேம்பு)—சேது=கசப்பு
பகடு —கடா(தெலுங்கு)
பகடு —கடா=ஆண் யானை
சபலம் —பாலம்=சூதம்

ஒல்லையெனல்—ஐயெனல்
[விரைவுக்குறிப்பு
செய்கை —கை=செயல்
தாமதம் —மந்தம்
தைவரல் —வருடல்
நிச்சேணி(தெலுங்கு)—சேணி-ஏணி
மாயோனாள்—நள்ளு=திருவோண
பிணிமுகம் — மொகரம்=மயில் [ம்
வெண்பல்லம்—பல்லம்=காடி

முசுமுசுக்கை—சுக்கை=முசுமுசுக்
காபாலம் —பால்=மயிர் இந்து[கை
காலவ —லவ=இரும்புமராடம்
ஆலால —லால=கிவப்புமராடம்
வாராய் —ராதெலுங்கு
வரைதல் —ராத=தெலுங்கு(ஆ-தீ)
ஆகாது —காது (தெலுங்கு)
முசல் —கர்=முசல் (இந்து)

எரிநாள்—நாடன் எனலுமாம்.

நாடன் என்பது நாவிதன் என்றாகிப்பூரநாளையும் கார்த்திகை நாளையும் உணர்த்தும்.

கானக நாடன் —நாணன்

திருத்தொண்டர் புராணத்தில் கண்ணப்பநாயனார் சரிதையில் வரும் நாணன் குறிஞ்சி நிலத்தலைவன்.

கூவிளம் — விளம்

"ஏடுமலி கொன்றையரவிந்துவிள வன்னி" (ச—தேவாரம்)

திரட்டல் — அட்டல்

"ஆளிலையெம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே"

(சு—தே)

தைவரல் — வருடல். நிலைமாற்றுமாம்

## (ரு) இருதலைச்சுருக்கத்திற்கு

### உதாரணம்.

அகவிதழ் —அல்லி
புறவிதழ் —புல்லி
பசுமை —பைமை
மருமகன் —மருகன்
அளாவல் —ஆவல்
மகரமீன் —மான்=மகரமீன்
சிதவல் —சிவல்
பாதகடகம் —பாடகம்
தொகுப்பு —தோப்பு
கமலாலை —கவலை
சாதிப்பாய் —சாப்பை

சீவரர் —தேரர்=சைனர்
வரையாடு —வருடை
குறும்பொறையாடு—குறும்பாடு
கொண்டுவரல்—கொணரல்
சவாபு —சாபு
அஞ்ஞான்று — அன்று
இஞ்ஞான்று — இன்று
எஞ்ஞான்று — என்று
தாலவட்டம் —தாலவம்
ஒதுக்கிடம் —துச்சில்
சககரணம் —சாகரணம்—சாகரம்

இடக்கர் —எக்கர்=மறைத்த
உவளகர் —உமணர்= [சொல்
[உப்பமைப்போர்
சிரகணம் —திராணம்=குல்லாய்
சயந்தனம் —சந்தனம்=தேர்
திகிரி —தேர்
இமையாநாட்டத்தார்—இமையார்=
வலம்பு —வம்பு=நிலை [தேவர்
பரப்பு —பப்பு [யின்மை
பஞ்சாய் (கோரை)—பாய்
உவளகமண் —உழமண்
அம்படலம் —அம்மி
அகன்றோர் —ஆன்றோர்
அகலக்கரண்டி—ஆலக்கரண்டி

செதும்பு —சேம்பு
உதீசி —ஊசி=வடக்கு. பு-நா
சுதந்தரம் —சொந்தம்
பருங்கி —பங்கி
ஓதனப்பை —ஓதப்பை=இரப்பை
சாதிபத்திரி —சாபத்திரி
சுசனம் —சுனம்=காற்று
ஆம்லக்ஷீரம் —ஆம்க்ஷா=தயிர்
கானகநாடன்—காடன்
ஆயுதபாணியாக இரு—ஆயுத்தமாக இ
பூசணிப்பளம்—போபள(மாராடம்[ரு
அன்பிலாலந்துறையானை—அன்பி
[லானை

"அன்பிலானை அம்மானையள்ளூறிய" (அ—தே)

கமல+ஆலை=கமலை=நீர்ப்பொறி

கமலம்=நீர்

வலம்பு — வம்பு=நிலையின்மை

வலம்பு — செக்குவலம்பு. அது போலச் சுற்றுவதென்பது.

சீவரர் —தேரர்=சைனர்=மரவுரிதரித்தோர்

சீவரம் மரவுரி,

ஒதுக்கிடம் —துச்சில்

ககரம் சகரமாயிற்று

சககரணம் ஆன்மா கரணங்களோடு கூடுவது. அது விழித்திருக்குங்காலம்.

சககரணம்—சாகரணம்—சாகரமாயிற்று.

சாகரம்=துயிலொழிதல்;

பருங்கி—பங்கி

பருங்கி=பருகி

"நஞ்சினைப் பங்கி யுண்டதோர் தெய்வ முண்டோ" (அ—தே)

என்றந்தை — எந்தை

நுன்றந்தை — நுந்தை

கொற்றன்றந்தை — கொற்றந்தை

முதலியனவும் அன்ன.

## (ச) ஒற்றினீக்கத்திற்கு

### உதாரணம்.

வாவி —ஆவி=நீர்நிலை
நாவி (கத்தூரி)—ஆவி=வாசனை
பெருமை — இருமை=பெருமை
சமயம் —அமயம்
குளிறல் —உளறல்=ஒலித்தல்
குளறல் —உளறல்
முடக்கம் —ஒடுக்கம்
மடக்கம் —அடக்கம்
சலிப்பு —அலுப்பு
விதைப்புனம்—இதைப்புனம்
வளாவல் —அளாவல்
செல்லல் —இல்லல்=செல்லல்
சிதவல் —இதல்=கவுதாரி
மொகரம் —ஒகரம்=மயில்
சிதல் —இதல்=ஈசல்
விதை —இதை=காராமணி.
நுளம்பு —உலங்கு=கொசுகு,
மால் —அரலை=ஓர்கற்று
திரைதல் —இரைதல்=ஒ [ழை,
விரைத்தல் —இரைத்தல் [லித்தல்
விரை —இரை=ஊ [சிந்தல்
கணு —அணு=பிரம்பு [ண்
சித்தி —இருத்தி=சித்தி
மிளை —இளை=காவல்
நோன்றல்(தள்ளல்)—ஊன்றல்=தள்
சங்காளம்மை—அங்காளம்மை [ளல்
மூத்தாபலம் —உத்தாபலம்=இசங்
தாய் —ஆய் [கு,
மூத்தானம் —உத்தானம்= அடுப்பு
தழல் —அழல்
வன்னபேதி —அன்னபேதி
துத்தி —உத்தி=தேமல்
சில்லம் —இல்லம்=தேற்றும
சிகாலன் —இகலன்=நரி [ரம்
சிப்பி —இப்பி
மூசல் —ஊசல்
வலி —அலி=நறுவலி
நேயம் —ஐயம்=வெண்ணெ
சுழலல் —உழலல் [ய்
சேமம் —ஏமம்=பொன்
சவை —அவை
கொப்பளித்தல்—உவளித்தல்
சுட்டி —உத்தி=முடியணி

சமர் —அமர்
சாவகாசம் —அவகாசம்
மேழகம் —ஏழகம்
தட்கல் —அல்கல்=தங்கல்
தோடு —ஓடு
தணிதல் —அணைதல்
சமணர் —அமணர்
கந்தளம் —அந்தளம்=கவசம்
குலுக்கல் —உலுக்கல்
செகுத்தல் —இகுத்தல்= கொல்
நுகம் —உகம் [லல்,
முன்னம் — உன்னம்=கருத்து
கன்றினூர் —அன்றினூர்
சேணி —ஏணி
புலர்தல் —உலர்தல்
தாலவட்டம் —ஆலவட்டம்
செட்டியர் —எட்டியர்=செட்டிக
தட்டல் —அட்டல்=தடுத்த [ள்
நிவால் —இவால்=ஏறல் [ல்
பிலிற்றுதல்—இலிற்றுதல்=சுரத்த
மூந்தூழ் —உந்தூழ்=மூங்கில்
கசடு —அசடு=குற்றம்.
சகடு —அகடு=வயிறு
கவரி (தேர்)—அரி=தேர்.
புளு —உளு
சிறை —இறை=வருத்தம்
மிதலை —இதலை=கொப்பூழ்,
மயம் —அயம்=ஒட்டை
சூளி —ஊளை=ஆண்மயிர்
பஞ்சானனம்—அஞ்சானனம்-சிங்கம்
நீரம் —ஈரம்
தடி —அடி
சுற்றல் —ஒற்றல்=உடுத்தல்,
சிந்துப்பு —இந்துப்பு
நாற்றல் —அரற்றல்=ஒலித்தல்
மாதளை —ஆதளை
சிந்துநாடு —இந்து நாடு
வசி —அசி=கூர்மை.
வள் —அள் " "
பறைதல் —அறைதல்-சொல்லல்
மாஞ்சி —ஆஞ்சி
பின்னும் —இன்னும்
கொண்டி —ஒண்டி

நணிமை —அணிமை=அருகு
விலாமிச்சை —இலாமிச்சை
விலங்கல் —இலங்கல்
சக்கு —அக்கு=கண்
சலிகுல்லி —அலிகுல்லி
மடைப்பள்ளி—அடுக்களை
முயற்று —உஞற்று=முயற்சி.
சிறகு —இறகு
சிறப்பு —இறப்பு=மிகுதி
நுன் —உன்
தொட்டர் —ஒட்டர்=தோண்டு [வோர்
குளியம் —உளியம்=கர
தெரியாமை எய்யாமை [டி
வெளில் —அளில்=அணில்
மாதி —ஆதி=வட்டம்
வரி —அரி=வரி
திரட்டல் —அட்டல்
தெண்பு —இன்பு
முச்சி —உச்சி
குடைவேல் —உடைவேல்
சிந்தம் —இந்தம்=புளி
துப்புரவு(ஒப்புரவு)—ஒப்புரவு
முச்சந்தி —அந்தி=முச்சந்தி
துப்புமாவு —உப்புமாவு
துப்புமணி —உப்புமணி
சோநாய் —ஓநாய்
ஈயன —அயன=கண்(மராடம்)
நூறுபிண்டி —உளறுபிண்டி (தெலு (ங்கு
விஸ்து (தீ) —இஸ்திரி=தீப்பெட் [டி
(மராடம்) —யால்துணியைத்தேய் [த்தல்
கங்காளம்மை—அங்காளம்மை
கங்காளம்=பலிக்கலம் [ணவு
விரை—இரை=உணவு, பறவையு

பறவைகளின்உணவு வித்துவகையாகலின், விரை இரையா யிற்று.

விரைத்தல்—இரைத்தல்=சிந்தல். விதைத்தல் போல்வது.

முத்தானம்—உத்தானம்=அடுப்பு

மூன்று+தானம்=முத்தானம்

தானம்=கல். தூதனம்—தானம்=கல்

தூதனம்—தூது=கல். தூதுணம்புறு

முட்டும்—ஒட்டும்=முழுதும்.

"பூனை, பால் ஒட்டும் குடித்தது"

தயங்கல்—அயங்கல்=ஒளிரல்

"பல்லயங்குதலையேந்தினன்" —— (ர—தே சீகாழி)

கந்தரம்—அந்தரம்=கழுத்து

"அந்தரத்தேயணியாநஞ்சுண்டார்போலும்" (அ—தே—ந [ம—தி)

பெருமுட்டைப்பிநாறி—எருமுட்டைப்பிநாறி=ஓர்முட்செடி மிக்கமுள்ளுடையது.

கன்றி—அன்றி=பகைத்து

"அன்றிநின்ற அவுணர்புரம்" (ச—தே திருநறையூர்)

தாலவட்டம்—ஆலவட்டம்=விசிறி.

தாலம்=பனை. பனைமட்டையாலாயவட்டமாயதோர்கருவி

தட்டல்—அட்டல்=தடுத்தல்

"மணத்துளட்டி" ——— (காஞ்சி—பு, கழு—ப)

நணிமை—அணிமை

"வானநணியதுடைத்து" ——— (திருக்குறள்)

குளியம்—உளியம்=கரடி

"வெண்பல்லாங் கெளளியம்" ——— (போகர்—நி)

குளியம்—கெளளியம்.

தெரியாமை—எய்யாமை=அறியாமை.

"எய்யாமையே யறியாமையே" (தொல்—ம்)

வெளில்—அளில்—அணில்=வெளியது.

(கன்னடம்)

உயிர் முதன்மொழி நாவிற்கெளிமை யாதலின், ஒற்றினீக்கமிகு திப்பட்டன.

இவை குழந்தைக் குழாத்துள் மிகுதியாக விளைதற்பாலன.

## (ரு) நிலைமாற்றத்திற்கு.

### உதாரணம்.

சகடு (வண்டில்)—கசடு=அசைவு (உரிச்சொல்—நி)
உவர்க்களம் —உவளகம்=உப்பளம்
உகளம் —உவளகம்=இரண்டு
சோடசம் —சகோடம்
காரசம் —ராகாசம்=ஓர் கற்றூழை
இங்குலிசம் —இலிகுசம்=எலுமிச்சை
சிவைல் —சிவணல்=பொருதல்
பிங்கலம் —கபிலம்
கற்பறை —பகன்றை=கிலுகிலுப்பை
காளகம் —காகளம்=சிறுசின்னம்
சாரம் —ரசம்=இனிமை

வாரணம்(கடல்)—லவணம் [குருவி,
சடகம் —சகடம்=ஊர்க்குருவி,
பத —தோவ=வழி (தெலுங்கு)
குலாரி —ரேகுலா=ஓர்வண்டி
கபடம் —பகடம்=வஞ்சம்
மூதகம் —கமுதம்=வாசனை
பேதாதார் —தபேதார்=தலைச்சேவகன்
உதாசீனபாவைஷ—சீதபாவைஷ (மலையாளம்)
தடியடிபடல் —அடிதடிபடல்
இடைவெளி —வெள்ளிடை
கொடிறு —குறடு=ஓர்கருவி
சேதகம் (சேறு)—சகதி=பொல்லாங்கிலம்

கனகம் —க்சானம்=பொக்கு [சம்
ஜரகன் —ரஜகன்=வண்ணான்
சலகன் —சாகலன்=வண் [ணான் (தெலுங்கு)
சபலம் —சலபம்=விட்டில்
காவி —வீகம்=சாவி
வழிக்கா —காவடி
சங்காத்தன்—சட்டகன்=சகலன்
குமட்டல் —வெகுட்டல்
இடரல் —இரடல்
கூகுலம் —குரங்கு
தலைபோடம் —பொடுதலை
வைரம் —ரவை
வசிரம் (உப்பு) —சிவம்=உப்பு
சலம் —ரசம்=சூதம். [சலிப்பது
சோடசம் —சகோடம்=ஓர்யாழ்.

பதினாறு நரம்புடையது. சகரம் ககரமாயிற்று.

முதகம் — கமுதம்=வாசனை

"கமுதமுல்லை கமழ்கின்ற கருகாவூர்" (சு—தே)

கூகுலம் — குரங்கு=நீண்டவாலுடையது.

கூகுலம் — கோகுலம்=குரங்கு

குமட்டல் — வெகுட்டல்

குமட்டல்—மகுட்டல்—மெகுட்டல்—வெகுட்டல். எனவழி வழித்திரிந்து வந்ததன்று.

செல்+ற்+ஆன் என்பது சென்றான் என ஒருங்காயினமை போலக் குமட்டல்—வெகுட்டல். ஒருங்குதிரிந்தது. செல்+ற்+ஆன்=செற்றான்—சென்றான் என ஆயினதன்று. இவை நாவினியல்பு. பிறவுமன்ன.

## (௬) பரிவர்த்தனை மாற்றத்திற்கு.

### உதாரணம்.

தசை —சதை
தவிர —சிவ
சுரா —ரோசா
வேதாளம் —தேவாளம்
சகவாசம் —சாவகாசம்
தமாலம் —மதாலம்=கொன்றை
வாசரம் —காபரம்=குடி [யிருப்பு (தெலுங்கு)
அணவி —அரணி,
சுமத்தல் —மூசல்
மூட்டாக்கு —முக்காடு
பகடு —படகு
கதுவாலி —கவுதாரி
வேசரி —சேவல்=ஆண் [குதிரை
வரையாடு —வருடை
தடவை —தவணை
வாகை (கை) —கவை=காரியம்
கோபுரவேலை —போகுரவேலை
இடுகாடினி —இடாகினி
கீத —தீக=யாழ்நரம் [பு, கொடி. (தெலுங்கு)
தோகு (தோல்) —கோது
பாகம் —சாபம்=வண்

தசை—சதை. தகரத்திலுள்ள அகரம் சகரத்திலும், சகரத்திலுள்ள ஐகாரம் தகரத்திலும் பரிவர்த்தனையாய் நிலைமாறிற்று.

தவிர—சிவ. தகரத்திலுள்ள அகரம் வகரத்திலும், வகரத்திலுள்ள இகரம் தகரத்திலும், பரிவர்த்தனையாய் நிலைமாறிற்று.

தகரம் சகரமாயிற்று

சுரா—ரோசா=குலாமல்லி. சகரத்திலுள்ள உகரம் ரகரத்திலும், ரகரத்திலுள்ள ஆகாரம் சகரத்திலும் பரிவர்த்தனையாய் நிலைமாறிற்று. உகரம் ஒகாரமாயிற்று.

குலாமல்லி=முட்செவ்வந்தி. குலா சுராவாயிற்று. மிக்க மணமுடையதென்பது.

குலாந்தம்=ஓர் நாடகப்பெண். குலாமல்லிபோலுமழகுடையாள்

குலாபு=பனிநீர். குலாமல்லியாலாவது. குல்கந்து=ஓர்மருந்து. இதன் தாய்ச்சரக்குக் குலாமல்லி.

"குலாமாலை வேற்கண்ணாய்" ——— (ஔவை—பா)

"கொம்பான குலாமல்லிச் சாற்றாலாட்டி" (போகர்-ஏழாயிரம்)

வேத்ாளம்—தேவாளம். வகரத்திலுள்ள ஏகாரம் தகரத்திலும், தகரத்திலுள்ள ஆகாரம் வகரத்திலும் பரிவர்த்தனையாய் நிலைமாறிற்று.

தேவாளம்—தெவ்வா=பேய். — (மராடம்)

சுமத்தல்—மூசல்—மோசுட — (தெலுங்கு)

"மூசிடுமால் விடையானை" — (சு—தேவாரம்)

பாகம்—சாபம்=ஊண்

சாபம்—சாப்பாடு. சாபம்—சமைத்தல்.

வேசரி—மேசவல்=ஆண்குதிரை.

வேசரி—ஆண்குதிரை, ஆண்கழுதை, கழுதை.

வாகை (கை)—கவை=காரியம் கையினலாவது

போகுரவேலை=சித்திரவேலை இது பொற்சொல்லர் வழக்கு.

இடுகாடினி—இடாகினி=பிணந்தின்னும் பேய். இடுகாடாவது பிணத்தைக்குடத்திலிட்டுப் புதைத்திடுங்காடு.

"இடுபிணந்தின்னு மிடாகினிப்பேய்" (சில—அதி)

டி=கெட்டது.

குலா—சுரா.

| | |
|---|---|
| சுரசா=துளசி | மணமுள்ளது (மலை—அ) |
| சுரபி=சாதிக்காய். | (மலை—அ) மணமுள்ளது. |
| சுரபு=துளசி. | மல்லிகை. (மலை—அ) |

## (எ) இனந்தழுவலுக்கு

### உதாரணம்.

ஆமம்=துவரை, கடலை, அவரை.
முசலி=ஓணான், உடும்பு, பல்லி, [முதலை.
எலி=பெருச்சாளி, எலி.
புல்=மூங்கில், புல்.
நெல்=மூங்கில், நெல்.
வேழம்=மூங்கில், கரும்பு, கொறுக்கை
வேணு=மூங்கில், கரும்பு.
கீசகம்=மூங்கில், கரும்பு.
காம்பு (மூங்கில்)—கரும்பு=கன்னல்
மறி=மான், ஆடு.
தித்தம்=வேம்பு, மலைவேம்பு.
ஆகு=பெருச்சாளி, எலி.
ஆகு=பெருக்சாளி, பன்றி.
பிணிமுகம்=மயில், பறவை.
புத்தகம்=மயிலிறகு, இறகு.
சிவை=அருநெல்லி, நெல்லி.
ஒகணம்=மூட்டுப்பூச்சி, பேன்.
பிங்கம்=எலி, மூஞ்சூறு.
நந்து=சங்கு, நத்தை
வேசரி=ஆண்குதிரை, ஆண்கழுதை,

ஆமமென்பது முதல் துவரையையும், பிறகு இனமாகிய கடலையையும், அவரையையும் தழுவி யுணர்த்தும்.

முசலியென்பது முதல் ஓணானையும், பிறகு இனமாகிய உடும்பையும், பல்லியையும், முதலையையும் உணர்த்தும் முசலி சிவந்த நிறமுடைய தென்பது

எலி யென்பது முதல் பெருச்சாளியையும், பிறகு இனமாகிய எலியையும் தழுவி யுணர்த்தும்.

புல் லென்பது முதல் மூங்கிலையும், பிறகு இனமாகிய புல்லையும் உணர்த்தும்.

நெல்லென்பது முதல் மூங்கிலையும், பிறகு இனமாகிய நெல்லையு முணர்த்தும்.

நெல்வேலி=மூங்கின் மிக்கநாடென்பது

சாமிபெயர், வேணுநாதர், விண்டுநாதர்.

வேழமென்பது முதல் மூங்கிலையும், பிறகு இனமாகிய கரும்பையும், கொறுக்கையையு முணர்த்தும்.

நெல், புல், கரும்பு, நாணல், தெங்கு, பனை, கமுகு முதலியன மூங்கிலினங்களாம். மூங்கில்போற்கணுவும், மூங்கிலிலைபோல் நெடுக்கு நரம்பும் உடையனவெல்லாம் மூங்கிலினமெனக்கொள்ளல் வேண்டும்.

## (அ) முறைமையிற்பொருள்கோளுக்கு

### உதாரணம்.

கார்=கருமை, மேகம், நீர்.
கார்=மேகம், கார்காலம், கார்நெல்.
பயசம்=பால், தயிர், வெண்ணெய் [நெய்.
கூலம்=பொன், பாகல்.
கூலம்=பொன், கடைவீதி, பலபண் [டம்.
கஞ்சம்=வெண்கலம், தாளம், வட்டம், அப்பவர்க்கம்.
கயம்=நீர், நீர்நிலை, ஆழம், அகழ்.
செருக்கு=கரும்பு, கருவம்.
கீடம்=புழு, குளவி, வண்டு.
அத்தம்=சிவப்பு, பொன், ஒளி, கண் [ணாடி சொற்பொருள்.
சூழி=கடல், குளம், சுனை.
குவிதல்=திரளல், கூடல், சேர்தல். [ஒடுங்கல்.
குடம்=திரட்சி, குடம், நீர், கடகரா ]சி, பூசநாள்.
கயம்=இளமை, சிறுமை, தேய்வு, [கேடு, அழிவு.
வேலி=முள்வேலி, எல்லை, கரை, [நிலம் நிலத்தளவை,
வேலி=எல்லை, காவல், மதில், ஊர்.
தித்தம்=வேம்பு, கசப்பு, நஞ்சு, நச் [சம்பு.
காவு=ஒளித்தல், வஞ்சம், ஈயாமை.

காரென்பது கருநிறத்தையும், அந்நிறமுடைய மேகத்தையும், மேகத்திலுள்ள நீரையும், மேகம் பெய்யுங்காலத்தையும், அக்காலத்தில் விளையும் நெல்லையும் உணர்த்தி நிற்கும்.

காரென்பது கருமை, மேகம், நீர், கார்காலம், கார்நெல் என்னுமிம்முறைமையிற் பொருளுணர்த்தினமை காண்க.

கஞ்சம் என்பது முதல் வெண்கலத்தையும், அவ்வெண்கலத்தாலாய தாளத்தையும், அத்தாளத்தினது வடிவம் வட்டமாகலின் வட்டத்தையும், அவ்வட்டவடிவுடைய அப்பவர்க்கத்தையு முணர்த்தி நிற்கும்.

குடமென்பது முதல் திரட்சியையும், அவ்வடிவுடைய குடத்தையும், அக்குடத்துள்ள நீரையும், சலராசியாகிய கடகத்தையும், அக்கடகத்திற்குரிய பூசநாளையும் உணர்த்தி நிற்கும். குடம் கும்பராசியுமாம். பிறவுமன்ன. வேல்=மூங்கில், வேலி. மூங்கின்முள்ளாலாவது. முறைமையிற் பொருள்சேரெனினும், ஆகுபெயர் முறைமையெனினும் ஒக்கும்.

கஞ்சம்=வெண்கலம், வெண்கலத்தாலாவது தாளம்; தாளத்தின் வடிவு வட்டம்; வட்டவடிவுடையது அப்பவர்க்கம்; என்னும் இம்முறைமையால் அக்கஞ்சமென்னும் சொல்லுக்குப்பொருள் பெருகின. பிறவு மன்ன, இங்ஙனம் பொருள்வளர்ச்சியாமாறு காண்க.

---

## (கூ) இருசொற்கூட்டத்திற்கு

### உதாரணம்.

கண்டம் + காரிகம்=கண்டகாரிகம்=கண்டங்கத்தரி

கரு + நெறி=கருநெறி=தீ

நாகணம் + பொன்வாய்ப்புள்நாகணவாய்ப்புள்=பூவை

அல்லம் + கண்டம்=அல்லகண்டம்=துன்பம்

ஐயம் + கவீனம்=ஐயங்கவீனம்=வெண்ணெய்

கோகுலம் + கூலம்=கோலாங்கூலம்=குரங்கு

புனுகு + சட்டம்=புனுகுசட்டம்=ஓர்வாசனைப்பொருள்

பாலம் + ரசம்=பாலரசம்=சூதம்

கரா + பூ=காரம்பு= இலவங்கம்

மடைப்பள்ளி—அடுக்களை

நாரி + கேளம்=நாரிகேளம்=தென்னை

சிகரி + அந்தம்=சிகரியந்தம்=புல்லுருவி

நந்தி + ஆவட்டம்=நந்தியாவட்டம்

பொற்கோசம்—பொக்குசம்

பல் + இயம்=பல்லியம்=வாச்சியம்

தாலம் + போதம்=தாலபோதம்=ஆவிரை

கரு + கூலம்=கருகூலம்=பொக்குசம்

வாரம் + வராம் = வாரவராம் = கவசம்
யுகம் + கீலகம் = யுககீலகம் = நுகத்தடி
மொய் + தாய் = மொய்த்தாய் = தாய்.

---

கண்டகாரிகம் = கண்டங்கத்தரி.

கண்டமெனினும் காரிகமெனினும் கண்டங்கத்தரியாம் அவ்விரண்டும் ஒருசொற்போல நின்று அப்பொருளையே புணர்த்தி நிற்கும்.

ஐயங்கவீனம் = வெண்ணெய்
ஹேயம் — ஐயம் கவம் = கவீனம்
கவத்காலாயது. கவம் = மத்து

பிங்கல நிகண்டிற் காண்க.

பாலரசம் = சூதம்
சபலம் — பாலம், சலம் — ரசம்.
காாம்பு = இலவங்கம்.
காா + பூ = காாம்பூ = காாவினதுபூ
சிகரியந்தம் = புல்லுருவி.
சிகரி = மரத்தின் நுனியிலுள்ளது. அந்தம்
தாலபோதம் = ஆவிரை
தாலம் = ஆவிரை. போதம் = ஆவிரை
கருகூலம் = பொக்குசம்
கரு = நடு கூலம் = பொன்
கருகூலம் = கருவூலம்
நாரிகேளம் = தென்னை
நாரி = தென்னை. கேளம் = தென்னை

## (க0) உபசர்க்கப்பேற்றிற்கு உதாரணம்.

| | | |
|---|---|---|
| நாதம் | — | நிநாதம் = ஒலி, |
| பாடம் | — | நிபடம் = படித்தல் |
| கதம் | — | நிகாதம் = சொல் |

| | | |
|---|---|---|
| கலம் | — | நிகாலம் = கழுத்து |
| கலம் (கழுத்து) | — | நிகலம் = தோண்மேல் |
| காளம் (இரும்பு) | — | நிகளம் = இருப்புச்சங்கிலி |
| கூடம் | — | நிகூடம் = மறைவு |
| தனம் | — | நிதனம் = பொன் |
| முட்டி | — | ஆமுட்டி = ஓர்மூலி |
| குரம் (நகம்) | — | உகுரு = உகிர் (கன்னடம்) |
| காரி (நஞ்சு) | — | நசாரி = எட்டி |
| மாணம் | — | அம்மணம் = ஓரளவு |
| நங்கை | — | ஆநங்கை = ஓர்மூலிகை |
| கண்டம் | — | அகண்டம் = முள்ளில்லாதது |

சம் = நன்மை

| | | |
|---|---|---|
| சம்பவம் | — | சம்பந்தம் |
| சம்பூரணம் | — | சமூகம் |
| சமுசாரம் | — | சஞ்சாரம் |
| சம்வச்சரம் | — | சம்யோகம் |

தம் = தரல்

| | | |
|---|---|---|
| அம்புதம் | — | காமந்தம் |
| வரதம் | — | வாரிதம் |
| வசந்தம் | — | தாவந்தம் |

தரம் = தரித்தல்

| | | |
|---|---|---|
| சலதரம் | — | தராதரம் |
| பயோதரம் | — | கந்தரம் |
| குதரம் = மலை | — | பூதரம் |

சரம் = வசித்தல்

| | | |
|---|---|---|
| சலசரம் | — | வனசரம் |
| நதிசரம் | — | நிசிசரர் |
| நிசாசரர் | — | பூசரம் |
| கிரிசரம் | — | தலசரம் |

ருகம் = முளை

| | | |
|---|---|---|
| பங்கேருகம் | — | நீரோருகம் |

| | | |
|---|---|---|
| சலோருகம் | — | உரோருகம் |
| கரோருகம் | — | சரோருகம் |
| சிரோருகம் | — | வனேருகம் |

சம்=பிறப்பு

| | | |
|---|---|---|
| பங்கசம் | — | வனசம் |
| சலசம் | — | கிரிசம் |
| வாரிசம் | — | சிலாசம் |
| கஞ்சம் | — | |
| தலைச்சன் | — | அண்டசம் |
| இடைச்சன் | — | அநுசன். |

ஆனை=பெருமை

| | |
|---|---|
| ஆனைக்கால் | ஆனைத்திப்பிலி |
| ஆனைநெருஞ்சில் | ஆனைத்தும்பை |
| ஆனைவாதம் | ஆனைச்சிரங்கு |

---

அம்மையார்கூந்தல்=கொடியார்கூந்தல்
பூனைவணங்கி=குப்பைமேனி
தெருவிலழகி= "
ஆனைவணங்கி=தேட்கொடுக்கி
கண்ணுக்கினியான்=பொன்னுங்காணி
கம்பளிகொண்டான்=முசுக்கட்டை
தாயைக்கொன்றான் =வாழை
காட்டுத்திருடி =கள்ளி
ஆனெய்திருடி =பூனை
பூநெய்திருடி =வண்டு
சத்தியத்தின்மேலெய்தான்=மெய்யிலெய்தான்

இவ்வாறெல்லாம் சொற்கள் நடைபெற்று வரற்பாலன. பிற வும் உணர்ந்து கொள்க.

---

கஉக. முன்பின் உள்ள இயைபினால் மறைந்த சொற்களும், மறைந்த பொருளும் புலப்படும்.

உ—ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பாசம் | = | ○ ஊசி | — | ஊசித்துளை |
| பொகுட்டு | = | தாமரை | — | தாமரைக்கொட் |
| தோரை | = | மூங்கினெல் | — | மூங்கிலரிசி [டை |
| ஆரை | = | கோரை | — | புற்பாய் |
| அத்தம் | =(பொன்) | ஒளி | — | கண்ணாடி |
| சிப்பு | = | வாழைக்குலை | — | சிப்பு |
| தோயம் | = | பனிக்கட்டி | — | தயிர் |
| அரி | = | நெல் | — | அரி |
| தூதனம் | = | மலை | — | கல் [ப்பு. |
| தானம் | = | கல் | — | மூத்தானம் = அடு |
| குண்டு | = | பீசம் | — | ஆண்குதிரை |
| உறை | =(மழைத்துளி) | பனிக்கட்டி | — | பாலிடுபிரை, |
| காடி | = | தேன் | — | நெய் |
| கழுமல் | = | கொழுமல் | — | கற்றல் |
| துருவம் | = | மலை | — | அசையாநிலை |
| சிகரிகை | = | சிகழிகை | — | மயிர்முடி |
| ஞாங்கல் | = | மூங்கில் | — | மூங்கினெல் |
| சிதல் | = | இதல் | — | ஈசல் |
| சிகழிகை | = | சிரமாலை | — | மாலை |
| வழி | = | முதுகு | —பின்— | பின்னுள் |

பாசம். ஊசி ஊசித்துளை. வாளா துளையென்றது ஊசித்துளை யென்றமையின், பாசமென்பது ஊசியையுணர்த்திப்பிறகு ஊசித் துளையை யுணர்த்தல் வேண்டும்.

அத்தம் பொன், ஒளி கண்ணாடி. கண்ணாடி ஒளி நிரம்பிய பொருளாகலின், பொன்னை யுணர்த்தும் அத்தமென்பது, தன்னியை பாகிய ஒளியையுணர்த்திப் பிறகு ஒளி நிரம்பிய கண்ணாடியை யுணர்த்தல் வேண்டும். தூதனம் = மூங்கில் மலை கல்.

---

○ இதன் கீழுள்ளவை மறைந்தவையாம்

**தானம்**=கல். முத்தானம்=அடுப்பு. மலையில் வளர்வதியல்பாகலின் மூங்கிலையுணர்த்தும் தூதனமென்பது முன்னே மலையையுணர்த்திப் பிறகு கல்லினை யுனர்த்தல் வேண்டும்.

முத்தானம்=அடுப்பு. மூன்று கல்லாலாயது. மூன்று+தானமெனப்பிரிக்க. மூன்று என்பது போக, தானமென்பது கல்லினையுணர்த்தும். இத்தானமென்பது தூதனமென்பதன் இறுதி நிலையாம். தூதுணம்புறு. தூதனம்—தூது=ஓர்கல். காடி=தேன்—நெய். கள்—காடியாயிற்று. காடி=புளிப்பு. கள்ளினது இனம் தேனும், தேனினது இனம் நெய்யுமாம். காடியினினம் நெய்யாகாது. ஆகலின், கள்—காடி=தேன், நெய். என்னல் முறைமை.

சிதல்—இதல்—ஈசல். சிதலென்பது செல். காலம் செல்லச் செல்லச்சிதலே இறகுபெற்று ஈசலாகப் பறக்கக் காண்டலின், ஒற்றினீக்கமென்னு மிலக்கணத்தால் சிதல் இதலாயிற்று. இதல்—ஈசலாயிற்று. இதல் சிவலுமாம். செல்லினைத் தின்பதென்பது பொருள்.

சிதல்—சிதலை. சிதல்—செல். முன்பின் உள்ள இயைபினால் தூதனமென்னுஞ் சொல்லுக்கு மறைந்து போன மலையென்னும் பொருளும், தானமென்னுஞ் சொல்லும், அதற்குக் கல்லென்னும் பொருளும் புலப்படுகின்றன. பிறவு முணர்ந்துகொள்க.

"ஞாங்கலுந்தோரையு மூங்கினெல்லாகும்" (மஞ்சிகன்—நி)

௧௨௨. சொற்கள் சிறிதுசிறிதாகத் திரிந்துகொண்டே வருகின்றன.

## உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| மூசர் (தயிர்) | —மோர் | அடுக்களை | —அடுப்பு |
| குவலயம் | —குவளை | அடுப்பு | —அடுதல் |
| கபோலம் | —கவுள் | சிகரிகை | —சிகழிகை=சி |
| கோடாம் | —குதிரை | | [ரமாலை |
| நேயம் | —ஐயம்=வெ | பகல் | —வைகல் |
| | [ண்ணெய் | கடித்தல் | —கறித்தல் |
| சீசம் | —ஈயம் | கறித்தல் | —கொறித்தல் |
| பிங்கம் | —விங்கு=மஞ் | ஓதனம் | —உணா |
| கூபம் | —கூவல் [சள், | அருக்கன் | —அல்கல்=நாள் |
| துளவம் | —துழாய் | தட்கல் | —அல்கல்=தங்கல் |
| ஒடுக்கம் | —உறக்கம் | அடுக்களை | —அடுப்பங்கடை |
| மடைப்பள்ளி | —அடுக்களை | அடுக்களை | —அடுப்பங்கரை |

"விங்குவிளை கழனிமிகு" (ச—தே) திருமாகறல்.

கஉரு. உயர்ந்த சொற்கள், தக்கோரல்லார் மேற்கொண்டமையா னும், வழக்கு மிகுதிப்பாட்டானும் இழிந்த சொற்களாதலு முண்டு.

உதாரணம்.

ஆண்டி = ஆண்டவன், பிச்சைக்காரன்,
போதம் = ஞானம், மயக்கம்.
பண்டாரம் = மெய்யறிவு, பிச்சைக்காரன்.
ஓச்சன் = வைதீககுரு, பூசாலி.
வேடன் = வில்லோன், ஓர்சாதியான்.
வில்லி = வில்லோன், வேடன்.

பந்தியின்கண்ணே சோறிடுக, சாறுவிடுக எனல் குறைவென் றும்; அன்னம் இடுக ரசம்விடுக எனல் உயர்வென்றும் கூறுவர். சில ர் ரசம்விடுக எனலுமிழிவாம் எனத்தவிர்த்துச் சாற்றமுது சாதிக்க என்பர்.

கடிதடம் நிதம்பமுதலிய சொற்களை அவைக்கண்ணே கூசாது கூறுவர். அப்பொருள்பட இழிஞர் கூறுஞ்சொற்களை அவையல்கி ளவியென வொதுக்கிவிட்டனர். இவைபோல்வனவெல்லாம் வழக் கு மிகுதிப்பாட்டா லிழிசொற்களாயின

கடிதடம், நிதம்பம் = பெண்குறி. புலாலுண்போர் புலா லைக் கறியென்று கூறுகின்றமையின், சைவர்கள் அதனைத் தவிர்த்து விட்டுப் பதார்த்த மென்கின்றனர். சோறு, சாறு, கறி, யென்பன செய்யுள்வழக்கிற்கு இழுக்காகா.

---

இழிந்த சொற்கள் உயர்ந்த சொற்களாதலு முண்டு. உ—ம்.

கள்—களி—களித்தல் = மகிழ்தல்.
ஆலி (கள்) = ஆலித்தல் = மகிழ்தல்.
கள்—களி—களிப்பு. கள்ளுண்பதாலாவது.

அது மகிழ்தலென்னு முயர்வழக்கிற்கு முரித்தாயிற்று.

கஉச. உரைவழக்கில் அரிய சொற்களுமுள்ளன. உ—ம்.

கொஞ்சநஞ்சமல்ல. நஞ்சம் = குறைவு.
நஞ்சானுங் குஞ்சானும் நஞ்சான் = இளங்குழந்தை.

குஞ்சுங் குளமானும். குளமான் = இளங்குட்டி.
வேர்க்கடலை போத்துவிட்டது. போத்து = வேர்
சின்னபசங்கள். பசம் = இளமை.
பச்சைக்குழந்தை. பச்சை = ,,
உவாக்குழந்தை. உவா = ,,
பாயக்காரி. பாயம் = முளை, பயிர்.
மறுதாம்புப் புகையிலை. தாம்பு = போத்து.
மூன்றுங்கொம்பில்விரைத்தான் காம்பு = முளை
காம்பு கொம்பாயிற்று.
குளிகுளித்தல் = பிள்ளைபெறல். குளி = பிள்ளை.
இடையன் = கொம்புப்பூச்சி
இலையன் இடையனாயிற்று. இலைநிறமுள்ளது.
பத்திற்பசலை பசலை = இளமை.
மோரி = சலதாரை
தோட்டந்தூர = செவிடு
தோட்டம் = காது. தொளையுடையது.
களைகாம்பாயிற்று. காம்பு = முளை.
வானம் = கடுகால். வருணனூலாலெற்றிவெட்டுவது
கடகால் = வாளி. உ.—பதம். கால் = மரக்கால்.
குணுக்கு = மணி. வட்டவடிவுடையது.
அசகாயம் = சிறுகாயம். காயம் = புண்
கசகாயம்—அசகாயமாயிற்று.
மாப்பு = யானைக்கூட்டம், கூட்டம்.
தாப்பு = வீரர்கூட்டம், கூட்டம்.
தாட்டோட்டக்காரன் = சேனை நடத்துவோன்.
தண்டோட்டுக்காரன் என்பதன் திரிபு.
பிண்டிக்கல் = திரண்டகல்.
பிண்டிமழை = பொடிமழை.
ஆளி = சிப்பி.
சங்காத்தம் = தோழமை.
பரிசில் = ஓடம்.
திருவாழி = பிரபை.
குளம் = இளமை. குளமான் = இளங்குட்டி.
குளந்தை—குழந்தை = மகவு. தைவிகுதி.

குளம்— குளி=மகவு. குளித்தல்=மகப்பெறல்.

குளம்—குழ—குழகு—குழகன்=மகன்

கல்குளம்=ஓரூர். உ—பதம்.

கால்=மகவு, குளம், மகவு.

அத்தலத்து உமாதேவியார் பெயர் குழந்தை யம்மையாகலின், கல்குளமெனப்பெயர் வந்தது. இங்ஙனம் ஒவ்வொன்றற்கும் கூறப்புகின் விரியும்.

கஉ௫. சொற்களுக்கு உள்ளதோர் பொருளைக் கூறுது அப்பொருளமைதியை வேறோர் வகையாற் கூறுவதுமுண்டு. உ—ம்.

பூரை=குறைவின்மையெனின், பூரணமென்பது.
உத்தானம்=ஆழமின்மையெனின், மேடென்பது.
புலம்பு=தனிமையெனின், பிரிந்ததென்பது.
பொலி=தூற்றுநெல் எனின், பதரொடு கலந்ததென்பது.
முகரி=மூக்கனடியெனின், புருவத்தின் கீழென்பது.
மத்தகம்=பொல்லா நிலம் எனின், மேட்டு நிலமென்பது.
கருநிலம்=வெறுநிலமெனின், மேட்டு நிலமென்பது.

அதாவது விளைவில்லா நிலம்.

கஉசு. உலகத்துள்ள ஒவ்வோர் பொருளும் ஓர் குணமேயன்றிப் பல குணம் பெற்றிருத்தலின், சில சொற்களுக்குத் தாதுப்பொருளேயன்றிப் பொருந்துமாறு வேறுபொருளும் கூறல் கூடும்.

உ—ம்.

உயிர்=ஆன்மா. உணர்வது.
இனிவளர்வது, ஒளிர்வதெனலும் பொருந்தும்.
நாட்டம்=கண், நுணுகிநோக்குவது.
இனிமகிழ்ச்சியுண்டாக்குவதெனலும் பொருந்தும்.
ஆகமம்=கல்வி, முதல்வின்வாக்கு.
இனி ஆ+க+ம எனப்பிரித்துப்பொருள்
கூறலும் பொருந்தும்.
வண்டு=அளி. இனிதிசைப்பது.
இனிசென்று சென்று சுழல்வதெனலும் பொருந்தும்
வளி=காற்று. பரிசமோடிசைத்தன்மையுடையது.
இனிவளைந்து சுழல்வதெனலும் பொருந்தும்.

௧௨௭. ஓர்தாதுவின்கட் பிறந்தனவேனும், ஒன்றையொன்றொவ்வாத உலகப்பொருள்களின் வேறுபாட்டினை விளக்கும் பொருட்டுச் சொற்களும் சிறிது வேறுபட்டு வரும். உ—ம்.

| | |
|---|---|
| காம்பு | —கரும்பு |
| அம்பு | —அரும்பு. அம்புபோல்வது |
| கந்தம் | —கந்தகம் |
| அத்தி | —அத்திகைம் |
| ஆலம் | —ஆலாலம்=மஞ்சள் |

அற்றேல் நீரின் பெயர் முதலியனவெல்லாம் வேறுபட்டும், நீர் முதலிய வோர்பொருளையே யுணர்த்தற் பாலன எனின், அற்றன்று. கயமென்பது ஊற்று நீரையும், தீர்த்தமென்பது யாற்றுநீரையும், ஆலமென்பது கடனீரையும், காரென்பது மழைநீரையும், காண்டமென்பது சுனை நீரையும், உணர்த்தி நிற்கும்

காண்டம் கவந்தமெனவும், ஆலம் அளகமெனவும் திரிந்தன. இங்ஙனமே யேனைச் சொற்களுக்கும் காரணமிருத்தல் வேண்டும். அவைபெரும் பான்மையும் மறைந்து விட்டமையின், இப்போழ்து அறிந்து கூறலரிது. முயலிற்கூடும்.

"அன்பீனு மார்வமுடைமை யதுவீனும்
நண்பென்னு நாடாச்சிறப்பு"
"நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையுமுளவோபிற"
"இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலுநணித்து"
"அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"
"சீர்மை சிறப்பொடு நீங்கும்பயனில
நீர்மையுடையார் சொலின்"
"உள்ளக் களித்தலுங் காணமகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்துக் குண்டு"
"காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி

மாலை மலருமிந்நோய்"
"பருவரலும் பைதலுங் காணான்கொல் காமன்
ஒருவர்கணின் றொறுப்பான்"

என்பவற்றுள் அன்பு ஆர்வம், நகை உவகை, நவில்கெடல், அருள் அன்பு, சீர்மை சிறப்பு, களித்தல் மகிழ்தல், போதுமலர், பருவரல் பைதல், என்ற இவ்விரண்டிற்கும் அக்காலத்துப் பொருள் வேறுபாடுண்மையறிக. இக்காலத்தார் இரண்டொன்றாகிய, பிறவற்றையோர் பொருளாகவே கொள்வர்.

"எள்ளலிளமை பேதைமை மடனென்
றுள்ளப்பட்ட நகைநான்கென்ப"
"கல்விதறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதநான்கே" (தொல்—ம்)

என்பவற்றுள் பேதைமை அறிவின்மையெனவும், மடமை பெரும்பான்மையும் கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமையெனவும், கொடையென்பது உயிரும் உடம்பும் உறுப்புமுதலாகிய எல்லாப்பொருளுங் கொடுத்தலெனவும்;

"மயிலு மெழாலும் பயிலத்தோன்றும்"

என்ற சூத்திரத்தின்கீழ் முதலையும், இடங்கரும், கராமும், தம்மின் வேறெனக்கூறப்பட்டன. எனவும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

"தொடலையு மாலையும் படலையுஞ்சூட்டி" (செயிற்றியம்)

என்பதனால் தொடலைவேறு மாலைவேறு படலைவேறெனவுங் கொள்க.

"கனிகொள் வாழைக்காட்டுட் கருமைமெழுகிய வைபோன்
றினியவல்லாமுகத்த முசுவுங்குரங்குமிரிய"
"மாழ்குபு மயங்கிவீழ்ந்த மாபெருந்தேவி"
"மங்கைநல்லார் கண்ணும் மனமும்போன்
றெங்குமோடி யிடறுஞ்சுரும்புகாள்

வண்டுகாள் மகிழ்தேனினங்காள் மது
வுண்டுதேக்கிடு மொண்ஞிமிறீட்டங்காள்"

எனக்கூறலின், முசுவேறு குரங்குவேறெனவும், மாழ்கல்வேறு மயங்கல்வேறெனவும், சுரும்புவண்டு தேன் ஞிமிறு தம்மின்வேறெனவுங்கொள்க.

காண்பு=நேரிற்பார்த்தல்; அறிவு=பொதுநோக்கு;
உணர்வு=கல்வியறிவு; வாவி=ஆற்றிலோடை;
பொய்கை=மானிடராக்காத நீர்நிலை;
காணம்=பழங்காசு; வல்சி=பகற்சோறு;
ஆர்ப்பு=அளவிறந்திசைத்தல்; அதிர்வு=சிதறியுரைத்தல்;
ஆர்வம்=பெறக்கடவதன்மேற்று;
சினம்=கோபத்தின் பின்னாகச்சிறிது பொழுது நிற்பது;
சீற்றம்=பெருங்கோபம்;
செற்றம்=வைராக்கியம்; சரம்=சிறுமூங்கில்;
முந்தூழ்=பெருமூங்கில்; அமை=கன்மூங்கில்;
வேய்=போலிமூங்கில்; மூரல்=சிலுத்தசோறு;
இயம்பல்=சிலர்க்குக்கூறல்;
அறைதல்=பலர்க்குக்கூறல்;

"ஈதாகொடுவெனு மூன்றுமுறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோனிரப்புரை"

பிறவுமுணர்ந்து கொள்க.

கஉஅ. ஓர்தாதுவிற்பலசொற்கள் பிறந்தனவேனும் ஏற்றபெற்றிசொல் வருவித்துப் பொருளுரைத்தல்வேண்டும். உ—ம்.

வள்—வளி=காற்று, வளைந்து சுழல்வது.
வள்—வண்டு, சென்றுசென்று சுழல்வது.
கந்தம்—கந்தகம், ஓர்வகை மணமுள்ளது.
ஏர்—ஏரி, ஊரினையெழச்செய்வது.
ஏர்—எரு, பயிரையெழச்செய்வது.
கில்—கிளி, மழலைபோற்பேசுவது.
சில்—சிலைகூட்டல், ஓர்வகையாகப்பேசல்

ஆந்தை கிளைகூட்டல், மகிழ்வுதரும்.

பண்—மண்=முழவின்மண். ஓர்வகையாகஇசைப்பது.

ஏர்=எழுச்சி, கில்=இசை.

இதுவேயிசையெச்சம். இங்கிருந்தே யிவ்விலக்கண முண்டாகின்றது.

ஓர் சொற்றொக்கது சொல்லெச்சம்

பலசொற்றொக்கது இசையெச்சம்.

கஉ௯. தன்மை, பலவாதலால், ஒரு பொருட்கு ஒரு சொல் அன்றிப்பல சொல்லும் வரும். உ—ம்.

க. பூனை, மண்டலி, பில்லி.

உ. அடுப்பு, உத்தானம், காமரம்.

ங. உயிர், சேதனன், பசு.

ச. எருது, கோ, துரியம்.

ரு. கடல், ஆழி, தெண்டிரை.

சு. அத்தம், கண்ணடி, ஒளிவட்டம்.

எ. கரடி, வெண்பல்லம், செங்கண்மா.

அ. காற்று, சதாகதி, கந்தவகன்.

௯. பாம்பு, சக்கிரி, அரவம்.

க0. சிங்கம், மடங்கல், வயப்புலி.

க. பூனை=கூரியநகமுடையது. பூனைக்காஞ் சொறியென்பதில் பூனை=சிறுமுள் என்பது பொருள்.
மண்டலி=மண்டலாகாரமாகக் கிடப்பது.
பில்லி=பிளந்தவாயுடையது. பில்=பிளவு.

உ. அடுப்பு=மடைப்பள்ளியிலுள்ளது.
உத்தானம்=மூன்றுகல்லாலானது.
காமரம்=சூடுள்ளது.

ங. உயிர்=ஓர்தலுடையது.
சேதனன்=சிற்றறிவுடையது.
பசு=பாசமுடையது.

சு. அத்தம்=ஒளிநிரம்பியது.
கண்ணடி=கண்ணுடைவது.
ஒளிவட்டம்=பிம்பங்களைத் திருப்பிவிளங்கச்செய்வது.

௬. பாம்பு=நீண்டிருப்பது. பாம்புவிரல்=நீண்டவிரல்
சக்கிரி=குண்டலி. அரவம்=நஞ்சுடையது.

இங்ஙனம் ஒரு பொருட்குத்தன்மை பலவாதல் பற்றிப்பல சொல் வந்தன. பிறவு மன்ன.

௧௩௦. பல பொருள் ஒரு சொல், எழுத்தொப்புமையால், ஒரு சொற்போலத்தோன்றினும் அவை ஒவ்வொன்றிற்கும் முதற்சொல் வேருகலின் அச்சொல்லும் வேருகும். உ—ம்.

கொங்கு (மணம்)—கொக்கு=மாமரம்.
கோகம் (செந்நாய்)—கொக்கு=செந்நாய்.
குருகு (வெண்மை)—கொக்கு=ஓர்புள்.
கோடகம் (குதிரை)—கொக்கு=குதிரை.
குருத (மூலம்)—கொக்கு=மூலம்.

இப்பல பொருளொருசொல் பகுதிவேறுபாட்டாலும், சொற்சிதைவாலும், ஆகுபெயர் முறைமையாலும் வரும். மேற்கூறப்பட்டவை சொற்சிதைவால் வந்தன. கடி முதலியவை பகுதி வேறுபாட்டால் வந்தன, கார் முதலியவை ஆகு பெயர் முறைமையால் வந்தன.

இப்பல பொருளொருசொல் உரை வழக்கிலும் வரும்.

உ—ம்.

போடல்=ஈனல், எறிதல்.
ஊதல்=பருத்தல், குழலூதல், குளிர்காற்று.

இவ்வேறுபாடுணர்த்தற்கு யமகமென்னும் சித்திரகவி வகுத்தனர்.

௧௩௧. சொற்கள் உரைவழக்கு, நூல்வழக்கு என இருவகைப்படும். உ—ம்.

மாம், மலை, ஆறுமுதலியன எல்லாம் உரைவழக்கெனப்படும். பொழுது, பகல், பிரமம், திங்கள், மதியம், கன்னி, சகடு, மீகாமன், இருள், பிறந்தை முதலியன நூல்வழக்கெனப்படும்.

பொழுது என்பது சூரியனுகலானும் சூரியன் கோள்களுக்கெல்லாம் நடுவே யிருப்பதினுலும் பொழுது பொதுவென்ருய் நடு

வினை யுணர்த்திற்று. இங்ஙனமே பகல் பிரமமென்பவை சூரியனை யுணர்த்திப்பிறகு நடுவினை யுணர்த்தின.

மாசம் சந்திரனாலாவதாகலின் திங்களென்பது சந்திரனை யுணர்த்திப்பிறகு மாசத்தை யுணர்த்திற்று.

மதி மதியமென்றாயிற்று. மதி = சந்திரன்

நிலா நெல என்றாயிற்று நெல = மாசம் (தெலுங்கு)

கன்னி யென்பது அழிவின்மையையுணர்த்தும். பரமாணுக்களுக்கு அழிவில்லை யென்பது தருக்க நூற்றுணிபாகலின் அப்பரமாணுவை யுணர்த்தும் காலென்பது கன்னியென்றாய் அழிவின்மையை யுணர்த்திற்று. காலென்பது நுண்மையையும் மிகு நுண்மையும் உணர்த்தும்.

ஓர் முள்ளினை அடியிலிருந்து நோக்கிக்கொண்டே போயின் வரவர நுணுகி அதன் முனை கட்புலனுக்கெட்டாமற் போகின்றது. சாலவும் நுணுக்கமாகிய ஆகாயமென்னும்பூதம் தடை செய்யாதிருத்தற்பொருட்டு முனைகளெல்லாம் மிகக்கூர்மை யுடையன வாகி ஆகாயத்தை யுருவிக்கொண்டுபோய் மெல்ல மெல்லப்பருத்து வளர்ச்சி பெறுகின்றன.

சகடு = உரோகணி.

"உரோகணியூற்றால் பன்னிரு மீனும்"

உரோகணியையுச்சத்திற்காணுங்கால், சில விளங்கியும், சில விளங்காமலும் சந்தேகத்துக்கிடந்தரலின்; சகடென்பது உரோகணியை யுணர்த்திப்பிறகு சந்தேகத்தை யுணர்த்திற்று.

மீகாமன் = மரக்கலமோட்டுவோன்.

மேலே யுள்ள நட்சத்திரங்களை நோக்கும் விருப்ப முடையோனென்பது. மீகாண்பான் மீகாமனென்றாயிற்றெனலு மொக்கும்.

நட்சத்திரங்களினுச்சத்தினால் திக்குகளையும் நாடுகளையும் அறிந்து கலஞ்செலுத்துவது மாலுமிகளின் வழக்கு.

இருள்

உள்பொருட்கே சொற்களுமுண்டாகலின் இருளென்னுஞ் சொல்லால் அது நுணுகியதோர் பொருளென்பது.

பிறந்தை=பாவம்.

உடன்பிறந்தென்பது.

அக்காலத்துப்பெரியார், யோகக்காட்சி முதலியவற்றால் நுணுகி யொருகி யுணர்ந்து எழுதி வைத்த நூன்முகத்தாலறிதலின் இவை நூல்வழக்காயின.

கரு௨. உண்மைப்பொருள் மறைந்தமையால், பொருள் வேறுபட்ட சொற்களுமுள. உ—ம்.

தொண்டு (௯) தொன்பது (௯0) தொண்ணூறு (௯00) தொள்ளாயிரம் (௯000) என்னல் முறைமை. இவை பெரிதும் வேறு பட்டன.

தொண்டு + பத்து = தொன்பது.

தொண்டு + நூறு = தொண்ணூறு

தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம்.

தொண்டு, தொன்பது முதலியன தெலுங்கில் முறைமையாக வழங்குகின்றன. இக்கருத்தினைத் தமிழ்மொழிவரலாறென்னு நூலுங்கூறும்.

தெரியாமை யென்பது ஒற்றினீக்கமாய் எய்யாமையாயிற்று. எய்யாமை=அறியாமை. இதனுடன்பாடு தெரிதலென்பது. இங்ஙனமிருப்ப எய்த்தலுடன்பாடென்பர்.

குறவனென்பதற்குப் பெண்பால் குறத்தி; குறத்தியின் திரிபு கொடிச்சி; கொடிச்சி யென்பதற்கு ஆண்பால் கொடியனாகாதது போல எய்யாமை யென்பதற்கு உடன்பாடு எய்த்தலாகாது. கொடிச்சி யென்பதற்கு ஆண்பால் குறவனாதல்போல எய்யாமை யென்பதற்குடன்பாடு தெரிதலாகும்.

"எய்யாமையே யறியாமையே"

என்ற தொல்காப்பிய சூத்திரத்தின்கீழ் "அறிதற் பொருட்டாய் எய்தலென்றானும் எய்த்தலென்றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமையென்பது எதிர்மறையன்மையறிக" என்பர்.

சேனாவரையர். மறைச்சொல் என்பர் நச்சினார்க்கினியர். எய்த்தலென்னுஞ்சொல் அறிதற்பொருளில் அக்காலத்திருப்பின் தொல்காப்பியர் அச்சொல்லையே கூறியிருப்பர்.

பிரபுலிங்க நூலாசிரியரும் எய்த்தலென்பர்,

இனி எய்யாமை யென்பது மறைச்சொல்லேயாம். தெரிதலென்பது அதன் உடன்பாடாம்

செங்கதிர்நாள்=உத்திரநாள். செங்கதிரை அதிதேவதையாக வுடைய நாளென்பது. செங்கதிர் பிறந்தநாளென்பர்.

ஈசனாள்=ஆதிரைநாள். ஈசனை அதிதேவதையாக வுடைய நாளென்பது. ஈசன் பிறந்த நாளென்பர்.

கருரு. சிறப்புச்சொற்கள் வழக்கு மிகுதியால் பொதுச்சொற்களாய் வருதலுமுண்டு, உ—ம்.

எண்ணெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய்.
காலி, கருங்காலி, வெண்கருங்காலி, செங்கருங்காலி.
பரத்தை, வெண்பரத்தை, செம்பரத்தை.
பஞ்சு, வெண்பஞ்சு, செம்பஞ்சு. கோபுரம்.

எண்ணெய் எள்ளினது நெய்யிற்கே யுரியது. பிறகு பொதுப் பெயராயிற்று.

காலி கருநிறமுடையது. வெண்ணிறமுடையதை வெண்காலி யெனவும், செந்நிறமுடையதைச் செங்காலி யெனவும் கூறினர். கூறவே காலி பொதுவழக்காயிற்று. பிறகு கருங்காலி யென்றனர். கருங்காலியும் பொது வழக்காகவே வெண்கருங்காலி செங்கருங்காலி யெனலாயிற்று.

பரத்தை=ஓர் பூஞ்செடி. செம்பூ வுடையதென்பது. வெண்பரத்தையால் செம்பரத்தையெனலாயிற்று.

பஞ்சு=இலவமரம். சிவந்த பூக்களுடையதென்பது. வெள்ளியபூக்களுடைய இலவினாற் செம்பஞ்செனலாயிற்று.

கோபுரம் நந்திக்கு முன்னுள்ளதென்பது

கோ=நந்தி புரம்=முன்

பொது வழக்காயிற்று,

௧௩௪. திரிசொற்கள், பிறமொழிகளில் இயற்சொற்களாய் நடை பெற்றுவரும். உ—ம்.

| | |
|---|---|
| ஆம்பிரம்=புளி, அம்பலி=புளி, | [மராடம்) |
| உரோணி=கடைதல், லோணி=வெண்ணெய் | [,,] |
| சசி=முளை, சசி=முளை | [,,] |
| பவனம்=காற்று, ஹவ=காற்று. | [,,] |
| தூதனம்=கல், தோண்ட=கல். | [,,] |
| சங்கர=சுபம். சாங்கல=நல்ல. | [,,] |
| சிந்தம்=புளி, சிந்தபண்டு=புளி. | [தெலு] |
| கொக்கு=மாமரம், கொக்கு=மாமரம். | [துளுவம்] |
| திங்கள்=சந்திரன், திங்களு=சந்திரன். | [,,] |
| அரி=அரிசி, அரி=அரிசி. | [மலையாளம்] |
| கச்சளம்=இருள், கத்தலே=இருள் | [கன்னடம்] |
| அக்கம்=கயிறு, ஹக்க=கயிறு. | [,,] |

---

## ௧௩௫. தோற்றரவு

மக்கட்கு முதல் முதல் இயற்கைப்பொருள்களின் தோற்ற முண்டாய் அறிவு பெருகியபின், செயற்கைப்பொருள்களின் தோற் றமுண்டாயின.

எங்ஙனமெனின்:—

சூரியனது தோற்றத்தால் அழகு வண்ண முதலியனவும், சக் கர முதலியனவும்; கடற்கரையின் தோற்றத்தால் ஏரிகரை, குளக் கரை முதலியனவும்; கடலின் தோற்றத்தால் ஏரி, குளமுதலியன வும்; ஆற்றினது தோற்றத்தால் கால்வாய், தெரு முதலியனவும்; மலை யின் தோற்றத்தால் மேடு, கூரை முதலியனவும்; பூசனிக்காய் முத லியவற்றின் தோற்றத்தால் பந்து முதலியனவும்; யானைத்துதிக்கை யின் தோற்றத்தால் நீர்த்தூம்பு முதலியனவும், ஊசன்முதலியன வும்; அதன் காதின் தோற்றத்தால் விசிறி முதலியனவும்; மூங்கி லின் தோற்றத்தால் உட்டுளை, நீட்சி, உயரம், ஒழுங்கு முதலியன

வும்; நெருப்பு முதலியனவும்; தருப்பையின் தோற்றத்தால் கத்தி முதலியனவும்; முட்களின் தோற்றத்தால் ஊசி ஆணி முதலியன வும்; கருக்கு மட்டையின் தோற்றத்தால் வாள் முதலியனவும்; காசத்தின் தோற்றத்தால் அம்பு முதலியனவும்; சீந்தில்விழுதின் தோற்றத்தால் நூல்முதலியனவும்; மரவுரியின் தோற்றத்தால் ஆடை முதலியனவும், கடுமா முதலியவற்றின் தோற்றத்தால் கறுப்புச்சாய முதலியனவும்; தமாலத்தின் தோற்றத்தால் வாசனைப்பொருள் முதலியனவும்; உண்டாயின. பிறவு மிங்ஙனமே யுணர்ந்து கொள்க.

சூரியனிடத்துள்ள ஐவகைநிறங்களால் மனத்திற்கு மகிழ்ச்சி யுண்டாகின்றமையின் இங்ஙனமே ஐவகை நிறங்களால் சித்திரிக்கின் அம்மகிழ்ச்சியுண்டாமெனவும், கடற்கரையிங்ஙன மிருத்தலால் இதுபோலோர்கரையமைப்பின் நீர்நிலைபெறுமெனவும், நன்மழைபெய்த பின் காய்த்த கடுமாத்தின்கீழ்க் கருநிறம் பூத்திருத்தலால் இதனால் கறுப்புச்சாயமுண்டா மெனவும் முதன்மக்களறிந்தனர்.பிறவுமன்ன

காசசம்=ஓர் கற்றுறை.

இவ்விருவகைப் பொருள்களின் தோற்றமும் பயிற்சியு முண்டாயபின், அப்பொருள்களினிமித்தம் சொல்லினது தோற்றமுண்டாயது.

சொன்னிமித்தம் பொருளுண்டாயிற்றில்லை. பொருணிமித்தமே சொல்லுண்டாயது.

என்னனின் சொற்பிழம்பின்றி மக்கள் நெடிதுகாலமுய்தல் கூடும். பொருட்பிழம்பின்றி ஒரு சிறிதுமுய்தல்கூடாது.

பொருள்வியாபகம், சொல்வியாப்பியம்.

இதனானே உலகமுண்டாய் மக்களும் இயற்கைப்பொருளுணர்ச்சியும், செயற்கைப்பொருளுணர்ச்சியும் பெருகியபின்னரே அப்பொருள்களினிமித்தம் இயற்கையோசையானும் செயற்கையோசையானும் அமைந்தவோர் சொற்கூட்டமுண்டாயதென்பது துணிபு.

சொற்பிழம்பு=பாஷை. பொருட்பிழம்பு=சூரியன், நிலம், நீர்முதலியன.

கஙூ. சொற்களின் தோற்றரவு வருமாறு:—

சொற்கள் முதல் முதல் உலகத்து அரும்பெரும் பொருளாகிய சூரியன் சொல்லினிடத்திருந்தும், பிறகு குறிஞ்சிக் கருப்பொருள்களுட் சிறந்து சூரியனுக்கு அணுக்கவினையுடையதாய், ஏனைப் பொருளிலக்கணங்களைத் தன்னிடத்தே விளங்க அமையப் பெற்ற மூங்கிற்சொற்களிடத்திருந்தும், மூங்கிலினையுடைச்சொற்களிடத்திருந்தும், அனுரூதசம்பந்தமாயுண்டாகின்றன.

மூங்கில் வன்னிகருப்பமாகலின அழற்பிழம்பாகிய சூரியனுக்கு அணுக்க வினையாயிற்று. உலகத்துப் பொருட்டன்மையெல்லாம் சூரியனிடத்தும் மூங்கினிடத்தும் அடங்கு மென்க. ஓர் சொல் மூங்கிலென்னும் பொருளை யுணர்த்திலதேனும், மூங்கிலிலக்கணங்களுள் ஏதேனும் ஒன்றனை யுணர்த்தினும் அது மூங்கிலினையுடைச்சொல்லாம்.

* கணுவுடைமை, திரிகணுவுடைமை, கணுத்தொறும் வேருடைமை, உடுபிளையுடைமை, பொருந்துடைமை, பிரிவுடைமை, நீட்சியுடைமை, வட்டமுடைமை, பசுநிறமுடைமை முதலியன வெல்லாம் மூங்கிலிலக்கணங்களாம்.

ஒவ்வோர் கணுவினும் மூன்றுகணு விருத்தலால் மூங்கிலுக்குத் திரிகணென்னும் பெயருண்டாயது இது பிங்கல நிகண்டிற் கண்டது.

மூங்கிற் புதர் வட்டித்தே போத்து விட்டுக்கொண்டு வளரும்.

உலகத்துப் பொருள்கள் ஓர் காலத்தே யுண்டாயின வாகாது ஒவ்வோர் காலத்தே ஒவ்வோர் பொருளாக வுண்டானமையின், சொற்களும் ஓர் காலத்தே யுண்டாயின வாகாது ஒவ்வோர் காலத்தே ஒவ்வோர் பொருணிமித்தம் ஒவ்வோர் சொற்களாக வுண்டாயிருத்தல் வேண்டும். உண்டாகிய சொற்களுமுள; உண்டாக்கிய சொற்களுமுள.

பொருள் இயற்கைப்பொருள் செயற்கைப்பொருளென விரு வகைப்படும்.

## (க) சூரியன் சொல்லினின் றுண்டாய சொற்களாவன:—

சுல்=சூரியன், எழுதல், நடுமுவலியன.

,, சுரீரெனல்

,, சுரி=கொளுத்தல்

சுலா=திரட்சி. சூரியன் போல்வது

சூரி=சூரியன்.

சுல்—சுள்=வெப்பம்.

சுள்ளாப்பு=வெயிலின்சுருக்கு.

சுளுந்து=நெருப்புறுகுற்றி.

சுண்ணம்=சுன்னம், சுட்டது.

,, சுன்னம்=நீறு.

சுண்ணும்பு= ,, பு—விகுதி.

சுளிவு=சினம்.

சூள்=ஆணை. வட்டமிட்டுத்தடுப்பது.

சூளை=செங்கற்சூளை. திரண்டிருப்பது.

சுளல்=சுழல்

சுழல்=வட்டம்

சுழலல்.

சூடு=வெப்பம். சூரியனிடத்துள்ளது

,, சுடல்=சுடுதல்.

சுண்டா=நடு. கோள்களுட்சூரியன்போல்வது.

## (உ) மூங்கிற் சொல்லினின் றுண்டாய சொற்களாவன:—

### க. அம்பு:—

க. மூங்கில்

உ. கணை. மூங்கிலாலாவது

## ௨ அரி:—

௧. மூங்கில்
௨. உட்டுளைப்பொருள். மூங்கில்போல்வது
௩. கள். உள்ளிருந்து கசிவது.
௪. விசி, மூங்கிலாலாவது.
௫. கட்டில். விசிப்போல்வது.
௬. படுக்கை. ,,
௭. மலை. மூங்கின்மிக்கது.
௮. தீ. மூங்கிலினுண்டாவது
௯. புகை. தீயினுண்டாவது
௧0. நெற்கதிர். மூங்கினெற்கதிர்.
௧௧. அரிசி. மூங்கிலரிசி

## ௩. ஆம்பல்:—

௧. மூங்கில்.
௨. யானை. உட்டுளையுடையதும்பிக்கையுடைத்து.
௩. கள். உள்ளிருந்து கசிவது
௪. இசைக்குழல். மூங்கிலாலாவது. புல்லாங்குழலென்பது
௫. பண். இசைக்குழலினுண்டாவது
௬. ஊதிடுகொம்பு. உட்டுளையுடையது.

## ௪. கண்:—

௧. மூங்கில்.
௨. கணு. மூங்கிலினுள்ளது
௩. நுங்குக்கண். உட்டுளையுடையது.
கணம்=கூடு. மூங்கினுள்ளது
,, கணமாந்தம்.
கணப்பு=கூடு. பு—விகுதி.
கணப்புச்சட்டி.

க. கண்

கனல்=தீ. மூங்கிலினுண்டாவது.

,, கனலம்=தீ.

கனல்—அனல்—அனலம்=தீ.

உ. கண்—கணு

கணை:—

க. அம்பு. மூங்கிலாலாவது.

உ. சிவிகைக்கணை. ,,

கணையாழி=அம்புக்குறியுள்ள மோதிரம்.

௩. கணம்—கானம்—கானவாழை

௪. கானம்—கானல்=வெப்பம்.

௫. **கிளை:—**

க. மூங்கில்

உ. ஓர்பண். வேய்ங்குழலினுண்டாவது.

௬. **சந்தி:—**

க. மூங்கில்.

உ. இசைப்பு. கணுப்போலப் பொருந்துவது

௩. பலதெருக்கூடுமிடம். சந்திப்பது.

" சந்திப்பு=சந்தித்தல்

௭. **துளை:—**

க. மூங்கில் ,,

உ. தோரம். உட்டுளையென்பது.

௩. வாயில். உட்டுளையுடையது.

துளைத்தல்=தோரமிடல்

௮. **தூம்பு:—**

க. மூங்கில்

உ. உட்டுளை

ந. நுழைவழி. உட்டுளையுடையது. இது புதர்க்காட்டி [லுள்ளது

ச. வழி

ரு. அருநெறி. நுழைவழிபோல்வது.

சா. வாயில். துளையுடையது

எ. சலதாரை. ,,

அ. மரக்கால். மூங்கிலாலாவது.

ன. ## நால்:—

க. மூங்கில் "நாலின் குருந்த நறுக்கிய துண்டுகள்" (வை—வெ)

உ. உட்டுளை. மூங்கிலிலுள்ளது.

ந. முளை. கணுக்கள்தோறுமுண்டாவது

ச. சிறுமை. முளைபோல்வது

ரு. கூர்மை. ,,

சா. வளர்ச்சி. முளையினின்றுண்டாவது.

எ. விண்மீன். உச்சமாவது. முளைப்பது.

க. நால்=மூங்கில்

நால்—நாலி=தென்னை. மூங்கிலினமென்பது (போ—நி)

நாளி=தென்னை. (ச—தேவாரம்)

நாளிகேரம்=தென்னை உ—பதம்.

நாலி—நாரி=நெய்யரி. தென்னையிலுண்டா [வது.

,, நாலிகை=மூங்கில், தொளை.

நால்=உட்டுளை

நாலம்:—

க. உட்டுளை,

உ. ஆண்குறி. உட்டுளையுடையது.

ந. ஊதுகுழல். ,,

ச. தண்டு ,,

ரு. காம்பு. ,,

௨. நால்=முளை

நாறு=முளை. நால்+து

,, நாறல்=முளைத்தல், தோன்றல்.

நாற்று—நாற்றங்கால்

நாற்றம்=மணம். மூக்கிற்குத் தோன்றுவது

௩. நால்=சிறுமை.

நல்கூர்தல்=சிறுமைமிகுதல்.

நல்குரவு=வறுமை

௪. நால்=கூர்மை

நல்லுலு=மூடி. கூரியமூக்குடையது. (தெலுங்கு)

௫. நால்=வளர்ச்சி

நாற்சி—ஞாற்சி=வளர்ச்சி

நாலம்=ஞாலம். வளர்வது

௬. நால்=விண்மீன்

நால்—நாள்=விண்மீன், தினம்.

,, நான்று=நாள். (சோ—வ—ச)

ஞான்று= ,,

,, எஞ்ஞான்றும்

ஞான்றை=நாள்

௭. நால்=உட்டுளை

நாளி—நாழி=படி. மூங்கிற்படியென்பது.

நாடி:—

௧. உட்டுளை

௨. குழல்

௩. நரம்பு=உட்டுளையுடையது

௪. நரம்புச்சிலந்தி

௧0. **நெல்:—**

௧. மூங்கில்

௨. நெல். மூங்கிலினமென்பது

நெல்வேலி=வேணுவனம். உ—பதம்

௧௧. **பவணா:—**

௧ மூங்கில்,

௨. விலங்கின்படுக்கை. வட்டமாக இருப்பது

௩. பணை. மூங்கிலினம்.

பனை = பனைமரம்.

பெணை = ,, (சு—தேவாரம்)

பெண்ணை = ,,

பெண்ணையம்பூ = பனம்பூ

பணை—பனை = ஓரளவு. ஆவது, முக்குறுணி.

பணை—பாணை = முக்குறுணிகொண்ட மூங்கிற்குழல்.

௧௨ **பாசு:—**

௧. மூங்கில்

௨. பசுமை. மூங்கினிறமென்பது.

பசு—பசுமை.

௧௩. **புவணா:—**

௧. மூங்கில்

௨. மரக்கலம். உட்டுளையுடையது

௩. தெப்பம்

௧௪ **முடங்கல்:—**

௧. மூங்கில்

௨. ஓலை. மூங்கிலினம்

முடங்கல்—மூங்கில்.

௧௫ **மூவிளா:—**

௧. மூங்கில்

௨. முளை. கணுவிலுண்டாவது.

முளைத்தல் = தோன்றல்.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

## கசு. வேல்:—

க. மூங்கில் „
உ. ஓர் பாசி.

வேலி = அடைப்பு. மூங்கின் முள்ளாலாவது.

வேர் = தூர். கணுவிலுண்டாவது.

வேல்—வேள் = கொறுக்கை. மூங்கிலினமென்பது.

## கஎ. வேழம்:—

க. மூங்கில்.
உ. கரும்பு. மூங்கிலினமென்பது.
௩. கொறுக்கை. „
௪. யானை. துளைக்கையுடையது.

வேள்—வேளம்—வேழம்.

## கஅ. வேய்:—

க. மூங்கில்
உ. உட்டுளை.

## ௩. மூங்கிலியையுடைச் சொற்களாவன:—

## க. கால்:—

க. வட்டம். மூங்கிற்புதர்போல்வது
உ. தேருருள். வட்டமுடையது.
௩. காற்று. சுழல்வது.
௪. ஊன்றுகோல். மூங்கிற்கோல்.
ரு. தூண். மூங்கிலாலாவது.
சு. உட்டுளை. மூங்கிலிலுள்ளது.
எ. பூந்தாள். உட்டுளையுடையது.
அ. வழி. தூம்பு என்பது.

௯. முலைக்கண், உட்டுளையுடையது.
௧0. மரக்கால். மூங்கிலாலாவது.
௧௧. பாதம், கணுவரையுள்ளது.
௧௨. பின்னவெண், சிறியது. முளைபோற்சிறிதென்பது.
௧௩. கால்வாய், மூங்கிற் குழலாலாவது.
௧௪. வேர். கணுவிலுண்டாவது.
௧௫. முளை. வேரின்பின் உண்டாவது.
௧௬. கூர்மை, முளைபோல்வது.
௧௭. பொழுது. சூரியனாலுண்டாவது.
௧௮. காலன். காலக்கடவுள்.

பலகால்=பலவட்டம், பலமுறை.
தேர்க்கால், சகடக்கால்.
கால்+து=காற்று. து, விகுதி.
பந்தற்கால். கால்=தூண்.
கால்—காலி=கள். உள்ளிருந்து கசிவது.
"அங்கான்" முலையினரும்பால் (சி—மணி)
கால்=முலைக்கண்.
கால்வாய். மூங்கிற்குழலாலாவது.

மலையூற்றிலிருந்து மூங்கில்களை ஒன்றோடொன்று பொருத்தி அரண்மனை முதலியவற்றுக்கு நீர்கொண்டு வந்தமையின் கால்வாய் எனப்பெயர் வந்தது. வாய்=வாய்ப்பச்செய்வது. இங்ஙனம் சீனதேயத்தாரும் செய்வார். நீலகிரித்தொதவர்களும் ஓர்சார் இங்ஙனமே செய்வார்.

கால்=வேர். கான்மரம்=ஆலமரம். விழுதுவிடுவது.
கால்=முளை. தோட்டக்கால்=தோட்டப்பயிர்.
கால்=கூர்மை, கால்—கலுழன்=கருடன், கூர்ந்து பார்ப்பது.
கூரிய மூக்குடையது.
கால்=பிள்ளை. கான்முளை=மகவு. உ—பதம்.
கால்=முளை, கால்—காலை=உதயம். சூரியன் முளைப்பது.

கால்=கூர்மை. கால்—காரை=ஓர் முட்செடி. கூரிய முள் ளுடையது.

கால்—காளம்=சூலம். கூரியது.

கால்=முளை. காலி=பசு. ஈனுவது.

## உ. இல்=இசை. வேய்ங்குழலி லுண்டாவது.

"கிலுகிலுப்பை=கற்பறை

கிலுக்கு=இசை.

"கிலுக்குத்தடி

கிரி=மூங்கில். (ஆ—ரி)

## ௩. பல்=இசை. வேய்ங்குழலி லுண்டாவது.

"பல்லியம்=வாச்சியம். உ—பதம்.

பள்=இசை.

"பள்ளு=ஓர்பாட்டு.

பள்ளர்=இசைபாடியுழுவோர்.

"மல்லர்= " "

பண்=இசை.—பன்—பண்.

"பாண்—பாணி=இசை.

மண்=மார்ச்சனை. இசைதருவது. பண்—மண்.

மணி=கைம்மணி. முதலியனவாம்.

கணுவுடைமை, திரிகணுவுடைமை, கூட்டுறவுடைமை, பிரிவு டைமை, உட்டுளையுடைமை, நீட்சியுடைமை, ஒழுங்குடைமை, கணுத்தொறும்வேருடைமை, முதலிய இலக்கணங்கள் மூங்கிலின் கண்ணே தெளிவுபடக் கண்கூடாக இருக்கின்றமையின்; கூட்டுற வுடைமையி னிலக்கணம் இத்தன்மைத்து; பிரிவுடைமையினிலக்க ணம் இத்தன்மைத்து; நீட்சியுடைமையினிலக்கணம் இத்தன்

மைத்து' எனச் சிறுவர்களுக்கும் தெளிவுபடக் கண்கூடாகக் கற்பித்தல் கூடும். இங்ஙனம் கற்பித்தலே மிகச் சிறப்புடையதாகும். காண்டலளவைதான் புலவர்தம் அறிவினையும் உறுதி செயற்பாலது. எல்லாம் பின்னர் விளக்கப்படும்.

---

விளக்கம்

கருஎ. **சுண்டா = நடு**

சுண்டாவென்னுஞ் சொல் நடுவென்னும் பொருளை எவ்வாறுணர்த்தியதெனின், சுண்டாவென்பது சுள்ளினின் றுண்டாவது; சுள் சுல்லினின்றுண்டாவது; அச்சுல்லென்பது சூரியனுலுண்டாவது. சூரியன் கோள்களுக்கெல்லாம் நடு நிற்றலின் அவன் சொல்லிற் பிறந்த சுண்டாவென்னுஞ் சொல்லும் நடுவென்னும் பொருளை யுணர்த்திற்று.

சூரியனடுநிற்றலுன் அச்சொல்லும் நடுவினை யுணர்த்திற்று. பொருளினுள்ளது சொல்லினு முள்ளது. இயையுண்மையின்.

அரி = நெருப்பு.

அரியென்னுஞ் சொல் நெருப்பென்னும் பொருளை யெவ்வாறுணர்த்திய தெனின், அரியென்பது மூங்கில். மூங்கில் ஒன்றோடொன்று உரையுங்கால் நெருப்புண்டாதலின் மூங்கிலை யுணர்த்தும் அரியென்னும் சொல்லும் நெருப்பினை யுணர்த்திற்று. மூங்கிலில் நெருப்புண்மையின் அச்சொல்லும் நெருப்பினை யுணர்த்திற்று.

கால் = முளை.

காலென்னுஞ்சொல் எவ்வாறு முளையை யுணர்த்தியதெனின், மூங்கிற்கணுக்கடோறு முளையுண்டாகின்றமையின் மூங்கிலினியைபுடைச்சொல்லாகிய காலென்பதும் முளையையுணர்த்திற்று.

பொருட்கண் உள்ளதெது! அது அச்சொல்லினு முள்ளது. இங்ஙனம் சொற்கள் பொருளுணர்த்தல் காண்க. பிறவு மன்ன.

## கஙஅ. சூரியன் சொல்லிற்பிறப்பன

வட்டம் திரட்சி முதலியவற்றின் பெயர், கடலின் பெயர், நடுவின் பெயர், வருணத்தின் பெயர், சித்திரத்தின் பெயர், திக்கின் பெயர், தெற்கின் பெயர், நாளின் பெயர், காலத்தின் பெயர் முதலியனவாம். உ—ம்.

க. சுல்=சூரியன்; சுலா=திரட்சி. சுள்—சுழி=வட்டம்.
சுள்=சூளி—சூழி=கடல். வட்டமுடையது.
சுள்—சூளி=குடுமி. உச்சியிலுள்ளது. நடுவிலுள்ளதென்பது.
சூளி—சூழி=நடு, உச்சி, உச்சிக்கொண்டை.
உ. பகல்=சூரியன், நடு. பிரமம்=சூரியன், நடு
ந. எல்=(சூரியன்)—எழில்=வருணம், நிறம்.
எல்=எழுத்து—எழுத்து=சித்திரம். சூரியனிடத்திலுள்ள [ஐந்து நிறத்தாலாவது.
எழுத்துப்புடவை=சித்திரப்புடவை.
ச. கோ=சூரியன், திசை. சூரியனுலறிவது.
ரு. எல்=சூரியன் நாள். சூரியனுலாவது.
சு. எல்லே=சூரியன், நாள்
எ. எல்—எல்லை=நாள். பீயு=சூரியன், காலம்.
"சுலாமாலே=திரண்டமாலே,
"சுலாவெ"ண்குழையானை" சுலா=திரட்சி.

வட்டமுதலியன சூரியன் சொல்லிற் பிறந்தமை காண்க. சூரியன், கோள்களுக்கு நடுற்றலின் சூரியன் சொல்லில் நடுவின்பெயர் பிறந்தன.

தெற்கின்பெயர் பின்னர் விளக்கப்படும்.

## கஙசு. கடலின் சொல்லிற் பிறப்பன.

ஆழத்தின் பெயர், அகலத்தின் பெயர், பரத்தலின்பெயர் முதலியனவாம். உ—ம்.

க. ஆலம்=(கடல்)—ஆளம்—ஆழம்.
ஆழம்—அழுந்து—அழுந்தல்.
ஆலம்—அகலம்—அகலல்.

உ. பரவை—பரவல்.
பரவை=கடல்.

கடல்போல ஆழமுடையதும் அகலமுடையதுமாய மற்றோர் நீர்நிலையில்லாமையின் ஆழத்தின் பெயர் முதலியன கடலின் சொல்லிற் பிறந்தன.

## ௧௪௦. நீரின் சொல்லிற் பிறப்பன

குளிர்ச்சியின்பெயர், தணிதலின்பெயர், ஆற்றின்பெயர், மணலின்பெயர் பனிக்கட்டியின்பெயர், சேற்றின்பெயர், தாமரையின்பெயர், மரக்கலத்தின்பெயர், அளவின்பெயர், சமானத்தின்பெயர், உவமையின்பெயர், முதலியனவாம். உ—ம்

௧. குளம்—குளிர்—குளிர்ச்சி. குளம்—குளுமை.
குளம்—குளுப்பை=சீதளநோய்.
௨. நீரம்—ஈரம்=குளிர்ச்சி.
௩. பாணி—பனி=குளிர்ச்சி. பாணி=நீர்.
௪. அறல்—ஆறல்=தணிதல். அறல்=நீர்.
௫. புனல்=நீர், ஆறு.
௬. ஓதம்—ஓடம்=படகு. நீரிற்செல்லுவது.
ஓடம்—ஓணம்=ஆறு. ஓதம்=நீர்.
ஓதம்—ஓடம்—ஓணம்.
௭. அறல்=நீர், கருமணல்.
௮. தோயம்=நீர், பனிக்கட்டி.
௯. தோணி=நீர், சேறு.
௧௦. அம்பு—அம்பி=மரக்கலம். நீரிலோடுவது. அம்பு=நீர்.
௧௧. தோணி=நீர், மரக்கலம்.
௧௨. வனசம், அம்புசம்=தாமரை.
நீரிலுண்டாவது. வனம்=நீர்.
௧௩. ஆலம்—அலகு=அளவு.
ஆலம்—அலவி= ,,
ஆலம்—அளவு. நீர்மட்டம்போற் சமமாக இருப்பது.
௧௪. கமம்—சமம்—சமானம். நீர்மட்டம்போன்றிருப்பது.
கம்—கமம். கம்=நீர்.

கரு. ஓதம்—ஒத்தல்=சமமாதல்

கசு. நீர்—நேர்—நேர=ஒப்ப.

நீர்—நிகர்—நிகர்க்க=,,

நீரின் சொல்லிற் குளிர்ச்சியின் பெயர் முதலியன பிறந்தமை காண்க.

ஓதம்—ஓடம்—ஓணம்

கம்—கமம்—சமம். கமம்=நிறைவு

ஓதம் ஓடமெனத்திரிந்து படகினையுணர்த்திற்று. ஓடம் ஓணமெனத்திரிந்து ஓதத்தினியை பாகிய ஆற்றை யுணர்த்திற்று. இது தவளைப் பாய்த்தென்னு மிலக்கணம்.

## கசக. பூமியின் சொல்லிற் பிறப்பன

பொறுத்தலின்பெயர், நிலைபேற்றின்பெயர் முதலியனவாம்.

உ—ம்

க. பொறை—பொறுத்தல். பொறை=பூமி

உ. தாலம்—தாளல். தாலம்=பூமி.

ங. நிலம்—நிலை—நிலைத்தல். நில்நிலையுமாம். நில்=ஒளி

## கசஉ. மூங்கிலின் சொல்லிற் பிறப்பன

கூட்டுறவை யுணர்த்தும் பெயர், கிட்டலின்பெயர், சார்தலின் பெயர் முதலியனவாம்

மூங்கிலின்கணு உறுதியாய பொருத்துடைத்தாதலின் கூட்டுறவை யுணர்த்தும் பெயர் முதலியன அச்சொல்லிற் பிறப்பனவாம்.

உ—ம்

க. தோல்—தொறு=கூட்டம். தோல்=மூங்கில்.

தோல்—துன்—துன்னல்=கிட்டல், நெருங்கல்.

உ. நால்—நாட்பு—ஞாட்பு=கூட்டம்.

ங. நால்—நள்—நளி=கூட்டம், செறிவு.

ச. நள்—நள்ளி=உறவு. நள்—நட்பு.

ரு. நள்—நண்—நண்பு. நண்—நண்ணல்—நண்ணுதல்.

சு. நண்ணுதல்—அண்ணுதல்=சார்தல்.

எ. நண்—நணுகல்=கிட்டல், சார்தல்.

அ. நண்—நணிமை=அருகு.

"வான நணியதுடைத்து"

பொருந்தல், கிட்டல், நட்டல், நெருங்கல், மூட்டல், சேர்தல் சார்தல், உறவாடல் முதலியனவெல்லாம் கூட்டுறவிலடங்கும்.

மூங்கிலின்கணுவெனினும் சந்தி யெனினும் பொருத்தெனினுமொக்கும்.

மூங்கிலின் கணுப்பொருத்து, மிகவலிவுடையதாய்ப் பிரித்தற் கரிதாயுள்ளது.

நால்—நள்—நட்பு=நேசம், உறவு, சுற்றம்.

நட்பாவது இருவர்கூடிமகிழ்வது.

அக்கூட்டம் மூங்கிற்கணுப்போல உறுதியாய்ப் பிரித்தற்கரிதாயுள்ள பொருத்தமாகலின் மூங்கிலையுணர்த்தும் நாலென்பது நள்—நட்பென்றுப் அக்கூட்டத்தை யுணர்த்திற்று.

நாலென்பது மூங்கிற்பொருளில் சுப்பிரமண்ணிய வைத்திய வெண்பாவில் ஊறுகாய் வகையில் வருகின்றது. "நாலின் குருந்த நறுக்கிய துண்டுகள்" தோல்=மூங்கில் ———————— (மலை—அ)

கசரு. மூங்கிலின்கணு அடி முதல் நுனி வரை பிரிந்து பிரிந்து காட்டலால் பிரிவினையுணர்த்தும் பெயரும், நீங்கலின் பெயரும், தீர்தலின் பெயரும், பங்கின் பெயரும்; புதர் வட்டித்திருத்தலால் வட்டத்தை யுணர்த்தும் பெயரும்; உட்டுளை பெற்றிருத்தலால் உட்டுளையின் பெயரும், துளைத்தலின் பெயரும், யானை தும்பி கள் தேன் முதலியவற்றின் பெயரும், இசையின் பெயரும், நாவின் பெயரும், பண்ணின் பெயரும், வாச்சிய முதலியவற்றின் பெயரும் அம் மூங்கிற் சொல்லிற் பிறப்பனவாம். உ—ம்.

க. வரை—வரைதல்=நீங்கல், வரை=மூங்கில்.

உ. கண்—கட்சி=பிரிவு. கண்=மூங்கில்

ந. கண்—காணம்=பிரிவு. மாகாணம்=பெரும்பிரிவு

ச. கண்—கணு=பிரிவு. ———————— (திருமந்திரம்)

ரு. கண்—கணம்=வட்டம், திரட்சி, கண்=மூங்கில்.

(க) உட்டுளையின் பெயர்

க. அரி=மூங்கில், உட்டுளை.

உ. நால்=(மூங்கில்)—நாளம்=உட்டுளை.

ங. நாளம்—நாளி—நாழி=உட்டுளை.

ச. வேய்=மூங்கில், உட்டுளை.

ரு. வேணு=மூங்கில், உட்டுளை.

சு. துளை=மூங்கில், தோரம்.

துளைத்தல்=தோரமிடல்

துளை வாயிலுமாம். தோரமுடையதென்பது. மூங்கிலினுட்டுளை யியற்கை. அது நோக்கிச்செயற்கை யுண்டாயிற்று.

(உ) யானை தும்பி முதலியவற்றின் பெயர்.

க. ஆம்பல்=மூங்கில், யானை, மூங்கில் போலுந்துளைக் [கையுடையது

உ. ஓங்கல்=மூங்கில், யானை. ,,

ங. தோல்=மூங்கில், யானை. ,,

ச. ஓங்கல்—உம்பல்=யானை. ,,

ரு. வேழம்=மூங்கில், யானை. ,,

சு. தூம்பு—தும்பி=ஓர் வண்டு, ,,

தூம்பு=மூங்கில், உட்டுளை

எ. அரி=மூங்கில், வண்டு. ,,

உட்டுளை செய்வது; உட்டுளையில் வசிப்பது; உட்டுளையுடைய மூக்குடையது. பூவினுட்டேனை யுண்ணுவது எனப்பல பொருள் படும்.

(ங) கள்ளின் பெயர்

க. அரி=மூங்கில், உட்டுளை, கள். உள்ளிருந்து கசி [வது

உ. ஆம்பல்=மூங்கில், கள். ,,

ங. நாளம்—நாளி—ஞாளி=கள். ,,

ச. தூம்பு=மூங்கில், உட்டுளை. ,,

தூம்பு—தும்பி=கள். ,,

ரு. நால்—நலே=கள். நால்=மூங்கில். ,,

(ச) இசை முதலியவற்றின் பெயர்

க. நால்—நரம்பு:—

க. நாடி உட்டுளையுடையது

உ. யாழ்நரம்பு. நரம்பு போல்வது

௩. இசை. யாழ்நரம்பிலுண்டாவது

உ. ஆம்பல்=மூங்கில், இசைக்குழல், பண்.

௩. கிளை=மூங்கில், ஓர்பண்.

ச. நால்—மூங்கில்=நாக்கு. இனிதிசைப்பது

ரு. நால்—நாலு=நாக்கு నాలు

சு. நால்—நாலிகம்=,, నాలిక

எ. நால்—நாலுகம்=,, నాలుక

வேய்ங்குழல் போலினிதுரைப்பதென்பது.

அ. நால்—நா—நாவு. நா—நாக்கு.

நா=நாக்கு, நடு, மிடற்றுள் நாப்போல்வது, வாயுள் நாப்போல்வதுமாம்.

நால்—நள்=நடு. நால்=நாக்கு. வாயுள்நாக்குப்போல்வது.

நள்ளிருள்; நண்பகல்.

நள்—நடு—நடுவு.

கூ. அரி=மூங்கில், உட்டுளை.

அரியம்=வாச்சியம். உட்டுளையால் இசைதருவது.

வேய்ங்குழலுமாம்.

கசச. மூங்கில் நீண்டிருத்தலால் நெடுமை யுணர்த்தும் பெயரும், அதுவே தூரமாயிருத்தலால் தூரத்தையுணர்த்தும்பெயரும், அதுவேயுயர்ச்சியாயிருத்தலால் உயர்ச்சியையுணர்த்தும்பெயரும், அதன்போத்து ஒழுங்குபெற்றிருத்தலால் ஒழுங்கு, ஒழுக்கம் நேர் முதலியவற்றின் பெயரும், தன் இனமாதலால் கரும்பு சோளம் பிரம்பு நாணல் கொறுக்கை நெல் புல் தென்னை பனை கமுகு ஈந்து

முதலியவற்றின் பெயரும், அவற்றின் ஒலி முதலியவற்றின் பெயரும், உரையும்போது நெருப்புப் பிறத்தலால் நெருப்பின்பெயரும், தீப்பொறியின் பெயரும், வெப்பத்தின் பெயரும், நெருப்பின்பின் சாம்பலுண்டாதலால் சாம்பல் முதலியவற்றின்பெயரும், நெருங்கியிருத்தலால் நெருக்கத்தின் பெயரும், பசுமை சிறந்திருத்தலால் பசுமையின்பெயரும், வன்மையும் வளையுந்தன்மையு முடைமையின் வில்லின் பெயரும் அம்மூங்கிற் சொல்லிற் பிறப்பனவாம்.

உ—ம்.

க. நெல்—நேர்—நேர்பு=நீளம்.
உ. நெல்—நீள்—நீளம். நீள்—நீட்சி.
நீளம்—நிகளம்=நீட்சி. நெல்=மூங்கில்.
ங. நெடு—நெடில். நெடு—நெட்டை.
நெடு—நெடுமை. நெடு=மூங்கில்.
ச. நெல்—நீள்—நீளம்=நீட்சி, தூரம்.
நீள்—நீடு—நீடல். நெடு—நெடுவல்.
ரு. ஓங்கல்=மூங்கில், உயர்ச்சி.
ஓங்கல்—உம்பல்=எழுச்சி.
உம்பல்—உம்பர்=உயர்ச்சி.
சு. நெல்—நேர்=ஒழுங்கு. மூங்கிற் போத்துப்போல்வது.

(க) கரும்பு முதலியவற்றின் பெயர்

க. கண்—கன்னல்=கரும்பு. கண்=மூங்கில். மூங்கிலினமென்பது
உ. கழை=மூங்கில், கரும்பு. ,,
ங. காம்பு—கரும்பு. ,,
ச. வேணு=மூங்கில், கரும்பு.
ரு. கீசகம்=மூங்கில், கரும்பு.
சு. வேல்—வேலை=கரும்பு. வேல்=மூங்கில்.
எ. வேழம்=மூங்கில், கரும்பு, கொறுக்கை.
அ. சந்தி—சாதி=பிரம்பு. சந்தி=மூங்கில்.
கூ. சொல்—சோளம். சொல்=நெல்.
க0. சரம்=மூங்கில், நாணல்.

௧௧. புல்=மூங்கில், புல். மூங்கிலினமென்பது.

புல்=மூங்கில், பனை.

புல்லாங்குழல்=வேய்ங்குழல்.

௧௨. பணை—பனை. பணை—பெணை—பெண்ணை.

௧௩. நால்—நாலி—நாளி=தென்னை

௧௪. கண்—கனல்=தீ, கண்=மூங்கில்

௧௫. அரி=மூங்கில், தீ. மூங்கிலிலுண்டாவது

௧௬. நெல்—நெருப்பு. நெல்=மூங்கில்.

௧௭. காம்பு—சாம்பல். மூங்கிற்சாம்பலென்பது

(உ) நெருக்க முதலியவற்றின் பெயர்.

௧. அரி=மூங்கில், நெருக்கம். மூங்கிற்புதர் போல்வது.

௨. கண்—கனை=நெருக்கம்

௩. நால்—நளி=நெருக்கம்

௪. நளி—நனி=நெருக்கம்

௫. கிளை=கிளைத்தல்=நெருங்கல்

௬. வேணு=மூங்கில், வில். மூங்கிலாலாவது.

௭. பாசு=பசுமை. மூங்கினிறமென்பது.

மூங்கில் நெருங்கி வளர்தலின் நெருக்கத்தின் பெயர் அதிற்பிறந்தன.

௧௪௫. மூங்கிலின் கணுக்களில் வேருண்டாதலால் வேரின்பெயரும், வேரின்பின் முளையுண்டாதலால் முளையின் பெயரும், முளைவெள்ளிதும் புதுவதுமாதலால் வெண்மையின் பெயரும், புதுமையின் பெயரும், அம்முளை கூர்மையும் நுண்மையும் பெற்றிருத்தலால் கூர்மையின்பெயரும் நுண்மையின்பெயரும், முளைசிறுத்திருத்தலால்சிறுமையின்பெயரும் குறுமையின்பெயரும், முளைஉள்ளிருந்து வெளிப்படலால் வெளிப்படலின் பெயரும், பிறத்தல் தோன்றல் உண்டாதல் முதலியனவும் வெளிப்படலாதலால் பிறத்தல் முதலியவற்றின்பெயரும், உடல் உறுப்பு தோல் முதலியனவும் தோற்றத்தாலாதலின் உடன்முதலியவற்றின்பெயரும், உள்ள் பிள்ளைமுத

வியவற்றின்பெயரும், முளையினின்று வளர்ச்சிதோன்றலால் வளர்தல் முவலியவற்றின்பெயரும், அம்மூங்கிற் சொல்லிற் பிறப்பனவாம். உ—ம்.

க. வேல்—வேர். மூங்கிலின்கணுவி லுண்டாவது.

உ. கால்=வேர். கான்மரம்=ஆலமரம்,

ந. தோல்=வேர். தோன்மரம்=ஆலமரம்.

விழுது விடுகின்ற மரமென்பது.

விழுது=வேர். கீழ்நோக்குகின்றமையின் வேராயிற்று. கீழ்நோக்குவது வேர். மேனோக்குவது முளை. வேர்முன்னும் முளை அதன் பின்னுமுண்டாகும்.

நென் முதலிய விதையில் முன்னுண்டாவது வேர். கிழங்கெல்லாம் வேராம். பச்சை மூங்கிலை நீர்ச்சார்பிற் புதைத்து வைக்கின் கணுக்கடோறும் வேரிறங்கிப்போத்துவிடும். வைக்கோற் புரி சுற்றி நீர் விட்டுக்கொண்டு வரினும் கணுவிற் போத்துவிடும். அலரி, கொம்புக்கள்ளி, அறுகு, கானுங்கீரை, பொன்னுங்கண்ணி முதலியனவும் கணுக்கடோறும் வேர் விடும்.

(க) முளையின் பெயர்

க. கால்=வேர், முளை.

உ. முளை=மூங்கில், அங்குரம்.

ந. கால்—காலி=கற்று. காலிமாடு.

ச. பல்=வேர், முளை.

பல்—பளு—பளுமரம்—பழுமரம்=ஆலமரம்.விழுது [விடுவது.

பல்—பாலி=முளை

பாலிப்பாய்=படுக்கைப்பாய். கருக்கொள்ளற்கிடமாவது.

பாலி நிலம்=விளைநிலம்.

பாலிகை=முளை, முளைக்கலம்.

முளைப்பாலிகை, கால் பல் என்பன மூங்கிலினியையுடைச் சொல்,

(2) வெண்மையின் பெயர்.

க. குரு=முளை. வேர்க்குரு. வேர்வையாலுண்டாவது.
குருநோய்=அம்மை நோய்

உ. குரு—குருகு=வெண்மை. முளை நிறமென்பது.
குரு—குருத்து=முளை, இளமை, வெண்மை.
குருத்துக்குழந்தை=இளங்குழந்தை

ங. நால்=மூங்கில், முளை. நால்—நரை=வெண்மை.

புதுமையின் பெயர்.

க. கால்=வேர், முளை. கால்—கலி=எழுச்சி. முளையி
[னின்றுண்டாவது

கலி—களி—கழி=மிகுதி. எழுச்சியாலாவது.

உ. களி—கடி=புதுமை.
கால்—கலி—களி—கழி. களி—கடி=புதுமை.
கடியென்பது முளையினியைபுடையது.
முளை கணுவினியைபுடையது.
கணு மூங்கிலினியைபுடையது.

மூங்கிலினின்றுண்டாய முளை முன்னர்க்காணுதனொன்றாக லின் புதுமையாயிற்று.

(ங) கூர்மையின் பெயர்.

க. கால்—காலம்=தூண்டின்முள். கூரியது என்பது.
(ஆந்திர தீபிகை)

கால்=முளை, கூர்மை.

உ. கால்—கார்=கூர்மை, அச்சம்.

ங. கார்—காரி=கண்டங்கத்தரி. கூரியமுள் மிக்கது.

ச. கார்—காரை=ஓர்முட்செடி.

முளை வரவர நுணுகிக்கூர்மை பெற்றிருத்தலின் கூர்மையை யுணர்த்திற்று. கூர்மையின் பெயரெல்லாம் இங்ஙனமேவரும். கூர் மையே நுண்மையுமாம்.

(௪) சிறுமையின் பெயர்.

க. கால்—கன்று=சிறுமை. கால்=முளை

௨. கால்—கன்னி=சிறுமை. கன்னிக்கால்=சிறுகால்.

௩. நால்—நல்கூரல்=சிறுமைமிகல். நால்=முளை முளைபோற் சிறிதென்பது

(௫) வெளிப்படல் முதலியவற்றின்பெயர்.

க. உரு—உருத்தல்=முளைத்தல், தோற்றல். உரு=முளை. குரு—உரு

௨. தோல்—தோற்றம்=முளைத்தல், பிறத்தல். தோல் [மூங்கில்.

௩. நால்—நாறு=முளை. மூங்கிற்கணுவிலுண்டாவதென் [பது

நாறு—நாறல்=முளைத்தல், தோன்றல்.

௪. முளை=மூங்கில், அங்குரம். மூங்கிற்கணுவிலுண்டா [வது

முளை—முளைத்தல்=அங்குரித்தல், தோன்றல், பிறத் [தல்.

(௬) உடல் உறுப்பு முதலியவற்றின் பெயர்.

க. உரு=முளை, உடல். கருவில்முளைப்பதென்பது.

௨. குரம்—குரம்பை=உடல். ,,

குரம்=முளை. பை—விகுதி.

குரம் மூங்கிலியையுடைச் சொல்லாம்.

௩. கிளை=மூங்கில், கரு, முட்டை, பூவரும்பு, உறுப்பு, மரக்கிளை. மூங்கிற்கணுவில் முளையுண்டாவது போல் வதென்பது.

(௭) தோல்மயிர் முதலியவற்றின் பெயர்.

க. தோல்=மூங்கில், தோல். உடம்பில் முளைப்பது.

௨. குரம்—குரல்=இறகு, பயிர்க்கதிர், பெண்மயிர். முளைப்பதென்பது.

௩. குரல்—கூரல்=இறகு, பெண்மயிர்.

௪ கால்—கரு=சினை. முளைப்பதென்பது. கருப்பொருள்.
கால்=முளை.

(அ) ஊர் முதலியவற்றின் பெயர்.

க. உரு—ஊர்=பாக்கம். பயிரிடப்படுவது.
உரு=முளை.

உ. முளை=மூங்கில், அங்குரம், பிள்ளை.
கான்முளை=பிள்ளை. (உ—பதம்)
முளையான்=இளைஞன்

௩. கால்—கன்னி=இளமை. கால்=முளை.

௪. குரம்=குருகு=இளமை. குரம்=முளை.

௫. நால்—நாற்சி—ஞாற்சி= வளர்ச்சி.
நால்=முளை.

"புறக்காழனவே புல்லெனமொழிப
அகக்காழனவே மரமெனமொழிப"
"தோடே மடலே யோலை யென்றா
ஏடே யிதழே பாளை யென்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடுவருமெனச் சொல்லினர் புலவர்"

என்ற தொல்காப்பிய சூத்திரத்தாலும் தென்னை பனை முதலியன மூங்கிலினமென்பது பெறும்.

புல்=மூங்கில். புல்—போல்=மூங்கில் — (மலை—அ)
மரம் சிவந்து வயிரங்கொண்டது என்பது
மரவு=மரம் "மரவு சேர் கடவூரின் மயானத்தார்" (அ—தே)

மரம்=சிவப்பு. மரவட்டை. மரம்+அட்டை, சிவந்தவரியுடைய அட்டை யென்பது.

மரவை=செவ்வயிரத்தாற் செய்யப்பட்ட கலம்.

மூங்கில்போல் புரையில்லாமல் முழுக்கவும் செவ்வயிரங் கொண்டமையின் மரம் அகக்காழாயிற்று.

புரை = உட்டுளை

புரை — போரை ,,

"புல்லிலைத் தெங்கினூடு" (திருவாய்மொழி)

புல் = மூங்கில்.

"கண்ணார்கமுகு பவளம் பழுக்குங்கலிக்காழி" (ச-தே)

கண் = மூங்கில், மூங்கிலினமென்பது.

உலகத்துள்ள தாவரவகைகள், நெடுக்கு நரம்புள்ளவை குறுக்கு நரம்புள்ளவை யென இருவகைப்படும். மூங்கிலிலே நெடுக்கு நரம்புள்ளது. தென்னோலை பனைவோலை முதலியனவும் அன்னவாகலின் மூங்கிலினமாயின.

ஆல் அரசு முதலியவற்றினிலைகள் குறுக்கு நரம்புள்ளவை. நீரின்கணுள்ள பாசியும் இவ்விருவகையுளடங்கும்.

கசசா கரும்பின் சொல்லிற் பிறப்பன.

வெல்லத்தின் பெயர், சருக்கரையின் பெயர்,

கருவத்தின் பெயர். உ—ம்.

க. வேலம் = கரும்பு. வேலம் — வெல்லம்.

கருப்பஞ்சாற்றாலாயதென்பது.

வேலம் — வேலை = கரும்பு.

ஐகாரவீற்றுச்சொற்கள் பிற்காலத்தனவாம்.

உ. அங்காரம் — அக்காரம் = சருக்கரை.

அங்காரம் = கரும்பு.

ந. கன்னல் = கரும்பு, சருக்கரை.

ச. செருக்கென்பது கரும்பையும் கருவத்தையும் உணர்த்தி நிற்கும். கரும்புபோல் நிமிர்ந்திருப்பதென்பது. செருக்கு தருக்காயிற்று. தருக்கு தன்காயிற்று.

செருக்கு = கரும்பு. செருகிப்பயிர் செய்வது. (தெலுங்கு.)

கசஎ. கூர்மைச்சொல்லிற் பிறப்பன.

முள்ளின் பெயர், கத்தியின் பெயர், படையின் பெயர்.

உ—ம்.

க. கால்=கூர்மை. கால்—கன்=கூர்மை.
கன்—கன்னி=ஓர் முட்செடி.
கன்—கடு=முள்.

உ. சூர்—சூரி=கத்தி. கூரியது.
சூர்=கூர்மை.

ங. கால்—கருவி=படை. கூரியது.
கால்=கூர்மை.

கசஅ அம்பின் சொல்லிலும், வில்லின் சொல்லிலும் பிறப்பன.

அச்சத்தின் பெயர், கொலையின் பெயர்,
போரின் பெயர், விரைவின் பெயர்,
வெற்றியின் பெயர், அடையாளத்தின் பெயர், குற்றத்தின் பெயர்.

உ—ம்.

க. அம்பு—அடுப்பு=அச்சம். அம்பினுலுண்டாவதென்பது.
உ. சரம்—விசரம்=கொலை. சஞ்சரம்=கொலை.
ங. கோல்—கொலை. அம்பினலாவது.
கோல்=அம்பு.
ச. கோல்—குறி=அடையாளம்.
ரு. கோல்—குற்றம்=பழி

அம்பு தைத்த வடிவு முன்புறத்ததாயின் அடையாளமும், பின்புறத்ததாயின் குற்றமுமாம்.

சு. காண்டம்—சண்டை=போர். காண்டம்=அம்பு.
எ. வில்—விறல்=வெற்றி. வில்லாலாவது.
அ. வில்—விரைவு. வில்லிலெய்யும் அம்புபோற் செல்வதென்பது.

கருமைச்சொல்லிற் பிறப்பன.

இருளின் பெயர், இராவின் பெயர், நஞ்சின் பெயர், மாசின் பெயர்.

உ—ம்.

க. கருள்=கருமை, இருள்.
உ. கங்குல்=இருள், இரா.
ங. நீலம்=கருமை, நஞ்சு.
ச. களங்கம்=கருமை, மாசு.

கசகூ. தமாலச்சொல்லிற் பிறப்பன.

வாசனையின் பெயர், குங்கும முதலியவற்றின் பெயர்.

தமாலமென்பது பச்சிலை. இது மணமுள்ளதாகலின் மணமுள்ளவையெல்லாம் இச்சொல்லிற் பிறக்கும்.

உ—ம்.

க. தமாலம்=பச்சிலை

உ. தமாலம்—மாலம்=குங்குமம். ஓர் வகை மணமுள்ளது.

ங. மாலம்—மலம்=கற்பூரம் ,,

ச. மாலம்—மளம்=வாசனை. பரிமளம்=மிக்கவாசனை.

ரு. மளம்—மணம்=வாசனை.

சா. மணம்—மணங்கு=இருவாட்சி. ,,

எ. தமாலம்—மாதலம்=மாதளை. ,, நிலைமாறிற்று

அ. தமாலம்—மதாலம்=கொன்றை. ,,

கூ. மதாலம்—மதலை ,, ,,

இலக்கணவியல் முற்றுப்பெற்றது.



# மொழிநூல்

## முதனிலையியல்.

### நேரிசையாசிரியப்பா.

தமிழ்க்கே நாளுந் தவஞ்செய்து செய்துந
தமிழ்தெனை வுண்ணூறு மரும்புல வீர்காள்
ஒவ்வோர் சொல்லின் ஒளிர்முத னிலையைச்
செவ்வன மோரிற் றிகழுமக் காரணம்
வரையினைக் கல்வி மணிபெற வெளிதாம்
உரையினைக் கல்வி யுணர்வதோ வரிதே
மற்றது கல்லின் வறப்பினும் வறக்கும்
சொற்றொறுங் காரணந் தோன்று இருக்கில.
கல்லினை வல்லே கல்லுத லாகும்
சொல்லினைக்கல்லப் பல்லவா நாள்கள்
பல்ல வாயினும் படுபயன்
எல்லை யில்லவா மின்பமும் பெரிதே

## மொழிநூல்

# முதனிலையியல்.

(௧) *சு

சுல்=சூரியன், வட்டம், திரட்சி, வெப்பம், நிறம், உதயம் ஒளி, நடு, முதலியன.

சுலீல்—சுரீர்—சுரீரெனல்,

(௨) சு

சுய்=சுய்யெனல்

சொய்=சொய்யெனல்

(௩) சுல்

சுரு=வெப்பம். சூரியனிடத்துள்ளது.

சுருகு=வெப்பம். ———— (ஆ—நீ)

சுருக்கு:—

௧. வெப்பம்

௨. கோபம்

௩. விரைவு

சுருக்கெனல்.

சுறுக்கெனல்.

நீர்ச்சுருக்கு.

தேள் சுருக்கெனக் கொட்டிற்று.

சுருக்கில் வருக=விரைவில் வருக.

அஃதாவது சுடு மணலில் வருவது போல் வருக என்பது. சூரியன் கதிர்கள் விரைவது போல விரைந்து வருக எனலும் பொருந்தும்.

---

* இயற்கைப்பொருளோசை.

(௪) **சுல்**

சுலா=வட்டம், திரட்சி, சூரியனிடத்துள்ளது.

"சோதிச்சுலா வெண்குழையானை" (அ—தே—ந—தி)

"சுலாவாய தொன்னெறியே யென்றேனனே" (அ—தே)

சுலவு=வட்டம்

சுலவல்=சூழ்தல்

சுலாவல்=சூழ்தல். வளைவது

"சுலவு மாமதிலும்" (ச—தே. திருத்தண்டலை நீணெறி)

(௫) **சுல்**

சுல்லு=வெள்ளி. வெண்ணிறமுடையது.

சுல்லம்:—

க. செம்பு. சிவந்தது.

உ. கயிறு. முறுக்குவது. வட்டிப்பது.

சூரியனிடத்தில் ஐவகை நிறமுமுண்டு.

(௬) **சுல்**

சுலுப்பு=மரக்கலம். வளைவானது, சுற்றுவது.

சுலுகம்=கலகம். புழுக்கம் செய்வது.

(௭) **சுல்**

சுன்:—

க. வட்டம். சூரியன் போல்வது

உ. விந்து.

௩. வெண்மை. சூரியனிடத்துள்ளது

௪. சனி. சௌரி யென்பது.

சுல்—சுரா=சனி. ——— (சோதிடவழக்கு)

(௮) **சுன்**

சுன்னம்=சுழி; விந்து;

சுன்னுக்கட்டி=திரட்டுப்பாற்கட்டி.

(௯) **சுல்**

சுல்லி:—

க. அடுப்பு. வெப்பமுள்ளது.

உ. மடைப்பள்ளி

ங. புகைத்தூம்பு.

"சுள்ளி=அடுப்பு. (பாளி)

சுலிகை=அடுப்பு.

(க௦) **சுல்**

சூலை=ஓர் நோய். வெப்பத்தாலாவது.

(கக) **சுல்**

சொலிப்பு=ஒளிர்வு. சூரியனிடத்துள்ளது.

சுல்—சுளுக்கு—சுளுக்கல்=நரம்பு திரும்புவது.

சுல்—சுறு=கருகுதலாலுண்டாகிய மணம்

"கூறுமங்கையர் நறுங்கூந்தலின் சுறு" ———(க—ரு)

(கஉ) **சுல்**

சுரம்:—

க. காய்ச்சல். வெப்பஞ்செய்வது.

உ. பாலைநிலம். சுடுவது

ங. அருநெறி.

ச. ஒருப்பு=காய்ச்சுவதாலாவது.

"சுராளம்=அதிவேகம்.

சுரன்:— சுல்—சுரன்

க. சூரியன்

உ. அறிஞன். சூரியன்போல் விளக்குவோன்.

(கங) **சுல்**

சூர்=தெய்வம். சூரியபகவானென்பது.

(கச) **சுல்**

சுரும்பு:—

க. மலை—திரண்டிருப்பது

உ. வண்டு. சுழல்வது.

(கரு) **சூர்**

சூரி:—

க சூரியன்,

உ. எருக்கு. சூரியசமிதையென்பது

ங. ஞாயிறு திரும்பி,

ச. புலவன். விளக்குவோன்.

சூரி—ஒரி=ஆண்மயிர். உச்சிக்குடுமி யென்பது.

சூரியன், கோள்களுக்கு நடுவிலிருப்பதுபோலத் தலைநடுவிலிருப்பதென்பது.

(கசு) **சூர்**

"சூர்த்தல்=சுழலல்
சூரன்=சூரியன். சூர்—சூரன்

(கஎ) **சூர்**

சூரல்=ஞாயிறுதிரும்பி
"சூரல் சூரி ஞாயிறுதிரும்பி" ——— (ம—நிகண்டு)

(கஅ) **சுல்**

சுள்:—

க. வெப்பம்

உ. உறைப்பு

ங. உலர்ந்தமீன்.

"சுள்ளைச்சுட்டுக்கொண்டு கள்ளைக்குடி"

"சுள்ளினைக்கறித்தனர் துற்றுவாகையங்
கள்ளினைக்கொட்டொடு களிக்கு நெஞ்சினர்"

(காந்தம்—அசுர காண்டம்)

(௧௯) **சுள்**

சுள்ளு=வெப்பம், கோபம், ஓர் பூச்சி.
"சுள்ளுப்பூச்சி=சுள்ளான்
சுள்ளான்=ஓர் பூச்சி. சுருக்கெனக்கடிப்பது.
சுள்ளெறும்பு=கொள்ளியெறும்பு.
சுள்ளிவோன்=மிளகாய்.
சுள்ளம்=சினம், சுடுவது.
சுள்ளக்காய்=மிளகாய்.
சுள்ளக்கம்=கோபம்.
சுள்ளக்கன்=கோபி.
சுள்ளாப்பு=வெப்பம், தீவிரம், பழிச்சொல்
"சுள்ளாப்பெல்லாம் பொல்லாப்பு"
சுள்ளாத்தல்=சுடுதல், எரிதல், உறைத்தல், வீசல், வேகங்கொள்ளல்.
சுள்ளிடல்=உறைத்தல், நோதல்.

(௨௦) **சுளி**

சுளி=கோபம், சுடுவது.
சுளிவு=கோபம்.
சுளிதல்=கோபித்தல்.
"சுனையுணீலஞ் சுளியு நெடுங்கணாள்"——(அ—தே)
சுளித்தல்=கோபித்தல்
சுளிப்பு=கோபம், சுடுமுகம்.

(௨௧) **சுளு**

சுளுந்து=கொள்ளி, எரிவது.
சுழுந்து ,,

(௨௨) **சுள்**

சுள்ளை = சூளை. சிவப்பது.

சூளை = செங்கற்சூளை.

(௨௩) **சுள்**

சூள் = சுளுந்து, கோராங்கொள்ளி.

(௨௪) **சுள்**

சூடு:—

௧. தலை. கருவில் திரண்டு வளர்வது.

௨. உச்சிக்குடுமி. தலை நடுவிலுள்ளது.

௩. முடி. தலையில் தரிப்பது.

௪. நுனி.

௫. மயிற் சூடு. தலையிலுள்ளது.

௬ எருத்துத்திமில். திரண்டிருப்பது.

௭. அரிக்குவியல்.

௮. கண். ஒளிர்வது. வலக்கண்ணுமாம்.

௯. வெப்பம். சூரியனிடத்துள்ளது.

சுட்டு = குடுமி. உச்சியிலுள்ளது. சூடு—சுட்டு.

ஜுட்டு = (தெலுங்கு)

(௨௫) **சூடு = தலை**

சூடல் = முடிதரித்தல், தரித்தல்.

சூடி = புடவை.

சூட்டு = முடிமாலை.

(௨௬) **சூடு = கண்**

சுட்டல் = காட்டல், குறித்தல், கருதல்.

சுட்டெழுத்து.

(௨௭) **சூடு = வெப்பம்**

சுடல் = கொளுத்தல்.

சுடலை = சுடுகாடு,

சுடர்=சூரியன், சந்திரன், அக்கினி, ஒளி.
சுடர்,
சுடரோன்,

## (உஅ) சூடு=வெப்பம்

சுவடு:—
க. தீப்புண்.
உ. தழும்பு.
ங. அடிச்சுவடு.
ச. வண்டித்தடம்.
சுவறு=வறட்சி. சுவடு—சுவறு.
சுவறல்=வறளல்,
"சுவறிடு சடையர்போலும்" ——— (அ—தே)

## (உகூ) சுவடு

வடு=தழும்பு, குற்றம்.
"நாவினாற் சுட்டவடு"

## (௩0) சுவறல்

வறல்=வறட்சி.
வறளல்= ,,
வறட்சி= ,,
வறட்டல்
வறட்டி=எருமுட்டை, வறண்டது.

## (௩க) வறல்

வறு
"வற்றம்=வறட்சி
வற்றல்=வற்றுதல்.
வறம்=வறட்சி ——— (பு—நா)
வறத்தல்="
வறன்=வெம்மை, வறட்காலம்

(௬௨) **வறளல்**

வடிதல்=வாடல். திரிந்துநிலை மாறிற்று.

"உடம்பு வடிந்தது"

வடிவு=வறட்சி.

வடிவுகால்.

(௬௩) **வறல்**

வாடல்=உலர்தல். றகரம் டகரமாகும்.

வாட்டம்=சோர்வு, சாய்வு.

வருட்டம்=வருத்தம்.

"வருத்தம்=சோர்வு, துன்பம்.

வருட்டல்=வற்புறுத்தல்.

(௬௪) **வறு**

வறை=வறப்பு.

வறையல்=வறுத்தல்.

(௬௫) **வறு**

வறுப்பு=வறுத்தல்.

(௬௬) **வறள்**

வறடு=ஈனாமை. பால்வறண்டது.

"வறட்டுப்பசு=ஈனாப்பசு."

"மற்றைப்பசுக்கள் வறள் பசுதானே." (திருமந்திரம்)

மலடு=ஈனாமை. வறடு—மலடு.

மலடன்—மலடி.

(௬௭) **சூடு**

சுடுவல்=உதிரம். உதராக்கினியாலாவது.

சுடுவன்= ,,

சுடுவனம்= ,,

(௩௮) **சுவடு**

சுவடி=நெடுங்கணக்கு, புத்தகம். சுவடுபட எழுதுவது.

(௩௯) **சுள்**

சுணக்கம்=சோர்வு, தாமதல். வெயிலாலுண்டாவது.
,, சுணங்கல்=சோர்தல், சினத்தல்.
சுணக்கன்=நாய். கோபிப்பது.
சுணங்கன்= ,,
சுணங்கி= ,,
சோணங்கி— ,,

(௪0) **சுணக்கம்**

உணக்கம்=வாட்டம்.
உணங்கல்—வாடல்.

(௪௧) **சுள்**

சுண்டு=வறட்சி, தலையிற்சுண்டு, அடிப்பற்றல்.
சுண்டு நிலம்.
சுண்டாங்கி=சுண்டற்கறி.
சுண்டல்=வறளல், சுண்டற்கறி, சுண்டிய கடலை முதலியன.
சுண்டுதல்=வறளல்.

(௪௨) **சுண்டு**

சுண்டி=தொட்டல்வாடி, சுக்கு. நீர்சுண்டியது.
சுண்டில்= ,,
சுண்டை=ஓர்வற்றல். உலர்ந்தது.
சுண்டைக்காய்.

(௪௩) **சுண்டு**

சுவண்டு=ஒளி, வெப்பம்.
சுவண்டன்=சிவன்,
"தூநீறணியுஞ் சுவண்டர்தாமே" (அ—தே—௩—தி)

(௪௪) **சுண்டு**

தொண்டு = ௯. சூரியன் முதலிய கோள்களின் தொகை.

(௪௫) **சுள்**

சுண்டா = நடு. கோள்களுட் சூரியன் போல்வது.

(௪௬) **சுள்**

சுண்ணம் = நீறு. சுட்டது.
சுண்ணாம்பு = " பு—விகுதி.

(௪௭) **சுள்**

சுருள் = திரள், மடிப்பு.
சுருளை = திரட்சி.
சுருணை = ,,
கணக்குச் சுருணை.
சுருளல் = மடிதல்.
சுருட்டல்.
சுருட்டு.
சுருட்டை,
சுருட்டைப்பாம்பு.
சுருட்டைமயிர்.

(௪௮) **சுள்**

சுளல் = சுழல்.
" சூளல் = சூளுதல்,
" சூளுதல் = குடைதல். சுழற்றுவது.

சுழல்:— சுளல்—சுழல்.

௧. சுழற்சி. வட்டமாகவருவது.
௨. எந்திரம். சுழல்வது.
௩. காற்றாடி.

சுழலன் = எத்தன்.

சுழலை = சுழற்சி.

சுழலல்:—

க. உருளல்.

உ. கலங்கல். மனச்சுழற்சியென்பது.

சுழற்றல்.

சுற்றல்.

சுற்று.

சுற்றம் = உறவு. சூழ்வது.

"சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்."

சுற்றல் = சூழல், உடுத்தல்.

சுற்றல்—ஒற்றல் = உடுத்தல்.

சுல்—சுற்று—சுற்றம் எனவும் பொருந்தும்.

சுல் = வட்டம், திரட்சி.

## (௫௯) சுழலல்

உழலல் = சுழலல், வருந்தல்.

"உழன்றி = சுழலகத்தக்கது.

உழலைவேலி = சுழல்வேலி.

உழற்றல் = சுழற்றல், வருத்தல்.

உழத்தல் = வருந்தல்.

உழப்பு = வருத்தம், முயற்சி.

உழவு = வளைப்பு, வருத்தம்.

"உழவர் = மருதநில மக்கள், வளைத்து வளைத்துழுவோ [ரென்பது.

உழல்.

உழுதல்.

## (௬௦) சுள்

சுளங்கு = சுழற்சி.

சுழங்குதல் = சுழலுதல்,

(௫க) **சுள்**

சுளி=சுழி

சுளிகம்=அப்பவருக்கம். வட்டமாக இருப்பது.

சுழி:— சுளி—சுழி.

க. வட்டம், சூரியன் போல்வது.

உ. விந்து.

௩. நீர்ச்சுழி. வட்டிப்பது.

௪. கபடம். நீர்ச்சுழிபோல்வது.

௫. தந்திரம். கபடமாகச்செய்வது.

௬. மூர்க்கம், கபடமேகொள்வது.

சுழிப்பு=சுழித்தல்.

சுழியல்=சுருள். ஆண்பெண்மயிர், சுருண்டிருப்பது.

சுழியன்=வஞ்சகன்.

தன்கண் அகப்பட்டதோர் பொருளைமெல்லச் சுழற்றி விரைவிலிழுத்து மறைப்பது நீர்ச்சுழியின் தன்மை.

(௫உ) **சுழி**

உழி=வட்டம்.

உழிதரல்=சுழலல், திரிதல்.

(௫௩) **சுள்**

சூழ்=சுற்று, வட்டமென்பது.

சூழல்:—

க. சுற்றுப்புறம்.

உ. இடம். சுற்றுப்புறத்துள்ளது.

௩. கூட்டம். சூழ்வது.

௪. ஆராய்தல். ஒன்றிலேயே சுழல்வது.

௫. யோசனை.

௬. கருத்து.

௭. குறிப்பு.

சூழ்தல்=யோசனைசெய்தல்.
சூழ்ந்திடல்=வளைந்துகொள்ளல்.
சூழ்ந்தோர்=அடுத்தோர், உறவோர், மந்திரிகள்.

(ருச) சூள்

சூள்=ஆணை. வட்டமிட்டுத் தடுப்பது
சூளுறல்=ஆணையிடல், சபதஞ்செய்தல்.
சூளை=வேசி. சூள்செய்து வசப்படுத்துவோள்.

(ருரு) சூளி

சூளி=சூழி.
சூழி:—
க. கடல். வட்டமானது.
உ. குளம்.
ந. சுனை.
ச. நடு. கோள்களுட் சூரியன்போல்வது
ரு. உச்சி.
சா. உச்சிக்கொண்டை.

(ருசா) சூளி

சூடி=உச்சி.
சூடிகை=உச்சி, முடி, மயிர்முடி, சுட்டி. உச்சியின் [முடிப்பது

(ருஎ) சுள்

சுட்டி:—
க. உச்சி. கோள்களுட் சூரியன்போல்வது.
உ. நுதலணி.
ந. நுதலணிமாலை.
ச. தலையணி.
சுட்டி—உத்தி=முடியணி, தெய்வவுத்தி

(௫௮) **சுள்**

சோளம்=குடுமி. உச்சியில் வைப்பது.
,, சௌளம்= ,,
சோளகம்=குடுமி
சோழகம்= ,,

"நாமகரணம், காதுகுத்தல், ஊட்டல், சோழகஞ் செய்தல்" (உள்ளமுடைய சூடாமணி.)

(௫௯) **சுள்**

சோளி=சூரியகாந்தக் கல். (பஞ்சகாவியநிகண்டு)

(௬௦) **சுள்**

சோடி=அலங்காரம். பஞ்சவர்ணத்தாலாவது.
சோடித்தல்=அலங்கரித்தல்.
சூரியனிடத்துப் பஞ்சவர்ணமுள்ளன.

(௬௧) **சுள்**

சோடம்=வாட்டம். ———— உ—ஓ—ஆகும்
சோடை= ,,
"சோடை கொண்டுளங் கான மங்கைமயல்" (திருப்புகழ்)
தாய்ச்சோடை=தாய்ப்பாலில்லா வாட்டம்.
"குழந்தை தாய்ச்சோடையால் மெலிந்தது."
சொடசொடெனல்.
"மழையின்மையால் பயிர் சொடசொடெனப் போயிற்று."
சோடகம்=வைசூரி. வெப்பத்தாலாவது.
(அகத்தியர் வைசூரி வாகடம்)

(௬௨) **சுல்=சூரியன்**

சோலம்=தெற்கு
"சோல தேசம்"

சோளம்=சோளதேசம்.

சோளதேசம்—சோடதேசம்.

சோலன்=வளவன். தென்றிசை நாட்டுக்கரசன் என்பது

சோளன்= ,, ,,

சோழன்= ,, ,,

(சுரு) **சோளம்**

சோளகம்=சோழகம்.

சோழகம்=தெற்கு, தென்காற்று.

அரசாட்சி முதல் முதல் தென்றிசையினின் றுண்டானமை யின், சோழனென்பதற்குத் தென்றிசைநாட்டுக்கரசனெனப்பட் டது.

சூரியன்=ஞாயிறு, சோழன்.

சூரியன் என்பது தென்றிசையை யுணர்த்தி நிற்குமாகலின் தென்றிசை நாட்டுக்கரசன் என்பதே பொருள்.

எல்லா வுயிர்களும் இயல்பாக நோக்குந்திசை கிழக்காகலின் அதுவே முதற்றிசையாம். நற்றிசையுமாம். ஒருவன் கிழக்குத்திசை யை நோக்கி வீற்றிருக்குங்கால், அவன் வலப்புறம் சூரியகலை யாதலி ன் சோலம் சோழம் சோழகமென்பன தென்றிசையை யுணர்த் தின.

சூரியன் சொல்லிற்றெற்கின் பெயர் பிறக்கும். அவனிடப்புறம் சந்திரகலையாகலின் நிகண்டுநூலார் வடதிசையை மதிதிசையென்பர்.

"உதக்கே உதீசி யுத்தரம் பிங்கலம்

வடக்கின் பெயரே மதிதிசையுமாகும்." (பிங்கலநிகண்டு)

வலப்புறம் பிங்கலையும் தென்றிசையுமாகலின் சூரியனென்பது தென்றிசையை யுணர்த்திற்று. இடப்புறம் சந்திரகலையும் வடதிசை யுமாகலின், மதிதிசையென்பது வடதிசையை யுணர்த்திற்று. வலப் புறம் தெற்காகலின், வலவன் வளவனென்றாயிற்று.

சூரியன், சோழன், வளவன் முதலியவற்றுக் கெல்லாம் தென் றிசையில் முதல் முதல் உண்டான அரசனென்றே பொருள் கூறல் வேண்டும்.

வெண்பா.

சுள்ளென் றெரிக்குஞ் சுடரோன்பால் தோன்றியுயிர்
உள்ளந் துலக்கி யுலாவலின்—தெள்ளுபுகழ்ப்
பண்டைப் பெரியார்தாம் பைந்தமிழை ஒண்டமிழ்
ஒண்டமி ழென்மனு ரோர்ந்து."

"உரைதெரிந் துணரும் சம்பந்தன் ஒண்டமிழ்வல்லார்
நரைதிரையின் றியே நன்னெறிசேர்வரே."

(திருவுசாத்தானம்)

"வண்ண வொண்டமிழ் ஒன்பதொடொன்றிவை"

(பெரியதிருமொழி)

---

(௬௪) **சுலா**

சுலா:— சகரம் ககரமாகும்.

௧. திரட்சி.

௨. வளைவு-

௩. பட்சம். தழுவுவதாலாவது "ஙப்போல்வளை"

௪. கொண்டாடல். திரண்டுமகிழ்வது.

௫. ஆடம்பரம்.

"குலாவெண் ணெடுமாலை யென்புமுண்டு" (அ—தே)

"உறைவிற் குலாநுதலாள்" (திருக்கோவையார்)

"குலாவு—கொண்டாட்டம்.

குலாவல்—வளைதல், கொண்டாடல், பாராட்டல்.

குலவு—வளைவு

"குலவுச் சினைப்பூக்கொய்து" ——— (பு—நா)

குலவல்—வளைதல்.

(௬௫) **குலா**

குலை—கரை. வளைவானது. திரள்வது.

(கா கா) 
## குலா

குலம்:—

க. கூட்டம். திரள்வது.

உ. விலங்கின் கூட்டம்

ந. குளம். நீர்த்திரட்சியுடையது. (சத்த ரத்நாகரம்.)

குளாம்=கூட்டம். குலம்—குளாம்

குழாம்= ,,

குழுமல்= ,,

குழுவல்= ,,

"கொன்றையுந் துளவமுங்குழுமத்தொடுத்த" (சி—அ)

(கூஎ) 
## குளாம்

குளு=குழு.

குழு=கூட்டம்.

குழூஉக்குறி

(கூஅ) 
## குலம்

குலை:—

க. கொத்து. திரள்வது.

உ. பூங்கொத்து.

(கூகூ) 
## குலம்

கூலம்:—

க. குவியல். திரள்வது.

உ. கடற்கரை. "இயல்பாகக்குவிவது.

ந. கரை.

ச. நீர்நிலை. கரையுடையது.

ரு. வால். சுழல்வது.

கூ. விலங்கின்வால்.

எ. முசு. வால்மிக்கது.
அ. மரை. ”

(எo) **கூலம்**

கூலகம்:—
க. குளியல்.
உ. கறையான்புற்று. குளிவதென்பது.

(எக) **குலம்=குளம்**

குரம்=தருப்பை. நீர்ச்சார்பிலுள்ளது.
குரகம்=நீர்வாழ்பறவை.
குருகு:—
க. நீர்ப்பறவை.
உ. நாரை
ந. கைவளை, வட்டமானது.

(எந) **கூலம்**

குரம்—ஒலி. கடலிலுண்டாவது
குரை=,,
குரைத்தல்=ஒலித்தல்.

(எந) **குரம்**

குரவை:—
க. கடல்
உ. பேரொலி. கடலிலுண்டாவது.
ந. கூத்து. சாரிவருவது.
ச. கைகோத்தாடல்.
குரவையிடல்=ஒலித்தல், கூப்பிடல்,

(எச) **குரம்**

குரம்பு=கரை, செய்கரை, வரம்பு.

புலம்பு=கடற்கரை, கரை. (ஐங்குறு—நா)
,, புலம்பன்=நெய்தனிலத் தலைவன். கரையானென்பது.

முரம்பு :—

க. உப்பளம். கடற்கரைச் சார்புள்ளது.

உ. பாலடுத்துயர்நிலம். கரைபோல்வது.

ங. பாறை. பரலியையுள்ளது.

ச. மேடு. கரை போல்வது

குரம்பு—புலம்பு—முரம்பு=உப்பளம்.

குரம்பு.

குழம்பு=குழம்புத்துறை கடற்கரைச் சார்புள்ளது.

அமிர்தம் அமிழ்தம், சிகரிகை சிகழிகை யென்பன போலக் குரம்பு குழம்பாயிற்று.

(எநு)

## குலம்=குளம்

குளம் :—

க. தடாகம்.

உ. நீர்.

ங. ஆம்பல். நீரிலுண்டாவது.

குளநெல்

குளுவை= ஓர் நீர்ப்பறவை. (சி—அ)

"கிளுவை= "

குளித்தல்=நீராடல். குளம்—குளித்தல்

குளம்—குளா—குழா=வட்டம்.

"குழாவரி வண்டிசை பாடும்பாடல் கேட்டு"

(பெரியதிருமொழி)

சுழன்று திரிகின்ற வரிவண்டென்பது பொருள்.

குழா—குழ=வட்டம். குழமணிதூரம்.

"கூத்தர்போல ஆடுகின்றோம் குழமணிதூரமே"

(பெரியதிருமொழி)

குழமணிதூரம்=தோற்றூர் ஆடுவதோர் கூத்து.
கூத்தாவது வளைந்து சாரிவருவது.

(எசு) **குளம்**

குளிர்:—

க. குளிர்ச்சி.

உ. பனிக்காற்று

"௩. நண்டு. நீரிலுண்டாவது.

குளிரல்=குளிர்தல்

"குளிரம்=நண்டு. குளிர்—குளிரம்

குளிரி=பனிதாங்கிப்பூண்டு" ——— (ம—நிகண்டு)

(எஎ) **குளம்**

குளி=குழி

குழி=குளம், கிடங்கு, கிணறு, பள்ளம், வயிறு

"குழிதல்=ஆழமாதல்.

குழிசி=பானை, மிடா. திரண்டிருப்பது.

குழிசில்=,, ,,

(எஅ) **குளி**

குளியம்=திரட்சி, உருண்டை.

குழியம்=திரட்சி.

சுழியம்=ஓர்பண்ணிகாரம். திரண்டிருப்பது

ககரம் சகரமாகும்

குலா (திரட்சி)—குலம்—குளம்—குளி.

(எகூ) **குளம்**

குளவி=குழவி. வி—விகுதி

குழவி=அம்மிக்குழவி. திரண்டிருப்பது.

(அ0) **குளம்**

குளம்பு:—

க. சேறு. நீராலாவது.

உ. கஞ்சி. ,,

குழம்பு=சேறு, கஞ்சி.

,, குழூம்பு=குழி —— (மதுரைக்காஞ்சி)

குழம்பல்=சேறுதல், கலங்கல்.

"உழம்பல்=குழம்பல்.

குழப்பம்=கலக்கம்"

குழப்பல்=கலக்கல்

உழக்கல்=

## (அக) குளம்.

குளை=குழை

குழை:—

க. குண்டலம். திரண்டிருப்பது.

உ. சேறு. நீராலாவது.

கூழை:—குழை—கூழை

க. சேறு.

உ. பாம்பு. சுருண்டிருப்பது.

ங. கூன். வளைவானது.

"கூழைவானாம்" —— (சு—தே)

## (அஉ) குழை.

குழைவு=வளைவு, சோர்வு, வாட்டம்.

குழைதல்=வளைதல், வாடல்.

குழைத்தல்=மதித்தல். கடைவது.

## (அங) குவம்.

குடம்:—

க. திரட்சி.

உ. கும்பம். திரண்டிருப்பது

ங. கும்பராசி.

௬. நீர்,

௫. கடகராசி. சலராசி யென்பது.

௬. பூசம் கடகராசிக்குரியது.

௭. மறைவு. குடத்தாலாவது.

௮. மேற்கு. சூரியன் மறைவது.

"குடக் குன்றிலிட்ட விளக்கதுவாமே" (திருமந்திரம்)

குளம்—குடம்=நீர்.

(௮௪) **குடம்**

குடா=வளைவு, கோணல், மூலை.

"குடாவடி=கரடி

குடை=கவிகை, மறைப்பது. வளைந்திருப்பது.

இயற்கைவடிவாகிய வட்டம், திரட்சியும் வளைவும் கோணலு மாமென முற்கூறப்பட்டுள்ளது. சுல் முதலாக அவ்வியற்கை வடிவம் வருதல் காண்க,

இது சுருங்கிய நூலாதலால் இங்ஙனம் முற்றும் அனுகூத சம்பந்தமாக விளக்கப்படமாட்டாது. இனி ஓரோவோர் முதனிலை யெடுத்துக் கொண்டு விளக்கப்படும்.

---

## தனி முதனிலை.

(௧) **குவம்=திரட்சி**

"குவப்பெருந்தடக்கை" அ—தே (திருச்சாய்க்காடு)

"குவை=திரட்சி, கூட்டம், குப்பல், மேடு

குவல்=கூட்டம், குவிதல், மேடு.

"குவால்=மேடு. கூட்டம்,

"வரிவரால்குவால்சாய—அமராடி" ———(திருப்புகழ்)

சுவல்=மேடு

சுவர்=வீட்டுச்சுவர். உயர்ந்துவது.

க. குவம்

குவிவு = குவிதல், குப்பை.

குவிதல் = திரளல், கூடல், சேர்தல், நெருங்கல், ஒடுங்கல்.

உ. குவம்

குவா = திரட்சி.

குவவு:—

க. திரட்சி.

உ. கூட்டம். திரள்வது.

ங. பூமி. திரண்டிருப்பது.

ச. பருமை. பூமியின் தன்மை.

ரு. பெருமை. பூமியாலாவது.

## (உ) கோடு:—

க. வட்டம்.

உ. வளைவு.

ங. கூட்டம். திரள்வது.

ச. மலையுச்சி. குவிந்திருப்பது.

ரு. அரணிருக்கை. குறிஞ்சியிலுள்ளது.

சு. வெற்றி. மலையரணாலாவது.

எ. சுழி. வட்டமானது.

அ. நீர்க்கரை. திரண்டிருப்பது

கூ. வரம்பு. கரைபோல்வது.

க0. பக்கம். குறிஞ்சிச்சார்பு.

கக. மரக்கொம்பு. வளைவானது.

கஉ. வரி. ,,

கங. வரிசூழ்ந்த இடம்.

க. கோடு

கோட்டை = அரண். மலையுச்சியிலுள்ளது.

உ. கோடி

குடுமி:—

க. வெற்றி. மலையரணாலாவது.

உ. சிகை, உச்சியிலுள்ளது.

ங. விடலைத்தியன், மலையுச்சியிலுள்ள மூலிகை [அறிந்தவன்.

ங. கோடு=மரக்கொம்பு

கொடுதி=மரவாணி. மரக்கொம்பாலாவது.

கோடு=மலையுச்சி.

கொடும்பை=மலையருவி—உச்சியின்வீழ்வது.

பை=விகுதி.

௪. கோடு

குவடு=மலையுச்சி. மலை.

ரு. கோடு=வளைவு.

கொடு=வளைவு, கொடுமை, அநீதம்.

"கொடுவாள்

"கொடுமை=கொடுங்கோன்மை முதலியன.

கொடுகு=வளைவு.

'கொடுகு வெஞ்சிலை' ———— (சு—தே)

கொடுக்கு=வளைவு. தேட்கொடுக்கு.

கொடுவை=கொடுமை.

கொடுமரம்=வில், வளைவது.

கொடுநுகம்=மகநாள், முடநுகமென்பது.

கொடுதி=வளைப்புத்தொழில்

கொடுங்கை=உள்வளைந்தகை, தேர்க்கொடுங்கை, மண்டபக்கொடுங்கை

கொடுங்கு=வளைவு.

கொடுங்குதல்=வளைதல்

கொடுப்பு=கதுப்பு, வட்டமானது

"கதுப்பு=கவுள்.

கொடுக்கை=வளைவு.

கொடுக்கைப்புளி.

௬. கொடு=வளைவு.

கொட்பு=வளைவு, சுழற்சி, திரிவு.

எ. கொடு=வளைவு

கொடி:—

க. காக்கை, சாய்ந்து பார்ப்பது

உ. படர்கொடி. வளைந்து படர்வது

ங. நீளம், கொடிபோல்வது

## (ங) கோலம்=ஓடம்

குலம்=ரேவதிநாள். ஓடம்போல்வது

சூலம்= " "

'ரேவதி மொய்ம்மீன் தோணிபோல,

## (ச) ஓதம்=கடல் கடற்றிரை ஈரம், பெருக்கு, வெள்ளம். ஒலி.

ஓதை=பேரொலி, கடலிலுண்டாவது.

ஓசை=ஒலி.

க. ஓதம்

ஓதல்:—

க. வாசித்தல். கடல்போலிரைவது

உ. இசைத்தல்

ங. போதித்தல்

ச. சொல்லல்

ரு. வாழ்த்தல்

சு. மந்திரம் செபித்தல்

எ. வைதீகநூலோதல்

ஓதுவான்=வேதமோதுவான், ஆசான், மாணவன்.

உ. ஓதல்

ஓத்து=வேதம். கடலொலிபோலோதுவதென்பது.

"கடலொலியதான மறைதமிழ்களோது

"கதலிவனமேவு—பெருமாளே". (திருப்புகழ் உகள.)

ஓச்சன்=குரு. வேதப்பொருளுணர்த்துவோன்

ஓச்சர்=கணக்கர், வேதமோது மளவினை அறிந்தவ [ரென்பது

மாணவர்கள் எந்நூல் கற்பினும் முதல் முதல் அதனை உரப்பி யோதப் பழகல் வேண்டும் அங்ஙனம் பழகுவதால் குரலுடைந்து பிரசங்கம் செய்வதற்குத் தகுதியாகற்பாலது.

ஞாயிறு எழுங்காற் கடற்காட்சியால் தெய்வபக்தி யுண்டாவ தியல்பு. ஆதலின் ஓதலென்பதற்கு கடல்போலிரைந்து கற்றலெ னவும், வைதிக நூலோதலெனவும் கூறல் பொருந்தற்பாலதே.

'ஓதிமாமலர்கடேவி' (அ—தே)

'வேதமோதிலென் சாத்திரங் கேட்கிலென்' (அ—தே)

'ஓதியவேதநாவர்' (அ—தே)

'ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பதும்' (ச—தே)

என, ஓதலென்பதைப் பெரியோர் வைதிக வழக்காகக் கொண் டிருப்பதறிக.

இன்னும் ஓதலென்பதற்குக்கடல்போலாழ்ந்தகன்ற கருத்து ள்ள நூலினைக் கற்றலெனலும் பொருந்தும்.

ந. ஓதல்

ஓர்தல்:—

க. உணர்தல். ஓதுவதாலுண்டாவது.

உ. தெளிதல்.

''ஓர்ப்பு=ஆராய்வு, ஆடூஉக்குண நான்கிலொன்று.

ஓர்பு=ஆராய்வு.

ஓர்வு= ,,

ஓர்மை=துணிபு. ஆராய்வதாலாவது.

ஓர்மம்=மனவுறுதி.

ஓர்மிப்பு= ,,

ஓர்ச்சி=யோசனை,

ச. ஓர்தல்

உணர்தல்=அறிதல், தெளிதல், நினைத்தல்.

உணர்ச்சி=அறிவு, கல்வி, நினைவு.

உணர்த்தி=அறிவு, உணர்வு.

உணர்த்தல்=அறிவித்தல், கற்பித்தல்.

## (ரு) கலி=கடல்

களி=கழி.

"களியர்=நெய்தனிலமாக்கள்

கழி=உப்பளம், உவர்த்தரை.

"கடி=கரிப்பு"

கழிநிலம்=உவர்த்தரை.

"கழியர்=நெய்தனிலமாக்கள்"

காழி=சீகாழி. கடற்சார்புள்ளது.

க. கலி=கடல்

கரிப்பு=உப்பு.

கரித்தல்=உப்பாதல்.

## (சா) கலம்=இசை, யாழ்.

"சேமக்கலம்=எறிமணி. இசைப்பது

"வெண்கலம்=கஞ்சம் "

"கலவிங்கம்=ஓரிசைப்புள்.

கலமர்=பாணர். யாழ்வல்லுந ரென்பது.

க. கலம்=இசை

கலி=இசை.

"கலிப்பா, கலித்துறை.

காரி=கிளி. இனிதுபேசுவது.

காரிகை :—

க. கலித்துறை. ஓர்வகையிசையுள்ளது.

உ. பெண். இசைவல்லாள்.

ங. அழகு. பெண்ணின் தன்மை.

கலம்—களம்=இசை. "களனெனக் கரையுமல்குல்"
(சி—ம)

உ. கலம்=இசை

கல்=கல்லென்னுமிசை.

கன்=வெண்கலவேலை.

"கன்னுவர்=கஞ்சகாரர்"

"கன்னார்"= ,,

கன்னந்தட்டு=சிறு தராசுத்தட்டு. வெண்கல நிறுத்தற் [குரியது,

௩. கல்=இசை

கருவி :— வி. விகுதி.

க. யாழ். ——— இசைப்பது.

உ. யாழ்க்கருவி.

௩. வீணை

௪. வாச்சியம்,

## (எ) காசம்=கறுப்பு

"காசங்கடலில் விடமுண்டகண்டத்தீசன்"

(௪—தே—திருவேணுபுரம்)

"காசு=குற்றம்

காசா"—

க. ஓர்செடி. ——— கறுப்புப்பூ மிக்கது

உ. எருமை. ——— கரியது.

"காயா=காசாஞ்செடி.

"காஞா="

காசை=,,

## (அ) காணம்:—

க. மலை

உ. பொன்—மலையிலுண்டாவது

௩. கொள்—குறிஞ்சியிற் பயிர்செய்வது

௪. செக்கு—கற்செக்கு.

"மரக்காணம்=மரச்செக்கு.

"கற்காணம்=கற்செக்கு

கொண்காணம்=ஓர்மலைநாடு. உ—பதம்.

"கொங்கணம்= ,,

"கொங்கணி=கொங்கணப்பாஷை.

கொண்காணன்.

கொண்கன்=குறிஞ்சித்தலைவன், தலைவன்.

நெய்தற்கொண்கன்—கொண்கன்=கரையான்

கொண்கானம்=கொங்கணம்.

கொண்கானங்கிழான். (பு—நா)

க. கானம்

கானம்=மலை. "கானக்குறவர்கள்" (தி—கோ)

கானவன்=வேடன்

கானவர்=குறிஞ்சிநிலமாக்கள், வேடர்.

உ. கானம்=மலை.

கானகம்=மலை

கானகநாடன்—குறிஞ்சிநிலத் தலைவன்.

நாடன்=சோழன். ,,

நாணன்=குறிஞ்சிநிலத்தலைவன்.

கொண்கானம்=சுரங்கமுடைய மலை

கோண்=சுரங்கம்.

"ஒன்று நன்குடைய பிறர்குன்றமென்றும்

இரண்டுநன்குடைத்தே கொண்பெருங்கானம்" (பு-நா)

## (௩) சகடம்

சகடு:—

க. வண்டி. வட்டமானது

உ. உரோகணி. ,,

௩. சந்தேகம்

"உரோகணியூற்றல் பன்னிருமீனும்"

உளற்றல்=வட்டவடிவுள்ளது.

அப்பன்னிரு மீனுள் இரண்டு மூன்று விளங்கியும் ஏனையவிள ங்காது மங்கனிறமாகவுங் காட்டிப் பன்னிருமீனும் உளவோ இல

வோ என்னும் உணர்வை விளைத்தலின், உரோகணியை யுணர்த்தும் சகடு என்பது சந்தேகத்தை யுணர்த்திற்று.

க. சகடு

கடுப்பு = ஐயம்.

கடுத்தல் = ஐயுறல்.

உ. சகடு

சாகாடு = வண்டி, உரோகணி.

"காடி = வண்டி"

சாடு = வண்டி.

ங. சாடு.

சதி:—

க. வட்டம்

உ. தாளம். ——— வட்டமானது

ங. தாளவொத்து

ச. உரோகணி. வட்டமானது

சதிர் = தாளவொத்து.

"சதிர்ப்பந்தல் = நாடகப்பந்தல்.

சதிரன் = சிவன். இசையின் மகிழ்பவன்.

"சடையார் சதிரன் முதிராமதி சூடி" (ச—தே)

சகடம்—சகடு—சாகாடு—சாடு—சதி.

(க0) **காழ்:—**

க. மரவயிரம் கரியது

உ. இரும்பிலிமரம். ,,

ங. வயிரக்கல். மரவயிரம் போல்வது.

ச. ஒளி

ரு பளிங்கு

சா பருக்கைக்கல்

எ. மணிவடம்.

"காழ்ப்பு = வயிரம்

"காழ்த்தல்=வயிரமேறல்.
காடு=வனம். வயிரங்கொள்வது.
காடுகிழாள்=மூதணங்கு
காடுகாள்= ,,
காழ்+து=காடு.

க. காழ்=ஒளி

கண்=விழி. ஒளிர்வது.
"கண்ணாள்=நாமகள்
கண்ணுதல்=சிவன்
கண்காணம்=மேல்விசாரணை.
கண்காணர்=மேல்விசாரணைக்காரர்.
கண்ணுள்=கூத்து.
"கண்ணோட்டம்=தாட்சணியம்.
காண்—காணல்=தெரியல்.
காட்சி=பார்வை, அறிவு.
கட்செவி=பாம்பு
கண்மை=தாட்சணியம்.

## (௧௧) கண்=மூங்கில்

கணு:—

௧. மூங்கில்
௨. கணு
௩. பிரிவு. கணுப்போற் காட்டுவது
"கணுவறநின்ற கலப்பதுணரார்." (திருமந்திரம்)

(௧௨) கடு=கடுமரம். கருநிறமுள்ளது.
"கடுக்காய்
கடுப்பு=கோபம். கறுப்பது.
கடுத்தல்=கோபித்தல்.
"கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப்பொருள"
கறுப்பு, தாமதகுணத்தாலுண்டாவது.

க. கடு

கறு=கருமை

கறுப்பு= ,,

"கறுத்தல்=கருமையாதல், கோபித்தல்

கறுவல்=சினக்குறிப்பு

"கறுவு=சினம்."

கறை:—

க. கறுப்பு

உ. குற்றம்

௩. மாசு

௪. நிறம்

௫. இருள்

௬. உரல், கருங்கல்லாலாவது.

கறு+ஐ=கறை. ஐ—விகுதி.

உ. கடிப்பு

கதுப்பு:—

க. மயிர். கரியது.

உ. பெண்மயிர்.

௩. பின்னல்.

"கடும்பு=சும்மாடு. மயிர்ச்சும்மாடென்பது

கதுப்புவாலி

கதுவாலி=கவுதாரி. பின்னலிட்டதுபோல் வாலு[டையது.

கவுதாரி=ஓர்புள். பரிவர்த்தனையாய் நிலைமாறிற்று.

கௌதாரி= ,,

## (க௩.) கால்=காம்பு.

காழ்=காம்பு

"கயத்துவாழ்யாமை காழ்கோத்தன்ன" (பு—௩௭)

## (க௪) கால்=மூலம்

காழ்=வித்து.

## (கரு) சால் = கூர்மை.

"காலம் = தூண்டின்முள், கூரியது.

(ஆ—தீ)

கற்றாழை = குமரி. கூரியமுள்ளுடையது.

காறு = கொழு. சால் + து

"கலம் = படைப்பொது."

படைக்கலம்

கலி = அம்பு. கூரியது

"கலினம் = முட்கடிவாளம்

கலிகம் = வன்னிமரம் முள்ளுடையது

கலிசம் = " சால்—கலி—கலினம்.

க கலம் = படைக்கலம்.

களம் = போர்க்களம்

"களகம் = கழகம்

கழகம் = படைபயிலிடம்

கடம் = உளி. கூரியது.

"கடப்பாரை = ஓராயுதம்.

கடாரம் = கட்கம்

கடாரி = ஓராயுதம்.

உ. கடம் = கூர்மை.

கடி:—

க. கூர்மை

உ. அச்சம், அம்பினுலுண்டாவது

ங. விரைவு, அம்பின் கதிபோல்வது.

கடிவாளம் = கலினம். முள்ளுடையது. உ—பதம்.

கடிதல் = சினத்தல், வெட்டல்.

கடித்தல் = துண்டாக்கல்

கறித்தல் = ,,

கொறித்தல்

## (௧௬) கால் = கூர்மை.

கார் = அச்சம்

"கா = வருத்தம், அச்சத்தாலாவது.

"காரார் = அஞ்சுவோர்.

காரி = கண்டங்கத்தரி, முண்மிக்கது.

கார்கோணி = தேட்கொடுக்குச்செடி.

காரை = ஓர்முட்செடி

மருக்காரை = ,,

கால்—கள் = கூர்மை. கள்—கள்ளி = ஓர் முட்செடி.

கள்—களா = ஓர் முட்செடி.

௧. கால்

களு = கழு

கழு = கழுமரம், சூலம். கூரியது.

கழுமுள் :—

௧. ஆயுதப்பொது

௨. ஈட்டி

௩. கழுமரம்.

௪. சூலம்

௫. மாதளை = முள்ளுடையது.

,, கழுக்களம் = கொலைக்களம்

கழுத்தலை = வாள்.

கடுத்தலை = ,,

கழுகு = ஓர் புள், கூரியமூக்குடையது.

௨. கார்

கரம் = கூர்மை

"கரமஞ்சரி = நாயுருவி, முண்மிக்கது.

கரம்பை = சிறுகளா. ,,

கரகம் = தாது மாதளை. ,,

கரசா = புலிதடுக்கி. ,,

கராசம்=கற்றாழை

ராகாசம்=ஓர்கற்றாழை.

## (கஎ) கால்=சிறுமை.

கால்

"கன்று=குறைவு. சிறுமை.

"கன்றுதல்=நைதல், பதனழிதல்

கன்னி=இளமை

கன்னிக்கால்=சிறுகால்.

கால்=சிறுமை

காம்=குடியிறை. சிறிதளவென்பது.

கரல்=குள்ளம்.

கரளை= ,,

## (கஅ) தள்=தடை

"தளி—தழி=தடை.

"தழிச்சிறை நீரிற்பிறைக்கலஞ்சேர் தருதாரவனே"

(திருவாசகம்)

"தள்ளல்=தடுத்தல்

தளை :—

க. தடை

உ. கால் விலங்கு

௩. வரப்பு

"தளைதல்=தடுத்தல்

தாள்=கதவிடுதாள் தடுப்பது.

தாழ் :— ,,

தாழக்கோல்——— தாழ்ப்பாள்.

க தள்

தடம்=மலை

தடக்கு=தடை. மலைபரணலாவது.

தடக்கம்= ,,

தடக்கல்=தடுத்தல்,

தடங்கல்=தடை, தாமதம்.

உ. தள்

தடை

தடுப்பு

தடுத்தல்

தள் = தடை

தட்டு=விலக்கு

தட்டம்:—

க. கச்சு. தடுப்பது

உ. நீர்நிலை

ங. வயல்.

தட்டல்=மறுத்தல், ஆணையிடல்.

தள்—தட்கு=தடை.

தட்கல்:—

க. தடுத்தல்

உ. தங்கல் தடைப்பட்டிருப்பது

"தட்ப=தடுக்க. (பு—நா)

தக்கல்=தங்கல். மருந்து தக்கவில்லை.

"தக்கின்றிருந்திலன்" (திருக்கோவையார்)

தங்கல்=இருத்தல், தாழ்த்தல்.

தாங்கல்=தடுத்தல், காத்தல். (பு—வெண்பாமாலை)

## (கக) சாம்பு=மூங்கில்.

சாம்பு=வாட்டம். மூங்கிலெரியும்போதுண்டாவது.

சாம்பல்= ,,

சாம்புதல்=வாடுதல்.

சாம்பல்—செம்பல்=பழம்பூ. வாடியது

உ. சாம்பல்

தேம்பல்:—

க. வாடல்

உ. இளைத்தல்

௩. மெலிதல்

௪. உலர்தல்.

"கொழும்பதிய குடிதேம்பி" (மதுரைக்காஞ்சி)

(உ௦) அம்பு

அரம்பு=குறும்பு. அம்பினலாவது

"வலியவர்கொண்டுமேலை வரம்பிகந்தரம்புசெய்யும்"

(சி—மணி)

க. அம்பு

அழும்பு=கேடு. அம்பினலாவது

"அழிவு="

"அழிதல்

அழுங்கு=மடி. கெடுப்பது.

"அழுங்கல்=" ,,

அழுல்=ஏங்கல். அம்பினலாவது

"அழுதல்="

அழுக்கம்=கேடு

மனத்தழுக்கம்=பொறாமை.

அழுங்கல்

"அழுகல்=கெடுதல். அம்பு தைப்பதாலாவது

அழுங்காறு. உ—பதம்.

அழுக்காறு=பொறாமை.

அழுக்கறுத்தல்.

(உக) கோல்.—

க. அம்பு. கூரியது

உ. தூண்டில். முள்ளுடையது.

௩. துலாக்கோல்.

27

௪. துலாராசி

ரு. செங்கோல். துலாக்கோல்போல்வது.

கோ=அம்பு, வச்சிராயுதம்

கோகண்டம்=நெருஞ்சில். உ—பதம்

௧. கோல்

"கொளு=கொழு

"கொழு=காறு. கூரியது.

"கோள்=கொலை. அம்பினாலாவது.

"கொள்ளை=பாதீடு.

கொல்=வருத்தம்

கொன்=அச்சம்

"மற்கொல்=பகை. ———— உ—பதம்

கொலை=கொல்லல். அம்பினாலாவது.

கொலவு= ,,

கொல்லல்————கோறல்

௨. கோல்=அம்பு

குலைவு=அழிவு

உலைவு= ,,

௩. கோல்=அம்பு

"கோல்

"குற்றம்=வடு. அம்பு புறத்தில் தைப்பதலாவது.

கொற்றம்=வெற்றி. அம்பினாலாவது.

## (உஉ) சுள்=சிறுமை.

சுள்ளாணி=சிறிய ஆணி

சுள்ளி=சிறுவிறகு.

"சுள்ளில்= ,,

,,சுளுகு=சிறுமை

"சுளுவு= ,,

சுண்டு=சிறுமை

சுண்டெப்புளியஙகாய்.

சுண்டுவிரல்=சிறுவிரல்.

சுண்டெலி=மூஞ்சூறு.

சுண்டன்= ,,

(உ௩) **புல்**=அற்பம், சிறுமை.

"புல்லன்=சிறியன்.

புன்மை=சிறுமை.

"புல்வாய்=மான்.

புள்=புள்ளு, சிறுகுணில்.

"புள்ளடித்தல்=ஓர் விளையாட்டு.

பொடி=சிறுமை முதலியன.

"பொடியன்=சிறியன்.

பொடித்தல்=தூளாக்கல்.

புடைத்தல்=தெள்ளல். மாப்புடைத்தல்.

(உ௪) **தும்பம்**=சுரை. உட்டுளையுடையது

தும்பு:—

க. சுரை. உட்டுளைக்காயுடையது.

உ. கரும்பு. மூங்கிலினம்.

௩. புழுதி. மூக்கினுள்ளே செல்வது.

தூம்பு:—

க. மூங்கில்

உ. உட்டுளை.

௩. இடுக்குவழி, நுழைவழி.

௪. வழி

௫. பாதை

௬. வாயில். துளையுடையது.

௭. சலதாரை. உட்டுளையுடையது.

௮. மரக்கால். மூங்கிற்படி.

க. தும்பு

தும்பி:—

க. கரும்பு. மூங்கிலினம்
உ. சுரை. உட்டுளையுடையது.
௩. யானை. துளைக்கையுடையது.
ச. ஓர்வண்டு. உட்டுளையுடைய வாயுடையது.
தும்பிக்கை=துதிக்கை.

உ. தும்பம்

தும்பல்=தும்மல்.
"தும்மல்=தும்முதல், மூக்கினுள்ளிருந்து வருவது
தூம்பல்=சுரை
தூங்கல்:=
க. யானை. துளைக்கையுடையது.
உ. அசைவு, யானையினியற்கைத்தொழில்
௩. தூங்குமஞ்சம். யானையின் துதிக்கைபோலசைவது.
ச. உறங்கல், மஞ்சத்திலுண்டாவது.
"துஞ்சல்=உறங்கல், சாதல்,
"கண்டுஞ்சல்

தூக்கம்:—
க. நித்திரை
உ. தணிவு

௩. தூங்கல்.

ஊஞ்சல்=ஊசல். துதிக்கைபோலசைவது.
ஊசல்=ஆடல்
ஊயல்= ,, (தெலு)
தூங்கல்—துஞ்சல்
தூங்கல்—தூக்கம்.

## (உரு) தொல்=வேர்.

"தொன்மரம்=ஆலமரம். விழுதுவிடுவது.
தொலுபக்கம்=வளர்பிறை. (ஆ—தீ)
தொலுகாரு=மாரிகாலம். முளைக்கின்ற காலமென்பது (ஆ—தீ)

க. தொல்

தொலு=புறணி. முளையோடுண்டாவது
"தொலும்பு=தோல்
"தொலுவல்= "

தொலி:—

க. புறணி
உ. உமி
ங. துளை. (ஆ—தீ)
தொலித்தல்=உமிபோக்கல்.

உ. தொலி

ஒலி=தோல்
"ஒலித்தல்=தோல்போக்கல் (தெலு)
ஒலியல்=தோல்

ங. ஒலி

உரி=தோல்
"உரிவை=தோல்
உரித்தல்=தோல்போக்கல்

ச. தொல்

தோல்:—

க. உரிவை
உ. புறணி
ங. தோற்பரிசை
ச. துருத்தி. தோலாற் செய்தது.
தோல்—தொள்—தவுல்—தவில்=ஓர் வாச்சியம்.
"திமிலைகரடிகை பதலைசலரிதவில்
தமரமுரசுகள் குடமுழவொடுதுடி" (திருப்புகழ்)

ரு. தோல்

தோடு=ஓடு.
தோடு—ஓடு=புறணி

சு. தொல்

தொள் = துளை. தொள்ளல் = துளைத்தல். மூங்கிலினுள்
"தொளு—தொழு. [ளது
தொள்கு = ,, (க-ரா)

"தொள்ளம்:—

க. தெப்பம். உட்டுளையுடையது
உ. சேறு. உள்ளிழுப்பது.

தொள்ளை:—

க. துளை
உ. துளையுடைப்பொருள்
ங. மரக்கலம்

தொள்—தொள்ளை

எ. தொல்

தோல்:—

க. மூங்கில்
உ. யானை. துளைக்கையுடையது
,, ங. வார்த்தை. வேய்ங்குழல்போலினி நிசைப்பது.

தோற்றம்:—

க. முளைத்தல். வேரின்பினுண்டாவது
உ. பிறப்பு
ங. உதயம்

அ. தோல்

தோள்:—

க. புயம். பக்கத்தேமுளைப்பது
உ. கை.

தோட்கோப்பு = கட்டுச்சோறு
தோண்மேல் = பிடரி

கூ. தோள் = புயம்

தோளம் = தோழம்

தோளம்=தோழம்=நட்பு. தோண்மேற் கைபோட்டுப் [பேசுவது.

"தோழமை= ,,

தோழன்=சங்காத்தன்

தோழி=சகி

௧0. தோள்=கை

தொளல்=தொழல்

தொழல்=கைகூப்பல். வணங்கல்.

தோள்=கை

"தொழில்=செயல். கையாலாவது.

"தொழும்பு=அடிமைத்தொழில்

"தொழும்பர்=அடிமைகள்.

"தொழுவர்=தொழில் செய்வோர்.

௧௧. தோள்=கை

தொண்டு=பணி, அடிமை. கையாற்செய்வது.

"தொண்டன்=அடிமை செய்வோன்.

"தொண்டிச்சி=அடியாள்.

திருத்தொண்டு—திருத்தொண்டர்.

௧௨. தொண்டு

சொண்டு=உத்தியோகம்.

சொண்டி= ,,

௧௩. தொண்டு

தொத்து=அடிமை.

தொத்தன்=அடிமைக்காரன்.

தொத்தி=அடியாள்.

௧௪. தோள்

தோடு=துணை. தோள்போல்வது. —— (தெலு)

"தோடா=கைக்காப்பு.

௧௫. தோடு

சோடு=இரண்டு. தோளின் தொகையென்பது.

"சோடம்=கைச்சட்டை, மார்ச்சட்டை

கசா. தோள்

தொடவு=உணவு. கையாலுழந்துண்பது

"துறவு= ,,

துறவல்= ,,

துறுதல்= ,,

தொடல்=உண்ணல்

தொடுதல்= ,,

தொட்டல்= ,,

"இரவாரிரப்பார்க் கொன்றீவர் கரவாது

கை செய்தூண்டுமாலையவர்" (திருக்குறள்)

கஎ. தோள்

தொடவு=தொடல்.

தொடல்=தீண்டல். கையாற்பரிசிப்பது.

தொடுதல்:—

க. தீண்டல்

உ. அணிதல். கையாற்செய்வது

ங. உதவியாதல்

கஅ. தோடு

தொடுவை=கூட்டாளி. சங்காத்தியென்பது.

ககூ. தோடு

தோது=துணை

"தோதுபடாது=துணைப்படாது.

உ0. தோது

தூது=சந்து. துணைப்படுவதென்பது

தூதன்=ஒற்றன்.

தூதி=

தூதிகை=

உக. தோடு

துணை:—

க. சகாயம்.

௨. இரண்டு. தோளின்தொகையென்பது

௨௨. தோடு

தூணி=நான்குமரக்கால். தேவர்தோளின் தொகையெ[ன்பது.

இருதூணி.

௨௩. தோடு

தொறு=தொழிற்பயில்வு. கையாற்செய்வதென்பது.

"தொறுவு= "

தோறும்= "

உண்ணுந்தோறும்

நாடோறும்—நாடொறும்.

(௨௬) **புல்:—**

௧. மூங்கில்.

௨. பனை. மூங்கிலினமென்பது

௩. புல்லு. "

௪. புல்லரிசி.

௫. உட்டுளை. மூங்கிலிலுள்ளது.

புல்லாங்குழல்=வேய்ங்குழல்

புல்=பதர். புரைபட்டதென்பது

"புன்மை=சிறுமை

புல்லர்=கீழ்மக்கள்.

புற்கு=புல்லரிசி, புல்லரிசிக்கூழ்.

புற்கை=புல்லரிசிக்கூழ்.

"உப்பின்றுபுற்கையுண்கமா"

புற்கை—குக்கை=நொய்யரிசிக்கூழ்.

குக்கைமாவு.

புற்று=வன்மீகம். பலஉட்டுளையுடையது

புற்றம்= "

புல்+து. து பெயர்விகுதி

புற்பதி=பனை

புற்றுளி= ”

புற்பாய்=கோரைப்பாய்.

“புறக்காழனவே புல்லெனமொழிப

அகக்காழனவே மரமெனமொழிப” (தொல்)

பனை தெங்கு முதலியன புல்லென்பர். புரையுடைய [தென்பது.

புரை—போரை=உட்டுளை.

௧. புல்

புல்லம்:—

௧. கரும்பு. மூங்கிலினமென்பது.

௨. ஆண்குறி. கருவுண்டாக்குவது

ஃ லூ=ஆண்குறி. (தெலு)

௩. எருது

௪. இடபராசி.

புல்கண்டம்=சர்க்கரை. கருப்பஞ்சாற்றுலாவது.

உ—பதம்.

௨. புல்லம்

புல்லல்:—

௧. புணர்தல். சேர்தலென்பது

௨. கூடுதல்

௩. சார்தல்

௪. அமைதல்

புல்லுறுதல்=புணர்தல், இணங்கல், தழுவல்.

புல்லுநர்=நண்பர்.

புல்லல்

ஒல்லல்=கூடல், விரும்பல்.

ஒல்லுநர்=நண்பர்.

ஒல்லார்=பகைவர்.

௩. புல்

புள்=வளையல். உட்டுளையுடையதென்பது.
"புட்கைபோகிய புன்றலைமகாரொடு" (மலைபடுகடாம்)
புளு=புழு. உட்டுளைசெய்வது
"புழு=கிருமி
புழுத்தல்
புளவி=குளவி (போகர்)
"குளவி=ஓர்வண்டு புழுவிலுண்டாவது.
உளு—உளுர்=உளுர்விழுதல்.
"உளுவான்=உளு
உளுத்தல்=புழுக்களாற் புரைபடல்
புல்—புளு என்றுப பிரிக்கலாம்.
புளவி—குளவி பகரம்ககரமாயிற்று.
வி. பெயர்விகுதி.
புளு—உளு ஒற்றினீக்கம்.

௪. புள்

புள்ளுவம்:—
௧. பொய். புரைபடுவதென்பது
௨. விசித்திரம். பொய்யினாற்புனைவது.
"புள்ளுவம் பேசாதேபோகுநம்பீ" (பெரியாழ்வார்)
புள்ளுவன்=பொய்யன், விசித்திரன்.

௫. புளம்

புள=நதி. உட்டுளைப்பதென்பது.
புழ= ,, ——— (மலையாளம்)

௬. புளம்

புளல்=உட்டுளை.
புழல்=உட்டுளை, துளையுடைப்பொருள், சலதாரை.
"புனல்=எண்ணெய்ப்புனல்.
புடலை=புடலங்காய், உட்டுளையுடையது.
ழகரம்—டகரமாயிற்று.

எ. புளம்

புளை = புழை.

"புளைகயப்போர்வைபோர்த்து" (அ—தேவாரம்)

புழை = உட்டுளை, ஏவறை, சில்வழி, சிறுவாசல்.

,, புழைக்கை = துதிக்கை, யானை.

,, பூழ்க்கை = புழைக்கை, யானை, யாளி.

புழைக்கடை = புறவாயில்.

பூழை = துளை, கோபுரவாயிற் கதவு விட்டுப்புகும்வழி.

புழல் புழை முதலியவற்றிற்கு முதற்சொல் புளமென்பதே யாம். அகாவீற்றுச் சொற்களும், ஐகாரவீற்றுச்சொற்களும் செயற்கைச் சொற்களாகும். புளமென்பதற்கு ஓர் முதற் சொலுளது. கன்னடத்தில் மரம் மர என்றானதுபோல, மலையாளத்தில் புளம்—புழ என்றாயது. புளம், பழந்தமிழ்ச்சொல்.

அ. புழை

புடை = உட்டுளை

"புடைவைத்தல் = உட்டுளை செய்துகொண்டே [போதல்.

"புற்றும்புடை = புற்றுவளை.

புடைக்கிழங்கு = வள்ளிக்கிழங்கு.

மண்ணுட்புடை வைத்துக்கொண்டு பருப்பது.

புடைக்கள்ளர் = மண்ணுட் புடைசெய்து காத்திருக்குங் கள்ளர் (திரிசிரபுரவழக்கு)

கூ. புல

புளுதி = புழுதி. மூக்கினுட்புகுவது

புழுதி = மண்தூள், பராகம்.

புழுதிக்கால்

புழுதியாடல்

பூழ்தி = புழுதி.

புல்—பூளி—பூழி = புழுதி, பராகம்

க0. புல்

பூளி=ஓரிசை. வேய்ங்குழலிலுண்டாவது.

"பௌளி=ஓரிசை "

பூழி:—

க. சேறு உள்ளிழுப்பது.

உ. குழைசேறு

௩. சேற்றுக்குழிழி.

கக. புல்

பூரி=ஓரிசை. வேய்ங்குழலிலுண்டாவது.

பூரிகை=ஓர்வாச்சியம்.

புல் என்பது மூங்கில் முதலியவற்றையுணர்த்தும்.

(உ௭) **பொய்:—**

க. மரப்பொந்து. புரையுடையது

உ. புள்ளுவம். "மறைப்பது.

"பொய்மை

பொய்த்தல்.

பொய்க்குழி=விரைநடுங்குழி.

க. பொய்

பொய்கை.—

க. மறைவு.

உ கோட்டரன். பொந்தில் மறைந்திருப்பது

௩. குளம். மறைவிலுள்ளது, அந்தப்புரத்திலுள்ளது.

பொய்தல்:—

க. மகளிர்விளையாட்டு. மறைவிற்செய்வது.

உ. மகளிர்கூட்டம்.

"பொருந்து பூம்பொய்கைப் போர்வையைப் போர்த்து"

பொய்கை=மறைவு.

உ. பொய்=அடுப்பு (தெலு) மறைவிலுள்ளதென்பது

## (உஅ) போது:—

க. பிறப்பு
உ. சூரியன். தோன்றுவதென்பது
ங. காலம். சூரியனாலாவது.
போதுகாலம்=பிரசவகாலம்.

க போது=சூரியன்.

பொது=நடு கோள்களுட் சூரியன் போல்வது.
பொதுவு= ,,
பொதுமை= ,,
பொதுவில்=நடு, அம்பலம்
பொதியில்= ,, ,,

உ. போது

பொழுது=சூரியன், காலம்
போழ்து=காலம்.

## (உகூ) தாவளம்=மருதநிலத்தூர்.

தாவளமாடு=பொதிமாடு. மருதநிலத்துப் பண்டங்க[ளைக் கொண்டுபோவது.
தாவளக்காரர்=பொதிக்காரர்.

தாவளை=சுகம். மருதநிலத்தாலாவது.
தாவிளை=சகாயம், நன்மை.
தாவெளை=நன்மை.

க. தாவளம்=மருதநிலத்தூர்.

வளம்=பலபண்டம். மருதத்திலுண்டாவது.
வளமை=வளப்பாடு.
வளமையர்=வேளாளர், பூவைசியர்.

உ. வளம்

வாள்வு=வாழ்வு. மருதநிலத்தாலாவது.
வாழ்வு=வாழ்தல்.

வாழ்க்கை:—

க. மருதநிலத்தூர்.

௨ உளர்.

௩. சீவித்தல்.

௪. செல்வம்.

௫. மனைவி.

வாழ்தல்=சீவித்தல்.

## (௩0) சம்=பிறப்பு.

தலைச்சம்பிள்ளை.

இடைச்சம்பிள்ளை

## (௩க) கப்=முவளா, பிறப்பு.

கமம்=விளைநிலம். முளையாற் சிறப்பது. விளையும் பயிர்
"கமுக்காரியம்=பண்ணைக்காரியம். [முளையிலே
கமக்காரர்=பயிர்செய்வோர்.

கம்மவார்=ஓர்சாதியார் பயிரிடுவோரென்பது.

கமதம்=பயிர்த்தொழில். ——— (ஆ-தீ)
கம்பத்தம்=பயிர்த்தொழில்
கஞ்சம்=பயிரிடுவதற்குரிய நிலம்.
Xoஜ ——— (ஆ-தீ)

க. கசம்=இளமை, தோன்றல்.

"கச்சம்—கச்சா=சிறுமை. (இந்து)
"கசு=இளமை, கொஞ்சம்.
కసు=இளங்காய் (தெலு)

கசுர்=சிறுமை.

கச்சல்=பிஞ்சு. கச்சம்—கச்சல்.

வாழைக்கச்சல்

கசை=விரை, தோன்றுவது

கசையடித்தல்=கால்பிடித்தல் விரைநசுக்கல்

கச்சம்—கஞ்சன்=உலோபி.

உ. கசம்=இளமை.

கயம்=இளமை, தோன்றல்

"கயந்தலை=யானைக்கன்று.

கயம்—பயம்.

பயம்=பிறப்பு. பயன், மன்னர் விழைச்சி, விருப்பம்.

பயம்:—

க. பிறப்பு.

உ. பயன், உண்டாவது.

பயன்=பலன்

பயத்தல்=உண்டாதல், ஈனல்.

பயந்தாள்=தாய்.

"சூதகம் பிறந்தை பயஞ்சனிப்புச் சனனம் ஓதிய தோற்றம் யோனிபவம் பிறப்பே" (திவாகரம்)

"பாதர் மலிந்த பயங்கெழுமாநகர்" ——— (சி-அ)

பயம்=விருப்பம்

ரு. பயம்

பாயம்:—

க. இளமை

உ. சிவியகாலம் ——— (ஆ-தீ)

ரு. புணர்ச்சியைக் கருதுங் கருத்து.

ச. விருப்பம்.

"பாயம்பாடி" ——— (கு-பாட்டு)

"பாயக்காரி=பயிர் செய்வோன். முளைக்கச் செய்வோ[னென்பது

பாயினர்=கருக்கொண்டார்.

பாயம்—பாய்தல்=கருக்கொள்ளல்.

"அங்கான் முலையினரும்பால் வரப்பாயினரும்" (சி-ம)

"முலையிலே பால் வரும்படி சூன் முதிர்ந்தாருமாகிய மகளிர்" என்பர் நச்சினார்க்கினியர்.

௪. பயம்

பயல்=இளையவன். முளையானென்பது.

பையல்= ,,

பைய=மெல்ல.

௫. பயல்

பயில்=குருத்து. இளையதென்பது

"பயின்= ,,

பயிர்=சினை, நெற்பயிர்.

பசுபயிர்பட்டது. சினைகொண்டதென்பது.

௬. பயம்=இளமை.

பசம்=இளமை.

பசங்கள்=இளையவர். ——— கள்-விகுதி.

"பசி=இளமை

பசிவாடு=இளையவன். ——— (தெலு)

பசுங்கருக்கு=முதற்கருக்கு. இளங்கருக்கு

"இந்த அரிவாள் பசுங்கருக்கு"

௭. பசம்

பசல்=இளமை

"பசலை=குழந்தை.

பசர்=மூலிகை. உண்டாவது.

பசர்க்கட்டு.

௮. பசர்

பசரு=கருப்பம். உண்டாவதென்பது (கன்னடம்)

௯. பசம்

பச்சை=இளமை

"பச்சைக்குழந்தை=குருத்துக்குழந்தை.

பச்சடிசில்=இளஞ்சூடேறஅடுவது

பச்சடி= ,,

பச்சா=குழந்தை. (இந்து)

பாச்சா= ,, ,,

க௦. பயம்

வயம்=இளமை. முளையுமாம்.

"வயல்:—

க. மருதநிலம். பயிர்செய்வது

௨. கழனி

௩. வெளி

வயம்—வயா

வயா:—

க. ஆசை. காமமென்பது. உண்டாவது.

௨ சருப்பநோய்

௩. நடுக்கம். கருப்பநோயாலாவது

"வயாவுயிர்த்தல்=கருவினல், வருத்தந்தீரல்.

வயாப்பண்டம்=வேள்வு.

வயாவு:—

க. ஆசை. முளைப்பது

௨ கருப்பம், உண்டாவது

௩. வருத்தம்

வயவு=ஆசை.

வயா—அயா=வருத்தம்

கக பசம்

மசம்=கரு. உண்டாவதென்பது

"மசக்கை=கருப்பம். கை. பெயர் விகுதி.

மசக்கைச்சோறு.

மசக்கைக்காளான்=ஓர்காளான்

க௨, மசம்

மசகம்:—

க. மயக்கம்

௨. மயிர், முளைப்பதென்பது.

"மசங்கல்=மயங்கல்

"மசங்கற்சமண்" ——— (ச-தே)

"முறைமசங்கிகளாசாவேசிகள்" ——(தி—புகழ்.)

மயக்கம்=மசக்கையாலாவது.

மயங்கல்— மயக்கு.

கரு. மசம்

மசிர்=மயிர், முளைப்பதென்பது

மயிர்= ,,

கச. மசம்

மகம்=இளமை

"மக= "

மகவு= ,,

மகன்=பிள்ளை.

க. கசம்—கயம்—பயம்—பாயம்.

உ. பயம்—பயல்

ங. பயம்—பசம்

ச. பயம்—வயம்—வயா.

ரு. பசம்—மசம்—மகம்—மக.

இவற்றுள் சொல்லியையும், பொருளியையும் அறிந்துகொள்க.

பிறத்தலெனினும், தோன்றலெனினும், உண்டாதலெனினும் முளைத்தலெனினும் ஒக்கும். கசமென்பதற்கும் ஓர் முதற்சொலுளது.

## (ஙஉ) தாய்—ஆய்=தாய்.

ஆய்

"ஆயி=தாய் "வாலை புராரியிடந்தரு உமையாயி"

ஆய்ச்சி= ,, (தி-புகழ்)

"ஆயாள்

யாய்=தாய்

"உரைத்தனன் அல்லனோ அஃதென் யாய்க்கே" (ஐ-று)

## (௩௩) தன்னை = தாய், மூத்தோன்.

அன்னை = தாய், தலைவி.

என்னை = தலைவன்

"என்னை முன்னில்லன் மின்" —— (திருக்குறள்)

"அன்னை என்னை யென்றலு முளவே தொன்னெறி முறைமை சொல்லினுமெழுத்தினும் தோன்றுமரபின வென்மனார் புலவர்" (தொல்-ம்)

தன்னை—அன்னை. ஒற்றினீக்கம்.

அன்னை—என்னை. அகரம் எகரமாயிற்று.

## (௩௪) புல் = மூங்கில், உட்டுளை.

பொல்:—

க. பொல்லு

உ. துளை. மூங்கிலிலுள்ளது

௩. தடி. மூங்கிற்றடி

௪. ஊன்றுகோல்

க. பொல்

"பொல்லு = பதர், புரைபட்டதென்பது

"பொல்லம் = தைத்தல், ஊசியையுட்புகுத்துவதென்பது

பொல்லர் = தையற்காரர், சக்கிலியர்,

"பொலி = தூற்றுநெல், பதரொடு கலந்ததென்பது,

உ. பொல்

பொல்லல் = துளைத்தல்

"பொல்லாமணி = துளையாதமணி.

பொள்ளாமணி = ,,

பொல்லாப் பிள்ளையார்.

௩. பொல்

பொல்லான் = பொல்லாதவன், புரைபடும்போனென்பது.

"பொல்லார் = தீயர்.

பொல்லாதவன் = புரைசெய்வோன்.

பொல்லாப்பு = தீமை.

பொல்லாங்கு = ,,

பொல்லாமை = ,,

ச. பொல்.

பொள் = துளை "சுகிர்குழலுழி தசிரம் தூம்புபுழை புரை வேய்வேறு வுட்டொளைபொள்ளே" (பிங்—நி)

"பொளி ="

பொளிபு =

"பொளிதல் = துளைத்தல்.

பொள்ளல்:—

க. துளைத்தல். "பொள்ளலிவ்வுடலைப் பொருளென்று" (சு—தே)

உ. பொத்தல்.

ங. கந்தல்.

ச. மரப்பொந்து.

ரு. பொள்.

பொட்டம்:—

க. தொம்பைக் கூண்டு.

உ. வயிறு. உட்டுளையுடையதென்பது.

பொட்ட = தொம்பைக்கூடு. (தெலு)

ஹொட்ட = வயிறு. ——— (கன்னடம்)

சா. பொட்டம்

பொட்டணம்:—

க. ஓர்பை. உட்டுளையுடையது

உ. சோளி: ,,

பொட்டணி = ,, ,,

எ. பொட்டல்

பொத்தல்:—

க. துளை

உ. துளைத்தல்

" ௩. பொக்குதல். உட்செல்லுவதென்பது

பொத்து:—

க. பொந்து. உட்டுளையுடையது

உ. புரைவு "பொத்திலாந்தைகள் பாட்டுருப்புன வாயிலே" (சு—தே)

௩. பொய்

ச. தவறு

௫. மறைவு. பொந்திலிருப்பது

பொத்தை=தொம்பைக்கூடு, பருமை.

அ. பொத்து.

பொந்து=புரை

"பொந்தை="

"பொந்த=" ——— (தெலு)

பொந்தி=உடல். பல வுட்டுளையுடையது.

௯. பொல்.

போனு=கூடு. புரையுடையது

எலிப்போனு.

க௦. பொள்

பொடு:—

க. உயர்ச்சி. மூங்கில்போல்வது

உ. உட்டுளை.

பொடுகு=உயர்ச்சி. ——— (தெலு)

பொடுசல்=பொக்குதல் ———

பொடுசுட ——— (தெலு)

கக. பொடு

பொது=துளை, இசை. வேய்ங்குழலினுண்டாவது.

"பொதுத்தல்=துளைத்தல்.

பொது பொதெனல்=ஒலிக்குறிப்பு
பொத்துப் பொத்தெனல்="

கஉ. பொது

பொதும்பு:—

க. மரப்பொந்து
உ. பொந்து.

பொதும்பர்=மரப்பொந்து.

க௩. பொல்.

பொரு=மலை மூங்கில் மிக்கதென்பது.
"பொருநன்=குறிஞ்சிநிலத்தலைவன், அரசன்.
பொருநர்=அரசர்.

பொருப்பு:—

க. மலை. பு—விகுதி
உ. கொல்லிமலை. மூங்கில் மிக்கது

க௪. பொல்

பொருகு=சோறு. மூங்கிலரிசியாலாவது
பொருக்கு=,,

க௫. பொல்

பொரி=கரிநாடு.

பொரிதல்:—

க. தீதல், மூங்கில் எரியும்போதுண்டாவது
உ. எரிச்சற்படுதல்.
௩. பொரியாதல்.
௪. பொருக்கு வெடித்தல்.

க௬. பொல்

பொருத்து=சந்து. மூங்கிற்கணுப்போல்வது
—து. விகுதி

பொருத்தம்=சந்து, இணக்கம்.
பொருந்தல்=இணங்கல், கலத்தல், சம்மதித்தல்,
பொருந்தர்=நெய்வார்,

## (௩௫) புல்=மூங்கில். உட்டுளை.

போல்:—

க. மூங்கில்

உ. பொந்து. உட்டுளையுடையது

௩. புதர்— ,,

௧. புல்

போர்=வைக்கோற்றிரட்சி.

வைக்கோற்போர்.

வைக்கோல் மூங்கிலினம்.

உ. பொல்

பொற்றை:—

க. மலை. மூங்கில் மிக்கது

உ. சிறுமலை

௩. சிறுதூறு.

றை, பெயர் விகுதி.

பற்றை=சிறுதூறு, காந்தள். குறிஞ்சிக் கருப்பொருளென்பது.

௩. பொல்

பொறி:—

க. தீப்பொறி. மூங்கிலெரியும்போதுண்டாவது.

உ. எந்திரம். தீயாலியங்குவது.

௩. புலப்பொறி. உட்டுளையுடையது.

௪. அறிவு. பொறியாலாவது.

௫ தேர். எந்திரமுடையது.

௬ மரக்கலம். ,,

எ. மதிலுறுப்பு. பொறிவைத்தற்கிடனுடையது.

பொல்+இ. ——— இ—பெயர் விகுதி.

௪. பொல்

பொறை:—

க. பூமி. மூங்கில் போலும் வெப்பமுடையது.

௨. பொறுமை. பூமிபோல்வது.

௩. பாரம்.

௪. சுமை

௫. மலை. பூமியிலுண்டாவது.

௬. சலதாரை முதலியன அடைக்குங்கல்.

உட்புகுத்துவதென்பது.
பொல்+ஐ. ஐ பெயர் விகுதி.
பொறைசாலி=பொறுமையுள்ளவன்.
பொறையன்=சேரன், தருமன்!
குறும்பொறையாடு—குறும்பாடு=வரையாடு.

௫. பொறை=பூமி

பொறுப்பு=பொறுமை, பாரம்.
பொறுமை=பொறுதி
பொறுத்தல்=தாங்கல்
பொறுதி=பொறுமை, நாமதம்.
பொறி=பொறுப்பு
பொறு+இ

௬. பொல்

போற்று=துதி. வேய்ங்குழல்போனினிதிசைப்பதென்பது
து. பெயர் விகுதி.
"போற்றி=துதி.

போற்றல்:—

௧. துதித்தல்

௨. வணங்கல்

௩. புகழ்தல்

௪. வளர்த்தல். புகழ்ந்து வளர்ப்பது.

௫. காத்தல்.

௬. பேணல்

போற்றரவு=துதித்தல்.

(௩௭) முரம்=ஒலி.

# வேய்ங்குழலி லுண்டாவது.

இது மூங்கிலியையபுடைச்சொல்.

முரமுரெனல்=ஒலிக்குறிப்பு,

"முரமுரென வேபுளித்தமோரும்"

முருமுரெனல்=ஒலிக்குறிப்பு.

மொரயு=தொனிசெய் (ஆ—நீ)

முராம் முரம்—மும்முரம்=ஆரவாரம்.

க. முரம்

முரல்=ஒலி

முரற்கை:—

க. தாளம் இசைப்பது (மலைபடு)

உ. கலிப்பா ,,

முரலி=முரளி

,, முரலிதரன்=கண்ணன்.

முரளி=வேய்ங்குழல்; மூக்கால் வாசிகுங்குழல்.

உ. முரல்

முரலல்=ஒலித்தல், பேசலாலெழுமொலி, கதறல்.

,, முரல்வு=உள்ளோசை.

முரற்றல்=ஒலித்தல்.

௩. முரல்

முரள்=ஒலி

முரட்கை=கலிப்பா. இசைப்பது.

௪. முரள்

முருடு:—

க. ஓர் வாச்சியம். இசைப்பதென்பது.

உ. மத்தளம், ,,

௩. பறைப்பொது. ,,

௪. விறகு. மூங்கிற் சுள்ளி யென்பது.

முருடர்=வேடர். குறிஞ்சிப்பறையடிப்போர்.

௫. முரம்

மூரல்=சோறு. மூங்கிலரிசியாலாவது.

மூங்கிலரிச்சோற்றுக்குச்சீரண சக்தி யுண்மையின், தத்துவங்கள் பெலம் பெறவேண்டி முதன் மக்கள் அதனையே யுண்டனராவர். நெல் முதலியனவும் மூங்கிலினங்களேயாம். மூங்கிற் குருத்துகளை ஊறுகாய் போடுவர். யானைகளுக்கு மூங்கிற் குருத்து மிக இனியது.

௬. முரம்

முலம்=ஒலி. வேய்ங்குழலிலுண்டாவது.

"முலமுலெனல்=ஈரடுக்கொலிக்குறிப்பு.

முலம் முளையுமாம்.

| | | |
|---|---|---|
| முலவேயு. | ——— | (தெலு) |
| முல=முள்ளங்கி. | ——— | (இந்து) |
| முலக=முளை | ——— | (தெலு) |
| "மொலக=" | ,, | |

௭. முலம்=முளை

முலை=கொங்கை. மார்பில் முளைப்பது அதாவது [தோன்றுவது

௮. முலம்

முளம்:—

௧. மூங்கில்

௨. கணு. மூங்கிலிலுள்ளது

௩. தீ. மூங்கிலிலுண்டாவது.

௪. முளை. கணுக்கடோறுமுண்டாவது

௯. முளம்

முள=மூங்கில், முளை. (மலையாளம்)

முளம்—முள. செயற்கையீறு.

௧௦. முளம்=முளை.

முளவன்=சிறுவன்

முளவி=சிறுமி.

௧௧. முளம்

முளை :—

௧. மூங்கில்

௨. அங்குரம்

௩. பிள்ளை. கருவில் முளைப்பது

௪. ஆப்பு. முளைபோல்வது

கான் முளை=பிள்ளை. ——— உ—பகம்.

முளையான்=பிள்ளை.

முளைப்பு=தோற்றம்

முளைத்தல்=அங்குரித்தல்,

முளம்=கணு

முளங்கை=முழங்கை

முழங்கை=கணுக்கை

௧௨. முளம்=கணு

முளி:—

௧. கணு

௨. மரத்தின் முளி.

ஒரு முளிப்பிரம்பு=ஓர் கணுவுள்ள பிரம்பு.

௧௩. முளம்=தீ

மூளல்=எரிதல்.

மூட்டல்=எரிதல், கோண்மூட்டல்.

மூட்டம்=உலைமுகம், எரிவது.

௧௪. முளம்=தீ

முளி=வற்றல். வறண்டதென்பது.

முளிதல்=காய்தல், வறத்தல்,

௧௫. முளம்=தீ

முளரி:—

௧. நெருப்பு

௨. கடைக்கொள்ளி

௧௬. முளம்=முளை

முளரி:—

௧. காடு. தானே முளைப்பது

௨. விறகு. காட்டிலுள்ளது.

௩. நுண்மை. முளைபோல்வது.

௧௭. முளை=மூங்கில்

முணை=ஒலி. வேய்ங்குழலிலுண்டாவது.

ளகரம் ணகாமாகும்.

"முணையினாற் கடலக முழக்க மொத்தவே" (சி—ம)

௧௮. முளம்=முளை

முளுப்பை=முழுப்பை

முழுப்பை=சிறுபுதல். முளைப்பது. பை—விகுதி.

௧௯. முளம்=மூங்கில்

முளா=முழா

முழா=மேளம். வேய்ங்குழல்போலினிதிசைப்பது.

முழவு=பறைப்பொது.

முழவம்=குடமுழா, முரசு.

௨0. முளம்

முளக்கு=முழக்கு

முழக்கு=ஒலி. கு—விகுதி.

முழக்கம்= ,,

முழங்கல்=ஒலித்தல்

௨௧. முளம்

முழை=குகை. உட்டுளையுடையது.

" முழைத்தல்=எழுத்திலாவோசை. குகையிலுண்டா

முழைஞ்சு=மலைக்குகை. சு—விகுதி. [வதென்பது.

உட்டுளேயுடைமை முதலியன மூங்கிலிலக்கணங்களாம். முற் கூறப்பட்டுளது.

உ௨. முளர் = மூங்கில்

முழை:—

க. அகப்பை. மூங்கிற்காம்புடையது.

உ. துடுப்பு. மூங்கிலாலாவது

மூழை:—

க. அகப்பை

உ. துடுப்பு

௩. மத்து. மூங்கிற் காம்புடையது.

௪. சோறு. மூங்கிலரிசியாலாவது.

உ௩. முளம் = மூங்கில்

மூளி = பெட்டி. மூங்கிலாற் செய்வது.

மூழி:—

க. அகப்பை

உ. துடுப்பு

௩. மத்து

௪. சோறு

௫. குளம். உட்கூரப்புடையது.

மூழி மூழையுமாம்.

உ௪. முளம்

முணு = ஒலி. வேய்ங்குழலினுண்டாவது.

முணுமுணெனல் = ஒலிக்குறிப்பு.

மொணமொணெனல் ,,

(௩எ) **முழு = பூரணம்.**

முழுப்பூசை.

முழுது = எல்லாம்

முழுதும் ,,

முழுவதும் ,,

க. முழு

முழுவல்=பூரணம்

முழுவலன்பு=முதிர்ந்தஅன்பு.

உழுவலன்பு ,,

உ. முழு

முழுமை=எல்லாம்

முழுமையும்=

௩. முழு

முழுக்கு=தலைமூழ்கல்.

,, குறையின்றி நீராடலென்பது.

,, முழுக்காட்டு.

முழுகல்=சிரநானஞ்செய்தல்

மூழ்கல்= ,,

௪. முழுக்கு

முழுக்கல்=முழுமையாதல்

,, முழுக்கவும் வாசிக்க

௫. முழு

முழுத்தல்=முழுமையாதல்

" முழுகுவித்தல்.

௬. முழுத்தல்

முத்தல்=முற்றல்

,, முத்திப்பு=முத்திக்கை

முத்திக்கை=அரண் வளைப்பு.

௭. முத்தல்

முட்டல்=முற்றல். தகரம் டகரமாகும்

,, முதற்கோணல் முட்டக்கோணல்

முட்டுதல்=நிறைவேறல்.

முட்டு=அரண்வளைப்பு, தடை.

"தெரு முட்டப்பாளை சிதறவளர்பூகத்
தருமுட்டச் செவ்வாளைதாவுந்—திருமூட்டத்
தூரிலே கண்டேன் ஒரு புதுமை பன்றிக்கு
மாரிலே கொம்பானவாறு."
"முழுவது முற்றும் சமத்தமும் முட்டவும்
எவையும் எல்லா மென்றலின் பெயரே" (பிங்—ரி)

அ. முட்டல்

முற்றல்=பூரணமாதல்
„ முற்று=பூரணம்.
முற்றும்=எல்லாம்.
முற்றுகை=அரண்வளைப்பு
முற்றுதல்=முடிதல், முதிர்தல்.
டகரம் றகரமாகும்.
முரம்—முலம்—முளம்—முளை
முரம்—முரல்—முரல்ல.
முளம்—முளா—முழா—முழவு.

என்பவற்றுள் சொல்லியையும், பொருளியையும், அறிந்து கொள்க.

தமிழர்கள் தமக்கு வேண்டும்பொருள்களை மூங்கிலினாலே பெருக்கிக்கொண்டமைபோலச் சொற்களையும் மூங்கிற் சொல்லினாலே பெருக்கிக்கொண்டனரென்பதை அறிந்து கொள்க.

முதனிலையியல் முற்றுப்பெற்றது.

கறசைகிழாரியற்றிய மொழிநூற் சுருக்கம்
முற்றுப்பெற்றது.